சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை -14

360

# அதியன் விண்ணத்தனார்

## முதலிய நூறு புலவர்கள்



கழக வெளியீடு : எகo

சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை — கச

# அதியன் விண்ணத்தனார்

## முதலிய சாசா புலவர்கள்

❋

புலவர் கா கோவிந்தன் எம் ஏ
எழுதியது

❋

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.
1965

காங்க முதலியார் கோவிந்தன் (1917)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 Aug 1954

Reprint : Feb 1965

O31,IA$w$
K5.14

ADIYAN VINNATTANAR

Paari Achakam, Madras-1.

# பதிப்புரை

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றி நாகரிகம் முதிர்ந்தோர் தமிழர்; அவரின் மொழி தமிழ்; இது திருந்திய செவ்விய மொழி; இதன்கண் இயற்கையோ டியைந்த செய்யுட் செல்வங்கள் நிரம்ப வுள்ளன. இவைகளைத் தந்த பெருமை - சங்ககாலப் புலவர்க்குரித்து.

இவருள், அதியன் விண்ணத்தனார் முதல், கீரந்தையார் இறுதியாக அறுபத்தறுவர் வரலாறு இதில் வெளி வந்துள்ளன; இதனையும் அவர்கள் பாநயச் செறிவு விளக்கத்துடன் எழுதி உதவியவர், திரு. புலவர், கா. கோவிந்தன் அவர்களேயாவர்.

இதனை, 'அதியன் விண்ணத்தனார்' எனப் பெயர் அமைத்துச் சங்கப் புலவர் வரிசையில் - கச ஆவதாக வெளியிட்டுள்ளோம்.

தமிழக மக்கள், கற்றல் கேட்டலே பயனென்பதை உணர்ந்து, இதனையும், இதனுடன் தொடர்புற்று வெளிவரும் மற்றைய சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை நூல்களையும், வாங்கிக்கற்று நற்பேறெய்துவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| க. | அதியன் விண்ணத்தனார் | 2 |
| உ. | அந்தி இளங்கீரனார் | 6 |
| ௩. | அம்மள்ளனார் | 8 |
| ௪. | அம்மூவனார் | 9 |
| ரு. | அம்மெய்யநாகனார் | 18 |
| சு. | அழிசி நச்சாத்தனார் | 19 |
| எ. | அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் | 21 |
| அ. | ஆசிரியர் நல்லந்துவனார் | 28 |
| ௯. | ஆசிரியன் கோடங்கொற்றன் | 48 |
| க0. | ஆசிரியன் பெருங்கண்ணன் | 49 |
| கக. | ஆருலவியநாட்டு ஆலம்பேரிசாத்தனார் | 50 |
| கஉ. | இடையன் சேந்தங்கொற்றனார் | 54 |
| க௩. | இடையன் நெடுங்கீரனார் | 56 |
| க௪. | இம்மென் கீரனார் | 57 |
| கரு. | இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார் | 58 |
| கசு. | இளங்கண்ணிக் கௌசிகனார் | 60 |
| கஎ. | இளங்கீரந்தையார் | 63 |
| கஅ. | இளங்கீரனார் | 64 |
| க௯. | இளநாகனார் | 67 |
| உ0. | இளம்பால் ஆசிரியன் சேந்தன் கூத்தனார் | 70 |
| உக. | இளம்பூதனார் | 72 |
| உஉ. | இளம்போதியார் | 73 |
| உ௩. | இளவெயினனார் | 74 |
| உ௪. | இறையனார் | 77 |
| உரு. | இனிசந்த நாகனார் | 81 |
| உசு. | ஈழத்துப்பூதன் தேவனார் | 82 |
| உஎ. | உருத்திரனார் | 86 |
| உஅ. | உலோச்சனார் | 87 |
| உ௯. | உழுந்தினைம்புலவன் | 94 |
| ௩0. | உறையன் | 95 |
| ௩க. | எயிற்றியனார் | 96 |
| ௩உ. | எயினந்தையார் | 97 |

| | | பக்கம் |
|---|---|---|
| ௩௩. | எயினந்தை மகனார் இளங்கீரனார் | 99 |
| ௩௪. | எழுத்தாளன் சேந்தன்பூதனார் | 105 |
| ௩௫. | எழூஉப்பன்றி நாகன் குமரனார் | 108 |
| ௩௬. | ஒருசிறைப் பெரியனார் | 109 |
| ௩௭. | ஒரூஉத்தனார் | 111 |
| ௩௮. | ஓதஞானி | 113 |
| ௩௯. | ஓதலாந்தையார் | 114 |
| ௪0. | ஓரம்போகியார் | 120 |
| ௪௧. | கடுகுபெருந்தேவனார் | 135 |
| ௪௨. | கடுந்தொடைக் காவினார் | 137 |
| ௪௩. | கடுந்தோட் கரவீரன் | 139 |
| ௪௪. | கடுவன் இளவெயினனார் | 141 |
| ௪௫. | கடையத்தார் மகன் வெண்ணாகனார் | 145 |
| ௪௬. | கண்டரதத்தன் | 146 |
| ௪௭. | கண்ணகனார் | 147 |
| ௪௮. | கண்ணகாரன் கொற்றனார் | 150 |
| ௪௯. | கண்ணங் கொற்றனார் | 152 |
| ௫0. | கண்ணத்தனார் | 154 |
| ௫௧. | கண்ணன் | 156 |
| ௫௨. | கதக்கண்ணன் | 157 |
| ௫௩. | கந்தக்கண்ணன் | 158 |
| ௫௪. | கந்தரத்தனார் | 160 |
| ௫௫. | கயத்தூர்க்கிழான் | 163 |
| ௫௬. | கரும்பிள்ளைப்பூதனார் | 166 |
| ௫௭. | கவுணியன் பூதத்தனார் | 170 |
| ௫௮. | கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் | 171 |
| ௫௯. | காசிபன் கீரனார் | 173 |
| ௬0. | காப்பியஞ் சேந்தனார் | 175 |
| ௬௧. | காமக்கணி நப்பாலத்தனார் | 176 |
| ௬௨. | காமஞ்சேர் குளத்தார் | 178 |
| ௬௩. | காவட்டனார் | 181 |
| ௬௪. | காவல்முல்லைப் பூதனார் | 186 |
| ௬௫. | கீரங்கீரன் | 190 |
| ௬௬. | கீரந்தையார் | 191 |

# அதியன் விண்ணத்தனார்

## தோற்றுவாய்

ஒரு நாட்டுமக்களின் பண்பாட்டுப் பெருமையினை அறியத் துணைபுரிவனவற்றுள், அந் நாட்டு மக்கள் பெற்றிருக்கும் இலக்கியமே தலைசிறந்தன. எந் நாட்டு மக்கள் பண்பாடுற்றுத் திகழ்கின்றனரோ, அவரிடையேதான் பாராட்டற்குரிய பேரிலக்கியங்கள் தோன்றும்; பண்பட்ட இலக்கியங்கள், ஓராண்டு, ஈராண்டு, ஒருநூறு ஆண்டுகளில் தோன்றிவிடுவன அல்ல; ஆயிரம் ஆயிரம் ஆண்டுக் காலமாக, வளர்த்துவந்த வாழ்க்கைச் சிறப்பினையுடைய மக்கள் வழியிலேயே, வளம்பட்ட இலக்கியங்கள் வழங்கப் பெறும்; ஆகவே, ஒரு நாட்டு இலக்கியம், இறப்பச் சிறந்து தோன்றுமாயின், அந் நாட்டு மக்களும், அழகிய பண்பாட்டினை உடையராவர்; இதற்கு மாறாக, அந்நாட்டு இலக்கியம், போற்றுதற்குரிய பண்பாடற்றதாயின், அந் நாட்டு மக்களும், பிற நாட்டவரால் பாராட்டற்குரிய பண்பாடற்றவராவர். இவ்வாறு, ஒரு நாட்டின் பெருமையினை அறிதற்குத் துணைபுரியும் இலக்கியங்களை, இந் நாட்டாரும், பிற நாட்டாரும் நன்கு உணருமு வகை ஆராய்ந்து வெளியிடுவது, அணு ஆராய்ச்சிநூல், பல நாட்டு அரசியல் நிலை விளக்கும் நூல், பொருள் நிலையுயர வழிகாட்டும் நூல் போன்ற பெரும் நூல்களை வெளியிடுவதினும் சாலச்சிறந்த பணியாம்.

தமிழர், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய பழைமையுடையவராவர்; அவர் தம் இலக்கியமும், அவரேபோல், பழைமையும், பண்பாடும் பெற்று

பெருமை வாய்ந்தது; இன்று, நாகரிகத்தில் நனிசிறந்து விளங்கும் நாடுகள் மக்களால் அறியப்படாத அந்தக் காலத்திலேயே, இலக்கிய வளத்தால் வனப்புற்ற வாழ்க்கையுடையவர் தமிழர் என்ற உண்மையினை உலகறியத் துணை புரிவன, அவர் ஆக்கி அளித்த இலக்கியப் பெருஞ் செல்வங்களே; இத்தகு இலக்கியங்களை உலகமக்கள் உணரும் வகை வெளியிடும் பணியினை விரைந்து மேற்கோடல் வேண்டுமாயினும், தமிழ் இலக்கியமாம் அவற்றை அறிந்து உணராத தமிழரும் பலர் உளர் ஆதலின், அவர் அறிதற் பொருட்டு, அவற்றை வெளியிடும் பணியும் இன்றியமையாது வேண்டப்படுவதே.

தமிழ் நூல்களை ஆக்கித்தந்த புலவர்களைச் சங்ககாலப் புலவர், பிற்காலப் புலவர் என வகைப்படுத்துவர் தமிழக வரலாற்று நூலார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தே வாழ்ந்த தமிழ்ப்பணி ஆற்றிய புலவர்கள் சங்க காலப் புலவர் எனப்படுவர்; அவர் இயற்றிய, பத்துப் பாட்டு, எட்டுத்தொகை ஆகிய பெருநூல்களை அறிதற்கு முன்னர், அவரை அறிதல் முறையாம் என்ற எண்ணத்தால், அவர் தம் வரலாற்றினை உரைக்கத்தொடங்கி, கபிலர், பரணர், நக்கீரர், அவ்வையார், பெண்பாற் புலவர்கள், உவமையாற் பெயர் பெற்றோர், காவல பாவலர், கிழார்ப் பெயர் பெற்றோர், வணிகரிற் புலவர்கள், மாநகர்ப்புலவர்கள், உறுப்பாலும் சிறப்பாலும் பெயர் பெற்றோர், என்ற தலைப்புக்களின்கீழ்ப் பல்வேறு புலவர்களின் வரலாறுகள் விளங்க உரைக்கப் பட்டுள்ளன; மேற்கூறிய எத் தலைப்பின் கீழும் வரிசைசெய்ய இயலாதாராகிய புலவர்களை, அகரவரிசைப் படுத்தி, அதியன் விண்ணத்தனார் முதல், கீரந்தையார் ஈறாக உள்ள அறுபத்தாறு புலவர்களின் வரலாறு உரைக்கும் இந் நூற்கு, இந் நூலின்கண் வரும் புலவருள் முதற்கண் நிற்பார் பெயரே, நூற்பெயராக அமைந்துளது.

# க. அதியன் விண்ணத்தனார்

அதியமான் நெடுமானஞ்சி பிறந்த குடி, அதியர் குடி எனப்படும்; அவ் வதியர் குடி, சேர இனத்தோடு தொடர்புடையதாம் என்றும் கருதுவர்; ஆகவே, இவ்வதியன் விண்ணத்தனார், சேரர் வழிவந்தவராவர் எனக் கோடல் பொருந்தும். அள்ளன் என்பானைத் தன் படைத்துணைவனாகக் கொண்டு, அவனால் நாடு பலகொண்டு, அம்மகிழ்ச்சியால், அவனுக்கும் நாடு சில நல்கிய அதியனையும், அவனுக்குப் பிறகு பாடுவார் பறையொலி அடங்கிற்று என அவன் கொடையினையும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார் மாமூலனார். "ஆடுநடைப் பொலிந்த புகற்சியின் நாடுகோள், அள்ளனைப் பணித்த அதியன் பின்றை, வள்ளுயிர் மாக்கிணை கண்ணவிந் தாங்கு" (அகம் : 325). கூத்தாடுவாரும் அவர் சுற்றமும் ஆடி மகிழ்ந்த இடத்தை, அவர் அவ்விடத்தை விட்டு அகன்றபின்னர்க் காணல் பெரிதும் துயர் தருவதாம் என்று கூறுகிறார் நம் புலவர் அதியன் விண்ணத்தனாரும்; "இரும்பேரொக்கல் கோடியர் இறந்த புன்தலை மன்றம் காணின் வழிநாள், அழுங்கல் மூதூர்க்கு இன்னாதாகும்." இதனால், புலவர் அதியன் விண்ணத்தனார், மாமூலனார் பாராட்டிய, அதியன் தாமோ என எண்ணற்கு இடமுண்டாதல் காண்க.

கூத்தாடுவார், கூத்தாடிப்பெற்ற பரிசிற் பொருளைத் தாமே உண்ணுதல்வேண்டும் என எண்ணாராய், எல்லோர்க்கும் உதவி வாழும் உயர்பெரு வாழ்வுடையவர்; அவர் தம் அவ் வாழ்விற்கு இடையூறு என்றும் உண்டாதல் இல்லை; அவர் தமக்கு என ஓர் ஊரை வரைந்துகொள்ளாது, யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற எண்ணமுடையராய், ஓர் ஊரில் இருந்து வாழாது, ஊர்தோறும் திரிந்து வாழ்வர்; அத்தகையார், வண்டியில் ஏறி, வழியினைக் கடந்து, இடையில் தளர்ச்சி உண்டாயின், வழிஓர் மரத்தடியில் இருந்து இளைப்பாறிச் செல்வர்; அவர் தம் தொழிற்குத் துணைபுரியும் இசைக் கருவிகள் பலப்பல; அவற்றுள் சிறுவங்கியம், பெருவங்கியங்களின் ஒலியோடு,

தண்ணுமை ஒலியும் கலந்து எழின், அது பிடியும், களிறும் கூடிப் பிளிறினாற்போலும்; சிறு சிறு அரிகள் உள்ளிட்ட சிறு பல்லியங்கள் ஒலிப்பின், அவ்வொலி, மழை கண்டு ஒலிக்கும் தேரைகளின் ஒலிபோலும். இத்தகைய இசைக் கருவிகளைத் தம்முடன் கொண்டுசென்று ஊர்தோறும் கூத்தாடிப் பரிசில்பெற்று வாழும் பண்புடையார் அவர் எனக் கூறும் கூத்தாடுவார் இயல்பு, அறிந்துகொள்ளத் தக்கதாம்.

தலைவன், பொருள் முதலாயின குறித்துப் பிரிந்துவிட்டானாக, அவன் பிரிவினைப் பொறாத தலைமகள், வளர்தற்கு இன்றியமையாத் துணையாகிய நீரற்ற நிலத்துப்பயிர் வாடியதேபோல், வாடி வருந்தினாள்; அவள் வருத்தம் கண்ட அவள் தோழி, பிரிந்தாரை எண்ணிப் புலம்பித் துயர் உறுதல் பண்பன்று; ஆதலின், சிறிது ஆறி அமைதியுறுவாயாக என்றாள்; என்றாட்கு, "தோழி! கூத்தாடுவார் ஆடிய கூத்தினைக் கண்டு மகிழ்ந்தார்க்கு, அக் கூத்தர் போய்விட்டாராகப் பொலிவிழந்த அக் கூத்தாடிடத்தைக் காணுந்தோறும் துயர் மிகும் என்பதை அறிவாய்; அத்தகைய துயரம், இம் மாலைக்காலத்தைக் காணுந்தோறும் எனக்கு உண்டாகிறது; ஆதலின், அவரை மறந்திருத்தலை என்னால் மேற்கொள்ள முடிவதில்லை; இதற்கு யான் என் செய்வேன்," என்று கூறினாள் தலைமகள் எனப் பாடித் தலைவனைப் பிரியத் தனித்துவந்த மாலைபோல், கூத்தர் பிரிய நின்ற அவர் ஆடிடம் வருத்தம் தருவதாம் என்ற உவமையால், பழங்காலத்துக் கூத்தர், மக்கள்மன்றத்தே பெற்றிருந்த மதிக்கத்தக்க நிலையினை மனங்கொளக் காட்டியுள்ளார்.

"வறனுறு செய்யின் வாடுபு வருந்திப்
படர்மிகப் பிரிந்தோர் உள்ளுபு நினைதல்
சிறுநனி ஆன்றிகம் என்றி தோழி!
நல்குநர் ஒழித்த கூலிச் சில்பதம்
ஒடிவை இன்றி ஓம்பாது உண்டு
நீர்வாழ் முதலை ஆவித் தன்ன

## அதியன் விண்ணத்தனார்

ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து
ஊர்இஃது என்னா ஊறுஇல் வாழ்க்கைச்
சுரமுதல் வருத்தம் மரமுதல் வீட்டிப்
பாடின் தெண்கிணை கறங்கக் காண்வர
குவியிணர் எருக்கின் ததர்பூங் கண்ணி
ஆடூஉச் சென்னி தகைப்ப மகடூஉ
முளரித் தீயின் முழங்கழல் விளக்கத்துக்
களரி யாவிரைக் கிளர்பூங் கோதை
வண்ண மார்பின் வனமுலைத் துயல்வரச்
செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்னக்
குறுநெடுந் தூம்பொடு முழவுப்புணர்ந் திசைப்பக்
கார்வான் முழக்கின் நீர்மிசைத் தெவுட்டும்
தேரை ஒலியின் மானச்சீர் அமைத்துச்
சில்லரி கறங்கும் சிறுபல் லியத்தொடு
பல்லூர்பெயர்வன ராடி ஒல்லெனத்
தலைப்புணர்த் தசைத்த பல்தொகைக் கலப்பையர்
இரும்பேர் ஒக்கல் கோடியர் இறந்த
புன்தலை மன்றம் காணின் வழிநாள்
அழுங்கல் மூதூர்க்கு இன்னா தாகும்;
அதுவே மருவினம் மாலை, அதனால்
காதலர் செய்த காதல்
நீடின்று மறத்தல் கூடுமோ மற்றே.’’

(அகம் : ௩௦௧)

## உ. அந்தி இளங்கீரனார்

இளங்கீரனார் என்ற பெயருடையார் பலராவர்; எயினந்தை மகனார் இளங்கீரனார், பொருந்தில் இளங்கீரனார் என்பார் பெயர்களை நோக்குக. இவர் பெயர்க்கு முன் வரும் அந்தி என்ற சிறப்பு, இவர் அந்திக் காலத்தை விளங்க உரைத்ததோடு, அவ் அந்தி என்ற சொல்லையும் எடுத்து ஆண்டமையால் வந்ததுபோலும்.

அந்தி இளங்கீரனார், அழகிய உவமைகளை அடுக்கடுக்காக அமைத்துப் பாடவல்லவராவர்; மாலை வந்துற்றதும், தாம் இதுகாறும் இருந்து தேன்உண்ட மலர்கள், தேனொழியப் பெற்றமையால், அவற்றை விட்டுப் பிரிந்து, புதிதாக மலரும் மலர் நாடிச்செல்லும் வண்டினங்கள், தாம் நட்புக் கொண்டு வாழ்ந்தார், தமக்கு மேலும் பொருள் அளித்துப் பேண வறுமையுற்றனர் என அறிந்து, அவரைக் கைவிட்டு நிறைந்த பொருளுடையாரைத் தேடிச் செல்லும் நன்றியறிவில்லா மாக்கள் போலும் எனக்கூறும் உவமை, "உறின் நட்டு, அறின் ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை" என்ற திருக்குறட் டொடரை நினைப்பூட்டிச் செல்லுதல் நோக்குக.

"நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு, குறைந்தோர்
பயன்இன் மையின் பற்றுவிட்டு ஒரூஉம்
நயன்இல் மாக்கள் போல, வண்டினம்
சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர."

அந்திக் காலத்து வானம் சிறிது சிறிதாகச் செந்நிறம் பெற்றுச் சிறத்தல், உலையிற் காய்ச்சிய செம்பொன் ஆற ஆறச் செந்நிறம் பெற்றுத் திகழ்தல் போலும் எனக் கூறும் உவமையும்,

"பைபயன, வெந்துஆறு பொன்னின் அந்தி பூப்ப."

இத்தொடரில், அந்திக்காலம் செந்நிறம் பெற்றுச் சிவந்து தோன்றிற்று என்பதை "அந்தி பூப்ப" என்ற தொடரால் விளக்கிய அழகினை உணர்க. தலைவனைப் பிரிந்தமை

யால் உண்டாய வருத்தம் வருத்த நிற்கும் தலைமகளை, மாலை மேலும் வருத்துவது, இயல்பாகவே பெருந்துயர் உற்றார் ஒருவர் மார்பிடத்தே கூரிய வேலை எறிதலோ டொக்கும் எனக் கூறிய உவமையும்,

"மாலை, காதலர்ப் பிரிந்த புலம்பின், நோதக
ஆரஞர் உறுநர் அருநிறம் சுட்டிக்
கூரெஃகு எறிஞரின் அலைத்தல் ஆனாது."

தலைவன் பிரிந்து செல்வதற்குமுன், தலைமகள் பெற்றிருந்த ஆற்றல் எல்லாம், அவன்பிரிந்து சென்ற பின்னர்ச் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்து இறுதியில் சிறிதும் இல்லாமல் அழிந்தமைக்குத், தெளிந்த கண்ணாடிமீது ஊதியக்கால் படிந்த ஆவி, முதலிற் பரந்து தோன்றிப் பின்னர்ச் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்து இறுதியில் முழுதும் மறைந்து போதல் போலும் எனக் காட்டிய உவமையும்,

"எள்ளற இயற்றிய நிழல்காண் மண்டிலத்து
உள்ளூது ஆவியிற் பைப்பய நுணுகி
மதுகை மாய்தல் வேண்டும்."

தலைவன் பிரிவால் வருந்திய உயிர், அப்பிரிவுத் துயரைத் தாங்கலாற்றாது, தளர்ந்த உடலைவிட்டுப் பிரிந்து போதல், கொடிய சூறாவளியால் வருந்திய பறவைகள், தாம் தங்கி யிருக்கும் மரங்கள் அச்சூறாவளியால் அலைப்புணல் அறிந்து, அவற்றை விட்டுப் பறந்து போதல் போலும் எனக் கூறிய உவமையும், சிறந்து தோன்றி, அவர் புலமை நலத்தினைப் புலப்படுத்தி நிற்றல்காண்க.

"என்னுயிர், விலங்குவெம் கடுவளி எடுப்பத்
துளங்குமரப் புள்ளில் துறக்கும்."

(அகம்: எக)

## ரு. அம்மள்ளனர்

மள்ளனர் என்ற பெயருடையவர் பலர்: அவரின் வேறுபடுத்து உணர்த்துவதற்கும், இவரின் பெருமை யறிந்து பாராட்டற்கும், அழகிய எனும் பொருள்படும் அம் எனும் சிறப்பினை அளித்து வழங்குகின்றனர்.

முருகன், வள்ளியைக் களவிற்கண்டு, அவர் தமர் அறியாவண்ணம் கொண்டு சென்றான் என்ற நிகழ்ச்சியில் உடன்பாடுடையவர் நம் புலவர் அம்மள்ளனர். தலைவன் தனக்குற்ற காமநோயும், அக் காமநோயால் உண்டாம் தளர்ச்சியும், தலைவியின் தோளினைத் தழுவப் பெறுவதால் நீங்கல் அறிந்தானாதலின், அவளை என்றும் பிரியாதிருக்கப் பெரிதும் விரும்பி, அதற்கு அவள் தமர் உடன்படாமையான், அவளை அவர் அறியாமல் கொண்டு செல்ல எண்ணி, அதற்கு அவள் உடன்பாடும் வேண்டும் என விரும்பினன்; விரும்பிய அவன், அவ்வாறு உடன்போதல் அறன் அன்று எனத் தலைமகள் எண்ணிவிடுவளோ எனும் அச்சத்தால், அவ்வாறு போதல் அறநெறி மட்டும் அன்று; அஃது அமரர் போற்றும் நெறியுமாம் என்பதை எடுத்துக் காட்ட, யான் என்னோடுவர நின்னை அழைத்தல், முருகன் தன்னோடு வர வள்ளியை அழைத்தது போலும், நீ என்னோடு வருதல், வள்ளி முருகனோடு சென்றது போலும் என்று கூறினன் எனப் பாடிய புலமையினைப் போற்றுவோமாக.

"நோயும், நெகிழ்ச்சியும் வீடச், சிறந்த
வேய்வனப் புற்ற தோளை நீயே;
என்னுள் வருதியோ? நன்னடைக் கொடிச்சி!
முருகுபுணர்ந்து இயன்ற வள்ளி போல."

(நற் : அஉ)

## ௪. அம்மூவனார்

மூவன் என்ற பெயருடையார், பண்டைத் தமிழகத்தே பலர் இருந்தனர். பெருந்தலைச் சாத்தனார் பாராட்டிய மூவன் என்னும் புலவன் ஒருவன்; சேரமான் கணைக்காலிரும்பொறையால் வெல்லப்பட்டு, அவனால் பல் பிடுங்கப்பெற்ற மூவன் ஒருவன்; இவர்களினும் நம் புலவர் சிறந்தவராதலின், அம்மூவனாவர் எனச் சிறப்பளித்து வழங்கப் பட்டுள்ளார் என்ப. சேரநாட்டு மக்கள், அம்மு, திம்மு என்னும் பெயர்களைப் பயில மேற்கொள்வதை இன்றும் காண்கிறோம்; அம்மூவனார் சேர நாட்டு நெய்தல் நிலங்களையே பாடியுள்ளாராதலின், இவர் அந் நாட்டினராதலும் கூடும்; அவ்வாறாயின் அவர் இயற்பெயர் மூவன் என்பதன்று அம்மூவன் என்பதே எனக்கோடலும் பொருந்தும். இவர் குட்டுவனையும், அவன் நாட்டுத் தொண்டி, மாந்தை முதலாம் மாநகர்களையும், மலாடுநாடாண்ட மலையமான் திருமுடிக்காரியையும், அவன் தலைநகர் திருக்கோவலூரையும், அவனுக்குரிய பெண்ணையாற்றையும், பாண்டியர் கொற்கைத் துறையினையும் பாராட்டியுள்ளார்.

குட்டுவன், யானைப் படையாலும், தேர்ப்படையாலும் சிறப்புடையனாவன்; அவன் தன் பகைவேந்தரைக் கொன்று வென்ற போர்க்களத்தே எழும் முரசொலி, கடல் ஒலி போலும் பேரொலி தரும் "கடும் பகட்டுயானை, நெடுந்தேர்க் குட்டுவன், வேந்தடு களத்தின் முரசதிர்ந் தன்ன ஓங்கற் புணரி" (நற் : ௩௯௫), எனக் குட்டுவனையும், தொண்டித் துறை குட்டுவனுக்கு உரியது; "குட்டுவன் தொண்டி" (ஐங் : ௧௭௮); தொண்டி நகர்த் தெருக்களில் திரையின் ஒலியொடு கலந்து முழவின் ஒலி எழுந்து முழங்கும். "திரை இமிழ் இன்னிசை அளைஇ, அயலது முழவிமிழ், இன்னிசை மறுகுதொ றிசைக்கும் தொண்டி." (ஐங் : ௧௭௧). தொண்டி மீன் வளம் நிறைந்தது; அத்துறைவாழ் பரதவர் பழமையுற்ற படகுகளைப் புதுக்குவதிலும், புதிய வலைகளைப் பின்னுவதிலும் கருத்துடையவர்; நாம்

கொணர்ந்த சுறுமீன்களைத், தம் பக்கத்தே வாழும் தமர் முதலாயினோர்க்குப் பகிர்ந்தளித்து வாழும் பண்புடைய வாழ்க்கையர்; "பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர், மோட்டு மணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி, மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும் வளங்கெழு தொண்டி" (அகம் : க0) எனத் தொண்டித் துறையினையும், மாந்தை மாநகர், கடற் கரையைச் சார்ந்து உளது; "கடல் கெழு மாந்தை" (நற் : கூகூ) மாந்தை மகிழ்ச்சி தரும் இயற்கைக் காட்சிகளை உடையது; கடற்கரைக்கண் நிற்கும் நாவல் மரத்தினின்றும் கருநாவற் கனி கீழே வீழ்ந்ததாக, அதைத் தம்முடைய இனமெனக் கருதிய தும்பிகள் அதைச் சூழ்ந்துமொய்க்க, அதைக் கனியென உணர்ந்த நண்டு, தன் கவர்த்த கால்களால் பற்றிக்கொண்டதாக, அதைப் பெறமாட்டாது வருந்தும் தும்பிகள் அதைச் சுற்றிச் சுற்றித் திரிந்து அலமரும்; நண்டிற்கும், தும்பிக்கும் இடையே நிகழும் இப் போராட்டம். இரைதேடி ஆங்குவந்த நாரையைக் கண்டஞ்சிய நண்டு ஓடி ஒளியும், இத்தகைய அழகிய காட்சிகளை ஆங்காங்கே உடையது அம் மாந்தை;

"பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி; பழம் செத்துப்
பல்கால் அலவன் கொண்டகோட் கூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்திய விடுக்கும்
துறைகெழு மாந்தை." (நற் : கூரு)

என மாந்தைத் துறையினையும், "துஞ்சா முழவின் கோவற் கோமான், நெடுந்தேர்க் காரி கொடுங்கால் முன்துறைப் பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல்" (அகம் : கூரு) என மலையமான் திருமுடிக் காரியையும், அவனுக்குரிய திருக்கோவலூரையும், தென் பெண்ணையாற்றையும், நெய்தல் வளம்நிறைந்த கொற்கைத் துறைக்கண், மகளிர் தம் பற்கள்போலும் அழகிய முத்துக்கள் அளவின்றிக் குவிந்து

கிடக்கும்; கொற்கைத்துறை உடைமையால், பாண்டியன் கொற்கைக் கோமான் என அழைக்கவும் பெறுவன்; "அலங்கிதழ் நெய்தல் கொற்கை முன்றுறை இலங்கு முத்துறைக்கும்," "கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை," (ஐங்: ௧௮௫, ௧௮௮) எனக் கொற்கைத் துறையினையும் பாராட்டியிருத்தல் காண்க.

பரதவர், கடலைச் சார்ந்துள்ள குடிசைகளில் வாழ்பவர்; கடல்மேற் சென்று மீன்பிடித்து வாழ்தலைக் குலத்தொழிலாக உடையவர்; கடல்மேற் செல்லும் அவர்கள், செல்வதற்கு முன்னர்க், கடற்கரை அடைந்து ஆங்குள்ள புன்னை மரத்தடியிலிருந்து தம் வலைகளை உலர்த்திக் கொண்டே இடையூறு இன்றி இனிதுசென்று மீள்வதற்கேற்ப, கடல், புயலும், பெருங்காற்றும் அற்று உளதா என ஏற்ற காலத்தை எதிர்நோக்கியிருந்து செல்வர் எனப் பரதவர்தம் வாழ்க்கைப் பண்பினைப் படம்பிடித்துக் காட்டுவர்.

"கானலம் சிறுகுடிக் கடன்மேம் பரதவர்
நீனிறப் புன்னைக் கொழுநிழல் அசைஇத்
தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி
அங்கண் அரில்வலை உணக்கும் துறை." (நற்: ௪)

நெய்தல் நிலத்தார், உப்பளங்களில் கடல்நீர் பாய்ச்சி விளைத்த உப்பையும், உவர்நிலத்தே விளையும் உப்பையும், பண்டிகளில் ஏற்றிக்கொண்டு மலைகள்நிறைந்த உள்நாடு சென்று விற்றுவாழும், ஓரிடத்தும் நிலையாக வாழ்தலறியா வாழ்வுடையவர் உப்புவணிகராம் உமணர்; அவ் வுமணர் குடிவந்த மகளிர், உப்பினைக் கூடையிற்கொண்டு ஊர் தோறும் சென்று நெல்லுக்கு விலைமாற்றி வரும் வணிகத் தொழிலுடையராவர் என உப்பு வணிகர்தம் வாழ்க்கை முறைகளையும் வரைந்து காட்டியுள்ளார்:

"உவர்விளை உப்பின் குன்றுபோல் குப்பை
மலையுய்த்துப் பகரும் நிலையா வாழ்க்கை
கணங்கொள் உமணர்." (நற்: ௧௩௮

"பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரி விலைமாறு கூறலின்," (அகம்: ௧௪0)

"நெல்லும் உப்பும் நேரே; ஊரீர் !
கொள்ளீரோ? எனச் சேரிதொறும் நுவலும்."
(அகம் : ௩௯0)

நெய்தல்நிலப் பரதவர், தம் தொழிலுக்குத் துணைபுரியும் தோணிகள், பல்லாண்டுத் தொழிலாற்றிப் பழைமை உற்றவிடத்தும், கடல் அலைகளால் அலைப்புண்டு அலைப்புண்டு அடியற்றுப் போனவிடத்தும், அவற்றை மேலும் பயன்படுத்தார்; கடற்கரையைச் சார்ந்த புன்னைமரங்களில் பிணித்து விட்டுவிடுவர்; மருதநிலத்து உழவர்கள், தங்கள் உழுதொழிலிற்கு உறுதுணைபுரிந்த தம் எருதுகள் பல்லாண்டு உழைத்து, முதுமையுற்று நடை தளர்ந்தக்கால், அவற்றை மேலும் தொழில்செய்ய விடாது, புல்நிறைந்த தம் தோட்டப் புறங்களில் மேய்ந்து வாழுமாறு விட்டு விடுவர் என் அக்காலத் தொழில் வல்லார்தம் தொழிலறிவின் நுட்பத்தினை நன்கு அறிந்து அறிவித்துள்ளார்:

"ஈண்டுபெரும் தெய்வத்து யாண்டுபல கழிந்தெனப்
பார்த்துறைப் புணரி அலைத்தலின் புடைகொண்டு
மூத்துவினை போகிய முரிவாய் அம்பி,
நல்லெருது நடைவளம் வைத்தென, உழவர்
புல்லுடைக் காவில் தொழில் விட்டாங்கு
நறுவிரை நன்புகை கொடாஅர், சிறுவீ
ஞாழலொடு கெழீஇய புன்னையங் கொழுநிழல்
முழவு முதல் பிணிக்கும் துறை," (நற்: ௩௧௫)

அம்மூவனார் பாடிய அகத்துறைப் பாடல்கள், அரிய பல அறிவுரைகளை அள்ளிவீசும் அழகுடையவாம்; தான்

விரும்பிய ஒரு பெண்ணை, அப் பெண்ணைப் பெற்றோர் மனமுவந்து மணம் செய்துதரப் பெறுவதையே அக்கால ஆடவர் விரும்பினர்; அதற்காக, அவள் பெற்றோர் உளம் மகிழுமாறு உறுபொருள் கொடுப்பதும் உண்டு; பொருள் தரவும், பெண்ணைத் தாராராயின், அவள் பிறந்த ஊர் மன்றத்தே வந்து ஆங்குக் கூடியிருக்கும் ஆன்றோர்பால் தன் குறைகூறி, அதை முடித்துத் தாராரேல், மடலேறியும், வரை பாய்ந்தும் உயிர் விடவும் துணிவன்; இதனால், அவள் பெற்றோர், அவளை அவனுக்கு மணம் செய்துதர மனம் ஒப்புதலும் உண்டு; அம்மூவனார் கண்ட தலைமகன் அனைவரினும் உயர்ந்தானவன்; தான் விரும்பிய பெண்ணைப் பெறவிரும்பிய அவன், அவள் பெற்றோர்க்குப் பெரும் பொருளும், அணிகலமும் அளவிறந்தன அளித்து, அவளை மணம்தர வேண்டினான்; அவர்கள் மறுத்தனர்; மறுப்பவே, அவன் தன்னூர் வாழ்தலைவிட்டு நீங்கித் தொழில்மேற்கொண்டு அத்தலைவியின் தமர் செல்வழிச் சென்று, அவருக்குத் துணையாக உப்புப்பொதி தூக்கித் திரிந்தும், புணையேறிப் பெரிய கடலிடைப் புகுந்து மீன் கொணர்ந்தும், அவர் வயமாகியும், பணிந்தும் அவர் அன்பைப் பெற முயலுவோமா? அந் நிலையிலாவது அவர், அவளை மணம்செய்து தாராரா? என எண்ணினான்; அவன் ஒழுக்கத்தின் உயர்வு இருந்தவாறு என்னே!

“ஆய் தொடிக் குறுமகள்,
நலஞ்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்
பெறலருங் குரையளாயின், அறம் தெரிந்து
நாம்உறை தேஎம் மரூஉப் பெயர்ந்து அவனொடு
இருநீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழந்தும்,
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்,
படுத்தனம், பணிந்தனம், அடுத்தனம் இருப்பின்
தருகுவன் கொல்லோ?” (அகம் : உ௮0)

தான் விரும்பிய ஒரு பெண்ணை, அவளும், அவளைப் பெற்றோரும் மறுப்பினும், அவள் ஊரையும், உற்றாரையும் அழித்து வலிதிற் பெறவிரும்பிய வேந்தர்களுக்கிடையே

பெண்ணின் பெற்றோர் பெரிதும் உவக்குமாறு, பணி பல புரிந்தும், பணிந்து நின்றும் அவர் பெண்ணைப் பெற முயலும் அறநெறி நிற்கும் ஆண்மகனும் இருந்தான் என அறியத் துணைபுரிந்த அம்மூவனார்க்கு அறிவுடை உலகம் நன்றி தெரிவிக்குமாக!

கணவன், பரத்தை வீடுபோதல்போலும் தகாவொழுக்கம் உடையனாயவழி, அவன் ஆண்மகன் ஆவன்; எதையும் செய்தல் கூடும்: அதைத் தடுத்துப் போக்கல் பெண்டிர்க்கு அழகன்று என அடங்கியிராது, தாய் தன் மகன் தவறுசெய்தக்கால், கடுஞ்சொல் கூறியாவது இருத்தி நல்வழிப் படுத்தல்போல், தவறிய கணவரை இடித்துரைத்து நல்வழி நிறுத்தல், பெண்டிரின் நீங்காக் கடமையாம் எனவும், அவ்வாறு வழங்கும் அறவுரைகளுக்கு இடையே, அன்பற்றவனே, கொடியவனே என்பன போலும் கடுஞ்சொற்கள் சில வழங்குவது அறத்திற்கு அப்பாற்பட்டதன்று எனவும் கூறுவர் ஆசிரியர் தொல்காப்பியனார்; "தாய்போல் கழறித் தழீஇக் கோடல் ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்து என மொழிப," "அன்பிலை; கொடியை; என்றலும் உரியள்" (தொல் - கற்பு: கூஉ, கஎ) என அவர் கூறும் விதிகளை நோக்குக. கணவன், பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டு விட்டான்; அதனால் உளம் வருந்திய அவன் மனைவி, ஒருநாள், தன் கணவனுக்கு நண்பனாகிய பாணனைக் கண்டாள்; அவனை அழைத்தாள்; "பாண! நண்பர், நன்னெறியிற் பிறழ்வுழி, நல்லுரை பல கூறி நல்வழி நிறுத்துதல் அன்றோ நண்பர்க்குப் பண்பு? நின் நண்பன், தகாத வொழுக்கினனாகவும், இடித்துரைத்து ஈண்டுக் கொணர்ந்தனையல்லை; ஆதலின், நீயும், நின் நண்பனேபோல் பண்பற்றவன் போலும்" எனக் கூறித் தன் கடமையிற் றவறாப் பெண் ஒருத்தியைப் போற்றியுள்ளார் புலவர் அம்மூவனார்:

"பண்பிலை மன்ற; பாண! இவ்வூர்
அன்பில கடிய கழறி
மென்புலக் கொண்கனைத் தாரா தோயே." (ஐங் : கஅ)

பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டு வாழ்ந்து மீண்டு வந்த தன் கணவன்பால் "அன்ப! இப்பிறப்பு ஒழிய மறுபிறப்பு உற்றக்கால் நீரே என் கணவராதல் வேண்டும்; இப்பிறப்பில், நின் உள்ளம் விரும்பும் உயர்வினை வேறு ஒருத்தி பெற்றமை போலன்றி, வரும் பிறப்பில் அவ்வுயர் வினை உடையவள் யானே ஆகுக! இந்நிலை ஆக வேண்டு கின்றேன்," எனக் கூறினாள் எனப் பாடிய புலவன் பெண்களின் உள்ளத்தை எத்துணை நுணுகி உணர்ந்திருத்தல் வேண்டும்!

> "இம்மை மாறி மறுமை யாயினும்
> நீயா கியர்என் கணவனை;
> யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே."

(குறுந் : ௪௯)

கணவன் பொருள் தேடிக் கொணரப் பிரிந்துபோய் விட்டான்; குறித்த காலம் வரவும், அவன் வந்திலன்; அவன் வாராமையால் மனைவி பெருந்துயர் உற்றாள்; அவள் துயரை ஓர் அளவு குறைக்கவேண்டி, அவள் தோழி எத்தனையோ ஆறுதல் உரைகளை அளித்தாள்; தோழி, பலப்பல கூறித் தேற்றுவதுகண்ட தலைவி, தோழியை நோக்கித் "தோழி! தலைவன் குறித்த காலத்து வாராமை யால் என் தோள்களும் மெலிந்து அழகு குன்றின; அவன் வரும் வழியைப் பல்காலும் நோக்கி நோக்கி என் கண் களும் காணும் ஆற்றலை இழந்துவிட்டன; நினைப்பு மிகுதி யால் என் அறிவும் மயங்கிவிட்டது; உயிர் போவுழி, தன் உடலைப் பற்றிய நோயையும் உடன்கொண்டு போவ தல்லது, அதை விட்டுச் சேறல் இல்லை ஆதலின், இறக்கும் நிலையில் உள்ள என்னைப் [பற்றியுள்ள நோயும் என்னை விட்டு நீங்கிவிட்டது; பிரிந்தார்க்குத் துயர் தரும் மாலையும் வந்துவிட்டது; இனி என்நிலை என்னாம்? யான் இவ்வாறு கூறுவதுகண்டு, தோழி! யான் இறப்பைக்கண்டு அஞ்சு கின்றேன் என நினையற்க! யான் சாக அஞ்சேன்; ஆனால், இறந்து மறுபிறப்புற்றால், அப் பிறப்பில், இப்பிறப்பின் கண்ணால் அன்பு செய்யப்பெற்ற என் தலைவனை மறந்து

விடுவேன் கொல்? என்றே அஞ்சுகின்றேன்,'' என்று கூறித் தன் முதிர்ந்த அன்பை முன்னிறுத்திக் காட்டினாள்:

''தோளும் அழியும் நாளும் சென்றன;
நீளிடை அத்தம் நோக்கி, வாளற்றுக்
கண்ணும் காட்சி தௌவின; என்னீத்து
அறிவு மயங்கிப் பிறிதா கின்றே;
நோயும் பேரும்; மாலையும் வந்தன்று;
யாங்கா குவென்கொல்? யானே; ஈங்கோ
சாதல் அஞ்சேன்; அஞ்சுவல், சாவின்
பிறப்புப் பிறிதாகுவ தாயின்,
மறக்குவேன் கொல்? என் காதலன் எனவே''

(நற் : ௩௯௭)

இவ்வாறு கூறினுள் ஒருபெண் எனப் பாடிய இப்பாட்டு,

''துறக்கப் படாத உடலைத் துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும்பு ஏறுவன்; ஏறிவந்து
பிறப்பன்; பிறந்தால், பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ? என்று என் உள்ளம் கிடந்து மறுகிடுமே.''

என்ற நாவரசர் வாக்கை நினைப்பூட்டி, நினைக்குந்தொறும் கழிபெரும் களிப்பினைத் தந்து நிற்றல் காண்க.

தான் விரும்பிய தலைவற்குத் தன்னை மணம் செய்து தாரார் என உணர்ந்த தலைவி ஒருத்தி, அவனூர் சென்று மணந்து வாழத் துணிந்துவிட்டாள்; அதற்கு அவனும் இசைந்துவிட்டான்; குறித்த நாளன்று இருவரும் புறப்படலாயினர்; அந்நிலையில், தலைவியின் உயிர்த் தோழியாய், அவள் மேற்கொண்ட வினைக்கெல்லாம் உறுதுணை புரிந்தாளொருத்தி, அத்தலைவனை நோக்கி, ''அன்ப! தன் தவறு கண்டு தாய் தன்னை அடித்துத் துன்புறுத்தும் அக்காலத்திலும், குழந்தை அம்மா! எனக்கூவி அவளையே அணைந்து நிற்கும்; இதைப்போல், நீ இவட்கு இன்பமே தரினும் மாருகத் துன்பமே தரினும் இவள் நின்னுல் புரக்கப்படுவளாவள்; தன் உறுதுயரைத் துடைத்துப் போக்குவார் பிறர் எவரையும் இவள் பெற்றிலள்; ஆதலின் இவளை

விடாது காத்தல் நின்கடன்,'' என்று அறிவுரை கூறி அனுப்பினாள்; என்னே அவள் அன்பு! என்னே அவள் அறிவு?

''தாய்உடன்று அலைக்கும் காலையும்,வாய்விட்டு
அன்னா என்னும் குழவி போல,
இன்னா செயினும், இனிதுதலை யளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி;
தன்னுறு விழுமம் களைஞரோ இலள்''

—(குறுந்: 397)

இத்தகைய உயரிய தலைமக்களை ஒன்றுகூட்டி நம்முன் கொணர்ந்துகாட்டி, அறிவூட்டும் புலவர் அம்மூவனார்க்கு யாம் என்ன கைம்மாறு செய்யவல்லோம்?

பொருள் உடையார், பொருள் அளித்துப் புரந்தாலன்றி, இரந்துண்டு வாழ்வார் இறவாதிருத்தல் இயலாது என்பதறிந்த பொருள் உடையார், அவ்விரவல், தம்பால் பொருள் பெற்றுப் பிழைக்கும் புன்கண்மையுடையர் என அவரை இழிவுடையராகக் கருதாது, அவர்மாட்டுப் பேரன்புடையராதல்வேண்டும்; அதற்குமாறாக அன்புகாட்டுவதை விடுத்து, வெறுத்தொதுக்குதல் விழுமியோர் செயலாகாது; அடுத்துண்டு வாழ்கின்றோமே; அண்டிப் பிழைக்கின்றோமே என ஒடிந்த அவர் உள்ளத்தை, பொருள் அளிப்பார் வெறுப்பு, மேலும் வேதனைக்குள்ளாக்கும். இதை உணர்ந்த புலவர், தன்னையின்றி வாழாத் தனிநிலையுடையாள் தலைவி என்பதறிந்தும், அவளுக்குத் தலையளி செய்யாது தலைமறைந்து வாழும் தலைவன் செயல், தான் அளித்தாலல்லது வாழமாட்டார்மாட்டு அன்பின்மை காட்டும் அறக்கொடியோர் செயல்போலாம் எனக் கூறியுள்ளார்:

''நல்கின் வாழும் நல்கூர்ந்தோர் வயின்
நயனில ராகுதல் நன்றென உணர்ந்த
குன்ற நாடன் தன்னினும், நன்றும்
நின்னிலை கொடிது.''

—(குறுந்: 247)

## ரு. அம்மெய்யனுகனுர்

இவர் இயற் பெயர் நாகன் என்பது. நாகன் என்ற பெயருடையார் பலராதலின், அவரின் இவரைப் பிரித்து உணர்தற்கு, இவர் இயற்பெயர்முன் அம்மெய்யன் என்ற அடை வழங்கி அழைத்தனர் அக்காலத்தார்; அம்மெய்யன் என்பது அழகிய மெய்யுடையான் எனும் பொருள் தருவது ஆதலின், இது புலவர்தம் வடிவழகு கண்டு வழங்கிய சிறப்புப்போலும்! இனி, அம்மெய்யன் என்பது இவர் தந்தை பெயர்; தந்தையின் பெயரைத் தம் பெயரோடு சேர்த்து வழங்கும் வழக்குண்மையான் இவர் அம்மெய்ய ஞகனுர் எனப்பட்டார் எனக்கோடலும் பொருந்தும். இவர் பாட்டொன்று நற்றிணைக்கண் இடம்பெற்றுளது.

ஒருவன் மனைவி எத்துணைப் பேரழகு உடையவ ளாயினும், அவன் கடமையறி உளத்தனுயின், அவன் மேற்கொள்ளும் தொழிலை, அவள் அழகு தடுத்து நிறுத் தல் இயலாது என்பதைப் புலவர் விளக்கியுள்ளார். தன் தலைவி, அழகு ஒழுக எழுதிப்பார்த்திருக்கும் ஓவியம் போலும் பேரழகு உடையவள்; இவள் அழகைக் கண்டார் எவரும், இவளை விட்டுப் பிரிய எண்ணுர்; ஆனுல், இவள் பெற்றுள்ள இப்பேரழகும், பலகாலும், பல்லாற்ருனும் எண்ணி எண்ணிப் பார்த்து, பொருள் பெற்று வாழ்வதே புகழும், பெருமையும் தருவது; அப்பொருள் தொழில் ஒழிந்து மனைக்கண் மடிந்து இருப்பார்க்கு உண்டாதல் அரிது; திரைகடல் ஓடித் தேடுவார்க்கே அஃது உண்டாம்; ஆகவே சென்று, அதைப் பெற்றல்லது மீளேன் எனத் துணிந்து பிரிய எண்ணிய தலைமகனைத் தடுத்து நிறுத்த ஆற்ருது போயிற்றே என்று கவலைகொள்ளும் தோழி ஒருத்தியின் வாயில் வைத்து விளக்கினமை காண்க.

"திறம்புரி கொள்கையொடு இறந்துசெயி னல்லது
அரும்பொருட் கூட்டம் இருந்தோர்க்கு இல்என
வலியா நெஞ்சம் வலிப்பச் சூழ்ந்த
வினையிடை விலங்கல போலும்!, புனைசுவர்ப்
பாவையன்ன பழிதீர் காட்சி,
.................................
பொம்மல் லோதிப் புனையிழை குணனே." (நற்: உகூஉ)

# கூ. அழிசி நச்சாத்தனார்

இவர் இயற்பெயர் சாத்தனார்; இவர் புலமைநலம் கண்ட அக்கால மக்கள், சிறப்புக் குறித்து வழங்கப்பெறும் "ந" என்ற அடைதந்து இவரை வழங்கினர்; இவர் பெயர்க்கு முன்வந்துள்ள அழிசி என்ற சொல், புலவரின் தந்தையார் பெயர்போலும்; அழிசி என்ற பெயருடைய சிற்றரசன் ஒருவனும் அக் காலத்தே வாழ்ந்திருந்தான்; அவன் ஆர்க்காடு எனும் ஊரை உடையவன்; சேந்தன் என்பானின் தந்தையாம் உறவுடையவன்.

"திதலை எஃகின் சேந்தன் தந்தை
தேங்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி
வண்டுமூசு நெய்தல் நெல்லிடை மலரும்
அரியலங் கழனி ஆர்க்காடு,"

(நற்: கஅ0)

"காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை
அரியலம் புகவின் அந்தோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடு."

—(குறுந்: உருஅ)

பேயோடு பழகினும் பிரிவரிது என்ப எனின், தலையாய குணங்களால் நிறைந்தாளொருத்தி, தன் கணவன் பரத்தையரொழுக்கம் மேற்கொண்டான் எனக் கண்டு, அவனைக் கைவிடல் கூடுமோ? பெரியோர், முன்னொருகால், நன்மையொன்று செய்தவர், பின்னர்த் தம்மைக் கொல்வதுபோலும் கொடுமைகளைப் புரியினும், அவர் முன்செய்த அவ்வொரு நன்றியை நினைந்தே அவர் கொடுமைகளை மறப்பர்; பெரியோர்தம் பண்பு இது; தலைவி பெருமை தரும் குணங்களால் நிறைந்தவள்; அவள் தன் கணவன் தகாவொழுக்கம் மேற்கொண்டு தனக்குப் பெருந்துயர்

தரும் காலத்தும், அவன் தன்னைக் கண்டு மணந்த அந்நாள் செய்த தலையளி ஒன்றை எண்ணி, அவன் கொடுமை மறந்து வாழ்வள்; இதுவே மனைவிக்கு மாண்பு தரும் செயலாம். இதை உணர்த்த விரும்பிய புலவர், பரத்தை வீடுசென்று வாழ்ந்து, தன்வீடு வந்துநிற்கும் தலைவனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிய தோழியிடம், "தோழி! தலைவனைத் தேடித்தெளிந்து அவனோடு அன்புகொண்டு வாழ்ந்தது ஒரு நாளேயாகும்; அங்ஙனம் அவனோடு கொண்ட ஒருநாள் உறவால், மிகப் பல நாட்கள், அவன் கொடுமையினை எண்ணி எண்ணி, யானும், என் தோள்களும் அழகுகெட்டு அழவேண்டியராயினேம்; அவ்வொருநாள் நட்பு, இத்துணைப் பெருநோயாய் முடியும் என்பதை அறியாது போனேன்," எனக் கூறி வருந்தியிருந்து வரவேற்பதல்லது, அவனைப் போவெனப் போக்கிவிடுதல் பெண்டிரிற் சிறந்தார் செயலன்று என அறிவித்தாள் எனப் பாடியுள்ளமை காண்க:

"அருவி அன்ன பருஉறை சிதறி
யாறு நிறை பகரு நாடனைத் தேறி
உற்றது மன்னும் ஒருநாள்; மற்றது
தவப்பல் நாள்தோள் மயங்கி
வௌவும் பண்பின் நோயா கின்றே." (குறுந்: உஎக)

## எ. அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்

இவர் பெயருள் காணப்படும் ஞாழலார் என்றசொல் ஞாழார் எனவும், மள்ளனார் என்ற சொல், அம்மள்ளனார் எனவும் ஏடுகளில் காணப்படும்; அளக்கர் ஞாழல் என்பது ஓர் ஊர்; அவ்வூரில் வாழ்ந்தார் ஒருவரின் மகனார்; மதுரையில் வந்து வாழ்ந்தவர்; பாண்டியர் படையில் தொழிலாற்றியவர் என்று இவர் வரலாறு காணுவர் சிலர்: திரை கொணர்ந்து கொழித்த எக்கர்க்கண் வளர்ந்த ஞாழலை, அளக்கர் ஞாழல் எனச் சிறப்பித்துப் பாடினமை யால் இவர் தந்தையார் அளக்கர் ஞாழலார் எனப்பட்டார்; அத் தொடர் அவர் தந்தை பிறந்த ஊர்ப் பெயரைக் குறிப்பதன்று என்று கூறுவர் வேறு சிலர்; அவர் தந்தை பற்றி யாது கூறினும், அவரொரு படை மறவர் என்பதை எவரும் மறுத்திலர்; அதை, மள்ளனார் என்ற அவர் பெயரேயன்றி, அவர் பாக்கள் சிலவும் உறுதி செய்கின் றன; மள்ளனார், பாண்டியர் படையில், தொழிலாற்றியவ ராவர் என்பதைப், "பண்ணனைப் பாடேனாயின், யான் செய்நன்றி மறந்த சிரிலனாதல் அறிந்து, பாண்டியன் என்னையும், என் சுற்றத்தையும் புரக்காது ஒழிவானாக," என்று கூறும் அவர் பாட்டு உறுதிசெய்தல் காண்க.

மள்ளனார் படைத்தொழில் பயின்றவராதலின், அவர்பால் போர்அறிவு நிறைந்து நிற்கக் காண்கிறோம். பேரரசர் இருவர் பகைத்து நின்று போராற்றுங்களத்தே, பாய்ந்தோடிவரும் பகைவரின் தூசிப் படையினைத் தன் ஒப்பற்ற படையால் அழித்து ஒழிக்கவல்ல ஆற்றலும், செல்வமும் உடையார்க்கே, வெற்றித் திருவுண்டாம் என்று கூறும் இப் போர்நுணுக்கம் படைத்தொழில் பயின்றார் பாலல்லது, பிறர்பால் காணல் இயலாது. மள்ளனார் இவ்வாறு வெற்றிக்கு வழி இது எனக் கூறியதோடு, வென்ற வீரர்க்கு வேந்தன் பொற்பூ அளித்து மகிழும் வெற்றித் திருவிழாவினையும் கூறியுள்ளார்; இடியொலி கேட்பினும், படையொலி எனக்கொண்டு தானும் எதி

ரொலித்துச் சினக்கும் களிறுகளே படைக்குப் பண்பு தரும்; போர்வேட்டுக் களம்புகும் மறவர், தம் கைவாளின் கூர்முனை மழுங்க மாற்றார் படையினை அழிக்கும் ஆற்ற லுடையராதல் வேண்டும் என்று படையின் இயல்பினையும் எடுத்துக்காட்டி, பகைவர் உடலின் ஒழுகிய உதிரம், மான் களின் காலடி பதிந்த சிறுபள்ளந்தோறும் நிரம்பி நிற்கும் களக் காட்சி, வானத்து மீன்களை நினைப்பூட்டும் எனப் போர்க்களக் காட்சியினையும் விளங்கக் காட்டி, இவ்வாறு, ஆராய்ந்து, போர் உடற்றிப்பெற்ற செல்வமே பெருஞ் செல்வமாம் என்று வெற்றித்திருவினை விளங்கப் பாராட்டி யுள்ளார்.

"இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்து
ஒருபடை கொண்டு, வருபடை பெயர்க்கும்
செல்வம் உடையோர்க்கு நின்றன்று விறல்எனப்
பூக்கோள் ஏய தண்ணுமை." (அகம்: கஎச)

கக. "விசும்பின்
ஏறுஎழுந்து முழங்கினும்; மாறுஎழுந்து சிலைக்கும்
கடாஅ யானை கொட்கும் பாசறைப்,
போர்வேட் டெழுந்த மள்ளர் கையதை
கூர்வாள் குவிமுகம் சிதைய நூறி
மான்அடி மருங்கில் பெயர்த்த குருதி
வான மீனின் வயின்வயின் இமைப்ப
அமர்ஓர்த்து அட்ட செல்வம்." (அகம்: கசச)

மள்ளனார் பாராட்டிய மாண்புடையோன், "தனக் கென வாழாப் பிறர்க் குரியாளன்," எனப் புலவர் பலர் போற்ற வாழ்ந்த சிறுகுடி கிழான் பண்ணனுவன்; காவிரிக் கரைக்கண் வாழ்ந்தவன்; சிறந்த கொடையாளன்; பண் ணன் பெருமையறிந்த புலவர், பண்ணன் தன்னைப் பாடி வந்த கிணைமகன் ஒருவன் தன் வறுமையின் கொடுமை யினை உணர்த்தினுகை, உணர்த்திய அப்போதே அவன் வறுமையெல்லாம் வாடி வனப்புறுமாறு தன்பால் உள்ளன எல்லாம் கொடுத்த கொடைச் செல்வத்தையும், புலவர்க்கு நெல் விளையும் நன்செய் நிலங்களை நல்கும் நலப் பாட்டினை

யும் பாராட்டி, இவ்வாறு வருவார்க்கு வரையாது வழங்கும் வள்ளியோனாய அவன் தொழிலாகிய உழவினையும், அத்தொழிற்குத் துணைபுரியும் அவன் ஏறுகளையும், ஏற்றங்களையும் புலவரும், இரவலரும் போற்றி வாழ்த்தக் கடமைப்பட்டவராவர்; அவ்வாறு வாழ்த்தாதார் செய்ந்நன்றி கொன்ற பாவிகளாவார்; அவ்வாறு யானும் பாடேனாயின், என்னைப் புரக்கும் பாண்டியன், என்னையும், என் சுற்றத்தினையும் புரக்காது கைவிடுவானாக என்றும் கூறி அவனை வாழ்த்துவாராயினர்; இவ்வாறு வாழ்த்திய வாழ்த்துரையில் புலவர்களைக் குறிப்பிடுங்கால், அவர்கள் நுண்ணிய நூற்பொருள் அறிந்த அறிவே கையாகவும், அறிந்த பொருளை அறிய உணர்த்தும் நாவே மருப்பாகவும், அந் நாவினின்றும் வெளிப்போந்து மாற்றாரை வெல்லும் சொல்லே யானையாகவும் உடையவராவர் என்று கூறும் திறம் மள்ளர் புலவர்கள்பால் கொண்டுள்ள மட்டிலாப் பெருமதிப்பினை உணரச் செய்கிறது; "புலம் மிக்கவரைப் புலமை தெரிதல் புலம் மிக்கவர்க்கன்றோ புலனாம்?"

"இரும்பறைக் கிணைமகன் சென்றவன் பெரும்பெயர்
சிறுகுடி கிழாஅன் பண்ணன் பொருந்தித்
தன்னிலை அறியுந னாக, அந்நிலை
இடுக்கண் இரியல் போக, உடைய
கொடுத்தோன் எந்தை கொடைமேந் தோன்றல்;
நுண்ணூல் தடக்கையின், நாமருப் பாக,
வெல்லும் வாய்மொழிப் புல்லுடை விளைநிலம்
பெயர்க்கும் பண்ணன்; கேட்டிவன்.........
வினைப்பகடு, ஏற்றம் எழீஇக் கிணைதொடா
நாள்தொறும் பாடே னாயின், ஆனா
மணிகிளர் முன்றில் தென்னவன் மருகன்
பிணிமுரசு இரங்கும் பீடுகெழு தானை
அண்ணல் யானை வழுதி
கண்மா றலீயர்என் பெருங்கிளைப் புரவே." (புறம்: ௩அ௮)

தலைமகள் ஒருத்தி, தன் தோழியும் அறியாவண்ணம் தலைமகன் ஒருவனோடு உறவுகொண்டாள்; அன்று முதல்

அவளிடையே பெரியதொரு மாறுபாடு நிலவத்தொடங்கிற்று; அம்மாறுபாட்டால், அவள் ஒழுக்கத்தில் ஒரு மாறுபாடு உண்டாயிற்று என்பதை உணர்ந்துகொண்டாள் அவள் தோழி. அவள் அறிந்தாளாயினும், தலைமகள் தன் களவொழுக்கத்தை அவளுக்கு அறிவித்தாளல்லள்; தானும் தலைவியும் வேறு அல்லர்; ஒருவரே எனப் பழகிய தோழிக்குத் தலைமகள் செயல் சிறிது வருத்தத்தை உண்டாக்கிற்று; எவ்வாறாயினும் அதை அவளே உரைக்குமாறு செய்தல்வேண்டும் எனத் துணிவுகொண்ட தோழி, ஒருநாள் தலைமகள்பால் சென்று, "தோழி! பொற்கிண்ணத்தில் வைத்த பால் உண்ணப்பெறுமல் வைத்தவாறே உளது; உடலும் ஒளிமிக்குத் தோன்றுகிறது; முன்போல் பயில நடப்பதும் இல்லை; செவிலியோடு மகிழ்ந்து உறங்கும் படுக்கையினையும் நினைக்கின்றாயல்லை; மதுக்குடிப்பார் மறைவில் மகிழ்வதே போன்ற மகிழ்ச்சி நின்பால் உளது; இவ்வாறு நம் பண்டை இயல்பில் மாறுபடுகின்றோமே என்ற எண்ணமும் நினக்கு உண்டாகவில்லை; இதனால் நின் உள்ளத்தே ஏதோ ஒரு குறிப்பு உளது என்பது உறுதியாகிறது. நீ ஒரு தலைமகனோடு உறவுகொண்டுள்ளாய் என்பதை அன்னை உணர்ந்துவிட்டாள்; அதோ பார் அவள் கூவி அழைக்கும் குரலில் கொடுமை தோன்றி நிற்பதை," என்று கூறினாள். அன்னை உணர்ந்தாள் எனக் கூறிய அவள் உரை, தலைமகளுக்கு அச்சத்தை உண்டாக்க அவள் உண்மையைத் தோழிக்கு உரைத்துத் தன் ஒழுக்கம் கெடாவகை உறுதுணைபுரியுமாறு வேண்டினாள். இந்த அரிய நிகழ்ச்சியை அழகொழுகும் ஒரு பாட்டில் அமைத்துக் காட்டியுள்ளார் புலவர்.

"பொன்செய் வள்ளத்துப் பால்கிழக்கு இருப்ப;
நின்ஒளி ஏறிய; சேவடி ஒதுங்காய்;
பன்மாண் சேக்கைப் பகைகொள நினைஇ;
மகிழா நோக்கம் மகிழ்ந்தனை போன்றனை
எவன்கொல் என்று நினைக்கலும் நினைத்திலை;
நின்னுள் தோன்றும் குறிப்புநனி பெரிதே;
..................................................அன்னை
ஐயம் இன்றிக் கடுங்கூ வினளே." (நற்: உகள)

ஆண்மகன் ஒருவன், தன் மனைவியைப் புகழுங்கால், தன் மனைநோக்கி வரிசை வரிசையாக ஓயாது வரும் விருந்தினரைப் பேணுவதில் பகற்காலம் எல்லாம் கழித்துப், பின்னர் நீராடித், தலைபுனைந்து அதில் மணநாறும் தாழை மலர்சூடி, உள்ள மகிழ்ச்சியை உணரத்தோற்றும் புன்னகையுடையளாய், பள்ளியுட் புகுந்து, இருவர்க்கும் நன்மை தரும் சொல்லாடல் மேற்கொண்டு மகிழ்வள் என அவள் மாண்புரைத்தான் எனப் பாடி, மகளிர் மனையறம் ஓம்பும் மாண்பு இஃது என உணர்த்திய புலவர்க்கு உலகம் நன்றறி உள்ளம் உடையதாகுக.

"விருந்து ஒழிவு அறியாப் பெருந்தண் பந்தர்
வருந்தி வருநர் ஓம்பித், தண்ணெனத்
தாதுதுகள் உதிர்த்த தாழையம் கூந்தல்
வீழிதழ் அலரி மெல்லகம் சேர்த்தி,
மகிழணி முறுவல் மாண்ட சேக்கை
நம்மொடு நன்மொழி நவிலும்
பொம்மல் ஓதிப் புனையிழை குணனே." (அகம் : ௩௫௩)

ஆண் மகன் ஒருவன், தன் இல்லறம் இனிது நடைபெறுதற்குப் பெரும்பொருள் வேண்டும்; அப் பொருள், ஓடித்தேடுவார்க்கல்லது உறங்கி இருப்பார்க்குக் கிட்டாது; ஆகவே பிறநாடு புகுந்து பொருள் சேர்த்தல் வேண்டும் என்று எண்ணினான்; ஆனால், அவன் தலைவியோடு கூடி வாழும் வாழ்க்கையால் உண்டாம் இன்பம் எளிதில் பெறக்கூடியதன்று; கிடைத்தற்கரிய அவ்வின்பத்தை இளமைக் காலத்திலேயே நுகர்தல்வேண்டும்; ஆண்டு முதிர்ந்த வழி, அஃது இன்பம் தருவது இல்லை; இளமை இறவாது நிற்குமோ எனின், அது கனவில் தோன்றிய காட்சி, தோன்றிய அக்கணமே மறைந்து போவது போல், வாழ்நாள், நெருநல் இன்பம் இன்று இல்லை என்று கூறுமாறு விரைவில் கழியும் இயல்புடையதாகும்; இளமை எத்துணை விரைவாகக் கழிகிறதோ, அத்துணை விரைவாக முதுமை வந்தெய்தும் என்ற அறிவும் உடையவன்; ஆகவே, பொருள் வேண்டிப் பிரி

தல் வேண்டும் தன் உள்ளத்திற்கு, "நெஞ்சே! இந்த உண்மைகளை இப்போது நீ உணராய்; பிரிந்து சென்று, கடத்தற்கரிய கொடுவழியில் நின்று, தலைவியின் மாண்பு களை நினைந்து தடுமாறுவாய்; ஆகவே எதையும் துணிந்து மேற்கொள் என்று" கூறினான்; ஆனால் அவன் உள்ளம் வினைமேற்கொண்டு செல்வதே நன்று என்பதை உலகிய லானும், அறிவு நூலானும் விளங்க உரைத்தது; அது கேட்ட அவனும், மனைக்குரிய மாண்புகளானும், கற்பாலும் அழகாலும் சிறந்த மனையாளைப் பிரிந்து பொருள் தேடப் புறப்பட்டுவிட்டான்; காவதம் பல கடந்து கடத்தற்கரிய காட்டு வழியில் சிறிது இருந்தான்; அந் நிலையில், அவனைப் பொருள் தேடத் தூண்டிய அவன் உள்ளம், மனையில் தனித்து உறையும் தன் மனையாளை நினைந்து வருந்த லாயிற்று; மேலே செல்லுதலொழிந்து மீண்டு மனை புகவும் எண்ணலாயிற்று. "ஆண்டு யான் கூறியனவற் றைக் கொண்டு பிரியாதிருந்திருத்தல் வேண்டும்; பிரிந்து இத்துணை நெடுந்தூரம் வந்து திரும்புவையாயின் உலகத் தார் நின்னைக் கண்டு நகைப்பர்; எண்ணித் துணியாதவன்; எண்ணிய எண்ணியாங்கு இயற்றும் திண்மை இல்லாதவன் என என்னையும் பழிக்கும்; ஆகவே நின் எண்ணம் ஒழிக," என்று அவ்வுள்ளத்திற்கு அறிவுரை கூறினான்.

இந்நிகழ்ச்சிகளை இரு செய்யுள் வழியாக விளக்கும் ஆசிரியர் அம்மள்ளனார், 'பொருட் சிறப்பும், இல்லற மாண்பும், நாளும் இளமையும் நில்லாப் பண்பும், அஞ்சு வது அஞ்சல் அறிவுடைமையாமாறும் இவ்வுலகத்தார் உணர்ந்து உயர்வு பெறுதல்வேண்டும் என்ற உணர்வின ராவர்; அவர் உணர்த்தும் இவ்வறிவு நெறியினை, அவர் காட்டும் தலைமகன் வழி நின்று உணர்ந்து உலகமும் உயர்வு பெறுமாக.

"ஆள்வினைப் பிரிதலும் உண்டோ? பிரியினும்,
கேளினி வாழிய! நெஞ்சே! நாளும்
கனவுக் கழிந்தனைய வாகி நனவின்
நாளது செலவும், மூப்பினது வரவும்,

அரிதுபெறு சிறப்பின் காமத்து இயற்கையும்
இந்நிலை அறியா யாயினும்.........
மரநிழல் அற்ற இயவின் சுரன் இறந்து
உள்ளுநை யல்லை யோ?'' (அகம் : ௩௫௩)

''வினை நன்றுதல் வெறுப்பக் காட்டி
மனைமாண் கற்பின் வாணுதல் ஒழிய
..............................................
அத்தம் செலவருங் குரைய என்றது, சென்று
..............................................
யாமே எமியம் ஆக, நீயே
ஒழியச் சூழ்ந்தனை யாயின்,......
பிரியா யாயின் நன்றுமன் தில்ல;
அன்றுநம் அறியாய் ஆயினும், இன்றுநம்
செய்வினை ஆற்றுற விலங்கின்
எய்துவை அல்லையோ பிறர்நகு பொருளே.''
(அகம் : ௩௩)

மள்ளனார் பாடல்களை மேலும் நோக்கின், அவர் சேரனுக்குரிய கொல்லிமலையினை அறிந்துள்ளார் என்பதும், உழவர் பல்லெருத்துள்ளும் நல்லெருது தேடுவர் என்ற உழவர் இயல்பறிந்தவர் என்பதும், குதிரை நூல் வல்லவர் என்பதும், உள்ளம் கலங்கியவழி உற்ற தொழில் நடை பெறுது என, உள்ளமும், உடலும், உறவுடையன என உணர்ந்தவர் என்பதும், அக்கால மகளிர் மேற்கொள்ளும் ''தோளி'' போன்ற ஆடல் வகைகளை அறிந்தவர் என்பதும் புலனும். அவர் பெருமையினை, அவர் பாடற் பெருமையால் அறிந்து பாராட்டுவோமாக.

# அ. ஆசிரியர் நல்லந்துவனார்

இவர் அந்துவன் எனவும், நல்லந்துவனார் எனவும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் எனவும் அழைக்கப் பெறுவார். இவர், நல் அந்துவன் எனவும், ஆசிரியர் அந்துவன் எனவும் அழைக்கப்பெறுதலால், இவர் அக் காலத்தாரால் நன்கு மதிக்கப்பட்டுளார் என்பது புலனாம். அதற்கேற்ப, மதுரைவாழ் புலவர்களுள் மிகப் பல பாடல் பாடிப் பெருமையுற்ற புலவர் மருதன் இளநாகனார், திருப் பரங்குன்றைப் பாராட்டுங்கால், அஃது அந்துவன் பாடிய அருமையுடையது என்று கூறி, இவரைப் பாராட்டி யுள்ளமை உணர்க: "தண்பரங் குன்றத்து அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை." (அகம் : ௫௯)

சங்கமருவிய தொகை நூல்கள் எட்டனுள், "கற்றறிந் தார் ஏத்தும் கலி" "கல்வி வலார் கண்ட கலி" எனப் போற்றப்படும் கலித்தொகையினைத் தொகுத்த சிறப்புடையார் நம் நல்லந்துவனார். "ஆதலான், ஈண்டுப் பாலைத்திணையையும் திணையாக ஆசிரியர் நல்லந்துவ னார் கோத்தாரென்று கூறுக" (கலி; தோற்றுவாய்) என்றும், "முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" என்புழிச் சொல்லாத முறையாற் சொல்லவும் படுமென் றலின், இத்தொகையைப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என இம்முறையே கோத்தார் நல்லந்துவனார்" (கலி : உரை) என்றும் கூறும் உரையாசிரியர் நச்சினார்க் கினியர் உரையான் இஃது உண்மையாதல் காண்க. அவ் வாறு தாம் கோத்த கலித்தொகைக்குரிய கடவுள் வாழ்த் தையும், ஐந்தாம் கலியாகிய நெய்தற்கலியினையும் இயற்றிய பெருமையும் இவர்க்கே உண்டு. இது, "சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை புல்லிய கிளவி எச்ச மாகும்!' என்பதனாற் சொல்லெச்சமும், குறிப்பெச்சமு மாகத் தம் பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட் செய்தார்" என்ற நச்சினார்கினியர் நல்லுரை

யானும் (நெய்தற்கலி: உரை: உரை), "நல்லந்துவன் நெய்தல்" என்ற தொடரானும், கீழ்வரும் வெண்பாவானும் இனிது விளங்கும்:

"நாடும் பொருள்சான்ற நல்லந் துவனாசான்
சூடுபிறைச் சொக்கன் துணைப்புலவோர்—தேடுவார்
கூட்டுணவே வாழ்த்தோடு கொங்காங் கலியினையே
கூட்டினான் ஞாலத்தோர்க் கு."

நெய்தற்றிணை தழுவிவந்த கலிப்பாக்கள் முப்பத்து மூன்றுடன், வையை வெள்ளப் பெருக்கினை விளக்கும் மூன்று பரிபாடலும், முருகனைப் போற்றும் பரிபாடல் ஒன்றும், நற்றிணை, நெடுந்தொகை இவற்றில் ஒவ்வோர் அகவலும் இவர் பாடியனவாக நமக்குக் கிடைத்துள்ளன.

ஆசிரியர் நல்லந்துவனார், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் என அழைக்கப் பெறுதலானும், பாண்டி நாட்டுப் பேராறாகிய வையையையும், அந்நாட்டுச் சிறப்புடைய குன்றுகளுள் ஒன்றாய திருப்பரங்குன்றையும் பாடியுள்ளமையானும், இவர் மதுரையில் வாழ்ந்தவர் என்பது பெறப்படும். இவர் அரசர் எவரையும் பாராட்டினாரல்லர். ஆயினும், "பாண்டியனோடு உறவுகொண்டு, அவன் உள்ளம் தெளியச் செய்த தேயத்தார் இன்புற்று வாழ்தலே போல்" - "தென்னவன் - தெளிந்த தேஎம் போல இன்னகை எய்தினன்"- (கலி: கஉஅ) என்று பாண்டிய அரசரை மட்டும் பாராட்டியிருத்தலையும் காண்க. ஆசிரியர் நல்லந்துவனார், அரசர் எவரையும் பாடினாரல்லரெனினும், அவர் அக்கால நிகழ்ச்சிகள், மக்கள் மனநிலை, அவர் வாழ்வியல் ஆகியவற்றை விளங்கப் பாடியுள்ளார். அவர் பாக்கள் காட்டும் புலமை நலமும், அவை இடையிடையே உணர்த்தும் அறநெறிகளும், அவர் ஆசிரியர் என அழைக்கப்பெறுதற்கு முழு உரிமையும் பெற்றவராவர் என்பதைத் தெற்றென உணர்த்திநிற்கும்.

ஆறு அங்கம் உணர்ந்தவர் அந்தணர்; அவர்க்கு அருமறை அளித்தவன் சிவன்; அவன் கங்கையைச் சடையில்-

கரந்தவன்; திரிபுரம் தீயெழச் செய்தவன்; ஊர்தி ஏறுடையான்; பொன்னின் நிறமுடையான்; புலியின் தோலுடையான்; கொன்றைத் தாருடையான்; திருமால் மார்பிற் றிருமகளுடையான்; அவன் மல்லரைச் சாய்த்தான்; மண்ணை அளந்தான்; இவ்விருவரும், நான்முகனும், துவாத சாதித்தியரும், மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும், ஏகாதசருத்திரர்களும், எட்டுத் திசைக்காவலர்களும், ஏனைய அமரரும், அரக்கரும், தெய்வ முனிவர்களும் இமயத்தும் முருகன் உறையும் திருப்பரங்குன்றத்தும் ஒப்ப வாழ்வர்; முருகன் இமயப் பொய்கையில் தோன்றினன்; அவன் ஊர்தி யானை; கோழி அவன் கொடி; அடங்கருந் தோற்றத்து அருந்தவம் முயன்றோர், தம் உடம்பு ஒழித்து, உயர்உலகு இனிது பெறுவர்; அவ்வாறு அத்துறக்கம் புக்கார், ஆண்டு வேண்டிய வேண்டியாங் கெய்தி வாழ்வர்; தெய்வம் வழிபட்டாரையே வருத்துவதும் உண்டு; சிந்திக்கப் பிணிதீரும் சிறப்பு கற்புநிறை காரிகையர்க்குண்டு என்றெல்லாம் கூறும் அவர் உரையானும், கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் சிவனைப் போற்றுவதாலும், முருகன் உறை பரங்குன்றைப் பாராட்டியுள்ளமையானும், ஆசிரியர் நல்லந்துவனாரின் சமயஉணர்வு செம்மையுற விளங்குதல் காண்க.

ஆசிரியர் நல்லந்துவனார், தம் காலத்தே, தமிழகத்தில் நிலவிய அரசியல் நெறிகளை நன்கு உணர்ந்தவராவர். தமிழக முழுதும் தனியரசு நிலவிய காலம் எப்பொழுதும் இருந்ததில்லை; சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பிரிவுண்டிருந்த அந் நாடுகள் மூவேந்தர் ஆட்சிக்குமட்டுமே உட்பட்டிருந்தன என்று கொள்வதற்கும் இல்லை; ஒவ்வொரு நாடும் அவ் வினத்தின் வழிவந்த பல்லோரான் பல சிறு பகுதிகளாகப் பிளவுண்டு ஆளப்பட்டு வந்தது; பேரரசர் வழிவந்த பலரோடு, வேறு பல குறுநிலத் தலைவர்களும், அந் நாடுகளில் ஆங்காங்கே ஆட்சிபுரிந்து வந்தனர்; இதனால், இன்று கதை கூறுவார், "ஒரே ஒரு ஊரிலே ஒரு இராசா இருந்தான்" என்று தொடங்குவதற் கேற்ப,

ஊருக்கு ஓர் அரசர் என்ற நிலையில் காட்சி யளித்தது பழந் தமிழ்நாடு.

இவ்வாறு ஒரு சிறு நாட்டில் மிகப் பல அரசுகள் நடைபெறத் தொடங்கினமையால், போரும், பூசலும், நாட்டின் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன; உள்ள ஆட்சியை ஒழித்துவிட்டு, இடையே ஓர் ஆட்சி இடங் கொள்வதும், இடைவந்த அவ் ஆட்சியை அழித்துவிட்டு, உரிய ஆட்சியே மீட்டும் ஆட்சி மேற்கொள்வதும், படை யாற்றல் அற்றானை, அஃதுடையான் அழித்து ஆட்சி ஏறுவதும், அவன், தன்னினும் படைவலியுடையான் போர் தொடுத்துப் போதல் அறிந்து, அதைக் கைவிட்டுக் களத்தி னின்றும் ஓடி மறைவதும், அறனுடையான் ஆண்ட இடத்தே அஃதில்லாதொருவன் அமர்ந்து ஆளத்தொடங்கு வதும், அறநெறி இயங்கா ஆட்சியொன்றை அழித்து, அஃதுடையான் இருந்து ஆண்டு உயர்வதும், தமிழகத்தின் அக்கால அரசியல் நிலையாம். இவ் வரசியல் நெறிகளை நன்குணர்ந்த நம் புலவர், அவற்றைத் தாம் பாடிய கலித் தொகைக்கண், ஆங்காங்கே மேற்கொண்ட உவமைகள் வழியாக நமக்கு விளங்க உரைத்துள்ளார்.

ஞாயிறு, உலகத்தில் இருளாகிய பகையைப் போக்கி விட்டு, ஒழுங்காக ஒளி அளித்துக் காத்துப் பின்னர் மலை யிடையே சென்று மறைந்துவிட்டது; பின்னர்ச் சிறிது நாழிகை கழித்துத் திங்கள் தோன்றித் தன் தண்ணொளி யால், இருளைச் சிறிதே போக்கி நிலவிற்று; ஞாயிறு மறைந்த காலத்திற்கும், திங்கள் தோன்றிய காலத்திற்கும் இடைப்பட்ட சிறிது காலத்தே உலகம் இருளில் ஆழ்ந்து இன்னல் உற்றது. இந் நிகழ்ச்சியை விளக்கப் புகுந்த புலவர்; ஞாயிறு, வெற்றியால் பெற்ற புகழ்நிறைந்த அரசன், அறநூல் வழிநின்று அல்லனகடிந்து, நல்லன ஓம்பி நாடாண்டு, பின்னர்த் தன் நல்வினைப்பயன் துய்ப் பான்வேண்டித் துறக்கம் புக்கதைப்போன்று, இருள் போக்கி, ஒளிசெய்து மறைந்துவிட்டான்; தங்கள் அரசனை இழந்து அல்லலுற்ற அந் நாட்டுக் குடிகளின் துயர் கண்டு,

வேற்றரசன் ஒருவன் வந்து, அவர் துயரை ஒருவாறு போக்கி ஆள்வதேபோல், திங்கள் தோன்றி, இருளைச் சிறிதே போக்கிற்று; அரசிழந்திருந்த அவ் இடைப்பட்ட காலம், அந் நாட்டு மக்களுக்கு ஆற்றொணாத் துயர் அளித்தல்போன்று, ஞாயிறு மறைவிற்குப் பிற்பட்டதும், திங்கள் தோற்றத்திற்கு முற்பட்டதுமாய மாலைக்காலம், கணவரைப் பிரிந்தார்க்குப் பெருந்துயர் அளித்தது, எனக் கூறியுள்ளார்:

"வெல்புகழ் மன்னவன், விளக்கிய ஒழுக்கத்தால்
நல்லாற்றின் உயிர்காத்து, நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்துய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்போல்
பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர
ஆனாது கலுழ்கொண்ட உலகத்து மற்றவன்
ஏனையான் அளிப்பான்போல் இகல்இருள் மதிசீப்பக்
குடைநிழல் ஆண்டாற்கும், ஆளிய வருவாற்கும்
இடைநின்ற காலம்போல் இறுத்தந்த மருண்மாலை."
(நெய்தற்கலி : க)

தலைவன் பிரிந்து இருந்தமையால் வருந்தி மெலிவுற்ற தலைமகள், ஆற்றும் தலைமகன் அண்மையில் இல்லாமையால் தளர்வுற்றாள் என அறிந்துவந்து வருத்திய மாலைக்காலம், அத் தலைமகன் வந்து சேர்ந்தானாதல் அறிந்து, அவளை வருத்துவதொழிந்து இரவினுள் சென்று ஒளிந்துகொண்ட நிகழ்ச்சி, படைவன்மையில்லா அரசன் ஒருவன் ஆளும் நாடு பாதுகாப்பற்றது என அறிந்த மற்றோர் அரசன், அந் நாட்டுள் புகுந்து, அந் நாட்டார்க்குப் பெருந்துன்பம் தந்து ஆண்டிருப்புழி, அப் பகை போக்கி ஆளும் ஆற்றல் உடைய அறநெறி அரசன் ஒருவன் வரக் கண்டு, அந் நாட்டைவிட்டு ஓடி ஒளிந்த நிகழ்ச்சியோடு ஒப்புடைத்தாம் என்று கூறுவதையும் காண்க:

"இடனின்று அலைத்தரும் இன்னா செய்மாலை,
துனிகொள் துயர்தீரக் காதலர் துனைதர,
மெல்லியான் பருவத்து மேனின்ற கடும்பகை
ஒல்லென நீக்கி, ஒருவாது காத்தோம்பும்
நல்லிறை தோன்றக் கெட்டாங்கு
இல்லாகின்றால் இருளகத் தொளித்தே."
(நெய்தற்கலி : ௩)

ஞாயிறு, பகற்காலமெல்லாம் உலகத்து உயிர்கள் ஒளிபெற்று உய்யுமாறு வீசிய தன் கதிர்களையெல்லாம் மடக்கிக்கொண்டு மலையிடையே மறைந்தானாக, அவை அவன் ஒளியால் தாம்பெற்ற இன்பமெல்லாம் இழந்து, துன்புறு மாறு இருள்வந்து சேரும் நிகழ்ச்சியை, அறநெறி நின்று உலகாண்ட அரசன் மறைந்தானாக, அவன் ஆட்சியால், தாம் பெற்ற மகிழ்ச்சியெல்லாம் இழந்து உலகத்தார் உறு துயர் உறுமாறு, அறநெறி அறியாக் குறுநில மன்னன் அவ் வுலக ஆட்சியை அடைவதுபோலும் என்று கூறும் உவமையினையும் உணர்க.

"எல்உறு தெறுகதிர் மடங்கித் தன்கதிர் மாய,
நல்லற நெறிநிறீஇ உலகாண்ட அரசன்பின்
அல்லது மலைந்திருந்து அறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போல் மயங்கிருள் தலைவர."
(நெய்தற்கலி: கஉ)

ஆசிரியர் நல்லந்துவனார், அக்கால அரசியல் நிலை யோடு, மக்கள் வாழ்க்கை நிலையினையும் விளங்க உணர்ந் தவராவர். அவர் பாடிய பரிபாடல் நான்கும், அக் கால மக்கள் வாழ்வியலை நன்கு உணர்த்துவனவாம். ஆற்றில் புதுப்புனல் வருங்காலத்திலும், அந்நீர் தெளிந்து ஓடும் தைத்திங்கள் காலத்திலும், அதில் மக்கள் ஆடிமகிழ்தல் அக்கால வழக்கமாம். பாண்டிநாட்டு மக்கள், தங்கள் நாட்டில் ஓடிய வையையாற்று வெள்ளத்தில், விரும்பி யாடிய ஆட்டங்களைப் புலவர் நன்கு விரித்து உரைத் துள்ளார்.

வையை, புலவர் பாராட்டும் புகழுடையது என்ப; "சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி, இருநிலம், தார் முற்றி யதுபோலத் தகைபூத்த வையை" (கலி: சுஎ), "புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி, வையை என்ற பொய்யாக் குலக்கொடி" (சிலம்பு: கங) எனப் புலவர்கள் அதைப் போற்றுவது காண்க. வையையின் இச்சிறப் புணர்ந்த புலவர், அது புலவர் பாராட்டும் இப் புகழ்

உரைகள் பொய்யாகாவண்ணம் விரைந்தோடிவந்து, உலகத்தே உழவுமுதலாம் தொழில்கட்குத் துணையாய்ப் பரந்து சென்றது என்று சிறப்பிப்பாராயினர்.

"மாசில் பனுவல் புலவர் புகழ்புல
நாவிற் புனைந்த நன்கவிதை மாறுமை
மேவிப் பரந்து விரைந்து விளைநந்தத்
தாயிற்றே தண்ணம் புனல்." (பரிபாடல்: ௬: எ -௧0)

வையை, கங்கையைப்போல் பெருமலையிடத்தே தோன்றப் பெருமையால், அவ்வாற்றில் வரும் வெள்ளம் நீண்டகாலம் நிற்பதில்லை; திடுமெனப் பெருவெள்ளம் வருவதும், உடனே குறைவதும் அதற்கு இயல்பாம். பெருகுவதும், சுருங்குவதும் தன் இயல்பெனக் கொண்ட வையையின் இயல்புணர்ந்த புலவர், அஃது எப்பொழுதும் ஒருதன்மையில் நில்லாமல், தோன்றும் காலத்தே விரையத் தோன்றிச் சுருங்குங் காலத்தே, தோன்றிய காலத்தினும் விரையச் சுருங்கும் இயல்பினதான காமமோடு ஒக்கும் என்று கூறுகிறார். வையைக்கரைக்கண் நின்று, நான் பரத்தையர் ஒருவரையும் பார்த்தறியேன் என்று கூறிச் சூளுரைத்த தலைமகனை நோக்கி, "ஐய! காமம் ஓர் இயல்புடையதன்று; அஃது ஒருவர்பால் விரையப் பெருகும்; சிலர்பால் விரையச் சுருங்கும்; வையையும் விரையப் பெருகுவதும், விரையச் சுருங்குவதும் செய்யும்; ஆகவே, காதலும், வையையும் ஓர் இயல்பினவே; ஆகவே சூளுறற்க!" என்று கூறினாள் தலைமகள் என்று பாடி வையை வெள்ளச் சிறப்பைப் பாடியுள்ளமை காண்க:

"காதலங் காமம்,
ஒருக்க ஒருதன்மை நிற்குமோ? ஒல்லைச்
சுருக்கமும் ஆக்கமும் சூளுறல், வையைப்
பெருக்கன் றோ?" (பரிபாடல்: ௬: எ௧ - ௪)

பெருகிவரும் வையையாற்று வெள்ளம், வரைபோலும் அணைகளை அழித்து ஓடி வருவதால், அதன் அலைகளால் இருகரைகளும் அலைப்புண்டு அழிவதையும், அவ்வழி

விடங்களை அடைக்க ஊரில் பறையறையப் பெறுவதையும் புலவர் விளக்கியுள்ளார்:

"வரைச்சிறை உடைத்ததை வையை; வையைத்
திரைச்சிறை, உடைத்தன்று கரைச்சிறை; அறைகெனும்
உரைச்சிறைப் பறைஎழ ஊர்ஒலித் தன்று"
(பரிபாடல், கூ: உஉ - ச)

வையை, மலையின் இழிந்தும், காட்டினுட் புகுந்தும், கரைகளை அழித்தும் பெருகி வருவதால், அந்நீர் முற்றும், ஆங்காங்குள்ள மணம்நிறை மலர்களால் மறைப்புண்டு' இது புனலாறு அன்று, பூம்புனலாறு எனப் போற்ற விளங்கும். வையையின் இக்காட்சியைத் திருமருதத்துறைக்கண் நின்று கண்டு களித்த புலவர் ஆசிரியர் நல்லந்துவனார், "மலையில் மலர்ந்த புன்னை, கரையிற் கிடந்த சுரபுன்னை வண்டொளிக்கும் சண்பகம், இல்லம், தேற்று, வில்வம், வேங்கை, காந்தள், தோன்றி, கண்நிகர் நீலம் ஆய மலர்களை அருவிகள் அடித்துக்கொணர்ந்து குவிப்பதால், அவை குவிந்து காணப்படும் இத்திருமருதத்துறையினைப் பூப்பறிப்பார் தாம் பறித்த பன்னிற மலர்களைக் குவித்துவைக்கும் மலர்மண்டபம் என்று கூறி மகிழ்வேனோ? மலர்ப் போர்வையும், அணிதிகழ் ஆரமும், திரையும், நுரையும், சிறுமென்குமிழுங் கொண்டு, மணங்கமழ் சந்தனம் மார்பிற் பூசித்தோன்றும் வையை என்ற பெயருடையாளொரு பெண்ணின் ஆடையாம் எனக் கூறி அகமகிழ்வேனோ? பார் மகள், கள் பருகும் மிடறு எனக் கூறிப் பாராட்டுவேனோ?" என்றெல்லாம் பாடிப் பாராட்டியுள்ளார். (பரி. கக: கக - ௩0)

வையை வெள்ளம் வந்தது எனக்கேட்ட மதுரை வாழ்மக்கள், அவ்வெள்ளத்தைக் காணவும், அதில் ஆடிமகிழவும் விரும்பிய தங்கள் உள்ளத்தின் விரைவால், செய்வன அறியாராய்த் தேரிற் பூட்டவேண்டிய குதிரைகளை வண்டியிற் பூட்டுவர்; வண்டியிற் பூட்டவேண்டிய எருதுகளைத் தேரிற் பூட்டுவர்; குதிரைச் சேணங்களை யானைக்கு

இடுவர்; குதிரைக்குச் சேணம் இடாமலே விடுவர்; மகளிர்க்குரிய கோதையை மைந்தர் அணிவர்; மைந்தர்க்குரிய மாலையை மகளிர் அணிவர்:

"திண்டேர்ப் புரவி, வங்கம் பூட்டவும்,
வங்கப் பாண்டியில் திண்தேர் ஊரவும்,
வயமாப் பண்ணுந மதமாப் பண்ணவும்,
கயமாப் பேணிக் கலவாது ஊரவும்,
மகளிர் கோதை மைந்தர் புனையவும்
மைந்தர் தண்தார் மகளிர் பெய்யவும்
முந்துறல் விருப்பொடு முறைமறந்து அணிந்தவர்."
(பரிபாடல், உ0: கசு - உஉ)

ஆற்றில் புதுப்புனல் வருங்கால் ஆடுதல், உள்ளத்திற்கு உவகை தரும எனக்கொண்டு ஆடுவாரே பலராவர். எனினும், அவ் ஆடலை ஒரு பயன் கருதி ஆடுவாரும் உளர். ஒன்பது ஆண்டுகட்கு உட்பட்ட பெண்கள், உலகம் மழை பெற்று உய்யவேண்டும் எனவும், தாமும் நற்கணவரைப் பெற்று நல்வாழ்வு வாழ்தல்வேண்டும் எனவும் வேண்டித் தைத்திங்களில் நீராடி நோன்பு நோற்பது பண்டைக்காலத் தமிழ் வழக்கமாம். இந்நோன்பு, மார்கழித் திங்களின் நிறைமதி நாளாய திருவாதிரைக்குமுன் பத்தாம் நாளிலிருந்து துவங்கித் தைத்திங்கள் வரையிலும் நடைபெறும் ஆதலாலும், மார்கழி நிறைமதி நாள்முதலே தைத் திங்களாம் எனக் கருதப்படும் ஆதலாலும், இது மார்கழி நீராடல் எனவும், தைந் நீராடல் எனவும் அழைக்கப் பெறும்.

வையைக் கரையில் இவ்விழா நிகழ்முறையினை விளங்க உரைக்கப் புகுந்த புலவர், "மார்கழித் திருவாதிரை நாளன்று, ஆகமங்கள் அறிந்த அந்தணர், அத் திருவாதிரைக்குரியோனாகிய சிவனுக்கு விழா செய்யத் தொடங்கினர்; மழைபெற்று மாநிலம் மகிழ்க என வேண்டித் தைந்நீராடத் தொடங்கிய கன்னிமகளிர், முதிய மகளிர், செய்யும்முறைமையினை முன்னின்று காட்ட,

பனி மிக்க விடியற்காலத்தே படிந்து நீராடினர்; அங்ஙனம் ஆடிய அவர்கள், வாடை வீசுவதால், குளிர் பொறுத்தல் இலராயினர்; அவ்வாறு வருந்துவார் தம் குளிர்போக்க, ஆற்றின் கரைக்கண் அந்தணர் ஓம்பிய செந்தழல் சிறந்த துணைபுரிந்தது,'' என்றும் அவ்வாறு ஆடிய மகளிர், தம் நோன்பின் இறுதியில், "தைந்நீரே''! யாம் உள்ளம் மேவிய காதலரைப்பெற்று உயர்வோமாக; எம் கணவர், பூவுண்டு துறக்கும் வண்டேபோல், எம் நலன் உண்டு எம்மை மறந்துபோதலைப் புரியாராகுக! யாமும் எம் கணவரும், இன்றேபோல் என்றும் இளமைச் செவ்வியோ டிருப்போமாக!" என்று வேண்டினர் எனவும் அறிவித் துள்ளார்;

"விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்
புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏற்ப,
வெம்பா தாக வியன்நில வரைப்பு என
அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப், பருமணல் அருவியின்
ஊதை ஊர்தர உறைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்
றையன் மகளிர் ஈரணி புலர்த்தர.'' (பரி. ௧௧: ௭௭-௮௬)

வையை யாற்றின் வனப்பினை விளங்க உரைத்த புலவர், அவ் வையையின் ஒருபால் அமைந்த திருப்பரங் குன்றின் பெருமையினையும் பாராட்டியுள்ளார்; பரங்குன் றையும், அப் பரங்குன் றுறை பெருமானுய முருகனையும் பாடிப் பரவியுள்ளார்; பரங்குன்றில், செவ்வேளைக் காணற் பொருட்டுச் சிவன் முதலாம் தேவரெல்லாம் சேரவந் துள்ளமையால் அது, அத்தேவர்கள் ஒருங்கு கூடியிருக்கும் இமயத்தோடு ஒப்புடையதாம் என்று பாராட்டுகிருர்: "பரங்குன்று இமயக்குன்றம் நிகர்க்கும்." அப்பரங்குன் றிற்கும், மதுரைக்கும் இடைப்பட்ட வழியின் அருமை யினைப் பாராட்டும் புலவர், அவ்வழி, தும்பியும் வண்டும் சுற்றித் திரிந்து, தேனுண்டு ஆரவாரிக்குமாறு, சுனையில்

பூத்த மலர்களினின்றும், கொத்துக்கொத்தாக மலர்ந்த கொன்றை மலர்களினின்றும், மணம் நிறைந்த கொடியில் பூத்த மலர்களினின்றும், கைபோலும் காந்தள் மலர்களினின்றும் எழுந்த பல்வேறு மணங்களும் கலந்து வந்த தென்றல் வீசும் சிறப்புடையது என்று கூறிச் சிறப்பிக்கின்றார். ஆசிரியர் இளங்கோவடிகள், பொதிகைத் தென்றல் சந்தனம் நாறும்; மதுரைத் தென்றல் மலர்களின் மணம் நாறும் எனச் சிலப்பதிகாரத்தே கூறுவதோடு இஃது ஒத்திருத்தல் காண்க.

"வீழ்தும்பி வண்டொடு மிஞிறார்ப்பச், சுனை மலரக்,
கொன்றை கொடியிணர் ஊழ்ப்பக், கொடிமலர்
மன்றல மலர, மலர்காந்தள் வாய்நாற
நன்றவிழ் பன்மலர்நாற நறை பனிப்பத்
தென்றல் அசைவரூஉம் செம்மற்றே அம்மநின்
குன்றத்தாற் கூடல் வரவு." (பரிபாடல், அ : உரு - அ)

மறுமிடற்றண்ணற்கு மாசிலோள் தந்த கடம்பமர் செல்வனும் பரங்குன்றுறை செவ்வேளை வழிபடச் செல்வார், வழிபாட்டிற்குரிய பொருள்களோடு சென்று வழிபட்டு, "ஐய! கணவரோடு கைகோத்து ஆடி மகிழ்ந்ததாகக் கண்ட கனவு பொய்யாகாமல், யாம் மகிழ்ந்து ஆடுமாறு நின்வையை பெருக்கெடுத்து வருக!" எனவும், "ஐய! எமக்கு மகப்பேறு உண்டாக மனம் இரங்குக!" எனவும், "ஐய! யாம் எடுத்த வினை இடையூறின்றி முடிந்து பெரும் பொருள் நல்குமாக!" எனவும், "ஐய! யாம் மேற்கொண்டு செல்லும் போரில் வெற்றி வாய்க்குமாக!" எனவும், அவரவர் விரும்பும் வரம்வேண்டி நிற்கும் பக்திநிலையினைப் பார்த்துப் பரவசமுற்றுப் பாடுகிறார் புலவர் :

"அருவரைச் சேராத், தொழுநர்
கனவில் தொட்டது கைபிழை ஆகாது
நனவில் சேஎப்பநின் நளிபுனல் வையை
வருபுனல் அணிகென வரங்கொள் வோரும்,

கருவயிறு உறுகெனக் கடம்படுவோரும்,
செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்துவோரும்,
ஐயமர் அடுகென அருச்சிப் போரும்
பாடுவார்.'' (பரிபாடல்: அ, ௧0௨ ௧0௪)

பரிபாடற்கண், வையை வெள்ளத்தினையும், பரங்குன்றுறை செவ்வேள் விழவினையும் காணவந்தாருள், ஒருத்தி, தனக்குரிய அணிகளைப், பரத்தையர் ஒழுக்கம் உடையனாய தன் தலைவனால் அளிக்கப்பெற்று அணிந்து வந்தாளொரு பரத்தையைப் பார்த்து, அவ்வணிகள் அவள்பால் வந்தவாறு யாங்ஙனம்? அவற்றை அளித்தான் யாவன்? எனக் கேட்கவும், அதற்கு அவள் விடை கூறவும் இருவரிடையே எழுந்த அழகிய சொல்லாடல்களையும், பரத்தையர் ஒழுக்கம் உடையனாய தலைவன், ஒரு பரத்தை பால் சென்றமையால், காலம்கடந்து வந்தான் எனக் கழன்று கடிந்துரைக்கும் ஒரு பரத்தையும், அவனும் மேற்கொள்ளும் சொல்லாடல்களையும், சொற்சுவையும் பொருட்சுவையும் பொருந்தப் பாடிக் காட்டுகிறார் புலவர். அவற்றை, அதிற்கண்டு அகமிக மகிழ்க.

ஆசிரியர் எனப்படுவார், அறிவுரைக்கும் சான்றோ ராவர்; அறம் உணர்த்தவல்லோரே ஆன்றோர் எனப் படுவர்; புலவர் நல்லந்துவனார், ஆசிரியர் என அழைக்கப் படுதற்கேற்ற அறிவும், அறமும் நிறைந்த உள்ளத்தின ராவர்; அவர் உள்ளத்தில் ஊறிய அறிவுரைகள் பல ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன; அவற்றையெல்லாம் தொகுத்து உரைப்பின், அதுவே ஒரு பெருநூலாம். ஆதலின், அவற்றுள் சிலவற்றை ஈண்டு நோக்குவோமாக.

“பிறர் நோயும், தம் நோய்போல் போற்றி, அறன் அறிதல் சான்றவர்க்கெல்லாம் கடன்'' (நெய்தற்கலி: ௨௨ ஒருவர்க்கு உற்ற துயரைத் தம்மால் தீர்த்தல் இயலா தாயின், வருந்துவாரைக் கண்டு தாமும் வருந்துவர் சான்றோர்; சான்றோர், தம்மை அடைந்தார் தீயவராயினும் காத்தலைக் கடமையாகக்கொள்வர். “திங்கள் அரவுறின்

இர்க்கலாராயினும் தம் காதல் காட்டுவர் சான்றோர்;" "தாங்காச் சினத்தோடு காட்டி உயிர்செகுக்கும் பாம்பும் அவைப்படில் உய்யும்" (நெய். கலி: உகூ) எனக் கூறும் சான்றோர் இயல்புகளும்,

தனக்கு அறிவுபல ஊட்டி வளர்த்த ஆசிரியனுக்கு உறுபொருள் கொடுத்தல்வேண்டும்; உற்றுழி உதவல் வேண்டும்; அவ்வாறு ஆசிரியர்க்குதவாதவன் அறிந்த கலைச்செல்வமும், பெற்ற பொருட்செல்வமும் சிறுகச் சிறுகச் சிரழிந்துபோம். தனக்கொரு துயர் வந்தக்கால் அது துடைத்துத் துணைபுரிந்தார்க்கு ஒரு துயர்வரின் அதை ஒழித்து உறுதுணைபுரிதல் வேண்டும்; அவ்வாறு உதவாது செய்ந்நன்றி கொன்றான், இம்மையிலேயேயன்றி மறுமையிலும் இன்னல் பல உற்று இழிநிலை பெறுவன. தம்மைச் சூழ வாழும் சுற்றத்தார் வருந்திய வாழ்க்கையின ராகப், பெரும்பொருள் பெற்றான் ஒருவன், அவரையும் பேணாது, அப் பொருளையும் போற்றாது வாழின், அவன் குடி குன்றும் எனக் கூறும் பொருளின் இயல்புகளும்,

"கற்பித்தான் நெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கண்
தப்பித்தான் பொருளேபோல், தமியவே தேயுமால்;
ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான் மற்றவன்
எச்சத்துளாயினும் அஃது எறியாது விடாதேகாண்.
கேளிர்கள் நெஞ்சழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்
தாளிலான் குடியேபோல் தமியவே தேயுமால்."

(நெய்தற்கலி: கூஉ)

'அன்பும், அறம்பிறழா வாய்மையும், நெறிபிறழா நீதியும் இவனோடு பிறந்தன; இன்று இவனோடு மாய்ந்தன; இனி அவற்றை எவன்பால் காண்போம்,' என்று மக்கள் மனங்கலங்குமாறு தன் நாட்டில் பொய்கெடுத்துப் புகழ் தோன்ற ஆளும் அரசே நல்லரசாம். அவ்வரசு வாழச் செல்வமும் வாழும்; அவ்வரசு அழியச் செல்வமும் அழியும் எனவும்,

"நயனும் வாய்மையும் நன்னர் நடுவும்
இவனிற் றோன்றிய இவைஎன இரங்கப்
புரைதவ நாடிப் பொய்தபுத்து இனிதாண்ட
அரைசனோடு உடன்மாய்ந்த நல்லூழிச் செல்வம்."
(நெய்தற்கலி: கஉ)

"தன் உயிர்போலத் தழீஇ உலகத்து மன்உயிர் காக்கும் இம் மன்னன்" (நெய்தற்கலி: உக) எனவும், 'ஒட்டார் பின்சென்று ஒருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று' என்பவாகலின், பகைவரைப் பகைவர் பணிந்து வாழும் வாழ்க்கை பழியுடைத்தாம். "வேற்றுரை வேற்றூர் தொழுதல் இளிவரவு" (பரிபாடல், உ0: எக) எனவும் கூறும் அரசியல் நெறிகளும்,

தாம் செய்வது தவறு என்பதைத் தம் நெஞ்சார அறிந்தவர், தாம் தவறு செய்வதைப் பிறர் எவரும் அறிந்திலர் என்ற எண்ணமுடையராய்ச் செய்தல் பெரிதும் தவறும்; தாம் செய்வது தவறு என்பதை அவர் உள்ளம் உணர்ந்துளது; உணர்ந்த அவ்வுள்ளம் அதைப் பலர் அறியத் தூற்றச் செய்யாதெனினும், செய்தார் நெஞ்சை அணுஅணுவாகச் சிதைத்துக்கொண்டே இருக்கும். ஆதலின் அது செய்யாது வாழ்வாரே அறிவுடையராவர் இக்கருத்தினை விளக்கும் அறநெறியுரைகளும்,

"கண்டவர் இல் என உலகத்துள் உணராதார்,
தங்காது தகைவின்றித் தாம்செய்யும் வினைகளுள்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும், அறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை." (நெய்தற்கலி: அ)

"எண் என்ப, ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்றும், "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" "முகத்து இரண்டு புண் உடையர் கல்லா தவர்" என்றும் கூறுப ஆகலின், கல்லா தான் ஒருவனைக் கூறுங்கால், "கல்லாது முதிர்ந்தவன் கண்ணிலா நெஞ்சம்" எனக்கூறும் கல்வியது சிறப்புரைகளும், நெய்தற்கலி பதினொருவது பாடலில் தொகுத்துக்

கூறும் பல்வேறு அறவுரைகளும் அவர்தம் ஆசிரியப் பெருந்தகைமையினைத் தோன்றச் செய்தல் காண்க :

"ஆற்றுதல் என்பதொன்று அலந்தவர்க்கு உதவுதல்;
போற்றுதல் என்பது, புணர்ந்தாரைப் பிரியாமை;
பண்பு எனப்படுவது, பாடறிந்து ஒழுகுதல்;
அன்பு எனப்படுவது, தன்கிளை செறாஅமை;
அறிவு எனப்படுவது, பேதையார் சொல்நோன்றல்;
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை;
நிறை எனப்படுவது, மறைபிறர் அறியாமை;
முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்;
பொறை எனப்படுவது, போற்றாரைப் பொறுத்தல்."

ஆசிரியர் நல்லந்துவனார் பாடல்கள் அரிய நயம் செறிந்தன. அப் பாடல்களின் அருமையினை, அப்பாக்களின் இடையிடையே அவர் மேற்கொள்ளும் உவமையால் அறியலாம்; அவர் உவமைகளிற் பெரும்பாலன, அறநெறியினை உணர்த்துவனவாகவே காணப்படும்; ஓர் அறநெறியினை உணர்த்த, மற்றோர் அறநெறியினையே உவமையாகக் கொள்வர். அவ்வாறு வந்தனவும், பிறவும் ஆய அறநெறிகளை முன்னரே அறிந்தோமாதலின், அவ்வழி வாராப் பிற உவமைகளுள் சிலவற்றை ஈண்டு நோக்குவோம்.

மலையிற் பிறந்த ஆறு, தான் பிறந்த அவ்விடத்தின் நீங்கிக் கடலைச் சென்று அடைதல், ஒரு பெண், பிறந்த தன் பெற்றோரை நீத்து, தன்னைக் காதலிக்கும் கணவன் வீடு செல்வதை ஒக்கும் எனவும், மலையிற்றோன்றிய வெள்ளம் வையையாற்று வழியே சென்று கடலிற் கலப்பதற்கு முன், மதுரையிடத்தே மக்கள் உட்புகுந்து ஆடித்திளைத்தல், ஒரு பெண்ணைக் களவிற் புணர்ந்து, அவள் தமர் அறியாவண்ணம் தன்னூர்க்கு உடன்கொண்டு போங்கால், இடையே அவள் சுற்றத்தார் படையொடும் சென்று அவனைத் தடுத்து நிறுத்திப் போராடுதலை ஒக்கும் எனவும்,

"மாமயில் அன்னார் மறையிற் புணர்மைந்தர்
காமம் களவிட்டுக் கைக்கொள் கற்பு உற்றென
மல்லற் புனல்வையை மாமலைவிட் டிருத்தல்."

"கடைஅழிய நீண்டகன்ற கண்ணுளைக் காளை
படையொடுங் கொண்டு பெயர்வானைச் சுற்றம்
இடைநெறித் தாக்குற்ற தேய்ப்ப அடல்மதுரை
ஆடற்கு நீரமைந்தது யாறு."

(பரிபாடல், கக : சரு—கூ)

பிரிந்துசென்ற தலைவன் வந்து, தலைமகள் மெய்யைத் தீண்டத் தீண்ட, அவள் உடலைப் பற்றிய பசலைநோய் நீங்குவது, குடிகளின் துயர்போக்கித் துணைபுரியும் அரசன் படை தாக்கத் தாக்க, அந்நாட்டைக் கைப்பற்றியிருந்த பகைவர் நீங்குவதுபோலும் எனவும், "குடிபுறம் காத்தோம்பும் செங்கோலான் வியன்தானை, விடுவழி விடுவழிச் சென்றாங்கு, அவர் தொடுவுழித் தொடுவுழி நீங்கின்றாற் பசப்பே." (நெய்தற்கலி: கக) இரைதேடித்திரியும் நாரைகள் தம் இரையை எண்ணி, மணல்மீது அமைதியாக நின்றிருக்கும் காட்சி, அந்தணர் அந்திக்காலத்தே ஆற்று மணலில் அமர்ந்து அரிய மறையினை மனத்திடை எண்ணியிருத்தலை ஒக்கும், "நாரை முக்கோல்கொள் அந்தணர் முதுமொழி நினைவார்போல் எக்கர்மேல் இறைகொள்ளும்" எனவும், காமநோயால், உயிர் தன் இயல்பில் நில்லாது அழிதற்கு, உப்பால் செய்யப்பெற்ற ஒரு பாவை, மழைத் துளியால் கரைந்து மறைதலோடு ஒக்கும். "உப்பியல் பாவை உறையுற்றதுபோல உக்குவிடும் என் உயிர்" (நெய்தற்கலி: எனவும், கண்முன் தோன்றும் ஒரு தலைவி, தலைவன் கைக்கு அகப்பட அரியளாதல், நீருள் தோன்றும் நிறைமதியின் நிழல் கைக்கோடற்கு அரிதாதல் போலும், "ஓரொருகால் உள்வழியளாகி, நிறைமதி நீருள் நிழல்போல் கொளற்கு அரியள்" (நெய்தற்கலி: உச) எனவும், கூறும் அவர் உவமையின் அருமையினை அறிந்து மகிழ்க.

தன் தலைவன்பால் கழிபெருங்காதல் கொண்டாளொரு காரிகை, அவன் வினைவயிற் பிரிந்தானாக, அவன் பிரிவுத் துயர்பொருளாய், கடலையும் காற்றையும், ஞாயிறு திங்கள்

களையும், நோக்கி அவனை அடையுமாற்றினைக் காட்டுவீராக எனக் கலங்கி நிற்கும் இரங்கத்தக்க நிலையினைப் புலவர் எடுத்துக்காட்டுங்கால், காண்பார்தம் கண்களும் கடலாம் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

"எங்கும் திரிதரு காற்றே! என் நலன் உண்டு ஒளித்தான் யாண்டுளான் என்பதை ஞாயிற்று ஒளியுள் வழியெல்லாம் உட்புகுந்து தேடித்தர வேண்டுகின்றேன்; தாராயேல், என் கண்ணீரைத் தெளித்து, அதன்கண் எழுகின்ற அழலாலே நின்உடல் எலாம் சேரச் சுடுவேன்."

"வளியே! எதிர்போம் பலகதிர் ஞாயிற்று
ஒளியுள் வழியெல்லாம் சென்று முனிபெம்மை
உண்மைநலன் உண்டு ஒளித்தானைக் காட்டீமோ;
காட்டாயேல், மண்ணகமெல்லாம் ஒருங்கு சுடுவேன்என்
கண்ணீர் அழலால் தெளித்து." (நெய்தற்கலி : உஎ)

"காணும் இடம் எங்கும் பரந்து நிற்கும் கடலே! என்னைப் பேணாது பிரிந்து சென்றான் உறையும் இடம் தேடிச் செல்ல இடம்தாராயேல், நின்நீரெல்லாம் வற்றி வெறுமணலாம்படி என் காற்புறத்தால் இறைத்துவிடு வேன்; எனக்கு அறக்கடவுளும் துணை நிற்கும்."

"பேணான் துறந்தானை நாடும் இடம்விடாயாயின்
பிறங்கிரு முந்நீர் வெறுமணலாகப்
புறங்காலின் போக இறைப்பேன்; முயலின்
அறம்புணையாகலும் உண்டு." (நெய்தற்கலி : உஎ)

"திங்கள் இடை இருந்து, இவ்வுலகெல்லாம் காணும் சிறு முயலே! என் கேள்வன் இவ்விடத்தான் எனக் காட்ட வேண்டுகின்றேன்; காட்டாயேல், நின் பகையாய வேட்டை நாயை நின்பால் விரட்டுவேன்; வேட்டுவரிடத்தே விரைந்து சென்று, இங்கே உளது ஒரு குறுமுயல் எனக் கூறுவேன்; நினக்கு அரண் அளிக்கும் அத்திங்களும் நீயும் ஒருங்கே அழியுமாறு, அத்திங்களின் பகையாய பாம்பைச் செலுத்துவேன்."

"பொங்கிரு முந்நீர் அகமெல்லாம் நோக்கினை
திங்களுள் தோன்றி யிருந்த குறுமுயால் !
எங்கேள் இதனகத்து உள்வழிக் காட்டீமோ
காட்டீயா யாயின் ,கதநாய் கொளுவுவேன்;
வேட்டுவர் உள்வழிச் செப்புவேன்; ஆட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன்." (நெய்தற்கலி: உஎ)

"பழியொழித்துப் பகல் விளக்கும் ஞாயிறே! உல கியல் உணராதாரைக் கழியச் சிறுவை என்று கூறக் கேட்டுளேன்; நின்னைப் பணிந்து ஒன்று வேண்டுகின் றேன்; அவ்வாறு சிறுங்கால், அவரைக் கழியச் சினவற்க! என் உள்ளம் கெடுமாறு ஊர்விட்டுப்போன அவரைக் கழியச் சிறுவையாயின், அவர் அழிவர்; அவர் அழியின் என் உயிரும் அழியும்."

"பழிதபு ஞாயிறே! பாடறியா தார்கண்
கழியங் கதழ்வை எனக்கேட்டு, நின்னை
வழிபட்டு இரக்குவேன் வந்தேன்; என்நெஞ்சம்
அழியத் துறந்தானைச் சீறுங்கால், என்னை
ஒழிய விடாதிமோ என்று." (நெய்தற்கலி : உசு)

தலைவன், இவ்வாறு, தான் வருந்தப் பிரிந்து சென்ற வன்கணாளனாயினும், அவன் சென்ற ஆற்றின் கொடுமை, அளவிடற்கரிதாம் என்பதை அறிந்தக்கால், அவன்பால் அன்பும், இரக்கமும் அவை தம்மாலே தோன்றல் தலைவி யர்க்கு இயல்பாம்; இவ்வுள்ளப் பண்பினை உணர்த்து கிறார் புலவர் ஒரு பாட்டில்.

"பிரிந்து சென்றவன், முன்னர் என்னைப் பணிந்து பெற்ற இன்பத்தை மறந்துவிட்ட மாண்பிலானாயினும், அவன் சென்ற சுரம் அழல்விடும் கொடுமை உடைத்து என்ப! அக் கொடுமையைக் கண்டும், கொன்னே இருக்கும் ஏ! வானமே என்ன காரியம் செய்துவிட்டனை; உடனே, ஆங்கு ஓடு; ஓடி உன்பால் உள்ள மழைத்துளிகளை எல்லாம் மாறாது சொரிந்து ஆண்டுள்ள வெப்பத்தைத் அகற்றுவாயாக! நின்பால் உள்ளன எல்லாம் நீர் அற்ற

வெண்முகிலாயின், அவ்வற்றை என்பால் அனுப்புக! என் கண்கள் கடல்போலும் பெரிய நீர்நிலையாம்; வேண்டும் நீரை அவ் வெண்முகில்கள் முகந்துசென்று முழங்கிப் பெய்து துணைபுரியுமாக!" எனக் கூறினாள் எனப் பாடிய அவர் புலமை நலத்தினைப் போற்றுக!

"தாழ்பு, துறந்து தொடி நெகிழ்த்தான் போகிய கானம்,
இறந்து எரி நையாமல், பாஅய் முழங்கி,
வறந்தென்னை செய்தியோ? வானம்! சிறந்த என்
கண்ணீர்க் கடலால் கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து." (நெய்தற்கலி : உஅ)

தன்னை விரைந்து மணக்காது, மனத்துயர் விளைக்கும் தன் தலைவன் மலையைக் கண்ட தலைமகள், அம் மலை வீழ்ந்தோடும் வெண்ணிற அருவிகள் பல பெற்றுள்ளதைக் கண்டு, அவன் செய்த கொடுமைக்கு அவன் நாட்டு மலைகளும் நாணிக் கண்ணீர் விடுகின்றன எனக் கூறினாள் எனப் பாடியபுலவன் புலமையே புலமை!

"தம்மோன் கொடுமை நம்வயின் ஏற்றி
நயம்பெ துடைமையின் தாங்கல் செல்லாது
கண்ணீர் அருவி யாக
அழுமே தோழி! அவர் பழம்முதிர் குன்றே." (நற் : அஅ)

மகளிர் தம் பண்பு கெடாராயின், பலர் அறிய நகுதலும் செய்யார்; பண்புகெட்ட பெண்களே தம் பல்லெலாம் தோன்றப் பலர்முன் நின்று நகைத்துத் திரிவர்: "உள்நுனை தோன்றுமை முறுவல் கொண்டடக்கித் தன் கண்ணினும், முகத்தினும் நகுபவள், பெண்ணின்றி, யாவரும் தன்குரல் கேட்ப நிரை வெண்பல் மீயுயர் தோன்ற நகாஅ நக்கு," (நெய்தற்கலி: உகூ) எனவும், மகளிர் தமர் அறியா வண்ணம், தம் கணவன்மார் வீடுசேறல் பழியுடைத்தாம், "இல்லத்து நீ தனிச் சேறல் இளிவரல்," (பரிபாடல், கக : ௬௪) என்வும் கூறும் மகளிர்க்குரிய மாண்புகள் மகளிர் மனத்திடைக் கொளற்குரியன வாதல் காண்க.

ஊழிக் காலத்தே உயிர்கள் ஒடுங்கிவிடும், "தொல்லூழித் தடுமாறித் தொகல் வேண்டும் பருவத்தால், பல்வயின் உயிர் எல்லாம் படைத்தான்கண் பெயர்ப்பான் போல்," என்றும், கார்காலத்தே, நாழிகைக் கணக்கர், நாழிகை அறிவிக்கும் கன்னலான் அன்றி, வானத்துக் கோள்நிலையால் நாழிகை அறியலர்காவாறு வானம் மேகத்தால் மறைப்புண்டு தோன்றும், "குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது, கதிர்மருங் கறியாது அஞ்சுவரப் பாஅய்," என்றும், மலையையும் மடுவையும் அழிக்கும் ஆற்றல் மழைக்கு உண்டு, "கடல் குறைபடுத்த நீர், கல்குறை படஎறிந்து உடலேறு உருமினம் ஆர்ப்ப........."என்றும், தம் எருது, தமக்குரிய உழவு முதலாம் தொழில்களைச் செய்யாது திரியக், காணப்பொறுது உழவர் உள்ளம், "எருது தொழில் செய்யாது ஓடவிடுங்கடன் வேளாளர்க் கின்று," என்றும், நோய் போக்கும் மருந்தறிந்தான் ஒருவன், அம் மருந்தை அறியேன் என மறைத்தல் மாபாதகமாம், "வருந்திய செல்லல் தீர்த்த திறன் அறி ஒருவன், மருந்து அறை கோடலின் கொடிதே" என்றும், ஊடுதல் காமத்திற்கின்பம் ஆயினும், அஃது அளவோடு அமைதல் வேண்டும்; அஃது உப்புப்போலும்; உப்பு மிகினும் குறையினும் அப் பொருள் ஒன்றிற்கும் உதவாதாதலைப்போன்றே, ஊடலும், குறையினும், மிகுந்தாலும் காதற்பெருமை குன்றும்; "துனி நனிகன்றிடின் காமம் கெடூஉம்," என்றும், காமத்திற்குக் கண்ணில்லை; கொடி, அருகுளது எட்டியே ஆயினும் பற்றிப் படர்வதேபோல், காமமும் கண்டார் எவரிடத்தும் உண்டாம்; அதற்குக் கட்டுப்பாடு விதித்தல் இயலர்தாம், "கடவரை நிற்குமோ காமம்?" என்றும் கூறும் புலவர் பொன்னுரைகள் போற்றத் தக்கனவாம்.

# கூ. ஆசிரியன் கோடங்கொற்றன்

மதுரை, தமிழ் வழங்கும் மாநகராதலின், ஆண்டுத் தமிழறிவுறுக்கும் ஆசிரியர் பலர் வாழ்ந்திருந்தனர்; அத்தகைய ஆசிரியன்மாருள் கோடங் கொற்றனும் ஒருவர்; இவர் பெயர் சில ஏடுகளில் மதுரை நூலாசிரியன் கோடங் கொற்றன் எனவும் காணப்படுவதை நோக்கின், இவர் தனிப் பாடல்களையேயன்றி, பல பாக்களைக்கொண்ட நூல் பல ஆக்கியும் உள்ளார் என அறியலாம்; நூலாசிரியர் என்ற பெயரும் உடையார் என்ற பெருமையினராய இவர் இயற்றிய பாட்டாக நமக்குக் கிடைத்தது குறுந்தொகைக் கண் வந்துள்ள, மகட் போக்கிய செவிலித்தாய் வருந்திய துறை தழுவிய பாட்டு ஒன்றே.

ஒரு பொருளை இழந்தவர், அப் பொருளைப் பெற்றிருந்த காலத்து, அப் பொருளோடு உறவு கொண்டிருந்த பிறபொருள்களையும், செயல்களையும் காணநேரின் கழிபெரும் வருத்தம் கொள்வர்; இஃது உள்ளத்தின் இயல்பு; இதை உணர்ந்த ஆசிரியர், தன் மகள் தலைமகன் ஒருவனோடு உறவுகொண்டு ஊர்விட்டுப் போய்விட்டமை அறிந்து வருந்திய காலத்தே, தன் மகளோடு ஆடி மகிழும் அவள் தோழிப் பெண்கள், வழக்கம்போல் கழியில் மலர்ந்த மலர்களைப் பறித்தும், கடல்நீருட் புகுந்து ஆடியும் மகிழும் காட்சியினைக் கண்டு கழிபெரும் கலக்கமுடையளாயினள் எனப் பாடியுள்ளார்.

"கழிய காவி குற்றும், கடல
வெண்தலைப் புணரி ஆடியும், நன்றே
பிரிவில் ஆயம் உரியதொன்று அயர
இவ்வழிப் படுதலும் ஒல்லாள்." (குறுந் : கசச)

## ௧௦. ஆசிரியன் பெருங்கண்ணன்

இவர் இயற்பெயர் பெருங்கண்ணன் என்பது; ஆசிரியன் என வரும் இச் சிறப்பு, இவர் புலமை நலத்தினைத் தெரிவிப்பதாம்; இனி ஆசிரியன் என்பது, அக்கால அந்தணர்க்கு வழங்கும் பெயராம்; ஆதலின் இவர் அந்தணராவர் எனக் கூறுவாரும் உளர். இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

பிளப்பையும் முழைகளையும் உடைய மலையெல்லாம் மணம் கமழுமாறு காந்தட்பூவின் தாதை ஊதும் வண்டு, பாம்பு உமிழும் மணிபோலத் தோன்றும் காட்சி நிறைந்த மலைநாட்டானாகிய நம் தலைவன், நம்மை விரைய வந்து வரைந்து கொள்ளாமையால், வளைகள் கழன்று உகுமாறு, என் தோள்களும் வாடின; அவரோடு கொண்ட உறவுகுறித்து ஊரார் எழுப்பும் அலர்உரை கேட்டும் உயிர் வாழ்கிற நம்பால், நாணமும் நில்லாது நீங்கிவிட்டது; ஆதலின் இனி அழிவதற்கு ஒன்றும் இல்லை எனக் கூறி வருந்தும் தலைமகள் கூற்று அடங்கிய,

> "தொடி ஞெகிழ்ந்தனவே; தோள்சா யினவே;
> விடுநாண் உண்டோ? தோழி! விடர் முகைச்
> சிலம்புடன் கமழும் அலங்குகுலைக் காந்தள்
> நறுந்தாது ஊதும் குறுஞ்சிறைத் தும்பி
> பாம்பு உமிழ் மணியிற் றோன்றும்
> முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே." (குறுந் : ௨௩௯)

என்ற செய்யுள், காந்தளை ஊதி அதன் மணம் எங்கும் பரவும்படி செய்த தும்பியைப்போல், என் நலன் நுகர்ந்து எங்கும் அலர் எழச் செய்துவிட்டான்; காந்தளும், தும்பியும் பொருந்தி நிற்கும் அழகிய காட்சி, பாம்பும் மணியும் கலந்த அஞ்சத்தக்க காட்சியாதலைப்போல், இல்லறமாற்ற இனிய துணைவர்களாகக் கூடிய எம் இருவர் நட்பு, ஊரார் அலர் கூறத்தக்க அச்சம் நிறைந்த உறவாகித் தோன்றி விட்டது என்ற கருத்தெலாம் தோன்றக் கூறினள் எனப் பாடிய புலமை நலத்தைப் போற்றுவோமாக!

---

# கக. ஆருலவியநாட்டு ஆலம்பேரி சாத்தனார்

இவர் பெயர் ஆலம்பேரி சாத்தனார் எனவும், வாலம்பேரி சாத்தனார் எனவும் காணப்படும்; இவருக்கு உரியதாகக் கூறப்பெறும் ஆலம்பேரி எனும் ஊரும், அவ் ஊர் இருந்த ஆருலவிய நாடும் யாண்டுள எனத் தெரிந்திலது; இவர், பாண்டியன் நெடுஞ்செழியன் கன்னிப்போர் வெற்றிக்குக் காரணமாய ஆலங்கானத்தையும், கடலன் என்பானது விளங்கில் என்னும் ஊரையும், பிட்டனுக்குரிய குதிரை மலையையும் பாராட்டியுள்ளார். கரிய வானுக்கும், அவ் வானிடத்தே தோன்றும் இந்திர வில்லுக்கும், முறையே திருமாலையும், அவர் மார்பிற் கிடந்தசையும் மாலையையும் உவமை கூறியும், அவர் பேரொளிக் கதிர் வீசும் சக்கரம் ஏந்திய கையர்; பகைவர் பயந்து போர் ஒழிதற்குக் காரணமாய வெற்றித் திரு விளங்கும் மார்பர் என்று கூறியும் உள்ளமையான் சாத்தனார் திருமால் அன்பர் போலும் எனக் கோடலும் கூடும்.

"கேழ்கதிர் நிரைத்த நேமியஞ் செல்வன்
போர் அடங்கு அகலம் பொருந்திய தார்போல்
திருவில் தேஎத்துக் குலைஇ." (அகம் : கஎரு)

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப்பற்றிப் பேசுங்கால், அவன் காற்றெனக் கடிது செல்லும் நெடிய பல தேர்களை உடையவன்; ஆலங்கானப் போரின் வெற்றிக்குத் துணைபுரிந்தன அவன் வேற்படை; அவன் பெரிய கைவன்மையுடையான் என்றும், அவனுக்குரிய சிறுமலை, மழை தங்கி விளையாடுதற்காம் உயர்ந்த நெடு முடிகளைப் பெற்று மாண்புற்றது என்றும் புகழ்ந்துள்ளார்:

"காலியல் நெடுந்தேர்க் கைவண் செழியன்
ஆலங் கானத்து அமர்கடந் துயர்த்த
வேலினும் பல்லூழ் மின்னி." (அகம் : கஎரு)

"இழையணி நெடுந்தேர்க் கைவண் செழியன்
மழை விளையாடும் வளங்கெழு சிறுமலை." (அகம் : சஎ)

கடலன், ஒளிவீசும் வேற்படையாலும், மதம் மிக்க களிறுகளை உடைமையாலும் சிறந்த பகைவர் படையினைக் கண்டு அஞ்சாது, அக்களிறுகள் அழியப் புகுந்து கொன்று வெற்றிபெறும் பேராண்மையாலும், பெருங்கொடையாலும் சிறந்தவன்; அவனுக்குரிய விளங்கில் மகளிரின் மையுண்ட கண்களேபோல் மாண்புநிறை அழகுடையது என்று கூறுகிறார்.

"கறுத்தோர், ஒளிறுவேல் அழுவம் களிறுபடக் கடக்கும்
மாவண் கடலன் விளங்கில் அன்னஎம்
மையெழில் உண்கண்," (அகம் : அக)

பிட்டங்கொற்றன், அழியுநர் புறக்கொடை அயில் வேல் ஓச்சுதல்போன்ற போர்ப்பழிகள் தன்பால் உண்டாகாவண்ணம் போராற்றும் பேராண்மையாளன்; சேரர் படைத்தலைவன்; பரிசில் பெற்று வாழும் வாழ்க்கையுடையார்க்கு, நல்லபல பொருள்களை நாடோறும் நல்கும் நயமுடையவன்; வெற்றியன்றித் தோல்விகாணு வாட்போர் வல்லவன்; களம் பல வென்று கட்டிய கழல் உடையவன்; அவனுக்கு உரியது குதிரைமலை; மழை தவழும் மாண்புடையது அம்மலை. இவ்வாறு பாராட்டுகிறார் பிட்டங்கொற்றனை.

"வசையில் வெம்போர் வானவன் மறவன்
நசையின் வாழ்நர்க்கு நன்கலம் சுரக்கும்
பொய்யா வாய்வாள், புனைகழல் பிட்டன்
மைதவழ் உயர்சிமைக் குதிரைக் கவாஅன்."
(அகம் : கசங)

"இவள் தந்த காமநோய் தணிக்கலாகாமையின், யான் ஊர இம்மடலைத் தந்தது; இவ்வூரார் எடுத்த அலர், ஆவிரை, பூளை, உழிஞை முதலாம் மலர்களை இடையிட்டுக் கட்டிய எருக்கம்பூ மாலையைத் தந்தது; ஞாயிறு ஒளியடங்கி மறைந்து எனக்குத் துன்பத்தைத் தந்தது; இவற்றிற்கெல்லாம் மேலாக, மெல்லெனவீசும் வாடையினையும், பனித்துளியையும், அன்றில் தன் துணையினை அழைக்கும்

இனிய குரல் ஒலியினையும் உடைய இவ்விரவு, யான் ஒன்றும் செயலாற்றுவாறு செய்யும் கையறவினைத் தந்தது; இத்தனை துன்பங்களாலும் சூழப்பெற்ற யான் எவ்வாறு உய்வேன்? எங்ஙனம் வாழ்வேன்?'' எனத் தான் காதலித்த ஒருத்தியின் காதலைப் பெறமாட்டாது வருந்துவான் ஒருவனின் வருத்த நிலையினை வகுத்துக் காட்டும் வகை வனப்பு மிக உடையது.

> "மடலே, காமம் தந்தது; அலரே
> மிடைபூ எருக்கின் அலர்தந் தன்றே;
> இலங்குகதிர் மழுங்கி எல்விசும்பு படரப்
> புலம்பு தந்தன்றே புகன்றுசெய் மண்டிலம்;
> எல்லாம் தந்ததன் தலையும், பையென
> வடந்தை துவலை தூவக், குடம்பைப்
> பெடைபுணர் அன்றில் இயங்கு குரல் அளைஇக்
> கங்குலும் கையறவு தந்தன்று;
> யாங்கா குவன்கொல் அளியென் யானே." (நற் : கஙஉ)

துன்பத்தில் உழல்வார், தம்பால் அன்புடையாரும் தம்போல் துயர் உற்றுத் தம் துன்பத்தில் பங்கு கொள்வதை விரும்புவர்; அவ்வாறு அவர் துன்புறுவதால், தம் துயர் குறைந்தாற்போலவும் கொள்வர்; தாம் துயர் உறுங்கால், அவர் துயர் உறாது, மாறாக மகிழ்ந்து உறுவாராயின், தம் துயர் மிகுவது போலவும் எண்ணுவர்; இது மக்கள் மன இயல்பு; இதைத் தலைமகனைப் பிரிந்து தனித்துறையும் தலைமகள் ஒருத்தி, தன் துணையை அழைக்கும் அன்றில் குரல் கேட்டு வருந்தி, தன் தோழிபால் சென்று, "தோழி! 'நாம் வாராமையால் வருந்தி, அன்றில் குரல் கேட்டுத் துன்புற்று இரவெல்லாம் உறங்காது உறுதுயர் உறுவாள் நம் மனைவி; அவள் துயர்க்குக் காரணம் நானேயன்றோ?' என்று கூறி வருந்தும் வருத்தம் நம் தலைவர்பால் உண்டாமோ?'' எனக் கேட்டு நின்றாள் எனப் பாடிப் புலப்படுத்தியுள்ளார் புலவர்.

"துணைபுணர் அன்றில் உயவுக்குரல் கேட்டொறும்
துஞ்சாக் கண்ணள்; துயரடச் சாஅய்
நம்வயின் வருந்தும் நன்னுதல் என்பது
உண்டுகொல்? வாழி! தோழி!..................
நெடுநீர்ச் சேர்ப்பன்தன் நெஞ்சத்தானே." (நற்:௩0௩)

பெண்டிர், பிறர்நலம் பேணும் பெருமைசால் உளத்தர்; தம் துயர் காணாத் தகைமைசால் உளத்தர் என்றெல்லாம் புலவர்கள் புகழ்வர்; அவர்கள்பால் அப் பண்பு உள; அவை இருத்தல் வேண்டும்; இருப்பதே அவர்க்குப் பெருமதிப்பு; தலைவன் வாராமையால் வருந்தினள் ஒரு தலைவி; அவன் வரும் காலமும் வந்துற்றது; அந்நிலையில், ஊர்க்காவலர் உறங்காது உள்ளனர் என்பதை உணர்ந்தாள்; இந்நிலையில் அவர் வந்தால் நன்றன்றே என்றது அவள் உள்ளம்; அதே நேரத்தில் அவன் வரும் வழியில், வேழத்தை வீழ்த்திய வேங்கை, தன் வெற்றிச் சிறப்புத் தோன்ற முழங்கிய முழக்கம் அவள் காதுக ளிடையே வந்து புகுந்தது; அந்தோ! இந்தக் கொடிய வழியில் அன்றோ அவர் வருதல்வேண்டும்? அவர் இன்று வாராது இருப்பின் நன்றன்றோ? அவர் வாராமையால் உண்டாம் துயரினும், இந்நிலையில் வருவதால் உண்டாம் துயர் அந்தோ கொடிது! கொடிது! யான் வருந்துகிறேன்; அதைப் பற்றிக் கவலேன்; அவர் வாராது ஒழிக! வாராது ஒழிக! என வருந்தினள். இவள் பண்பு பெண்டிர் உலகிற்குப் பெரும் பாடமாகுக!

"கடியுடை வியன்நகர்க் காவலர் துஞ்சார்;
வயக்களிறு பொருத வாள்வரி உழுவை
கன்முகைச் சிலம்பிற் குழுமும்; அன்னோ!
மென்தோள் நெகிழ்ந்து நாம் வருந்தினும், இன்று அவர்
வாரா ராயினோ நன்றுமன்!" (நற் : உ௫௫)

## கஉ. இடையன் சேந்தங்கொற்றனார்

கொற்றனார் என்பது இவர் இயற்பெயர்; சேந்தன் என்பது இவர் தந்தை பெயர்; இவர் முல்லை நிலத்து ஆயர் குடி வந்தவர். இவர் இயற்றிய ஒரு செய்யுள் நெடுந் தொகைக்கண் இடம் பெற்றுளது.

பொருள்வயிற் பிரிந்து சென்ற தலைவனை நினைந்து வருந்தும் தலைமகளைத் "தலைவி! பொருள் தேடிச் சென்றுள்ள தலைவர் ஆண்டு நீட்டித்திரார்; ஆதலின், வருந் தற்க!" என்று கூறித் தேற்றினாள் தோழி. அது கேட்ட தலைவி, "தோழி! அவர் பிரிந்து சென்றுளார் என்பது குறித்து வருந்துகின்றேன் அல்லேன்; அவர் சென்ற வழி கொடுமை நிறைந்தது; அவ்வழியில் ஆறலைத்து வாழும் கள்வர், வழியில் வருவாரிடத்தே பொருள் இல்லை என்பதை அறிந்தும், தம் வில்லாற்றலைக் காண்பதற்காக என்றே அவர்மீது அம்பேவிக் கொன்று பறவைகளுக்கு உணவூட்டுவர் என்ப; அத்தகைய கொடிய வழியில் சென்ற அவர்க்கு இடையூறு ஒன்றும் நேராது என்பதை அறிவேனாயின் என் துயர் குறையும்; அதை எவ்வாறு அறிவேன்; அறியாத என் கண்கள் அழுகின்றன; என் செய்வேன்?" எனக் கூறினாள் எனப் பாடி, அக்கால மகளிர் உள்ளத்தின் உயர்வையும், அக்கால வழியில் ஆறலை கள்வரின் கொடுமைகளையும் ஒருங்கே உணரத் துணைபுரிந்துள்ளார் புலவர்.

புலவர் இடையன் சேந்தங் கொற்றனார், தமிழக வரலாறு உணர்வார்க்கு உறுதுணை புரியவல்ல ஓர் உண்மையினைத் தம் பாட்டகத்தே உணர்த்தியுள்ளார்; பாழி என்பது சேரநாட்டை அடுத்த கொண்கான நாட்டில் உள்ள ஓர் ஊர்; அரிய காவலையுடையது; பெரும்பொருள் நிறைந்தது; இதனால், அக்காலப் பேரரசர் அனைவர் கவனத்திற்கும் அஃது உள்ளாகியிருந்தது; மூவேந்தர்களும் அதைப்பெற முயன்றனர்; நன்னன் எனும் குறுநில மன்னனும் அதைக் கைப்பற்றியிருந்தான்; வேளிர் பலரும் தம் பெரும்பொருளைப் பாழியில் வைத்துப் பேணினர்; தமிழகத்தாரே அல்லாமல், வடுகர், கோசர் போலும் பிற நாட்டாரும் அதைப் பெற்று ஆள எண்ணினர்; இப்பாழி

நகர் ஒருகாலத்தே வடுகர் கைப்பட்டிருந்தது; அக்காலைச் சோணாடு ஆண்டிருந்தவன் இளம்பெருஞ் சென்னி என்பவனாவன்; அவன் அப்பாழி நகரைத் தன் முன்னோர் பலரும் கைப்பற்ற முயன்று முயன்று தோற்றுப் போனதை எண்ணினான்; அவர் முயன்றுவிட்ட அவ்வினையினை முடித்துக்காட்டல், தான் பிறந்த குடிக்குத் தான் செய்ய வேண்டிய கடமையாம் என உணர்ந்தான்; உடனே யானைப்படை நிறைந்த பெரும்படையோடு பாழிநகர் சென்றான்; ஆங்கு அக்காலை ஆண்டிருந்த வடுகர் என்பார் தலைகளை வெட்டிவீழ்த்தி வெற்றி பெற்றான்; தம் குடிக்குக் குறைவினையாய் இருந்ததனை முடித்துப் புகழ்பெற்றான் என்ற வரலாற்றினை அவர் பாடல் உணர்த்துகிறது. இவ்வாறு பாழியை வென்று, குறைவினை முடித்துக் குடிக்கடன் ஆற்றிய கோ, கரிகாற் பெருவளத்தானின் தந்தையாகிய உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியே ஆவன் என்பதை உறுதி செய்யும் சான்றுகள் பல, தமிழ் நூல்களிடையே ஆங்காங்கே காணப்படுகின்றன.

"சென்று நீடுநர் அல்லர்;அவர்வயின்
இனைதல் ஆனாய் என்றிசின் இகுளை!
அம்பு தொடைஅமைதி காண்மார் வம்பலர்
கலன் இலராயின் கொன்றுபுள் ஊட்டும்
கல்லா இளையர் கலித்த கவலை.........
எழாஅத் திணிதோள் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெரும் சென்னி
குடிக்கடன் ஆகலின் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானைக் கோட்டிற் றோன்றும்
அஞ்சுவரு மரபின் வெஞ்சுரம் இறந்தோர்
நோயிலர் பெயர்தல் அறியின்
ஆழல மன்னோ தோழிஎன் கண்ணே."

(அகம் : கூஎரு.)

வரலாற்று நிலையினை உணர இயலாது இருண்டுகிடந்த பழந்தமிழகத்தின் வரலாற்றினை ஓரளவு விளக்கிக் காட்டிய புலவர் பெருந்தகையார்க்குத் தமிழுலகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகுக!

## கரு. இடையன் நெடுங்கீரனார்

நெடுங்கீரனார் என்ற இயற்பெயருடைய இவரும், முல்லைநிலத்து ஆயர்குடிவந்தவரே; இவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்திருப்பது அகநானூற்றில் வந்துள்ள செய்யுள் ஒன்றே; இவர் கள்ளும், நெல்லும் நிறைந்த வேளூரையும், அவ்வூருறை பலிபெறு தெய்வத்தையும் தம் பாட்டில் எடுத்தோதிப் பாராட்டியுள்ளார். தெய்வம் உறையும் இல்லில் நறுவிரை தெளித்தலும், மணங்கமழ் மலர் தூவலும் உண்டு எனவும், தெய்வம் நோக்கித் தூவிய மலர்களில் வண்டுகள் தேன்குடியா எனவும கூறுவர்; அத்தெய்வம், தவறு செய்தாரைத் துயர் உறுத்தும் என்றும் கூறியுள்ளார்; பரத்தையர் ஒழுக்கம் உண்டு எனச் சினந்த தன் மனைவி முன் நின்று, "நீ கூறிய அவளோடு புணையேறிச் சென்று புனலாடி வந்தேனாயின், தெய்வம் என்னை வருத்துமாக" என்று சூளுற்ற தலைமகனை நமக்கு அறிமுகமாக்கியுள்ளார் அப்பாட்டில். பண்டைக் காலத்தில், ஊர்மன்றிடை நிற்கும் மரத்தடிகளில் கள் விற்பார் கடைவைத்திருப்பர்; அவர் பலநாள் அரித்தெடுத்த கள்ளைச் சாடியில்வைத்து விற்பர்; ஒரோவழி, கள்முகக்கும் கலம்பட்டுச் சாடி உடைந்து கள் வீணாதலும் உண்டு எனவும் அவர் கூறியுள்ளார்.

"நன்மரங் குழீஇய நனைமுதிர் சாடி
பன்னாள் அரித்த கோஒய் உடைப்பின்
மயங்குமழைத் துவலையின் மறுகுடன் பனிக்கும்
பழம்பல் நெல்லின் வேளூர் வாயில்
நறுவிரை தெளித்த நாறிணர் மாலைப்
பொறிவரி இனவண்டு ஊதல கழியும்
உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்
புனையிருங் கதுப்பின் நீகடுத் தோள்வயின்
அனையே னாயின் அணங்குக என்என
மனையோள் தேற்றும் மகிழ்நன்" (அகம் : கசுசு)

## கச. இம்மென் கீரனார்

கீரனார் என்ற இயற்பெயருடைய இவர், துன்புற்று அழுவார் கண்கள் விரைந்து நீர்சொரிதலை இம்மென்று சொரியும் எனக் கூறிய சிறப்பால் இம்மென் கீரனார் என அழைக்கப்பெற்றுள்ளார். "நும்மோன் செய்த கொடுமைக்கு இம்மென்று, அலமரல் மழைக்கண் தெண்பனி மல்க." இவர் பாடிய பாட்டு ஈண்டுக்குறித்த நெடுந்தொகைப் பாட்டொன்றே.

தலைவன் விரைவில் வந்து வரையானாக வருந்திய தலைமகள், அவன் மலையினின்றும், ஆங்குள்ள மலர்களை அடித்துக்கொண்டு ஓடிவரும் ஆற்றைக் கண்டு, "கரையை அழித்து ஓடிவரும் ஆறே! யான் இவ்வாறு வருந்தவும், விரைந்து வரைந்துகொள்ளாது, அறனல்லாதன மேற்கொண்டொழுகுவதோடு, என் வருத்தம் கண்டு வருந்துவதும் செய்யாத நின் தலைவன் செயலை என்னென்பது என நின்னை யான் கேட்பேன் என அஞ்சி, அவன்மலை மலர்களால், நின் உடலை மூடிக்கொண்டு, நாணத்தால் நடுங்கி மறைந்து மறைந்து நடக்கின்றனை போலும்" எனக் கூறி வருந்தினாள் எனப் பாடிய புலமையின் பெருமையினைப் போற்றுவோமாக!

"பசலை மேனி நோக்கி நுதல்பசந்து
இன்னே மாகிய எம்மிவண் அருளான்
நும்மோன் செய்த கொடுமைக்கு இம்மென்று
அலமரல் மழைக்கண் தெண்பனி மல்க,
நன்று புறமாறி அகறல் யாழநின்
குன்றுகெழு நாடற்கு என்னெனப் படுமோ?
கரைபொரு நீத்தம்! உரைஎனக் கழறி
நின்னொடு புலத்தல் அஞ்சி அவர்மலைப்
பன்மலர் போர்த்து நாணுமிக ஒடுங்கி
மறைந்தனை கழியும் நிற்றந்து." (அகம் : நகஅ)

# கரு. இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்

செங்கண்ணனார் என்பது இவர் இயற்பெயர்; ஆயன் என்பது இவர் குடிப்பெயர்; ஒல்லை என்பது இவர் ஊர்ப் பெயர்; ஒல்லையூர் என்ற பெயருடைய ஊர், பட்டுக் கோட்டை வட்டத்தில் உளது; ஒல்லையூர்கிழான், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்ற பெயர்களை நோக்குக. இருங்கோ என்ற சிறப்பு அரசர்க்கு உரியதாக வழங்கப் பட்டிருத்தலின், இவரும் அரசர் மரபினராதலும் கூடும்; இருங்கோன், பெரியகோனார் எனப் பொருள்படும் எனக் கோடலும் பொருந்தும். இவர் பாடிய பாட்டொன்று அகநானூறு மணிமிடைபவளத்தின்கண் இடம் பெற்றுளது; அது காட்டும் அறவுரை ஆண்மக்கள் அறிந்து மேற்கொள்ளத் தக்க அருமையுடையதாம்.

உற்றாரும், உறவினரும், உயிர்போலும் நண்பர்களும் வறுமையால் வாடும் வருத்தத்தினையும், தன் பகைவராவர் பொருளுடையராய்ப் பெருமித வாழ்வு வாழ்தலையும், கண்ணெதிரே கண்டும், அவர் வாழும் அவ்வூரிலேயே அவரோடு ஒருங்கு வாழ்தல், பொருள் தேடிப் போதல்வேண்டும் எனும் எண்ணமிலராய், மனைவியர் தரும் இன்பமே பெரிதாம் என எண்ணி வாழும் இழிகுணமுடையார்க்கே இயலும். "மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினை விழைவார் வேண்டாப் பொருளும் அது; "நட்டார் குறை முடியார்; நன்று ஆற்றார்; நன்னுதலாள் பெட்டாங்கு ஒழுகு பவர்" என்பன திருக்குறள். உள்ள ஊக்கமும், உயரிய எண்ணமும் உடையார், அந்நிலை கண்டு வாழ மனம்பொறார்; உற்றார்க்கும், நட்டார்க்கும் உறுபொருள் தாராது வாழ்தலின் உயிர்விடுதலே சாலவும் உயர்ந்ததாம் என எண்ணுவர்; ஒட்டார் உயர்வாழ்வு வாழ, அவர்முன் வறுமை வாழ்வு வாழ்தலினும் மானம் கெட்டநிலை வேறு இல்லை; அத்தகைய உள்ளம் உடையார்க்கு உறக்கமோ, உள்ளத்தில் அமைதியோ உண்டாகாது; இரவும், பகலும்

அவர்க்கு அதுவே ஏக்கமாம்; அவ் ஏக்கம் அவர் உடலையும், உள்ளத்தையும் ஒருங்கே எரித்து அழிக்கும்; அத்தகை யார், இந்நிலைகண்டு ஈண்டே இருப்பதினும், திரைகடல் ஓடியாவது திரண்டபொருள் கொணரப் போவர்; அவ் வாறு அவர்கள் பொருள்தேடிப் போயவழியே, அவர் உள்ளத்தில் ஓரளவு அமைதி உண்டாம்; உள்ளத்தை வருத்திய கவலையால் உண்டாம் கொடுமையும் ஓரளவு குறையும்; அவ்வாறு சென்று பொருள் கொணர்ந்து, உற்றார் துயரை ஒழித்தும், ஒட்டாரினும் உயர்நிலைபெற் றும் வாழ்வதே வாழ்வின் பயனும். இந்த அரிய கருத்து செங்கண்ணனார் செய்யுளில் சிறப்புறக் கூறப்பட்டுளது.

"நட்டோர் இன்மையும், கேளிர் துன்பமும்
ஒட்டாது உறையுநர் பெருக்கமும் காணூஉ
ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்ல
பொன்னவிர் சுணங்கொடு செறிய வீங்கிய
மென்முலை முற்றம் கடவா தோர்என
நள்ளென் கங்குலும், பகலும் இயைந்துஇயைந்து
உள்ளம் பொத்திய உரம்சுடு கூர்எரி
ஆள்வினை மாரியின் அவியா, நாளும்
கடறு உழந்து இவணமாக." (அகம் : உ௭௧)

பொருள் இல்லையே என்ற உள்ளக் கவலையினை ஒழிப் பது, ஊக்கம் கொண்டு உடற்றும் முயற்சியாம்; ஆகவே, அம்மனக் கவலையினைப் பெருநெருப்பாக உருவகம் செய்த புலவர், அக்கவலையைத் துடைக்கும் ஆள்வினையுடைமை யினை, அந் நெருப்பினை அழிக்கவல்ல மழையாக உருவகம் செய்து பாடிய பொருள் நயம் படித்து இன்புறற்குரியதாம்.

## கசு. இளங்கண்ணிக் கௌசிகனார்

இளங்கண்ணி என்பது இவரது தந்தையார் பெயர் முடத்தாமக்கண்ணி, புல்லாளங்கண்ணி என்பனபோல் இளங்கண்ணி, என்பதும் அக்கால மக்கள் மேற்கொண்ட இயற்பெயர்களுள் ஒன்றுபோலும். கௌசிகன் என்பது ஒரு முனிவன் பெயர்; அப்பெயரையும், தமிழர்கள் அக்காலத்திலேயே தங்கள் இயற்பெயர்களுள் ஒன்றாக மேற்கொண்டிருந்தனர். இவர் பாடினவாக அகத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றும் ஆக இரு பாடல்கள் கிடைத்துள்ளன; இவர் எவரையும் பெயர்குறித்துப் பாராட்டினாரல்லர்; ஆயினும், அகத்தில் வடுகரைப் பற்றியும், சேரரைப்பற்றியும் சிறப்பித்துக் கூறியுள்ளார்; வடுகர், வேங்கடம் சூழ்ந்த நாட்டினர்; வேட்டை நாய் தொடரச்சென்று, மாவையும், மாக்களையும் கொன்று மகிழ்ந்து வாழ்வர்; விற்போரில் வல்லவர்; தாம் போகும் இடங்களில் வேண்டும் உண்ணு நீரினைக் கன்றின் தோலால் ஆய கூட்டினுள் கொண்டு செல்லும் வழக்கம் உடையவர்; அத்தகையார், வழியில் ஆறலைத்துச் சினம் மாறி அமர்ந்திருந்த நிலையினைப் புலவர் குறித்துள்ளார்.

"கற்றுரிக் குடம்பைக் கதநாய் வடுகர்
விற்சினம் தணிந்த வெருவரு கவலை." (அகம் : உ௱௩௧)

சேரர், தம்மைச் சினந்த பகைவர்தம் மிக்க வலியினை அழித்து வெற்றிகொள்ளும் வீறுசால் படையுடையவர்; தேனொழுகும் மணம் மிக்க மலர்மாலையினர்; அவர் படை கொண்டு புகுந்து அழித்த பகைவர் நாட்டு அரண்கள், மீண்டும் பயனுறுவாறு பெரும்பாழுறும் என்று சேரனொருவன் சிறப்பைப் புகழ்ந்து கூறியுள்ளார்.

"பொருந்தார்,
முனையரண் கடந்த வினைநவில் தானைத்
தேனிமிர் நறுந்தார் வானவன் உடற்றிய
ஒன்னாத் தெவ்வர் மன்னெயில் போலப்
பெரும்பாழ் கொண்ட." (அகம் : உ௱௩௧)

வீரன் ஒருவன் ஆண்மைக்குப் புதுப்பொருள் காணுகிறார் புலவர். செயற்கரிய செய்வார் பெரியர் என்பர் வள்ளுவப் பெருந்தகையார்; களம்புகுந்து, கையிற் கொண்ட படை ஒடியுமாறு பகைவரை அழித்து வெற்றி கொள்வது களம்புகுந்த வீரர் அனைவர்க்கும் இயலும் காரியமாம்; இவ்வாறு எல்லோர்க்கும் இயன்ற ஒரு செயலையே தானும் கொண்டிருத்தல் ஓர் ஒப்பற்ற வீரனுக்கு அழகாகாது; அதனால், அவனுக்கு உயர்வு உண்டாகி விடாது; உண்மையில் அவனொரு பெருவீரனாயின், அவன் களம் புகுந்து படையெடுத்தல் கூடாது; அவன் பாசறைக் கண் உளன் என்பதறிந்தே அவன் பகைவர் பணிவதோ அன்றிப் புறங்காட்டி ஓடுவதோ செய்தல்வேண்டும்; பாம்பைக் காணாது, அஃது உறையும் புற்றைக்கண்டே அஞ்சுவதைப் போல், அவர்கள், அவனைக் காணாதே, அவன் பாசறையுள் உளன் என்பதறிந்தே அஞ்சுதல்வேண்டும்; அதுவே, அவ்வீரனுக்கு உண்மை வீரமும், புகழுமாம். இந்த உயரிய கருத்தினைத் தன் தலைவனைப் புகழும், ஒரு படைமறவன் வாயில் வைத்துக்கூறி, ஆண்மைக்கோர் அரும்பொருள் கண்ட புலவர்க்குப் பெருவீரர் பெரிதும் கடப்பாடு உடையராகுக.

"இரும்பு முகம்சிதைய நூறி, ஒன்னார்
அருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே;
நல்அரா உறையும் புற்றம் போலவும்,
கொல்ஏறு திரிதரு மன்றம் போலவும்,
மாற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
உளன்என வெரூஉம் ஓர்ஒளி
வலனுயர் நெடுவேல் என்னைகண் ணதுவே."

(புறம்: ௩0௧)

தலைமகன் பொருள் கருதிப் பிரிந்து செல்லும் வழியின் கொடுமையினைக் கூறவந்த புலவர், ஆறலை கள்வரால் அழிந்தோர் உடலை அழித்துத் தின்ற ஆண் பருந்துகளின் பெருங்கூட்டம், அப்பிணங்களில் படிந்து உண்டமையால் அவற்றின் உதிரத்தால் செந்நிறம்பெற்று, வானவெளியில் பறந்து, செவ்வானம்போல் தோன்றி அழகு செய்யும்;

அவை அவ்வாறு பெருங்கூட்டமாய்ப் பறப்பது கண்டு பிறபுலங்களில் உள்ள பறவைத் தொகுதிகளும் ஆண்டு பச்சை ஊன் உண்டு என அறிந்து வருவதால், பறக்கும் பருந்துகள், 'பச்சூன் உண்டு, பறவைகளே வாருங்கள்' எனப் பறைசாற்றுவபோலும், எனக்கூறி வழியருமையினையும், அது கண்டு அஞ்சாது சென்று பொருளீட்ட எண்ணும், அக்கால மக்களின் இறப்ப உயர்ந்த உள்ளச் சிறப்பினையும் உணர்த்துவாராயினர் :

"குருதி ஆடிய புலவுநாறு இருஞ்சிறை
எருவைச் சேவல் ஈண்டுகிளைத் தொகுதி
பச்சூன் கொள்ளை சாற்றிப் பறைநிவந்து
செக்கர் வானின் விசும்புஅணி கொள்ளும்
அருஞ்சுரம்." (அகம் : ௩௨௧)

அச்சம், மடன், நாணம், பயிர்ப்பு ஆகிய நாற்குணங்களையும் நான்கு படைகளாகவும், ஐந்து புலன்களையும் அறிவறிந்த அமைச்சர்களாகவும் கொண்டு பெண்ணரசு மேற்கொள்வர் மகளிர் என்று ஒரு புலவர் கூறியுள்ளார்; நிறையே மகளிர்க்குப் பெருங்காப்பாம் என்றார் வள்ளுவனார் : "சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர் நிறை காக்கும் காப்பே தலை." இவ்வாறு மாண்புநிறை குணங்களை, மகளிரைக் காத்துநிற்கும் பேரரண்களாகக் கொள்வது பழந்தமிழர் கண்ட ஒரு பெருநெறி; இதைத், தாம் பாடிய பாட்டொன்றில் வைத்து விளக்குகிறார் நம் புலவர்; தலைவன் பொருள் கருதிப் பிரிந்துவிட்ட காலத்தே, அவன் பிரிவாலாய துயரால், உடல் நலம் கெட்டாள்; தன் உடல் நலக்கேடு கண்டு ஊரார் உரைக்கும் அலர் உரைக்கு அஞ்சித், தன் பெண்மைக்குணங்கள் அழியவும், அவன்பால் செல்ல விரும்புகிறது அவள் உள்ளம்; இவ்வாறு, உள்ளத்தாலும். உடலாலும் நலங்கெட்ட அவள் நிலைக்குப் பகைவர் படையால் பாழுண்ட அரணை உவமைகாட்டி விளக்குகிறார் புலவர்.

'வானவன் உடற்றிய
ஒன்னாத் தெவ்வர் மன்னெயில் போலப்
பெரும்பாழ் கொண்ட மேனியள்.' (அகம் : ௩௨௧)

# ௬௭. இளங்கீரந்தையார்

இளங்கீரன் என்ற பெயருடைய புலவர் ஒருவர் உளர்; அவரின் தந்தையார் இவர்; ஆதலின், இவர் இளங்கீரந்தையார் எனப் பெயர் பெற்றார்; இஃது இவர் இயற்பெயரன்று.

பரிபாடல் பாடிய புலவர்களுள் கீரந்தையார் என்ற பெயருடைய புலவர் ஒருவரும் உளர்; அவரின், இவர் ஆண்டால் இளமையுடையராதலின், இளங்கீரந்தையார் என அழைக்கப் பெற்றுளார் எனக் கோடலும் பொருந்தும்.

கார்காலத் தொடக்கத்தே வருவேன் எனக் கூறிச் சென்ற தலைவன், அக்கார்காலம் வந்த பின்னரும் வாராதாக வருந்திய தலைவியைத் தேற்றுவதற்காகத் "தோழி! இது கார்காலமன்று; ஆகவே கவலையுறற்க" என்று பொய் கூறித் தேற்றினாள் தோழி. அது கேட்ட தலைவி, இது கார்காலமே என்பதைத் தெளிய உணர்த்த, அக்காலத்தே மலரும் இயல்புடைய கொன்றையும், குருந்தும் மலர்வதைக் காட்டி, "தோழி! இவை மலர்ந்து மணங்கமழும் இக்காலத்தைக் கார்காலம் அன்று எனக் கூறுவையாயின், அவை மலர்ந்தனவாகக் காணும் காட்சி கனவு போலும்" என எள்ளிக் கூறினளாகப் பாடியுள்ளார். இதில், பண்டைத் தமிழகத்துப் பொன்னுடைப் பெருஞ்செல்வர், தம் சிறுவர் கால்களில், தவளை வாய்போலும் வாயையுடைய கிண்கிணிகளைப் பொன்னாற்செய்து புனைதலைப் போற்றியுள்ளார்.

"செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாஅய பொலஞ்செய் கிண்கிணிக்
காசின் அன்ன போதீன் கொன்றை
குருந்தோடு அலம்வரும் பெருந்தண் காலையும்
காரன்று என்றி யாயின்
கனவோ மற்றிது வினவுவல் யானே." (குறுந் : ௧௪௮)

# கஅ. இளங்கீரனார்

இளங்கீரன் என்ற இயற்பெயருடைய புலவர் பலராவர்; அந்தி இளங்கீரனார், எயினந்தை மகனார் இளங்கீரனார், பொருந்தில் இளங்கீரனார் என்பாரை நோக்குக. இளங்கீரனார், எயினந்தைமகனார் இளங்கீரனார், பொருந்தில் இளங்கீரனார் ஆய மூவரும் ஒருவரே என்று கொள்வாரும் உளர்; இவர் மூவரும் வேறு வேறுவர் என்பதை விளக்கவே, ஒருவரை இளங்கீரனார் என்றும், ஒருவரை எயினந்தை மகனார் இளங்கீரனார் என அவர் தந்தை பெயரோடு இணைத்தும், ஒருவரைப் பொருந்தில் இளங்கீரனார் என அவர் பிறந்த ஊர்ப்பெயரோடு கூட்டியும் வழங்கினாராகவும், மூவரையும் ஒருவரே எனக் கோடல் பொருந்தாது. இளங்கீரனார் பாடிய பாக்கள் நான்கு; நற்றிணையில் மூன்று; குறுந்தொகையில் ஒன்று.

தன்னால் விரும்பப்பட்டாளாய தலைமகளைத் தலைமகன் புகழ்ந்து உரைத்தற்கு எத்தனையோ உவமைகளை ஆண்டுள்ளனர் புலவர்; அவர்கள் காட்டிய அத்தனை உவமைகளினும் சாலச்சிறந்த ஓர் உவமையினைப் புலவர் இளங்கீரனார் எடுத்தாண்டுள்ளார். ஒருவன் ஒருவினையைத் தொடங்கி இனிது முடித்து வெற்றி காணல் மிகமிக அரிய செயலாம்; நல்ல காரியத்திற்கு நானூறு இடையூறு என்ப; "மெய் வருத்தம் பாரார்; பசி நோக்கார்; கண் துஞ்சார்; எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்; செவ்வி அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்; கருமமே கண்ணாயினார்" என்ற பாட்டால் ஒரு வினையை முடித்து வெற்றி காணல் எத்துணை அருமையுடைத்து என்பது புலனாம்; "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும் அன்றி அதுவரினும் வந்தெய்தும்; ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்" இது உலகியல்; இதனால், எண்ணிய எண்ணியாங்கு எய்தப் பெறல் எத்துணைத் திண்ணிது என்பதும் புலனாம்; இவ்வாறாகவும், ஒருவர் ஒருவினையைப் பலகாலும் எண்ணி எண்ணிப் பார்த்து, இறுதியில் தொடங்கி, இடையில் உண்டாம் இடையூறுகளை

எல்லாம் எதிர்த்துப் போராடிப் போக்கி முடித்து வெற்றி பெற்ற அக்காலத்தே, அவர் உள்ளத்தில் எழும் இன்பத்திற்கோர் எல்லை காணலும் இயலுமோ? அமெரிக்காவைக் காணச் சென்ற கொலம்பஸ், கடலில் பலநாள் உழன்றதற்குப் பின்னர்க் கரை கண்ட காலத்தே, அவன் கொண்ட இன்பத்திற்கோர் எல்லை உண்டோ? இமயத்தின் உச்சியைக் காணவேண்டும் என உரங்கொண்டு முயன்று, பனிக் கொடுமை பாராது ஏறி, அதன் முடியில் தம் காலை வைத்தார், வைத்த அக்காலை அவர் உள்ளம் கொண்ட இன்பத்தினை எவ்வாறு அளவிட்டுக் கூறல் இயலும்? தொடங்கிய வினையில் வெற்றி கண்டார் கொள்ளும் இன்பத்தினை அளவிட்டுக் காணல் இயலாது; அவ்வின்பத்திற்கு, வேறு எவ்வின்பமும் இணையாகாது; அவ்வின்பம் ஒப்பும், உயர்வும் அற்ற பேரின்பமாம். இவ்வின்பத்தின் இயல்புணர்ந்த புலவர், தலைவனுக்குத் தலைவி தரும் இன்பம், வினைமுடித்து வீறெய்தினோர் பெறும் இன்பத்திற்கு நிகராம் எனக் கூறியுள்ளார்! என்னே அவர்தம் வினையறி உள்ளம்!

வினைமேற் சென்ற தலைமகன், அவ்வினையை வெற்றியுற முடித்துக்காண எண்ணுவனாயின், அவன், அவ்வினையிலன்றி வேறொன்றிலும் செல்லா உள்ளமுடையனாதல் வேண்டும்; அந்நிலையில், அவன் உள்ளத்தே, வீட்டில் விட்டுப் பிரிந்துறையும் மனைவியின் எண்ணம் உண்டாகிவிடின், அவனால் அவ்வினையை முடித்தல் முடியாதாம். ஆகவே, அக்காலத்தில் அவன் அவளை நினைத்தலும் கூடாது; இத்தகைய உள்ள உரம்கொண்டு உழைத்து, அவ்வினையில் வெற்றி கண்டக்கால், இவ்வெற்றியாலாய இன்பத்தை நம்மோடு ஒருங்கிருந்து நுகர்தற்கு நம் தலைவி ஈண்டில்லையே என்ற எண்ணம் எழல் எவர்க்கும் இயற்கையாம்; அந்நிலையில் அவளைப்பற்றிய எண்ணம் எழல் தவறாகாது; அதைத் தடுத்து நிறுத்தலும் எவர்க்கும் ஆகாது; இது பற்றியன்றோ, "கிழவி நிலையே வினையிடத்து உரையார்; வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" (தொல் - கற்பு:

௬) என இயற்கையோடியைந்த விதி கூறினார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். வினைமுடித்து வெற்றி கண்ட ஓர் ஆண்மகன் உள்ளத்தை உள்ளவாறு உணர்ந்தமையா லன்றோ, அவ்வினை முடித்துப்பெற்ற பேரின்பமும், அவன் மனைவிமாட்டுக் காட்டும் பேரன்பும் ஒருங்கே தோன்ற, அவன் "வினைமுடித் தன்ன இனியோள்" எனக் கூறிப் பாராட்டினான் தன் மனைவியை எனப் பாடிப் புகழ் பெற்றார்! (நற்: ௩).

புலவர், பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்ற சேரவேந்தன், பகைவரைக் கொன்று வெற்றி காணும் போர்க்களத்தே, போர்க்களம் பாடும் பொருநரோடு போந்த பாணர்கள், ஆம்பற் பண்ஏழக் குழலூதிப் பாராட்டுவதையும், "உதியன் மண்டிய ஒலிதலை ஞாட்பின், இம்மென் பெருங்களத்து இயவர் ஊதும் ஆம்பலம் குழல்" (நற்: ௧௧௩), சோழர்க்கு உரிய உறந்தை நகரையும், அதன் கண் உள்ள நீர்த்துறையினையும் "வளங்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை, நுண்மணல் அறல்" (குறுந்: ௧௧௬), கல்லாத இளஞ்சிறுவர் பல்லோர் ஒன்றுகூடி, நெல்லிக் காயாகிய வட்டினைக்கொண்டு, வேப்பமரத்தின் நிழல் நிறை அடியில், பொன்னுரை போலும் வட்டமான அரங் கிழைத்து வட்டாடி மகிழும் வளமற்ற நிலையினையும், "பொரி யரை வேம்பின் புள்ளி நீழல், கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக், கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்" (நற்: ௩) தம் பாக்களில் எடுத்துக் கூறிப் பாடியுள்ளார்.

## கக. இளநாகனார்

ஆண்டால் இளமையும், அறிவால் முதுமையும் உடைய நம் புலவர்க்குப் பெற்றோர் வைத்து வழங்கிய பெயர் நாகனார் என்பது. இவர் பாடிய பாக்கள் மூன்று நற்றிணைக்கண் இடம்பெற்றுள்ளன; குறிஞ்சிவளம் குறித்துப் பாடுதலில் புலவர் வல்லராவர்.

வெற்றியும் தோல்வியும் எங்கும், எப்பொழுதும் ஒரு நிலையே நிற்கும் இயல்புடையன அல்ல; மாறிமாறி வரும் மாண்புடையனவாம்; குறிஞ்சிநிலக் காடுகளின் காட்சியினைக் காட்டுவார்போல், இவ்வுண்மையினையும் ஒருவாறு உணர்த்தியுள்ளார் புலவர். எதிர்த்த புலியைக் குத்திக் கொன்று அதனால் கறைப்பட்ட தன் கோடுகளை, மலையருவி நீரில் மண்ணும் யானையைக் காட்டும் அவரே, இரை வேட்டெழுந்த புலியாற் கொல்லப்பெற்ற யானையின் பருவுடலை, ஆளிநன்மான் ஈர்த்துச் செல்லும் காட்சியினையும் காட்டுவது காண்க.

"கொல்முரண் இரும்புலி அரும்புழைத் தாக்கிச்
செம்மறுக் கொண்ட வெண்கோட்டு யானை
கன்மிசை அருவியில் கழூஉம் சாரல்"
"ஆளி நன்மான் வேட்டுஎழு கோள்உகிர்ப்
பூம்பொறி உழுவை தொலைச்சிய வைந்நுதி
ஏந்துவெண் கோட்டு வயக்களிறு இழுக்கும்."

(நற் : கஙக, உ0௫)

தமிழகத்துக் காடுகள் ஈண்டுக் காட்டியனபோலும் கொடிய காட்சிகளோடு, அழகிய காட்சிகள் பலவற்றையும் ஆங்காங்கே கொண்டிருந்தன என்பதையும் புலவர் பாக்கள் உணர்த்துகின்றன; மந்தியொன்று, தன் மனம் விரும்பும் கடுவனோடு கலந்து மகிழ்ந்தது; அம் மகிழ்ச்சியால் தன்னை மறந்திருந்த மந்தி, தன் உணர்வு வரப்பெற்றதும், தன்னைச்சூழத் தன் இனக்குரங்குகள் இருப்பதை

உணர்ந்தது. நாணம் நனிமிகக் கொண்டது; தான் கடுவ னோடு கொண்ட காதல் வாழ்க்கையினை அவை கண்டு விட்டனவோ என அஞ்சிற்று; உடனே, நீர்நிலை அருகே நீண்டு தழைத்திருந்த நெடிய வேங்கைமேல் ஏறி, நீரைத் தொடுமாறு தாழ்ந்திருந்த அதன் சினையொன்றில் அமர்ந் தது. ஈண்டு, ஆடாது அசையாது ஆடிபோல் தெளிந்து நிற்கும் நீரில் தன் முகத்தினை நோக்கிக்கொண்டே, தான் கடுவனோடு கலந்தக்கால் கலைந்துபோன தன் தலைமயிரைத் தன் இனம் அறியாவாறு தன் கைகளால் கோதிமுடித் தது. மந்தியின் நாணங்கொள் நல்வாழ்க்கையினை நன்கு விளக்கும் இக்காட்சியினைப் புலவர் படம்பிடித்துப் பாராட்டி மகிழ்கிறார்.

"கடுவன்
முறியார் பெருங்கிளை அறிதல் அஞ்சிக்
கறிவளர் அடுக்கத்தில் களவினிற் புணர்ந்த
செம்முக மந்தி செல்குறி, கருங்கால்
பொன்இணர் வேங்கைப் பூஞ்சினை செலீஇயர்,
குண்டுநீர் நெடுஞ்சினை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்தலைப் பாறுமயிர் திருத்தும்." (நற் : கடுக)

கணவனும் மனைவியுமாகிக் காதல் வாழ்வு மேற்கொள் ளும் பண்டைத் தமிழ்மக்கள், அறிவு, உரு, திருவானே யன்றி, உணர்வானும் ஒத்த உயர்வுடையாராவர்; கணவன், மனைவியின் இன்ப துன்பங்களைத் தன் இன்ப துன்பங் களாகக் கருதுவன்; மனைவியும், கணவன் இன்ப துன்பம், தன் இன்ப துன்பமாகக் கொள்வள்; காதலர்தம் கவின் மிகு இவ்வாழ்வினைப் புலவர் வரைந்து காட்டி வியந்து போற்றுகிறார்.

தலைவன் வந்து தலையளி செய்வதால், தன் இன்னல் குறைய, இன்பம் மிகுமாயினும், அவன் வரும் வழி, ஏதம் நிறைந்தது என்பதை அறிந்தவளாதலின், அவன் வாரா மையால், தன் நுதல் பசப்பூரவும், தோள் மெலியவும் தான் வருந்தினும் வருந்துக! அவன் அவ்வழி வாராதிருத்

தலையே வேண்டுகின்றேன் எனக் கூறும் மனைவியையும், ஆள் வினைக்கு அகறல் ஆடவர் கடன் என அறிந்த அறிவுடையனாய அவன், தன் பிரிவால் வருந்தி வாடிக் கவினிழக்கும் தன் மனைவியின் துயர்நிலை கண்டு, "அந்தோ! யான் பிரியின், நேற்றுவரை அவள்பால் இருந்து அணி செய்த அவள் மாமைக்கவின், இன்றோடு அழிந்ததுகொல்!" எனக்கூறி அழும் கணவனையும், நம்முன் காட்டி நல்லறிவூட்டும் அவர் பாக்களைப் படித்துப் பயன்பெறுவோமாக.

"நன்னுதல் பசப்பினும், பெருந்தோள் நெகிழினும்
வாரற்க தில்ல தோழி!
குன்ற நாடன் இரவி னானே,"

(நற் : கடுக)

"ஆள்வினைக்கு அகறி யாயின், இன்றொடு
போயின்று கொல்லோ தானே! படப்பைக்
கொடுமுள் ஈங்கை நெடுமா அந்தளிர்
நீர்மலி கதழ்பெயல் தலைஇய
ஆய்நிறம் புரையும் இவள் மாமைக் கவினே."

(நற் : உ0டு)

ஊர்க்குருவியின் உடைந்த முட்டை போன்றது புன்னையின் மலர்ந்த அரும்பு, என்ற உவமையும், காக்கைகள் பல கூடி மாலைக்காலத்தே கடல்நீரில் படிந்தாடும் என்ற இயற்கை அறிவும், வானத்தே விளங்கும், வடமுனையைச் சுற்றி வரும் ஏழு மீன்களும் மக்களால் வணங்கத் தகும் மாண்புடையன எனக் கூறும் கடவுட் கொள்கையும் புலவர் தம் உள்ளமும், உணர்வும் உணரத் துணை புரிவனவாம் :

"உள்ளூர்க் குரீஇக் கருவுடைத் தன்ன
பெரும்போ தவிழ்ந்த கருந்தாட் புன்னை."

'மையற விளங்கிய மணிநிற விசும்பில்
கைதொழு மரபின் எழுமீன் போலப்
பெருங்கடல் பரப்பின் இரும்புறம் தோயச்
சிறுவெண் காக்கை பலவுடன் ஆடும்
துறை."

(நற் : உஙக)

## உ0. இளம்பால் ஆசிரியன் சேந்தன் கூத்தனூர்

இளம்பால் என்ற ஊரில் ஆசிரியத் தொழில் பூண்டு வாழ்ந்த சேந்தனூர்க்கு மகனாய்ப் பிறந்து, மதுரை போந்து, மாண்பு மிகு புலவராய் விளங்கியவர் நம்புலவர்; இவர் இயற்பெயர் கூத்தனூர் என்பது; தில்லை மன்றுள் உறையும் பெருமான் கூத்தன் எனப்படுவான்; அவன் பெயரைத் தம் பெயராக மேற்கொண்டார் பலராவர். அவருள் இவரும் ஒருவர். இவர் நற்றிணையில் ஒன்றும், அகத்தில் இரண்டும் ஆக மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்; அம் மூன்றும் குறிஞ்சித்திணை தழுவி வந்தனவே.

தேனோ என மயங்குமளவு நிறைந்த சுவையுள்ள மாங்கனி கோடையில் பழுக்கும் எனவும், அம் மாங்கனியி னின்றும் பிழிந்தெடுத்த சாறு, அம் மாங்கனி பழுக்கும் காலத்தே பழுக்கும் தீஞ்சுவைப் பலாச் சுளையினின்றும் பிழிந்து கொண்ட சாறு, தேன் ஆய இம்மூன்றையும் ஒன்றுகலந்த, கலவையினைப், பாம்பு கடிக்க அதன் நஞ் சேறப் பெற்றவர் தம் அறிவு மயங்குமாறுபோல் மயக்கம் தருமாறு, மூங்கிற் குழாயிலிட்டுப் பலநாள் மூதிர வைத்து எடுத்து, வரையுறை தெய்வத்திற்குப் படைத்து, பக்கத்தே நின்று மனைவிமார் உண்பிக்க உண்ட குறவர், தம் தினைப் புனங்களை யானைகள் தின்று அழிப்பதையும் அறியாது மயங்கிக் கிடப்பர் எனவும் கூறும் அவர் செய்யுள்நயம், மதுவுண்டு அறியாரும், அம்மது கிடைத் தால் உண்டு பார்க்கலாமே என்று எண்ணுமாறு தூண்டத் துணைபுரியும் இயல்பினதாமன்றோ?

"தேன்தேர் சுவைய திரளரை மாஅத்துக்
கோடைக்கு ஊழ்த்த கமழ்நறும் தீங்கனி
பயிர்ப்புறு பலவின் எதிர்ச்சுளை அளைஇ
இருலொடு கலந்த வண்டுமூசு அரியல்
நெடுங்கண் ஆடமைப் பழுநிக், கடுந்திறல்
பாப்புக் கடுப்பன்ன தோப்பி, வான்கோட்டுக்
கடவுள் ஓங்குவரைக்கு ஓக்கிக் குறவர்
முறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி
அடுக்கல் ஏனல் இரும்புனம் மறந்துழி
யானை வவ்வின தினை."

(அகம் : ௩௪௮

இசை, இரும்புநிகர் நெஞ்சுடையாரையும், இரக்க உள்ளத்தவராக்கும் என்று கூறுப. இசைக்கு உருகாத உயிரே உலகத்தில் இல்லை; ஆறறிவு கொண்ட மக்களே அல்லாமல், புல்லும், மரமும் கூட இசைக்கு உருகும்; தமிழ்முனிவன் யாழ் இசைக்குக் கல்லும் உருகிற்று எனக் கதை கூறுவர். சீறிஎழும் பாம்பும், இசைகேட்டவழிச் சினம் ஒழிந்து ஆடும்; இசை கேட்ட வழி ஆறலை கள்வர் கைப்படைகளும் தாமே நழுவும். இசையின் சிறப்புக்குறித்துத் தமிழ் நூல்கள் அறிவிப்பன இவை; விலங்குகளில் இசைக்கு எளிதில் வயமாகும் விலங்கு யானை; இசைக்கு உருகிய யானை ஒன்றின் இயல்பினைப் புலவர் கூத்தனார் நன்கு எடுத்துக் கூறியுள்ளார்.

ஒரு தினைப்புனம்; அப்புனத்தைக் காப்பார் இருத்தற் பொருட்டு அமைந்த மிக உயர்ந்த பரண்; புனம் காவல் கருதிவந்த கானவன், கள்ளுண்ட மயக்கத்தால் பரண்மீதே கண்ணயர்ந்துவிட்டான்; அவன் அசைவு அறிந்து வந்தது ஆங்கோர் ஆண் யானை; தன் பசிபோக வேண்டும் மட்டும் தினையுண்ணத் தொடங்கிற்று; அந்நிலையில், அக்கானவன் மனைவி, தன் கூந்தல் காற்றில் புலருமாறு, அதனுள் தன் கைவிரல் விட்டுக் கோதிக்கொண்டே குறிஞ்சிப் பண்ணை வாய்விட்டுப் பாடலாயினள்; அப் பண் வந்து புகுந்தது அவ் யானையின் காதினுள்; உடனே யானை, தன் அறிவு மயங்கிற்று; பசியை மறந்தது; தினை உண்பதை ஒழிந்தது; பசியால் உறக்கங்கொள்ளாத யானை ஆண்டே பெருந்துயில் மேற்கொண்டு விட்டது.

"ஒங்குதினைப் பெரும் புனத்துக்
கழுதில் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென,
உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்பு
ஐதுவரல் அசைவளி ஆற்றக், கைபெயரா
ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலும் கொள்ளாது, நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற்று ஓய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும்." (அகம் : ௧0௨)

## உக. இளம்பூதனர்

தமிழர் தம்மக்கட்கு இட்டு வழங்கிய தெய்வப் பெயர்களுள் பூதன் என்பதும் ஒன்று; பூதன், இளம்பூதன், பெரும் பூதன் என்ற பெயர்களை அவர்கள் பயில மேற்கொண்டிருந்தனர். இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

பெண்டிற்குத் தாயினும் சிறந்தது நாண், உயிரினும் சிறந்தது நாண் என்றெல்லாம் கூறுவர்; அதனல், "நாணல் உயிரைத் துறப்பர்; உயிர்ப்பொருட்டால் நாண்துறவார் நாண் ஆள்பவர்" என்ருர் திருவள்ளுவர்; மகளிர்க்கு, நாணினும் செயிர்தீர் கற்பே சிறந்ததாம் ஆதலின், அவர் தம் கற்பினைக் காத்தற் பொருட்டு நாணல்லன செய்து நாணைத்துறக்கவும் துணிவர்; நாணைத்துறந்தும் கற்பு நிலையாதாயின், தம் கற்பினைக் காத்தற்பொருட்டு உயிரையும் துறப்பர். தலைவன் ஒருவன் வரையாது ஒழுகுவதால், ஊரார் கூறும் அலர் உரையால் தன் நாணை இழந்தும், தன் கற்பினைக் காத்தற் பொருட்டு உயிர்வைத்திருந்தாள் ஒரு தலைவி; அந்நிலையிலும் அவளை வரைந்துகொள்ளாது, பொருள் தேடிப் புறநாடு செல்ல எண்ணினன் அவன்: அதைத் தோழி அவளுக்கு அறிவித்தாள்; அதற்கு அவள், "அவர் வரையாது காலங்கடப்பதால், என்பால் உள்ள, நலன், நாண் எல்லாம் ஒழிய, உயிர் ஒன்றே எஞ்சியுளது; அவர் வரைய வருவார் என்ற எண்ணத்தால், நாணை இழந்தும் உயிர்கொண்டு வாழ்கிறேன்; இந்நிலையில் அவர் பிரிந்துசெல்லக் கருதுகிருர் எனின், நம்மால் இழக்கக் கூடியது வேறென்றும் இல்லை; உயிர் ஒன்றே உளது; அதை இழப்பதல்லது நாம் வேறு யாதுசெய்ய வல்லோம்" எனக் கூறி வருந்தினள் எனப் பாடிய பாட்டில் புலவர் உள்ளத்தைக் காண்க!

"விரிநீர்ச் சேர்ப்பன் நீப்பின், ஒருநம்
இன்உயி ரல்லது பிறிதொன் று
எவனே தோழி! நாம்இழப் பதுவே?" (குறுந் : ௩௩௪.)

## ௨௨. இளம்போதியார்

போதியார் என்ற பெயர் உடைமையால், இவர் புத்த சமயத்தைச் சார்ந்தவர் என்பது புலனும். புத்தரும், சமணரும் தமிழ்மொழிக்குச் செய்த தொண்டு மிக மிகப் பெரிதாம்; புத்தர்கள், எப்போதும் பொருள் நிறைந்த அறிவுரை பல அளிக்கும் இயல்பினராவர் என்பதற்கேற்ப, இவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்த நற்றிணைப் பாட்டு ஒன்றிலேயே பல அரிய கருத்துரைகளை வழங்கியுள்ளார்.

ஓர் ஆண்மகன், உருவானும், திருவானும் உயர்ந்தாளொருத்தியைக் காதலித்தான்; காதல் மிகுதியால் அவளை இடைவிடாது சுற்றித் திரிந்தான்; அந்நிலையில், அவள் தாய் அறிந்தால் ஏதம் உண்டாம் என அஞ்சினானும் அல்லன்; இவ்வொழுக்கம் சில நாள் சென்றது; பின்னர் அவன் அவள்பால் வருவது குறைந்தது; தொடக்கத்தில் தாய்க்கும் அஞ்சா அவன், இப்போதெல்லாம், அவளோடு ஆடும், ஆயத்தாரைக் காணவும் அஞ்சி அகறலாயினான்; அவன்பால் கண்ட இவ்வியல்பினை உணர்ந்தாள் அப்பெண்ணின் உயிர்த் தோழி; இதனால், அவனுக்கு, அவள்பால் உண்டான அன்பு குறைந்துவிட்டது போலும் எனக் கொண்டாள்; இதை அப்பெண் அறியின் வருந்துவளே என்ற எண்ணத்தால் சில நாள்வரை அவளுக்கு அறிவிக்காமலே மறைத்து வந்தாள்; நிலைமை மேலும் கெடும் போல் தோன்றிற்று; இனியும் அவட்கு மறைத்தல் அறிவுடைமை ஆகாது; அவளிடம் கூறி, அவளோடு உசாவி, இதற்கொரு வழிசெய்தல் வேண்டும் எனத் துணிந்தாள்; உடனே அவளிடம் ஒன்று விடாமல் உரைத்தாள்; உரைத்துவிட்டு, "ஓருயிரும் ஈருடலும் போலும் குற்றமற்ற நட்புடைய நினக்கு இதை, இத்துணைகாறும் உரையாது இருந்தமை என் உள்ளத்தை மிகவும் வருத்துகிறது; அதனினும், பெருங்குணம் உடையவர்; பேரன்புடையவர் என்றெல்லாம் கருதிய நம் தலைவன், பேணிக்

காக்கவேண்டுவனவற்றைப் பேணிக் காக்கும் இயல்புடையராய பெரியார்களின் பண்புடையனுவன் என எண்ணிய எண்ணத்திற்கு மாருக, விரும்பிக் காக்கவேண்டிய நின்னை விரும்பாது ஒழுகுதல் எனக்கே வெட்கமுண்டாகிறது; இதற்கு என்செய்வது?'' என்று வினவி நின்ருள். இவ்வாறு, வரையாது வந்தொழுகும் அவ் ஆண்மகன், தங்கள் வீட்டிற்குப் புறத்தே தாம் கூறுவனவற்றைக் கேட்கக் கூடிய அணித்தாயவிடத்தே வந்து நின்றபோது கூறினுள். கேட்ட அவன் தலைவியின் துயர்நிலை அறிந்து விரைந்து வந்து வரைந்து கொள்வானுக என்ற வேட்கையால் எனப் பாடியுள்ளார்; இதில், பெரியோராவார், போற்றிக் காக்க வேண்டிய பொருளைப் போற்றிக் காக்கக் கடமைப்பட்டவர்; அக்கடமையிற் றவறுவார் பெரியராகார்; எனவும், ஒருவரோடு நட்பு மேற்கொள்ளுங்கால், ஒருயிரும் ஈருடலும் போலும் உளம் ஒன்றிய நட்புக்கொளல் வேண்டும்; அவ்வாறு கொண்ட நட்பினருள் ஒருவருக்குற்றன மற்றவர்க்குற்றன ஆம் ஆதலின், ஒருவர் அறிந்ததை மற்றவர்க்கு மறைத்தல் மாண்புடைமையன்று எனவும் கூறிய பொருளுரைகளைப் பொன்னினும் போற்றுவோமாக!

"பேணுப பேணூர் பெரியோர், என்பது
நாணுத்தக் கன்றது காணுங் காலை;
உயிரோர் அன்ன செயிர்தீர் நட்பின்
நினக்குயான் மறைத்தல் யாவது, மிகப்பெரிது
அழிதக் கன்ருல் தானே; கொண்கன்
யான் யாய் அஞ்சுவல் எனினும் தானே
பிரிதல் சூழான் மன்னே; இனியே
கானல் ஆயம் அறியினும், ஆனுது
அலர்வ தன்றுகொல் என்னும்; அதனுல்
புலர்வது கொல்அவன் நட்பு? எனு
அஞ்சுவல் தோழி! என் நெஞ்சத் தானே."

(நற்றிணை : எ௨)

எத்துணை அரிய கருத்துக்கள்! எவ்வளவு எளிதாக எடுத்துக் கூறியுள்ளார்! என்னே அவர் புலமை!

## உரு. இளவெயினனார்

வேட்டுவர், எயினன் எனும் பெயருடையராதல் பெரு வழக்காம் ஆதலின், இவர், அவ்வேட்டுவர் வழிவந்தவராவர் என்று அறிக. பரிபாடற் புலவர் வரிசையுள், கடுவன் இளவெயினனன் என்பார் ஒருவரும் இடம்பெற்றுள்ளனர்; அவர் வேறு; இவர் வேறு. நற்றிணைக்கண் காணப்படும் செய்யுள் ஒன்றே, இவர் பாட்டாக இப்போது கிடைத்துளது.

தலைவன் விரைந்து வந்து வரைந்து கொள்ளாமையால், பெரிதும் வருந்தினாள் தலைவி; பிறைபோலும் பெருவனப்புடைய அவள் நுதலும் அழகிழந்துவிட்டது; அவள் உடல் மெலிந்துவிட்டமையால், அவள் கைவளைகளும் கழன்று விழலாயின; அவள்பால் உண்டான இம்மாறுதல்களை உணர்ந்த ஊராரும் அவளைப், பலர் அறியப், பழிகூறலாயினர்; இந்நிலையிலும், அவள் தன் துயரைத் தலைவன் பால் வாய்விட்டுக் கூறினாளல்லள்; கூறுதல் மகளிர்க்கு முறையன்று என, நாணம் அவளை முன்னின்று தடுத்துவிட்டது. ஆனால், அவள் கண்கள் மட்டும், அவள் கட்டிற்கு அடங்காது, கண்ணீர் சொரிந்து, அவள் உள்ளத்துஉறு துயரை அவனுக்கு உணர்த்தத் தொடங்கிவிட்டது. இதைக்கூறி, அவள் பெண்மை நலத்தைப் பாராட்டினாள் அவள் தோழி. அவளைப் பாராட்டிய தோழி, அவள் அவ்வாறு வருந்தவும், அவளை மணந்து, அவள் துயர் போக்க எண்ணாது வாளா வந்து போகும் அத்தலைமகனைப் பழிக்கவும் செய்தனள்; பழிப்பாள், அவன்முன் சென்று அவன் தவற்றினைத் தெளிய எடுத்துக் கூறித் திருத்துதல், தனக்கு மரபன்று என்று கருதி, அவன் ஒருநாள் தங்கள் மனையருகே வந்திருந்த காலம் அறிந்து, அவன் கேட்குமாறு, அவளைப் பாராட்டும் பாராட்டிற்கிடையே, அவன், இரைவேண்டிய பெண்நாரை, கடுஞ்சூல் கொண்டிருந்தமையால், பறந்துசென்று பெறமாட்டாது வருந்தியிருந்ததாக, ஆண் நாரை, அது விரும்புமாறு, கடற்கரை புக்குக்

கடல்மீன் கொணர்ந்து கொடுத்து மகிழ்விக்கும் அழகிய நாட்டிற்குரியவன் என, அவனைப் பாராட்டுவாள்போல் தன்னாட்டுப் பறவை, தன் மனைவியின் துயர் போக்கி வாழ்தலைக் கண்டும், இவன் அவ்வறிவினைத் தான் கொள்ளாதது ஏனோ? எனப் பழித்துரைத்தாள்.

பெண் நாரை கழனியிலே கிடக்க, ஆண் நாரை, கடற்கரைக்கண் மீன்தேடி உழல்வதால், ஆண்டும் அவை பிரிந்தே வாழ்கின்றன எனினும், அப்பிரிவு, தன் பசிபோக்கப் பயன் உறுதல் அறிந்த பெண்நாரை, அப்பிரிவினை விரும்பி ஏற்றுக் கொள்ளும்; அதைப் போலவே, தலைவன் பிரிந்துறைதலை இன்று பொறுத தலைவி, அவன், என்றுமே தன்னைப்பிரியாதிருத்தல் வேண்டும் என விரும்புவாளல்லள், தன்னை மணந்து, தன் இல்லறம் இனிது நடத்தற்காம் பொருள் வேண்டிப் பிரியின், அப்பிரிவு, தன் இல்லற வாழ்விற்கு இன்றியமையாததாதல் அறிந்து, அதை விரும்பி ஏற்று, ஆற்றியிருப்பள் என்றும் அறிவித்தாள்.

அறம் உரைத்து அறிவூட்டும் தோழியின் கூற்றினைப் பாட்டில் அமைத்துப் பாடித் தம் புலமையினைக் காட்டிப் புகழ் பெற்றுள்ளார் புலவர்.

'பிறைவனப்பு இழந்த நுதலும், யாழநின்
இறைவரை நில்லா வளையும், மறையாது
ஊரலர் தூற்றும் கௌவையும் நாணிட்டு
உரைஅவற்கு உரையா மாயினும், இரைவேட்டுக்
கடுஞ்சூல் வயவொடு கானல் எய்தாது
கழனி ஒழிந்த கொடுவாய்ப் பேடைக்கு
முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும்
மெல்லம் புலம்பற் கண்டுநிலை செல்லாக்
கரப்பவும் கரப்பவும் கைமிக்கு
உரைத்த தோழி உண்கண் நீரே.'' (நற் உசுரு)

## உச. இறையனார்

இறையனார் என ஈண்டுக் கூறப்படுவார், மதுரையில் கோயில்கொண்டிருக்கும் சோமசுந்தரப் பெருமானவர்; தன்னால் காதலிக்கப்பட்டாளொருத்தியின் நட்பின் சிறப்பு மயில்போன்ற சாயல், நெருங்கிய பற்கள், மணநாறும் கூந்தல் இவற்றைப் பாராட்டியதாகப் பாடப்பெற்றுள்ள பாட்டு ஒன்று, இவர் பாட்டாகக் குறுந்தொகைக்கண் இடம்பெற்றுளது; அதில் தலைவியின் தலைமயிர் நாறும் நாற்றத்தினும், நறுமணம் மிக்க மலர் உண்டோ என்பதை ஆராய விரும்பிய அத்தலைமகன், "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற அறிவுடையனாய், மலர்கள்தோறும் சென்று சென்று தேன் குடித்துத் திரியும் வாழ்வுடைமையால், பல்வேறு மலர்களின் மணத்தின் இயல்பறியும் இயல்பினதாய வண்டின்பால் தன் ஐயத்தைத் தெரிவித்தான் எனவும், ஒரு பொருளை ஆராயுங்கால், அப் பொருள்பால் வெறுப்புண்டாயின், அப்பொருளின் சிறப்புத் தோன்றாது, அதன்பால் விருப்புண்டாயின் அதன் குறை தோன்றாது ஆதலின், காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்தல் வேண்டும் என்பதை அறிந்தவன் ஆதலின், தன் நாட்டு வண்டு தன்பால் அன்புகொண்டிருத்தலும் கூடும்; அவ்வன்புடைமையால், தனக்கு வேண்டியவாறே கூறிவிடுதலும் கூடும் என அஞ்சி, என்பால் உள்ள அன்பால் கூறாது; அறிந்ததை அறிந்தவாறே கூறுக எனக் கூறினான் எனவும் பாடிய புலமை போற்றற்குரியதாமன்றோ?

> "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
> காமம் செப்பாது கண்டது மொழிமோ;
> பயிலியது கெழீஇய நட்பின், மயில்இயல்,
> செறிஎயிற்று அரிவை கூந்தலின்
> நறியவும் உளவோ நீஅறியும் பூவே." (குறுந் : உ)

இனி, இச் செய்யுள்பற்றிக் கூறும் வரலாற்றினை விளக்குவோமாக!

மதுரைச் சங்க மண்டபத்தே அமர்ந்து, நக்கீரர் முதலாம் புலவர்கள் நாற்பத்தெண்மரும், தமிழ் அறிந்து வருவாராயினர். மதுரையில், வங்கிய சூடாமணி எனும் பாண்டியன் அரசோச்சி வரலாயினன்; இளவேனிற் காலம் வந்துற்றது; பாண்டியன், தன் மனைவியோடும் மலர்வனம் புகுந்து ஆண்டுள்ளதொரு செய்குன்றின்மேல் இருந்து இயற்கையின் எழில் கண்டு மகிழ்ந்திருந்தான்; அக்காலை, தென்றல் பண்டுபோல் கமழாது புதுமணம் கமழ்தலை உணர்ந்தான்; என்றும் இல்லா இம்மணம், தென்றற்கு இன்று எவ்வாறு கிடைத்தது; இம்மணம் தரும் பொருள் யாது? என்று எண்ணி எண்ணிப் பார்ப்பானுயினன்; உற்று நோக்கி வருவான், அதே நறுமணம் தன் மனைவியின் கூந்தலினின்றும் வருவதை உணர்ந்தான். அறிதோறறியாமை கண்டலேபோல், தன் மனைவியின் கருநெறிக் கூந்தலினின்றும் கமழ்கிறது எனின், இம்மணம், இவள் கூந்தற்கு இயல்பாயமைந்ததோ, அன்றி, மலரும் மணமுடைப் பொருளும் பெற்றுச் செயற்கையானமைந்ததோ என ஐயுறலாயினன்; ஐயத்தைத் தன் அறிவால் தெளிந்து கொள்ளமாட்டா வங்கிய சூடாமணி, "என் உளத்துள தாய இவ் ஐயத்தை அறிந்துபாட வல்லார் பெறுக இவ் ஆயிரம் பொன்" என அறிவித்துப் பொன்முடி ஒன்றைச் சங்க மணிமண்டபத்தே தூக்கினுன்; புலவர்கள் அரசன் ஐயம் யாதாம் என எண்ணி எண்ணிப் பார்த்தும், அஃது அறியமாட்டாராயினர்.

இஃது இவ்வாருக, ஆதிசைவ மரபில் தோன்றி, இளம் பருவத்திலேயே இருமுதுகுரவரையும் இழந்து, பிரமசரியம் மேற்கொண்ட தருமி என்னும் அந்தணச் சிறுவன் ஒருவன், ஆலவாய்ப் பெருமான் அடிமுன் வீழ்ந்து, "எந்தையே! அடியேன், தந்தைதாய் அற்றவன்; எவர் துணையும் இன்றி இன்றுவரை துயர்வாழ்வுடையேன்; அதனுல், மணம் செய்துகொள்ளும் மனம் உடையேன்; நல்லாள் ஒருத்தியொடு இல்லறம் மேற்கொள்ளா எனக்கு நின் மலரடி அருச்சிக்கும் மாண்பு வாராதன்றே? எல்லாம்

அறிந்தவன் நீ; எனக்குத் தந்தையும் நீ; தாயும் நீ; என் மனத்துயர் மாற்றுவதற்கு ஏற்றதொரு சமயம் இது; அரசன் உள்ளக் கருத்தினைத் தெள்ளிதின் உணர்த்தும் செய்யுளொன்று தருக'' என இருகை கூப்பி இரந்து வேண்டினன்.

தருமியின் வேண்டுகோட்கிரங்கிய தம்பிரான், "கொங்குதேர் வாழ்க்கை" என்ற இச்செய்யுளை இயற்றித் தந்தருளினன். பெற்ற தருமி பெருமகிழ்வுற்று அதனைக் கொண்டுபோய்ப் புலவர்களிடத்தே கொடுத்தனன்; புலவர்கள், பாட்டு, சொல்வளமும், பொருள்வளமும் செறியத் தோன்றும் பொலிவினைக் கண்டு "நன்று நன்று!" என வியந்து பாராட்டினர்; மன்னன் தன் சிந்தையுறு ஐயம் அறிந்துபாடப் பெற்றுள்ளமை அறிந்து உவந்தான்; "தருமி கிழி பெறுக!" எனப் பணித்தான்; தருமி, சங்க மண்டபம் புகுந்து கிழி அறுக்கத் துணிந்தான்; ஆனால், அந்தோ! அங்கிலையில் ஆண்டுப் போந்த நக்கீரர், "பாட்டு, பிழையுடைத்து! பொற்கிழி தீண்டற்க!" எனக் கூறிப் போக்கினர்.

வேதியன் வருந்தினான்; கோயிலுட் புகுந்து இறைவன் முன் நடந்தன கூறி முறையிட்டான்; உடனே கோயிற்குடி கொண்ட பெருமான் ஒரு புலவனாய்த் தோன்றி வெளிப்பட்டுச் சங்கத்தை அடைந்து "என் பாட்டில் பிழை கண்டவன் யாவன்?" என வினவி நின்றார். நக்கீரர் "குற்றம் கண்டவன் யானே" என்றார்; இறைவன் "கூறிய குற்றம் யாது?" என்று வினவ, "செய்யுள் சொற்குற்றம் உடைத்தன்று; பொருட்குற்றம் உடைத்து; கூந்தல் மணம் பெறுவது மலர்களால்; இயற்கை மணம் அற்றது; அற்றாக, 'அரிவை கூந்தலின் நறியவும் உளவோ?' என்ற இப் பாட்டு கூந்தற்கு மணம் இயற்கை என இயம்புகிறது; இதுவே குற்றம்" என்றார். இறைவன், "பத்தினிப்பெண்டிர் கூந்தற்கும், மணம் செயற்கையால் உண்டாவது தானே?" என நக்கீரர் "ஆம்" என்றார்; "அரமகளிர் கூந்தலும் அற்றோ?" என, நக்கீரர் "அதுவும் அற்றே" என்றார்; இறுதி

யாக "நின்வழிபடு கடவுளாம் காளத்திநாதன் பாகத்தமர் ஞானப்பூங்கோதையார் கூந்தலும் அன்னதோ?" என, நக்கீரர், அஞ்சாது "ஆம்" என்றார். உடனே சிவனார் சினந்தார்; நெற்றிக்கண் திறந்தார்; நுதல் விழியின் வெம்மை யாற்றாது நக்கீரர், பொற்றாமரைக் குளத்தே வீழ்ந்தார். பின்னர்ப் புலவர்கள் வேண்ட இறைவன் அருள் உளம் கொண்டு கைகொடுத்து நக்கீரரைக் கரைசேர்த்தார். இது, அப்பாடல் பற்றிய கதை.

"எல்லாம் வல்ல இறைவன் யாம்; யாம் எது வேண்டுமாயினும் செய்யவல்லேம்; எப்படி வேண்டுமாயினும் பாடலாம்" என்ற எண்ணங்கோடல் இயலாது; தமிழில் பாட்டொன்று புனைய அவன் விரும்புவனாயின், அவன், அத்தமிழிலக்கண நெறிநின்றே பாடுதல் வேண்டும்; அவன் பாடிய பாட்டு அவ்விலக்கணத்தின் வேறுபடின், அவன் இறைவன்; ஆகவே அவன்பாட்டு எப்படி யிருப்பினும் ஏற்றுக்கொள்க எனக் கூறார் தமிழ்அறிந்தார்; பிழையுடைய பாட்டு, இறைவனுடையதேயாயினும், அப்பாட்டுக் "குற்றம் குற்றமே" எனக் கூசாது கூறும் அத்துணைச் சிறப்புடைத்து நம் தமிழ்மொழி! வாழ்க அதன் வளம்! வாழ்க அதன் வரம்பாம் இலக்கணப் பெருவழி!

## உரு. இனிசந்த நாகனர்

நாகனர் என்ற இயற்பெயருடைய இவர், இனிய குரல்கொண்டு பாடவல்லராதல்பற்றி, இனிசந்த நாகனர் என அழைக்கப்பெற்றுளளார்; இனிய சந்தம், இனிசந்தம் எனக் குறைந்து வந்துளது; இவர் பாடிய பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுளது.

தான் விரும்பிய காதலனுக்குத் தன்னை மணம் செய்து தர மறுக்கின்றனர் என்பதறிந்த தலைமகள் ஒருத்தி, தமர் அறியாவண்ணம், தன் தலைவனோடுகூடி அவனூர் சென்றுவிட்டாள்; தன் மகளின் போக்கினைக் கண்டாள் தாய்; மகளிர் மனம் விரும்பும், மாண்புடையாரை மணந்து வாழ்தலே மதிக்கத்தக்க செயலாம்; தன் மகளும் அதையே செய்துள்ளாள் ஆதலின், அவள் அறநெறியே மேற்கொண் டுள்ளாள் என்று எண்ணினள்; உள்ளத்திற்கு ஓர் அளவு ஆறுதல் உண்டாயிற்று; அறநெறி நின்றாளாயினும், அவள் இளமைப் பருவம் மாறாதவள்; அரிய காட்டு வழியினைக் கடந்து செல்லும் ஆற்றல் இல்லாதவள் என்ற எண்ணம் எழத் துயர் உற்றாள்; துயர்உற்றாள் கண்முன் மகளின் இளமைக்கால நிகழ்ச்சிகள் நிரலே தோன்ற லாயின; தான் அணிந்த மாலை சிக்குணக் காணினும், கைவளை கழலக்காணினும் மேகலை முறைமாறிக்கிடக்கக் காணினும், அவற்றைத் திருத்திக்கோடற்கு அறியாளாய்த் தன் அழகு கெட்டது அறிந்து அழுது வாடும் அவள் கண்கள், சென்ற வழியின் கொடுமையால் சிவந்து சிதைவுற்றனவோ? என்று எண்ணிஎண்ணி ஏங்கி நின்றாள். என்னே அத்தாயின் அன்பு!

"நயந்த காதலற் புணர்ந்தன ளாயினும்,
சிவந்தொளி மழுங்கி அமர்த்தன கொல்லோ?
கோதை மயங்கினும், குறுந்தொடி நெகிழினும்,
காழ்பெய் அல்குல் காசுமுறை திரியினும்
மாண்நலம் கையறக் கலுழும் என்
மாயக் குறுமகள் மலர்ஏர் கண்ணே." (நற் : சுசு.)

## உசு. ஈழத்துப்பூதன் தேவனுர்

ஈழம், மிகப்பழைய காலத்திருந்தே தமிழ்நாட்டின் ஒரு பகுதி போன்ற ஒற்றுமை கொண்டிருந்தமையால், தமிழகத்தார் ஈழம் சென்று குடி புகுதலும், ஈழத்தார் ஈண்டு வந்து வாழ்தலும் அக்காலத்திலிருந்தே நிகழ்ந்து வந்தன; அவ்வாறு ஈழத்தினின்றும் மதுரையிற் குடி புகுந்தாருள் பூதன் என்பாரும் ஒருவர். அவருடைய மகன் தேவனுர். ஏடெழுதுவோர் பிழையால், இவர் பெயர் ஏறத்துப்பூதன் தேவனுர் எனவும் வழங்கப்பெறும்.

மதுரையில் வாழ்ந்த இவர், அம்மதுரையைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட பாண்டியன் ஒருவனைப் பாராட்டுகிருர்; அவனைப் பாராட்டியதோடு அவன் தலைநகரையும் பாராட்டுகிருர்; தன்மேல் பகைத்து வந்த பகைவரை வென்றவன்; அவ்வாறு வென்றமையால் பெற்ற அழியாப் புகழ் உடையவன்; வெண்கொற்றக் கொடையுடையவன்; பசும்பூண் பாண்டியன் என்னும் பெயர் உடையவன்; பாண்டியனுக்கு உரிமை உடையது மதுரை; புலவர் பாடும் பெருமையும் சிறப்பும் உடையது. கூடல் எனவும் பெயர் பெறும் அம்மதுரை. இது அவர் கூறும் புகழுரைகள்:

"பொருவர்
செல்சமம் கடந்த செல்லா நல்லிசை
விசும்பிவர் வெண்குடைப் பசும்பூண் பாடியன்
பாடுபெறு சிறப்பின் கூடல்." (அகம்: உ௩௧)

ஓர் ஊரிற்கோ, அல்லது ஒரு நாட்டிற்கோ தலைமை மேற்கொள்வார், அவ்வூருக்கும், அந்நாட்டிற்கும் கேடு சூழும் பகைவரைப் பாழாக்கவும், தம் ஊரிற்கும், தம் நாட்டிற்கும் உறவுடையராய் வாழும் அடுத்த ஊரார்க்கும், அண்டை நாட்டார்க்கும் பகைவரால் உண்டாம் துயரினைப் போக்கித் துணைபுரியவும் சிறிதும் தயங்குதல் கூடாது; இப்பண்பு தலைவராவார்களிடத்தே நின்று நிலைபெறுதல் வேண்டும்; அப்பண்பு அவர்பால் இன்றேல், அவர் தலைவ

ஏதற்குத் தகுதியிலராவர்; அவர், அப்பண்பு தம்பால் நீங்காது நிற்க வேண்டுவரேல், ஒரு சிறிது நேரமும் ஓயாது உழைத்தல்வேண்டும்: அவ்வாறின்றி உறங்கிக் கிடப்பார் பால் அப்பண்பு நில்லாது நீங்கும்; ஆதலின், நாணமும், நற்புகழும் வேண்டுவார், நாள்தோறும் உழைத்து உயர் வடைய எண்ணும் எண்ணமுடையராதல் வேண்டும்; நாடாள் தலைவர்பால் இருக்கவேண்டிய இப்பண்புகளைப் புலவர் ஈழத்துப்பூதன் தேவனார் நன்கு எடுத்துக் காட்டு கிறார்:

"செறுவோர் செம்மல் வாட்டலும், சேர்ந்தோர்க்
குறுமிடத் துய்க்கும் உதவி ஆண்மையும்,
இல்லிருந்து அமைவோர்க் கில்லென் றெண்ணி
நல்லிசை வலித்த நாணுடை மனத்தர்." (அகம்: ௨௩௧)

தலைவன் பிரியத் தனித்திருந்து, வாடைக் காற்றால் வாடும் தலைமகள் ஒருத்தி, வேல்போல் தோன்றும் கரும் பின் வெள்ளிய அரும்புகள் பூக்குமாறு அவற்றை அசைத் தும், அறிவாற் சிறந்த தூக்கணங்குருவிகள் அரும்பாடு பட்டு அமைத்த கூடுகள், அவை கட்டப்பெற்ற மூங்கி லோடு ஆடுமாறு ஆட்டியும் கொடுமை செய்யும் வாடை என அவ்வாடையின் இயல்பினைக் கூறி, இவ்வாடை வருத் துமே என்ற எண்ணமற்றுப் பிரிந்தார், உண்மையில் அறி வற்றவரே எனக் கூறி வருந்தினாள் எனப் பாடிய பாட்டு படித்து இன்புறற்பாலதாம்.

"கரும்பின்
வேல்போல் வெண்முகை விரியத் தீண்டி
முதுக்குறை குரீஇ முயன்றுசெய் குடம்பை
மூங்கில் அங்கழை தூங்க ஒற்றும்
வடபுல வாடைக்குப் பிரிவோர்
மடவர்; வாழியிவ் வுலகத் தானே." (நற்: ௩௬௬.)

தினையைத் திருடித் தின்னச் செல்லும் பன்றி, பல்லி யின் நற்சொல் கேட்டுச் செல்லும் எனவும், அவ்வாறு செல்லவும், அதன் வருகையறிந்த கானவன் கொள்ளி

காட்டித் துரத்த வறிதே திரும்பும் எனவும், யானையின் கன்னத்தே வடியும் மதநீரைச் சூழ்ந்துதிரியும் வண்டுகளின் பறக்கும் ஒலியினை, யாழ் ஓசையோ என மயங்கிக் காது கொடுத்துக் கேட்கும் அசுணப் பறவை எனவும், பகை வரால் ஊர் பாழாயினமையால், அவ்வூரினின்றும் குடி பெயர்ந்துபோன மக்களோடு, அவ்வூர்ப் பொதியிலில் நின்ற கம்பத்துறை கடவுளும் குடிபெயர்ந்து போய் விடவும், பழகிய பழமையால், அக்கம்பத்தை விட்டுப் பிரியாது உறையும் புறாக்கள் எனவும் புலவர் கூறுவன, புலவர் உயிர்களின் இயல்பினை நுனித்துணரும் அறிவின் ஒட்பத்தை உணர்த்துவனவாதல் காண்க.

"முதைச்சுவல் கலித்த மூரிச் செந்தினை
ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய, பாங்கர்ப்
படுவாய்ப் பல்லிப் பாடுஓர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி வருதிறம் நோக்கிக்
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்கம்."

"யானைக் கவுள்மலிபு இழிதரும் காமர் கடாஅம்
இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்து
இருங்கல் விடரளை அசுணம் ஓர்க்கும்." (அகம் : அஅ)

"கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து
உடனுறை பழமையின் துறத்தல் செல்லாது
இரும்புறாப் பெடையொடு பயிரும்
பெருங்கல் வைப்பு." (அகம் : ௩0எ)

தன்மகள், தலைவன் ஒருவனைக் காதலித்து அவனைப் பெறமாட்டாமையால் வருந்துகிறாள் என்பதை அறிய மாட்டாது, அவள் நோய்க்குக் காரணம் யாதுஎன அறிய வேலனை அழைத்தாள்: அவன் இது அணங்கினால் வந்தது; வெறியாட்டெடுப்பின் தீரும் என்றான்; அவளும் அதற் கானவை மேற்கொண்டாள்; இஃதறிந்தாள் அவள் மகள்; அவளுக்கு ஓர் அச்சம் உண்டாயிற்று; அன்னையின் முயற்சி இது; இந்நிலையில் தலைவன் வந்து அன்புகாட்டிச்

சென்றால், என் நோய் நீங்கும்; தலைவன் வந்ததால் நீங்கிற்று என்பதை அறியாத அன்னை, அது தான் எடுத்த வெறியாட்டெடுப்பால் நீங்கிற்று எனப் பிறழ உணர்வாள்; அதனால், இந்நோய்க்குரிய உண்மைக் காரணத்தை உசாவி அறிந்து நம் மணத்திற்குத் துணைபுரிதல் தடையுறும்; ஆகவே, இந்நோய், தான் எடுக்கும் வெறியாட்டெடுப்பால் நீங்கவில்லை; அதற்கு இஃதன்று காரணம் என்பதை அவள் அறியுமாறு, இந்நோய் நீங்காதிருத்தல் வேண்டும்; அது நீங்காதிருத்தல் வேண்டுமாயின், தலைவன் இன்று வாரா திருத்தல் வேண்டும்; ஆகவே, அவன் வாராமையினை யான் வேண்டுகின்றேன் என வேண்டி நிற்பாளாயினள். தான் விரும்பிய காதலனைத் தாய்தந்தையர் தரத் திருமணம் கொண்டு அன்பு வாழ்க்கை மேற்கொள்ள விரும்பும் ஒரு பெண் உள்ளத்தைப் புலவர் நன்கு திறந்து காட்டியுள்ளார் :

"வெறிஎன உணர்ந்த வேலன், நோய் மருந்து
அறியா னாகுதல் அன்னை காணிய,
அரும்படர் எவ்வம் இன்றுநாம் உழப்பினும்
வாரற்க! தில்ல! தோழி!..............
இலங்குமலை நாடன் இரவி னானே." (குறுந் : ௩௬0)

# உஎ. உருத்திரனார்

சங்ககாலத் தமிழ்மக்கள், மேற்கொண்டு போற்றிய தெய்வப் பெயர்களுள் உருத்திரன் என்பதும் ஒன்று; கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் தந்தை பெயரும் இப் பெயரேயாதல் உணர்க. உருத்திரனார் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது. பாலைநிலத்துக் கொடுமையினையும், அந்நிலத்து வழிச்செல்லும் தலைவனின் பண்பட்ட உள்ளத்தினையும் புலவர் நன்கு பாடியுள்ளார்.

வில்லும் விடுகணையும் கையிற்கொண்டு, உயர்ந்த இடம் தேடி இருந்து, அவ்வழியே பொன்னும் பொருளும் கொண்டு வருவாரை எதிர்நோக்கி நிற்கும் ஆறலைகள்வர், தாம் உற்ற நீர்வேட்கையினைத் தணிக்கும் தண்ணீரைப் பெறமாட்டாமையான், மரப்பட்டைகளை மென்று தம்நீர் வேட்கையினைப் போக்கிக்கொள்ளும் கொடுமையுடைய பாலைநிலமும், தம் மனைவியரின் மாண்பினை மனதில் எண்ணி, எண்ணி மகிழ்ந்து செல்வார்க்கு இனிமையுடையதாகத் தோன்றும் என்று கூறினான் ஒரு தலைமகன் எனப் பாடியுள்ள அவர் பாட்டினைப் படித்து இன்புறுக :

"விடுகணை வில்லொடு பற்றிக், கோடுஇவர்பு
வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவர்
நீர்நசை வேட்கையின் நார்மென்று தணியும்
இன்னாக் கானமும் இனிய." (குறுந் : உஎச)

# உஅ. உலோச்சனார்

இவர் இயற்பெயர் உலோச்சனார்; இப்பெயர், உலோச்சனார் எனவும் காணப்படுகிறது; சைனர்கள் மேற்கொள்ளும், சமயச் சடங்குகளுள், 'உலோச்' என்பதும் ஒன்று; ஆதலின் இவரைச் சைனர் எனக் கொள்ளுதற்கும் இடனுண்டு என்ப. இவர், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியாய ஒரு சோழனையும், பொறையாற்றுக்கிழான் பெரியன் என்பானையும் பாடியிருத்தலான், இவர் சோழ மண்டலத்தைச் சேர்ந்தவராவர். நற்றிணைப் பாட்டு ஒன்றில், "கழி சூழ்படப்பைக் காண்டவாயில்.............எம் அழுங்க லூரே" (நற் : ௩அ) எனக் கூறியுள்ளமைகொண்டு, இவர், அவ்வூரில் வாழ்ந்தவராவர் எனக் கோடலுமாம் என்பர் சிலர்; அது, தலைமகள் ஒருத்தி கூறிய கூற்றாக வந்துள்ளதல்லது கவிக்கூற்றாக வந்திலது ஆதலின் அவ்வாறு கோடல் பொருந்தாது; இவர் பாக்கள் எல்லாம் நெய்தற்றிணை குறித்தே பாடப்பட்டுள்ளனவாக இருத்தலான், இவர், சோழமண்டலத்துக் கரைக்கண்ணதோர் ஊரினராவர் எனக் கொள்ளுதல் பொருந்தும். இவர் பாடிய பாக்களாக, நற்றிணையில் இருபது, குறுந்தொகையில் நான்கு, நெடுந்தொகையில் எட்டு, புறநானூற்றில் மூன்று ஆக முப்பத்தைந்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி, கிள்ளிவளவன் ஆய சோழ வேந்தர்களுக்குப் பிற்பட்ட காலத்தே வாழ்ந்தவன்; இராசசூய வேள்வி வேட்டு, இராசசூயம் வேட்ட என்ற சிறப்புற்றவன்; தேர் வண்மலையன் என்பானைத் துணைக்கொண்டு, சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையோடு அரும்போராற்றி வென்றவன்; சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதியும் இவன் நண்பர்கள். ஔவையார், பாண்டரங்கண்ணனார் ஆயபுலவர் பெருமக்களால் பாடப்பெற்றவன்; இவனைப் பாடிய புலவர் உலோச்சனார், கிள்ளியின் கொடைக்குணம், அவன் படைப்

பெருமை, அவனைப் பெரியோர் வாழ்த்தும் வாழ்த்து வகை ஆகியவற்றை எடுத்துக்கூறிப் பாராட்டியுள்ளார்.

ஒருவர்க்கு அறிவுரை கூறுவார், இவர்போல் வாழ்க! இவைபோன்றன செய்க என அறிவுரை கூறுங்கால், உயர்ந்தாரையும், உயர்ந்த செயல்களையுமே எடுத்து உவமை காட்டுவர்; உவமையின் இயல்பு இதுவே; "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை," என விதியும் கூறியுள்ளார் ஆசிரியர் தொல்காப்பியனார். இந்நெறி நோக்குங்கால், கொடை, கொற்றம், அன்பு, அருள், அறம் ஆகிய குணங்கள் உடைமையால், உலகில் உள்ளார்க்குப் பெருநற்கிள்ளியை உவமையாகக் கூறல் வேண்டுமேயன்றி, அவனுக்கு உவமையாகக் கூறவல்லார் உலகத்துள் ஒருவரும் இலர்; அத்துணை உயர்வுடையான் அவன் என்றும் உலக நாடுகளுள், உயர்வுற்ற நாடு இது என்றும் ஆராய்ந்து கூறுவார், அவ்வாறு உயர்ந்த நாடு இவன் நாடே எனக் கூறுவர். உலகில்வாழ் அரசர்களுள் உயர்வுற உயர்ந்த அரசன் இவன் என ஆராய்ந்து கூறுவார், அவ்வாறு உயர்ந்த அரசன் இவ்வரசனே என்று கூறுவர்: என்று பெருநற்கிள்ளியின் பெருமைகளையும், அவன் தன்னைப் பாடிவருவார்க்கு, மலையிடைத் தோன்றும் மாணிக்கங்களையும், காட்டில் பெறப்படும் பொன்னையும் கடலிற்றோன்றும் முத்துக்களையும், வேறுவேறு வகையான ஆடைகளையும், கள்நிறை குடங்களையும் வறுமைதீர வழங்குவன் என அவன் கொடைப் பெருமையினையும் பாராட்டுவதறிக.

"பிறர்க்கு உவமம் தானல்லது
தனக்கு உவமம் பிறர்இல்.''
நாடென மொழிவோர், அவன் நாடென மொழிவோர்;
வேந்தென மொழிவோர், அவன்வேந்தென மொழிவோர்;''
மலைபயந்த மணியும், கடறுபயந்த பொன்னும்,
கடல் பயந்த கதிர் முத்தமும்,
வேறுபட்ட உடையும், சேறுபட்ட தசும்பும்,
கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப
நனவின் நல்கியோன் நசைசால் தோன்றல்.''(புறம் : ௩௭௭)

பெரியன், பொறையாறு என்னும் ஊரை ஆண்டிருந்த ஒரு குறுநிலத் தலைவனாவன்: பொறையாறு சோழ மண்டலக் கடற்கரைக்கண் உள்ளதோர் ஊர்; இது புறந்தை எனவும் வழங்கப்பெறும்; பெரியன், பொறையாற்றுக்கிழான் எனவும் அழைக்கப்பெறுவன். தாம் வாழிடமாகிய வடநாடு வறுமையுற்றதாக, வாழ்வு கருதித் தென்னாடு போந்த கல்லாடனாரையும் அவர் சுற்றத்தையும் வரவேற்று விருந்தளித்துப் போற்றிய பெருமையுடையவன்; இத்தகைய பெருமையுடைமையால் பெரியன் என அழைக்கப்பெற்ற இப்பொறையாற்றுக்கிழானைக் கள்வளம் மிக்க பொறையாறுடையான் என்றும், 'அரசர்தம் பாசறைக்கண் அலைசந்து அசைந்து நிற்கும் யானைகளின் நெற்றிப்பட்டம்' ஒளிவிடுமாறுபோல, மீன் பிடிப்பார், கடல்மேற் சென்ற தம் மீன் படகுகளில் இரவில் ஏற்றிய விளக்குகள் ஒளிவிடும் கடற்றுறையாகிய பொறையாறுடையான் என்றும், தன்னைப் பாடிவருவார், தன்னைப் பாடிய பின்னர் வேறு பிறரைப் பாடகினையாதவாறு பெரும்பொருள் அளிக்கும் கொடைக்குணமும், குதிரைகள் பூட்டிய நல்ல பல தேர்களையும் உடையவன் என்றும் பாடியுள்ளார் உலோச்சனார்.

"நறவுமகிழ் இருக்கை நற்றேர்ப் பெரியன்
கட்கமழ் பொறையாறு." (நற் : கநக)

"கொண்டல் இரவின் இருங்கடல் மடுத்த
கொழுமீன் கொள்பவர் இருள்நீங்கு ஒண்சுடர்
ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை
ஆடியல் யானை அணிமுகத்து அசைத்த
ஓடை ஒண்சுடர் ஒப்பத் தோன்றும்
பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்
பரியுடை நற்றேர்ப் பெரியன் விரியிணர்ப்
புன்னையங் கானல் புறந்தை முன்துறை." (அகம் : ௧00)

பரதவர், உப்புப்பாத்திகளில் கடல்நீரைக் கொணர்ந்து பாய்ச்சி உப்பு விளைவிப்பர். அவர்தம் இவ்விளைவுக்கு மழை வேண்டும் என எதிர்பார்ப்பதில்லை; எனவும், அவ்

வாறு விளைவித்த உப்பினை, உப்பு வணிகராம் உமணர் வந்து வாங்கிக்கொண்டு சேறற்பொருட்டுக் கடற்கரைக் கண்ணேயே மலைபோல் குவித்துவைப்பர் எனவும், அவ்வுப்பினைக் கொண்டுபோகவரும் உமணர், தம் பண்டிகளை வரிசையாக ஓட்டிக்கொண்டு உப்பளம் நோக்கிச் செல்வர் எனவும், ஆங்குக் குவித்துவைக்கப்பெற்ற உப்புக் குவியல்கள்மீதேறி நின்று பரதவர் மகள், கரைநோக்கிவரும் மீன் படகுகளை இது எந்தை படகு; இது நுந்தை படகு என அடையாளம் கண்டு அகமகிழ்வர் எனவும் பரதவர் உப்புத் தொழிலையும்,

> "நேர்கண் சிறுதடி நீரின் மாற்றி
> வானம் வேண்டா உழவு." (நற் : உருச)

> "உவர்விளை உப்பின் உழாஅ உழவர்
> ஓகை உமணர் வருபதம் நோக்கிக்
> கானல் இட்ட காவற் குப்பைப்
> புலவுமீன் உணங்கல் படுபுள் ஓப்பி
> மடநோக்கு ஆயமொடு உடன்உப் பேறி
> எந்தை திமில்இது; நுந்தைதிமில் என
> வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்
> திண்திமில் எண்ணும் தண்கடல்." (நற் : நகக)

> "கல்விளை உப்பு
> நெடுநெறி ஒழுகை நிரைசெலப் பார்ப்போர்
> அளம்போகு ஆகுலம்." (நற் : நருச)

நன்கு கதிரிட்டு முறுக்கிய வலிய கயிற்றால் பின்னப் பெற்ற பெரிய வலையைக் கடலில் இடும்பொருட்டு நிறைய ஏற்றப்பெற்ற தோணியை, யானையைச் செலுத்தும் பாகரைப்போல், பரதவர் கடலிடையே செலுத்திச் செல்வர் எனவும், பரதவர் வரிசையாகப் பல படகுகளைக்கொண்டு சென்று, சுறுப்போலும் பெரிய மீன்கள்மீது எறியுளி எறிவர் எனவும், எறியுளி ஏறுண்ட பெருமீன்கள், வான வில்போல் விரைந்து மேலே எழுந்து பலகாலும் துள்ளித் துள்ளித் திமிரும் எனவும், அவற்றின் புண்ணிடத்து

ஒழுகிய உதிரத்தால் கருங்கடல் நீரும் செந்நீராம் எனவும், இறுதியில் அவை தம் வலியிழந்து அடங்க, அவற்றை அரிதிற் கரைசேர்ப்பர் எனவும், அப்பரதவர்தம் மீன் பிடிக்கும் தொழிலையுந் தெளிய உணர்ந்து உணர்த்தியுள்ளார் புலவர் உலோச்சனார்.

"வடிக்கதிர் திரித்த வன்ஞாண் பெருவலை
இடிக்குரற் புணரிப் பௌவத் திடுமார்
நிறையப் பெய்த அம்பி, காழோர்
சிறையருங் களிற்றிற் பரதவர் ஒய்யும்." (நற் : எச)

"பரதவர்,
எறிஉளி பொருத ஏமுறு பெருமீன்
புண்ணுமிழ் குருதி புலவுக்கடல் மருப்பட
விசும்பணி வில்லிற் போகிப் பசும்பிசிர்த்
திரைபயில் அழுவம் உழக்கி, உரன்அழிந்து
நிரைதிமில் மருங்கில் படர்தரும்." (அகம் : உ௧0)

மழை பொய்யாது பெய்தலால், கடல் மீன்முதலாம் செல்வத்தால் சிறப்புறும்; கடல் சிறத்தலால், பரதவர்க்கு மீன் முதலாயின நிறையக் கிடைக்கும். கிடைத்த அவற்றை விற்றுப் பெறும்பொருளால், கள் பெற்று வாழ்வர் பரதவர் எனவும், பரதவர் நிலத்தே மழை பெய்யின் நெல் விளைந்து நிறைசெல்வம் தரும்; அம்மழை பெய்யாத காலத்திலோ எனின் கடல் நீரால் விளையும் உப்பு உறுபொருள் தரும்; ஆகவே பரதவர் நிலத்தே வறுமை வந்தடைதல என்றும் இல்லை எனவும், தம் நாடு செல்வத்தால் செழிப்பவே, பரதவர் தம நாடு நோக்கி வரும் புதியரைக் காணின், அவரை அணுகி, "ஐய! பொழுதும் மறைந்துவிட்டது; நீர்த்துறைகளில் அலைகளும் மிக்கு எழுகின்றன: ஆண்டுச் சுறாமீன்களால் ஏதம் உண்டாதலும் கூடும்; இருளும் நிறைந்துவிட்டது; ஆகவே, இனி ஈண்டுவிட்டுப் போதலை ஒழிவீராக! நீங்களும், உங்களைத் தொடர்ந்து வந்துள இளையரும், உங்கள் குதிரைகளும் ஈண்டிருந்து யாம் அளிக்கும் விருந்துண்டு விடியச் செல்வீராக," என இன்முகத்தோடு கூடிய இன்

னுரை வழங்கி விருந்தளிப்பர் எனவும், பரதவர் இவ்வாறு விருந்தளிக்கும் பண்பினராகவே, அவர்தம் பரதவர் சேரியில் ஒருநாள் இருந்து விருந்துண்டார், தாம் வாழும் ஊரைப் பலநாள் மறந்துவிடுவர் எனவும், பரதவர்தம் பண்புடைமைகளைப் பலபடப் பாராட்டியுள்ளார் புலவர் :

"வேட்டம் பொய்யாது வலைவளம் சிறப்பப்
பாட்டம் பொய்யாது பரதவர் பகர
இரும்பனம் தீம்பிழி உண்போர் மகிழும்
ஆர்கலி யாணர்." (நற் : ௩அ)

"பெயினே, விடுமான் உழையினம் வெறுப்பத் தோன்றி
இருங்கதிர் நெல்லின் யாணர் அஃதே ;
வறப்பின், மாநீர் முண்டகம் தாஅய்ச் சேறுபுலர்ந்து
இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்
அழியா மரபின் நம்மூதூர்." (நற் : ௩௧௧)

"வல்லெதிர் கொண்டு, மெல்லிதின் விணைஇத்
துறையும் மான்றின்று பொழுதே ; சுறவும்
ஓதம் மல்கலின் மாறு யினவே ;
எல்லின்று ; தோன்றல் ! செல்லாதீம் ; என
எமர்குறை கூறத் தங்கி, ஏமுற
இளையரும் புரவியும் இன்புற, நீயும்
இல்லுறை நல்விருந்து அயர்தல்
ஒல்லுதும் பெரும !" (அகம் : ௩௰)

"ஒருநாள் உறைந்திசி னோர்க்கும், வழிநாள்
தம்பதி மறக்கும் பண்பின் எம்பதி." (அகம் :உ௦௦)

புலவர் உலோச்சனார் ஆங்காங்கு எடுத்தாளும் உவமைகள் அறிந்து இன்புறத்தக்கனவாம் ; புன்னைமரத்தின் கருநிறக்கோடு இரும்புபோல் உளது; அப்புன்னையின் நீலநிற இலைகள் நீலமணிபோல் உள ; அதன் வெண்ணிறப் பூக்கள் வெள்ளி பூத்தாற்போன்று காட்சிதரும்; அம் மலரின் பொன்னிறப் பூந்தாது, பொன்தூள் போலும் எனக் கூறும் உவமை, புலவர்தம் பொன் முதலாயின அறிந்த அறிவினை அறிவித்து அழகுதந்து நிற்றல் காண்க.

"இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை,
நீலத் தன்ன பாசிலை அகந்தொறும்
வெள்ளி அன்ன விளங்கிணர் நாப்பண்
பொன்னின் அன்ன நறுந்தாது உதிர." (நற் : ௨௪௯)

இற்செறிக்கப்பட்ட தலைமகள், தலையளி செய்யும் தலைமகன் உளன் என்ற உள்ளத்து உறுதியால் உரன் அழியாது இருந்தமைக்கு, வானுற உயர்ந்த தன் கோட்டையைச் சூழ, யானைப்படை மிக்க பகைவேந்தன் வந்து முற்றியிருப்பினும், தன் கோட்டையைப் பகைவர் பாழாக்கா வண்ணம் காத்து நிற்கவல்ல போராண்மை உடைய வீரர் பலரை உடையேன் என்னும் செருக்கால், அக்கோட்டைக்கு உரியான், முற்றுகை குறித்துக் கவலையுறாது இருந்தநிலை உவமை காட்டிய புலவர் உலோச்சனார், போர் நெறியுணர்ந்த புலவராவர் எனக்கூறல் பொருத்தமுடைத்தாமன்றோ?

'விசும்புறழ் புரிசை வெம்ப முற்றிப்
பைங்கண் யானை வேந்துபுறத்து இறுத்த
நல்லெயில் உடையோர் உடையம் என்னும்
பெருந்தகை மறவன் போலக் கொடுங்கழிப்
பாசடை நெய்தல் பனிநீர்ச் சேர்ப்பன்
நாம முதலை நடுங்குபகை அஞ்சான்
காமம் பெருமையின் வந்த ஞான்றை
அருகா தாகிய வன்கண் நெஞ்சம், (நற் : ௨௮௭)

## உகூ. உழுந்தினைம் புலவன்

உழுந்தினைம் புலவன் என்ற இப்பெயர், இவர்க்குப் பெற்றோர் இட்டு வழங்கிய இயற்பெயரன்று; யாதோ வொரு காரணம் கருதிவந்த காரணப் பெயரே; ஆனால், அக்காரணம் யாது என்பதை இப்போது நம்மால் அறிதல் இயலாது போயிற்று; இவர் பாடிய பாட்டொன்று குறுந் தொகைக்கண் இடம்பெற்றுளது.

தினையை உண்டு அழிப்பனவாகிய யானை, கிளி, இவற்றுள், யானை ஆண்மையும், ஆற்றலும் வாய்ந்தது; கிளி ஆட்களைக் காணவே அஞ்சி ஓடும் மென்மையுடை யது என அறிந்தவராதலின், கானவர், அவற்றை ஓட்டுங் கால் யானையை ஓட்ட அம்பும், வில்லும் உடைய வீரரைப் பணிப்பர்; கிளிகளை ஓட்ட, தழை உடை யுடைய தம் மகளிரைப் போக்குவர் எனக் கூறியதோடு, யானையை ஓட்டும் செயலைக் கடிதல் என்ற சொல்லாலும், கிளிகளை ஓட்டும் செயலை ஓப்புதல் என்ற சொல்லாலும், குறித் திருப்பது புலவர்தம் புலமையின் பெருமையினைப் புலப் படுத்துவதாம்.

"வினை, பகை என்றிரண்டின் எச்சம், நினையுங்கால் தீயெச்சம் போலத் தெறும்" என்பவாகலின், எடுத்த வினையைக் குறையற முடித்து நிற்காது, குறைவினையா நிறுத்தல் பின்னர்ப் பெருந்துயர் விளைதற்குக் காரணமாம் ஆதலின், வினையறிந்தார், குறைவினைகாணின் பெரிதும் வருந்துவர்; இஃதறிந்த புலவர், தலைவன், தான் விரும்பிய தலைவியைப் பெறமாட்டா நிலையைக் குறைவினையாகக் கொண்டு உளம்மிக அழிவன் எனக் கூறியுள்ளதும் உணர்ந்து மகிழ்தற்கு உரியதாம்.

"குறும்படைப் பகழிக், கொடுவில் கானவன்
புனமுண்டு கடிந்த பைங்கண் யானை
நறுந்தழை மகளிர் ஓப்பும் கிள்ளையொடு
குறும்பொறைக்கு அணவும் குன்ற நாடன்
பணிக்குறை வருத்தம்." (குறுந் : ௩௩௩)

## ௯௦. உறையன்

உறையன் என்ற இப்பெயர், புலவர்தம் இயற்பெயரா அல்லது காரணப்பெயரா என்பதை அறிந்து கொள்வதற்கில்லை. இவர் பாடிய பாட்டாகக் குறுந்தொகைக்கண் வந்துள்ள ஒரு பாட்டே கிடைத்துளது.

தன் இனத்தைக் காணமாட்டாது கலங்கி நின்று, அதைப் பல்காலும் கூவி அழைக்கும் பருந்தின் தனித்த குரலொலி தவிர, வேறு ஒலி எதையும் கேட்காத கொடுமையுடையது பாலைப்பெருவழி எனப் புலவர் கூறுவது நினைவு கூரற்பாற்று. அத்தகைய பாலைநிலத்தில், கற்பாறைகளுக்கு இடையிடையே நுழைந்து நுழைந்து மக்கள் நடப்பதால் உண்டாம் சிறுவழியே, அந் நிலத்துவழியாம்; அத்தகைய வழியில் சென்று விட்டான்; ஒரு தலைவன். சென்றவன் தலைவியிடம் கூறாமலே சென்றுவிட்டான். இதை அறிந்த தலைமகள் தோழி, தலைமகளுக்கு உணர்த்தினாள்; தோழி உரைப்பதற்கு முன்னரே, தலைமகள்பால் அதை உணர்த்தினார் பலர்; உணர்த்தினர் பலராயினும், அவருள் ஒருவராவது சென்ற தலைவனைத் தடுத்து நிறுத்தினாரல்லர்; இதனால் சினங்கொண்ட தலைவி, தோழி அதைவந்து உரைத்தக்கால், இவ்வாறு அவர் சென்றார் எனவந்து உரைத்தவர் பலராவர்; அவர்கள் எல்லாம் என்பால் அன்புடையர் தாம் எனக் கூறித் தன் வெறுப்பினை உணர்த்துவாளாயினள் எனப் பாடியுள்ளார் புலவர்.

"செப்பினம் செலினே, செலவரி தாகும் என்று
அத்த ஓமை அங்கவட் டிருந்த
இனந்தீர் பருந்தின் புலம்புகொள் தெள்விளி
சுரம்செல் மாக்கட்கு உயவுத்துணை யாகும்
கல்வரை அயலது தொல்வழங்கு சிறுநெறி
நல்லடி பொறிப்பத் தாஅய்ச்
சென்றெனக் கேட்டநம் ஆர்வலர் பலரே."

(குறுந்: ௨௦௭)

## ௬௧. எயிற்றியனார்

இவர் வரலாறு குறித்து எதுவும் விளங்கவில்லை. தலைவன் ஒருவன், தான் களவிற்கண்டு காதலித்த ஒரு தலைவியை மீண்டும் காண்டல் அரிதாயகாலத்தே, அவள் வாய், கூந்தல், கண் முதலாயினவற்றை நினைந்து நினைந்து பாராட்டுவான்; அவள், முள்போலும் கூரிய பற்களினின்றும் ஊறும் அமிழ்தம்போலும் இனிய நீர் நிறைந்த, அழகிய சிவந்த வாயுடையவள்; மிகவும் மணக்கும் அகிற்புகை யூட்டப் பெற்றுக், கருமணல்போல் தோன்றும் நறிய மயிர் உடையாள்; பெரிதாய், மருட்சி நிறைந்ததாய், அருட் பார்வை உடையதாய கண்ணுடையாள் என, அவற்றின் காட்சி அழகும், கருத்தழகும் ஒருங்கே தோன்றப் பாராட்டினன் எனப் பாடிய பாட்டொன்று குறுந் தொகைக்கண் இடம் பெற்றுளது. எயிறு முதலாயின வற்றின் சிறப்புத்தோன்ற அடைபல தந்து பாடிய புலமை பாராட்டுதற்குரியதாம்.

"உள்ளிக் காண்பென் போல்வன்? முள் எயிற்று
அமிழ்தம் ஊறும் அஞ்செவ்வாய்; கமழ் அகில்
ஆரம் நாறும் அறல்போல் கூந்தல்;
பேரமர் மழைக்கண்; கொடிச்சி
மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே."

(குறுந் : ௨௮௬)

தலைவன் ஒருவன், தான்விரும்பும் தலைவியின் பற்கள் முள்போலும் கூர்மைய; அமிழ்தம் போலும் இனிய நீர் ஊறுவ எனக் கூறிப் பாராட்டினன், "முள் எயிற்று அமிழ்தம்" எனப் பாடிய சிறப்பால், இவர் இப்பெயர் பெற்றார் எனலும் பொருந்தும்.

# ௩௨. எயினந்தையார்

இவர் எயினன் என்பார்தம் தந்தையாராவர்; எயினனைத் தந்தையாகவுடையவர் என்று கூறுவாரும் உளர். ஆதன் தந்தை, ஆந்தை என வருதல்போல் எயினன் தந்தை என்பதே, எயினந்தை என ஆம்; எயினன் தந்தை என்ற தொடர் எயினனின் தந்தை எனப் பொருள் தர வல்லது. எயினனைத் தந்தையாக உடைய எனப் பொருள் தாராமை உணர்க. இவருடைய மகனார் ஒருவர் இளங்கீரனார் என்ற பெயருடையார். அவரும் ஒரு புலவராவர். எயினந்தையார் பாட்டொன்று நற்றிணைக்கண் வந்துளது. அப்பாட்டு, அழகிய ஓர் உவமையின் நிலைக்களமாய் உயர்ந்தோரால் பாராட்டப்பெறும் பண்பு வாய்ந்துளது.

தலைவன் ஒருவன், பிரிந்தறியாத் தலைமகளைப் பிரிந்து பொருள் தேடிவரப் புறப்பட விரும்பினான்; விரும்பிய அவன், அதை அவள் தோழிபால் மெல்ல உணர்த்தினான்; பிரிந்தால் தலைமகளுக்கு உண்டாம் துயர்க்கொடுமையினை உணர்ந்தவள் தோழி; அதனால், அவனைச் செல்லாவாறு செய்தல் இயலுமா என எண்ணினாள்; உடனே அவனை நோக்கி, "ஐய! பொருளீட்டுதற் பொருட்டு வெப்பம்மிக்க, கடத்தற்கரிய காட்டுவழியில் போதல் நுமக்கு மிக்க உவகை அளிப்பதாய் உளது; ஆனால், எம் தலைவிக்கோ எனின், நீயிர் பிரிந்து செல்வதைக் கேட்டவுடன், யானைப்படை பல கொண்டுள்ள பகைவேந்தன், தன் மதிற்புறத்தே வந்து முற்றுகையிட்டுள்ள காலத்தே, அஞ்சற்க எனக் கூறித் தனக்குத் துணைபுரிய வாக்களித்த வேந்தன், துணைபுரியாது கைவிட்டானாக, எல்லா மதிலும் அடியோடு அழிந்துபோக, உடைபட்ட ஒரே மதிலை உடைய அரசனுக்கு நேர்ந்த கேடுபோன்ற பெருங்கேடு வாராநின்றது. இதை அறிந்து, இசைந்ததொன்றினைச் செய்வாயாக" என்று கூறி நின்றாள் எனப் பாடியுள்ளார்.

ஈண்டு அஞ்சல் எனக் கூறித் துணைவந்த அரசன் தலைவனாவன்; மதில் அகத்தே இருக்கும் ஆற்றல் அற்ற அரசன், இல்லுறை தலைவியாவள்; உடைமதில் ஓரெயில், பெண்மைக்குரிய குணங்கள் எல்லாம் ஒழிய எஞ்சிநின்ற நாண் ஒன்றேயாம்; துணைவேந்தன் கைவிடல், இருந்து தலையளி புரியவேண்டிய தலைமகன் பிரிந்துபோதலாம்; பகையரசன், தலைவன் பிரிந்தான் எனக் கண்டு, அக் கணமே தலைமகளைப்பற்றி வருத்தும் பசலைநோயாம்.

இத்துணைப் பெரும்பொருள் தோன்றக் கூறவல்ல பேரறிவு படைத்த தோழியை நம்முன் நிறுத்திக்காட்டிய புலவரின் புலமையினைப் போற்றுவோமாக! உடைமதில் ஓரெயில் மன்னன் என்ற இவ்வுவமையால், அக்கால அரச வாழ்வின் அலங்கோல நிலையினை, அங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக்காட்டிய இவர் அறிவின் பெருமையே பெருமை!

"வெம்மை ஆரிடை இறத்தல் நுமக்கே
மெய்ம்மலி உவகை ஆகின்று; இவட்கே
அஞ்சல் என்ற இறைகை விட்டெனப்
பைங்கண் யானை வேந்துபுறத்து இறுத்தலின்
களையுநர்க் காணாது கலங்கிய உடைமதில்
ஓரெயில் மன்னன் போல
அழிவு வந்தன்றால் ஒழிதல் கேட்டே." (நற்: ௪௩)

## ௯௯. எயினந்தை மகனார் இளங்கீரனார்

இளங்கீரனார் என்ற இயற்பெயருடையார் பலராவர்; அவருள் இவர் எயினந்தையாரின் மகனாதலின், எயினந்தை மகனார் இளங்கீரனார் என்றழைக்கப்பட்டுளார். இவர் தந்தையார், எயினந்தையாரும் ஒரு புலவராவர். இவர் பாடிய பாக்கள் பன்னிரண்டு. நற்றிணையில் மூன்று; நெடுந்தொகையில் ஒன்பது; இவர் பாடிய பாக்கள் எல்லாம் பாலைத்திணையில் பொருள்வயிற் பிரிவு குறித்தே வந்துள்ளன.

தன் தலைவியைப் பாராட்டும் தலைமகன் ஒருவன், அவள், ஒருவரையொருவர் இன்றியமையாமைக்கு ஏது வாகிய காதலும், ஒருவர் குற்றம் ஒருவர் அறியாமைக்கு ஏதுவாகிய மடனும், மென்மைத்தன்மையும், ஒழுக்கமும், என்பையும் உருக்கும் இன்சொல்லும், பெண்களுக்கு ஓதிய அறிவு, நிறை, செறிவு முதலாம் பிற பண்புகளும் ஒருங்கே உடையாள் எனப் பாராட்டினான் எனப் பாடிப் பெண்ணினிலக்கணம் கூறியுள்ளார் புலவர்.

"அன்பும், மடனும், சாயலும் இயல்பும்
என்பு நெகிழ்க்கும் கிளவியும், பிறவும்
ஒன்றுபடு கொள்கையொடு ஓராங்கு முயங்கி."

(அகம்: உஉ௫)

மனைவி, மக்கள் முதலாம் சுற்றத்தார்மாட்டுக் கொள்ளவேண்டிய அன்பும், அவரல்லாப் பிற உயிர்கள்மாட்டும் கொள்ளவேண்டிய அருளும், பொருள் பெற்றார்க்கே உண்டாம், என்பதறிந்து ஒரு தலைவன் பொருள் தேடிவர எண்ணினான்; தன் எண்ணத்தைத் தலைவிக்கு உணர்த்தின், அன்பின் மிகுதியால், அவள் தன்னைப் பிரியவிடாள் என உணர்ந்தான்; அதனால், அவளிடம் கூறாமலே போவதற்கு ஆவன மேற்கொள்ளலாயினன்; அவன் அறிவித்திலன் ஆயினும், அவள் எவ்வாறோ அதை அறிந்துகொண்டாள்; அவன் பிரிவை எண்ணி எண்ணிக் கண்ணீர்விட்டுக் கலங்க

லாயினள்; தலைவியின் இங்கிலையினை அறிந்தான்; இனியும் அவளை மறைத்துப் பயனில்லை; அவளுக்கு உணர்த்திப் பிரிவதே நலம் எனக் கொண்டான்; அன்புரை பல வழங்கி அழைத்தான்; அவன்பால் செல்லவும் அவட்குத் துணிவு உண்டாகவில்லை; மேலும் பிரியப் போகும் அவன் பால் செல்ல அவள் உள்ளமும் விரும்பவில்லை; எனினும் அழைத்தவழிப், போகாதிருத்தல் பண்பன்று; ஆகவே, அவள் நாணம் முன்நிற்க, மெல்ல அடியிட்டு அருகே சென்று நின்றாள்; வந்து நின்றனளே அன்றி, எங்கே போகின்றீர்கள்? எப்போது போகின்றீர்கள்? எப்போது மீள்வீர்கள்? என்று கேட்பதோ அல்லது போதல்கூடாது எனத் தடுப்பதோ செய்திலள்; எதையோ எண்ணி இருப்பாள்போல் நெடிதுநேரம் நின்றுகொண்டிருந்தாள்; பின்னர்த் திடுமென, கயிறு ஆட்ட ஆடிக்கொண்டிருந்த அழகிய பாவையொன்று, அக்கயிறு அற, அடியோடு வீழ்ந்தாற் போல், அவன் ஆகத்தே வீழ்ந்துவிட்டாள்; வீழ்ந்த அவளை அணைத்துக்கொண்ட அவன் உள்ளம், பிரிவை மேற் கொள்ளும் உரன் இழந்துவிட்டது; ஈரிய மண்ணால் செய்யப்பெற்று, அவ்வீரம் புலராத ஒரு மட்கலம், மழை நீரை ஏற்றவழி, அந்நீரோடு தானும் உருவு தெரியாமல் அழிந்து கரைந்து ஒன்று கலந்து விடுவதைப்போல், அன்பே உருவாய், அவ்வன்பு அகலா உள்ளத்தனாய அவன், பெண்ணிற் பெருந்தகையாளாய அவள் துயர் கண்டவுடனே, தன்னிலை இழந்து அவள் வயத்தனாகிவிட்டான். இந்த அழகிய காட்சியை ஓவியப்படுத்திக் காட்டியுள்ளார் புலவர்:

"செலவுரை வுற்ற அரவம் போற்றி
மலரேர் உண்கண் பனிவர ஆயிழை
யாம்தற் கரையவும் நாணினள் வருவோள்,
வேண்டா மையின் மென்மெல வந்து
வினவலும் தகைத்தலும் செல்லா ளாகி
வெறிகமழ் துறுமுடி தயங்க நல்வினைப்
பொறியழி பாவையிற் கலங்கி, நெடிதுநினைந்து

ஆகம் அடைதந் தோளே; அதுகண்டு
ஈர்மட் செய்கை நீர்படு பசுங்கலம்
பெருமழைப் பெயற்கு ஏற்றாங்கு எம்
பொருள்மலி நெஞ்சம் புணர்ந்துவந் தன்றே."

(நற் : ௩௦அ)

அவள் துயர்நிலை கண்ட அவன், அன்று போதலைக் கைவிட்டான் எனினும், கடமை உணர்ச்சி உடைய அவன், பொருள்தேடிப் போதலை அறவே கைவிட்டானல்லன்; பின்னொருகால் போகவே துணிந்துவிட்டான்; துணிந்த அவன் அவளை அருகழைத்து, அன்புரை பல வழங்கி இறுதியில் தன் கருத்தினை உணர்த்தினான்; கேட்ட அக் கணமே அன்று அலர்ந்த தாமரை போன்றிருந்த அவள் அழகிய முகம், விடியற்காலத்தே தோன்றும். வெண்மதி வெளிறித் தோன்றுவதுபோல் வெளுத்து ஒளிகுன்றிவிட்டது; அவள் உடல் அழகும் குறைந்துவிட்டது; முகம் கவிழ்ந்துவிட்டது; செயலற்ற அவள் கால்விரல்கள் அவளை அறியாமலே நிலத்தைக் கிளைக்கத் தொடங்கின; கண்கள் கண்ணீரால் நிறைந்துவிட்டன; அக்கண்ணீர் அவள் ஆகத்தை அறவே நனைத்துவிட்டது; கால்கள் நிற்க மாட்டாவாய் நிலை கலங்கின; கழிபெரும் துயருடைய ளாயினாள்; அவன் பிரிவைப்பொறாது இவ்வாறு பெருந் துயர் உறும் அவள் உள்ளம், அவன் பிரிந்து செல்லவேண்டிய இன்றியமையாமையினை உணர்ந்துள்ளது; ஆதலின், பிரியும் அவன்முன் தன் கலங்கிய நிலையோடு சேறல், அவன் செலவு முயற்சிக்குக் கேடு தரும் என உணர்ந்தாள்; கலங்கிய தன் முகத்தைத் தன் கருநிறக் கூந்தலால் மறைத்து நின்றாள். சென்று, நன்றே வினைமுடித்து வீறு எய்துக என வாழ்த்த எண்ணுகிறது அவள் உள்ளம்; ஆனால், அவன் பிரிவுத் துயர், அவ்வுரையினை உரைக்கா வண்ணம் நாவைத் தடைசெய்கிறது; எவ்வாறோ, நடுங்கிய அந்நாக்கினின்றும், அப்பொருள் தோன்றும் சொற்கள் வெளிவந்துவிட்டன; வாழ்த்தி விடைதந்துவிட்டாள்; அந் நிலையில் அவள்விட்ட பெருமூச்சு, அப்பிரிவால் அவள்

உறும் அளத்தற்காகா அருந்துயரினை அறியக் காட்டுவ தாயிற்று. தமிழ்நாட்டு இல்லந்தொறும் காணப்பட்ட இவ்விடைதரு காட்சியினை விளங்க உணர்த்தியுள்ளார் புலவர் :

"செய்பொருள் மருங்கிற் செலவுதனக்கு உரைத்தென
வைகுநிலை மதியம் போலப் பையெனப்
புலம்புகொள் அவலமொடு புதுக்கவின் இழந்த
நலங்கெழு திருமுகம் இறைஞ்சி, நிலங்கிளையா
நீரொடு பொருத ஈரிதழ் மழைக்கண்
இகுதரு தெண்பனி ஆகத்து உறைப்பக்
கால்நிலை செல்லாது, கழிபடர்க் கலங்கி
நாநடுக்குற்ற நவிலாக் கிளவியொடு
அறல்மருள் கூந்தலின் மறையினள் திறன்மாண்டு
திருந்துக மாதோ நும்செலவென, வெய்துயிராப்
பருவரல் எவ்வமொ டழிந்த
பெருவிதுப் புறுவி."

(அகம் : உகக)

ஊர்ப்பற்று உயிர்ப்பற்று என்ப; ஊர்ப்பற்றில்லா உயிரை உலகில் காணல் அரிதாம்; இரவும், பகலும் அதுவே நினைவாய் இருந்து வாழ்ந்த ஊரைப் பிரிந்துபோக வேண்டிய நிலை உற்றார், தம் ஊரை நினைந்து உருகும் நிலை அம்மம்ம! கொடிது! கொடிது! பொருளின் இன்றியமை யாமையால் தான் பிறந்த ஊரைவிட்டுப் பிரிய நேர்ந்த ஒரு தலைவன், அதைப் பிரியமாட்டாது வருந்துவதையும், பிரிந்து செல்வான் பலகாலும் திரும்பித்திரும்பி அதை நோக்கிக்கொண்டே செல்வதையும், அவ்வாறு செல்வுழி; அவ்வூரின் ஒவ்வொரு பகுதியும், மறைந்து காணாது ஒழியும் தொறும் "அந்தோ எம்மூர் மன்றமும் மறைந்து விட்டது! எம்மூர் மரங்களும் மறைந்துவிட்டன!" எனக் கூறிக் கண்ணீர் விடுவதையும் எடுத்துக்காட்டி, இருந்து வாழ்ந்த ஊரைப், பிரிந்துபோவதால் உண்டாம் பெருந் துயரினை விளங்க உணர்த்தியுள்ளார் புலவர் :

"எல்லையும், இரவும் வினைவயிற் பிரிந்த
உள்ளம்! முன்னுறுபு அடைய உள்ளிய
பதிமறந்து உறைதல் வல்லுநம் ஆயினும்
அதுமறந்து உறைதல் அரிதா கின்றே." (அகம் : உகக)

"அளிதோ தானே! எவனு வதுகொல்?
மன்றும் தோன்றாது; மரனும் மாயும்
...........பெருநல் ஊரே." (அகம் : உ௩௬)

மணிகள் இழைத்துச் செய்யப்பெற்ற கிண்கிணிபோலும் அணிபல அணிந்து, பால்குடித்து மகிழும் பவழம்போலும் செவ்வாயினின்றும் இனியநீர் இடைவிடாதொழுக விளங்கும் அழகிய மகன், தன் மார்பின்மீது ஏறியும் இறங்கியும் ஆடல்காட்ட அன்புமிக்குடையளாய் விளங்கும் தன் மனைவியைக் கண்டு கண்டு களிப்பு மிகக்கொள்ளும் ஆண்மகன் ஒருவனை நமக்கு அறிமுகம் ஆக்கியுள்ளார் புலவர்.

"குரும்பை மணிப்பூட் பெருஞ்செங் கிண்கிணிப்
பாலார் துவர்வாய்ப் பைம்பூட் புதல்வன்
மாலைக் கட்டின் மார்பூர் பிழிய
அவ்வெயி றொழுகிய வெவ்வாய் மாணகைச்
செயிர்திர் கொள்கைநம் உயிர்வெங் காதலி."
(நற் : உகக.)

பெண்மான், கானவர் எய்த அம்பேறுண்டு இறந்துவிட்டதாக, அதன் குட்டிகள், தம் தாய்க்கு உண்டான கேடறியமாட்டாவாய் மகிழ்ந்து அதன் அருகே துள்ளிக் குதித்து ஆடி மகிழ, ஆண்மான், தன் பெடையின் பிரிவை எண்ணி எண்ணி வருந்தி, தழை மேய்தலும் செய்யாது, நீர் குடித்தலும் மாட்டாது, வேலேறுண்ட மக்கள் அலறிப் புடைத்து அழுதலைப்போல், கலங்கிக் கண்மூடிக் கிடக்கும் கொடிய காட்சியைக் காட்டுவ்தன்வழியே, காட்டு விலங்குகளின் கழிபேரன்பினைக் காட்டியுள்ளார் புலவர் :

"ஆடவர்,
கணையிடக் கழிந்ததன் வீழ்துணை உள்ளிக்
குறுநெடுந் துணைய மறிபுடை யாடப்
புன்கண் கொண்ட திரிமருப்பு இரலை
மேய்பதம் மறுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
நெய்தலம் படுவில் சின்னீர் உண்ணாது
எஃகுறு மாந்தரின் இனைந்துகண் படுக்கும்."

(அகம் : ங௲எக)

கோடை வெம்மையால் வாடிய மூங்கிலில், வண்டு துளைத்து உண்டாக்கிய துளையின் ஊடே, அக்கோடைக் காற்று நுழைந்து வீசுவதால் எழும் ஒலி, இனிமை தந்து நிற்றல் கண்டே, மக்கள் குழலாகிய இசைக்கருவியினைத் தோற்றுவித்தனர்; இதை உணர்ந்த புலவர், அவ்வொலி குழல்ஒலி போலும் எனக் கூறலும், இருப்பை அரும்புகள் நெருங்க நின்று காட்டும் காட்சி, வாய்திறந்த அம்பறாத் தூணியில் சேர்த்துவைக்கப்பட்டுள்ள அம்புக் காட்சியினையும், அவ்விருப்பையின் அரும்புகள் உதிர்ந்து உருண்டு, துளைபொருந்திய முத்துக்கள் உதிர்ந்து உருள்வன போலும் காட்சியினையும் காட்டி நிற்றலும், புலவர்தம் இயற்கை உணர் அறிவினை உணர்த்தி நிற்றல் உணர்க :

"புதலிவர் ஆடமைத் தும்பி குயின்ற
அகலா அந்துளை கோடை முகத்தலின்,
நீர்க்கு இயங்கு இனநிரைப் பின்றை வார்கோல்
ஆய்க்குழல் பாணியின் ஐதுவந்து இசைக்கும்."

"யாத்த தூணித் தலைதிறந் தவைபோல்
பூத்த இருப்பைக் குழைபொதி குவியிணர்
கழல்துளை முத்தின் செந்நிலத்து உதிர."

(அகம் : உ௨௫)

# ௬௪. எழுத்தாளன் சேந்தன் பூதனார்

அரசரிடும் கட்டளைகளை எழுதும் தொழிலுடையார் எழுத்தாளர் எனப்படுவர்; "கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன், மண்ணுடை முடங்கல் அம்மன்னவர்க் களித்து" (சிலம்பு: ௨௬: ௭௧-௧) எனவும், "ஏட்டின்மேல் நீட்டித் திருவெழுத்திட்டு ஆங்கு இறைவனும் தமர்களைப் பணிப்ப" (சிந்தாமணி: ௨௧௧0) எனவும் வருவன காண்க. இதனால், பூதனாரோ, அன்றி, அவர் தந்தையார் சேந்தனாரோ, பாண்டிய அரசர்பால் திருமுகம் எழுதும் தொழில் மேற் கொண்டு வாழ்ந்தவர் என்பது புலனாம். இவர் பெயர் மதுரை எழுத்தாளன் என்ற அளவிலேயே வழங்குவதும் உண்டு.

உப்புவணிகர், கீழ்க்கடல் அருகே உப்பளங்களைத் தோற்றுவித்து, அவற்றில் உவர்க்கும் கடல்நீரைத் தேக்கி ஞாயிற்றின் வெப்பத்தால் நீர் காய்ந்துபோக உண்டான வெள்ளிய உப்பினை விற்றுவரற்பொருட்டு, மேற்குத் திசையில் உள்ள நாடுகளுக்குக் கொண்டுசெல்ல, அவற் றைப் பொதிகளில் நிரப்பி, அப்பொதிகளை வெண்ணிறக் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு, வழியில் ஆறலைகள்வரி னின்றும் தம்மைக் காத்தற்பொருட்டுப் படைகளையும் எடுத்துக்கொண்டு, புறப்படுதற்காம் நல்லநாள் நோக்கிப் போவர்; பொதிச்சுமை தாங்காத கழுதைகள், குளம்புதேய நிலத்தை உதைத்து நடந்துசெல்லும் என அவர் கூறும் பகுதியால், அக்கால மக்கள் மேற்கொண்ட வாணிப வாழ்க்கையும், அவ்வணிகர்க்கு வழியில் உண்டாம் ஏதமும், அவ்வேதம் நீங்கப் படைகொண்டு செல்லும் பண்பும் முத லாயின ஒருவாறு விளங்குதல் காண்க.

"அணங்குடை முந்நீர் பரந்த செறுவில்,
உணங்குதிறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார், புள்ஓர்த்துப்,
படையமைத்து எழுந்த பெருஞ்செய் ஆடவர்
நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக்குளம்பு உதைத்த கல்பிறழ் இயவு." (அகம்: ௨0௭)

பழந்தமிழரசர் போர்வெறி மிக்கவராவர்; அவர் போர்வெறியினால் பாழான பகைவர்தேயம் பலவாம்; அத்தகைய வெறிமிக்க வேந்தன் ஒருவன் இயல்பினைப், புலவர் பூதனார் தாம் பாடிய பாட்டொன்றில் விளக்கிக் கூறியுள்ளார்.

வளம் நிறைந்த மருதநிலம் சூழ்ந்த தன் நாட்டையும் கொடி நுடங்கும் கோட்டையையும் திறையாகத் தந்து பணிந்து நிற்கும் பகையரசன்பால், தான் கொண்ட சினம் தணியானாய், அவன் அளிப்பனவற்றை ஏற்றுக்கொள்ளாது அவன் படையையும், பதியையும் பாழாக்குமாறு படைகளை மேலும் மேலும் செலுத்தும் வேந்தன் பாசறைக்கண் தன் படையோடு உளன் என அவர் கூறுவதறிக.

"தண்ணடை தழீஇய கொடிநுடங்கு ஆரெயில்
அருந்திறை கொடுப்பவும் கொள்ளான்,சினம் சிறந்து
வினைவயிற் பெயர்க்கும் தானைப்
புனைதார் வேந்தன் பாசறை யேமே."

(அகம்: அச)

தன்மகள், தான் மணத்தற்கு விரும்பிய ஓர் ஆண் மகனுடன் அவனூர் நோக்கிச் சென்றுவிட்டாள் என அறிந்த தாய், தன் மகள் வாழ்ந்த செல்வ வாழ்க்கையினையும், இப்போது, அவனோடு சென்று, செல்லும் வழியில் உறும் சிறுமையினையும் எண்ணி எண்ணித் துயர்உறும் தாயன்பு விளங்கப் பாடிய பாட்டு பாராட்டற்குரியதாம்.

தேன்பெய்து இனிப்பேறிய பாலைக் கையில் ஏந்திக் கொண்டு அவள்பால் சென்று, அவள் தலைமயிரை அன்பொழுகக் கோதிவிட்டும், அவள் விரும்பும் இனிய நல்லுரை கூறியும், அப்பாலை உண்ணுமாறு வேண்ட, உண்ணேன் எனக்கூறி மறுத்துவிட்டு ஓடிய என் மகள், இத்தகைய இன்பவாழ்வில் வாழ்ந்த இவளைத் துன்பம் நிறைந்த சுரவழியில் வலித்துச் செல்வது சரிதன்று என எண்ணும், அருள் உள்ளம் இல்லா அக் காளையோடு போய்,

இடைவழியில் நீர்வேட்கையுற்று, அது தணிக்கும் நீரை எங்கும் தேடி அகப்படாமையால், தண்ணீர் வேண்டிய யானை, தன் கைவிட்டுத் துழாவிய வறுங்கிணற்றுள், அத்தலைமகன் இறங்கித் தோண்டச், சிறிது ஊறிய உவர்ப்பு மிக்க நீரை, ஆண்டு நீர் அதிகம் இன்மையால் குறைக் குடமாக முகந்து, வெப்பத்தால் பெருமூச்சுத் தோன்றக் குடித்து வியர்த்துத் தளர்வளே; அந்தோ! அதை நினைந்து எங்ஙனம் ஆற்றுவேன்? எனத் துயர் உற்றாள் தாய் என்று கூறும் அவர் பாடற்பொருளை நோக்குக.

"நீடுமருப்பு ஒருத்தல்
பிணர்அழி பெருங்கை புரண்ட கூவல்
தெண்கண் உவரிக் குறைக்குட முகவை
அறனி லாளன் தோண்ட வெய்துயிர்த்துப்
பிறைநுதல் வெயர்ப்ப உண்டனள் கொல்லோ!
தேங்கலந்து அளைஇய தீம்பால் ஏந்திக்
கூழை உளர்ந்து, மொழிமை கூறவும்
மறுத்த சொல்ல ளாகி
வெறுத்த உள்ளமொடு உண்ணு தோளே."

(அகம் : உ0எ)

செல்வவாழ்வில் சிறக்க வாழ்ந்தவர், பின்னொருகால், தம் செல்வ வாழ்விழந்து வறுமையுற்றுத் துயர் உறுங் காலத்தே, பண்டு தாம்வாழ்ந்த சிறந்த வாழ்வை எண்ணி எண்ணி ஏங்கும் இயல்பினராவர் என்பதைப், புலவர், தலைவன் பிரிவால் தனித்து இருந்து துயர் உற்றுத் தன் நலன் இழந்த ஒருபெண், தன் தோழிபால் "தோழி! தலைவன் உறவினைப் பெறுவதற்குமுன் யான் நலம் பல பெற்றுச் சிறப்புற்றிருந்தேன்; என் கண்கள் தாமரை மலரை ஒத்து மாண்புற்றிருந்தன; வேய்போல் வனப் பெய்தி இருந்தன என் தோள்கள்; பிறையின் வடிவுடையதாகி, கண்டார் அறிவினைக் கலக்கும் கவினுடையதாயது என் நுதல்; ஆனால் அந்நிலை இன்று அழிந்துவிட்டதே!" எனக் கூறித் துயர்உற்றாள் எனப் பாடிப் (குறுந் : உஉசு) புலப்படுத்தியுள்ளார்-

## ௩௫. எழூஉப்பன்றி நாகன் குமரனூர்

நாகன் என்ற பெயர் பொதுவாகக் குறிஞ்சிநில மக்கள் மேற்கொள்ளும் பெயராம். குறிஞ்சிநில மக்கள் முருகவேளை வழிபடு கடவுளாகக் கொண்டவர்; முருகனுக்கு உரிய பெயர்களுள் குமரன் என்பதும் ஒன்று; இதனால் இவர் குறிஞ்சிநிலத்து வேடர் வழிவந்தவராவர் என்பது பெறப்படும். "உருகெழு சிறப்பின் முருகுமனைத்தரீஇக் கடம்பும் களிறும் பாடி" என முருகனையும், அவன் கடம்பையும், களிற்றையும் பாராட்டியிருத்தல் இதை உறுதிசெய்தல் காண்க. இவர் வேடர்வழி வந்தவரரவர் என்பது துணியப்படவே, எழூஉப்பன்றி என்ற இச்சிறப்பு, இவர்க்குத் தொழில் பற்றி வந்ததாம் எனக் கோடல் பொருந்தும். இவர் பாடிய பாக்கள் இரண்டு நெடுந்தொகை, மணிமிடைபவளத்தின்கண் இடம் பெற்றுள்ளன.

ஒரு செய்யுளில், பகைவரை அழிக்கவல்ல கடல் போலும் பெரிய படையுடைய பாண்டியனையும், அவனுக்குரிய பொதிய மலையினையும் எடுத்துக்கூறிப் பாராட்டியுள்ளார். "உடலுநர்க் கடந்த கடலந் தானைத், திருந்திலை நெடுவேல் தென்னவன் பொதியில், அருஞ்சினம் இழிதரும் ஆர்த்துவரல் அருவி" (அகம் : ௱௩௮).

பரதவர், தாம் கொணர்ந்த பெருமீன் இனங்களைத் தம் மக்கட்கு விளக்கொளியில் காட்டி விளக்குவர் என நெய்தல் நிலத்தார் இயல்பையும் உணர்ந்து கூறியுள்ளார்.

"நளிகடல்
திரைச்சுரம் உழந்த திண்டிமில் விளக்கில்
பன்மீன் கூட்டம் என்னையர்க் காட்டிய
எந்தையும் செல்லும்." (அகம் : ௨௪0)

## ௩௬. ஒருசிறைப் பெரியனார்

ஒருசிறைப் பெரியனார் என்ற இப்பெயர் இவர்க்கு இடப்பட்டது ஏன் என்பது புலனாகவில்லை; இப்பெயர், சில ஏடுகளில் ஒருசிறைப் பெயரினார் என்றும், ஒருசிறைப் பெரியனார் என்றும் காணப்படுகிறது; பெரியன் என்ற பெயர், மக்களுக்கு இட்டு வழங்கும் பெயர்களுள் ஒன்றாகப் பழந்தமிழ்க்காலத்தே வழங்கிற்று என்பது, பொறையாற்றுக்கிழான் பெரியன் என அழைக்கப்பெறுதலாலும் விளங்குவது காண்க. இவரால் பாராட்டப்பெற்றோன் நாஞ்சில் வள்ளுவன் ஒருவனே.

நாஞ்சில் வள்ளுவன், தமிழ் நாட்டின் தென்கோடிக் கண்ணதாய நாஞ்சில் நாட்டில், நாகர்கோயிலுக்கும், குமரி முனைக்கும் இடையில் உள்ள நாஞ்சில் மலையையும், அதைச் சூழவுள்ள நாட்டையும் ஆண்டிருந்த ஒரு குறுநிலத் தலைவன்; சேரவேந்தர்க்குக் கீழிருந்து வாழும் சிற்றரசன்; சிறந்த கொடையாளன்; ஔவையார், கருவூர்க் கதப் பிள்ளை, மதுரை மருதன் இளநாகனார் முதலாய புலவர் களும் இவனைப் பாராட்டியுள்ளனர்.

இவனைப் பாராட்டிய புலவர் ஒருசிறைப் பெரியனார், புலவரெல்லாம் முன்னிலை நிறுத்திப் பாடவிரும்பும் பேரரசர்களைப் பாடவிரும்பாது, நாஞ்சில் வள்ளுவனையே முதற்கண் பாட விரும்பியுள்ளார் எனின், நாஞ்சில் வள்ளு வனின் பெருமை வெளிப்போந்து நிற்றல் காண்க. பேரரசர்களைப் பாட விரும்பாத புலவர் தாம் ஒருவரே எனக் கூறும் புலவர் கூற்று, அவர் தம் பெருந்தகையினைப் புலப்படுத்தி நிற்றலும் காண்க. நாஞ்சில் வள்ளுவனை வாழ்த்திய புலவர், அவனைப் பெற்று உயர்நிலை உடையவ ராக்கிய அவன் பெற்றோரையும் வாழ்த்தியுள்ளமை, “மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன் தந்தை என் நோற்றான் கொல்எனும் சொல்” என்ற குறள் நெறிநின்ற நாஞ்சில் வள்ளுவன் பெருமையினையே மறைமுகமாகப் பாராட்டியதேயாம்.

"இரங்கு முரசின் இனஞ்சால் யானை
முந்நீர் ஏணி விறல்கெழு மூவரை
இன்றும் ஓர்யான் அவாவறி யேனே;
நீயே, முன்யான் அறியு மோனே.
.................................
நாஞ்சிற் பொருந!
சிறுவெள் அருவிப் பெருங்கல் நாடனை
நீ வாழியர்! நின் தந்தை
தாய்வா ழியர்! நிற் பயந்திசி னோரே." (புறம்: கரு)

வேந்தர்க்கு உற்றுழி உதவப் பிரிந்த தலைமகன், அத் தொழில் நெடுங்காலம் கழிந்தே முடிந்தமை கருதி வருந் தியக்கால், "தலைவ! வேந்தன், விரைவில் விடைதாராது, நேற்றிரவு அன்றோ வினைமுடித்து விடைதந்தான் என வருந்தற்க! தலைவி இருந்த ஊர் மிகமிக அணித்தே உளது" "புரவிற்று அம்ம! நீ நயந்தோள் ஊரே; எல்லி விட்டன்று வேந்து எனச் சொல்லுபு பரியல்" (நற்: கஉக) என்று கூறித் தேற்றினன் பாகன் எனவும், தலைவன் தோளிற் பாய்ந்து துயர்செய்து மீண்ட தலைவியின் கண்கள், கானவர் கலைமேல் எய்து கொன்று எடுத்த கறைதோய்ந்த அம்புபோலும் "கலைநிறத்து அழுத்திக் குருதியொடு பறித்த செங்கோல் வாளி மாறு கொண்டன்ன உண்கண்" (குறுந்: உஎஉ) எனவும் கூறியுள்ளமை அவர் புலமைக்கொரு அழகாம்.

## ௯௭. ஒருஉத்தனார்

ஒரூஉத்தனார் வரலாறு குறித்து ஒன்றும் விளங்கிற்றில்லை. இவர் பாடிய எருமை மறம் என்ற துறைதழுவிய பாடல் பெரிதும் பாராட்டற்குரியதாம்.

போர்க்களத்தே பகைவன் அமைத்திருந்த நாற்படையாலாய பேரரணை அழித்து, உட்புகுந்து தான் ஒருவனாகவே அரும்போர் ஆற்றிக்கொண்டிருந்தான் ஒரு வீரன்; அவன் ஒருவனைப் பகைவர் பலர் சூழ்ந்து போருடற்றுவாராயினர்; இந் நிலையினைக் கண்டான் மற்றொரு வீரன்; அவனுக்குத் துணையாக மற்றொருவர் விரைந்து செல்லாது போயின், அவனுக்குப் பகைவரால் கேடுண்டாதலும் கூடும் என அஞ்சினான்; உடனே வேலேந்தி விரைந்து அவனை நோக்கி நடக்கத் தொடங்கிவிட்டான்; முன்னவன் ஒருவனாலேயே தம் படை பாழுறுவதைக் கண்ட பகைவர், இவன் ஒருவனும் அவனுக்குத் துணையாய் வந்து சேரின், தம் படை முழுதும் அழிந்துவிடுமே என அஞ்சினர்; உடனே, வருகின்ற அவனை உள்ளே விடாது தடுத்து நிறுத்துங்கள் எனத் தம் படை மறவர்க்கு ஆணையிட்டனர்; அவர்களும் பலர் கூடி அவனைத் தடுத்து நிறுத்தப், பெரிதும் முயன்றனர்; ஆயினும் அவன் ஏந்திய வேல் ஒன்றையே துணையாகக்கொண்டு முன்னவனையே நோக்கினவனாய், முன் வைத்த காலைப் பின் வைப்பதோ, பின்னே நோக்குவதோ செல்லாது, எதிர்நின்று தடுத்தார் எவரையும் விடாது அழித்துக்கொண்டே ஆங்குச் சென்று அவனுக்குத் துணையாயினான். அத்தகைய பெருவீரன் ஒருவனின் போராற்றலைப் புலவர் புகழ்ந்து பாடியுள்ளார்.

வீரன், பின்னோக்காப் பெருமித நடையும், பகைவர் இடைநின்று செய்யும் இடையீடுகளை மதியா மாண்பும் உடையான் என்பதை விளக்க, அவன் கொலையுண்டு வீழ்ந்த வீரர்தம் குடர் தன் காலைப் பிணிக்கவும், பின்னோக்காது சேறல், பர்கர் பூட்டிய சங்கிலியாகிய தளையினை

மதியாது மதங்கொண்ட யானை செல்லுவதுபோலும் எனக் கூறியுள்ளதும், அவன் ஆங்குத் தனியே போருடற்றும் அவ்வீரன்பால் பேரன்பும், அவனைச் சூழ்ந்து நின்று அவனுக்குத் துயர்தரும் பகைவர்பால் பெருஞ்சினமும் உடையான்; அவனை அந்நிலையில் எவரும் தடுத்தல் அரிதாம் என்பதை விளக்க, தன் கன்றின்பால் பேரன்பும், அதைத் தன்னினின்றும் பிரித்துத் தளைத்து நிறுத்துவார்பால் பெருஞ்சினமும் கொண்டு பாய்ந்தோடும் பசுவை அவனுக்கு உவமை கூறியதும், புலவர் தம் பெருமையினைப் புலப்படுத்தி நிற்றல் காண்க.

"செற்றிய
திணிநிலை அலறக், கூழை போழ்ந்துதன்
வடிமாண் எஃகம் கடிமுகத்து ஏந்தி
'ஓம்புமின்! ஓம்புமின்! இவண்' என ஓம்பாது
தொடர்கொள் யானையின் குடர்கால் தட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத்து எதிர்ந்ததன் தோழற்கு வருமே."

(புறம் : உஎரு)

இவ்வாறு பலர்கூடித் தடுத்து நிறுத்தவும் நில்லாது, தான் எண்ணியதை முடிக்கும் திண்ணியனாகவே, அவன் அழகிய கண்ணி ஆடிக் கோடலும், அதற்கேற்ப ஆடையால் தன்னை அலங்கரித்துக் கோடலும், வேந்தனோடு ஒருங்கிருந்து உயர்ந்து தோன்றலும் நனிமிகப் பொருந்துமாம் எனப் பாராட்டி, அத்தகைய ஆண்மையில்லாதார், தம்மை ஆடைஅணிகளால் அலங்கரித்துக் கோடல் அறிவற்ற செயலாம் என்பது குறிப்பாற் புலப்பட வைத்துளார்.

"கோட்டங் கண்ணியும், கொடுந்திரை ஆடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலும்
ஒத்தன்று மாதோ இவற்கே." (புறம் : உஎரு)

## ௩௮. ஓதஞானி

ஞானி என்ற சொல் பேரறிவுடையவன் எனும் பொருள் உடையதாம்; ஓதஞானி என்பது பரந்த அறிவுடையன் எனப் பொருள்படும் என்று கூறுப. இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

இற்செறிக்கப்பட்ட தலைமகளைக் காண அவள் வருமாறு கூறிய குறியிடத்தே வந்த தலைமகன், ஆண்டு அவள் நெடிது வாராமையால் மீண்டு போய்விட்டான்; அவன் சென்றபிறகு ஆண்டுவந்த அவள், ஆங்கே அவன் தேர் வந்து சென்றது என்பதை, அதன் சக்கரம் செய்த வடுவாலும், அச்சக்கரத்தால் ஒடிக்கப்பட்டு ஆங்குக் கிடக்கும் நெய்தற்பூக்களாலும் உணர்ந்தாள்; மறுநாள் தலைவன் வந்து தன் வீட்டின் புறத்தே இருந்தக்கால், தான் ஆண்டு வரவில்லை என, அவன் பழிகூறல் பொருந்தாது; தான் ஆண்டு வரும்வரைக் காத்திராது கடிது மீண்டு, ஆங்குப் பின்னர்வந்த, தான் ஏமாறுதற்குக் காரணமாய அவனே தவறுடையான் என்பதைக் கூறுவாள்போல், யான் ஆண்டுச் சென்றேன்; ஆங்கே அவர் தேர் சென்ற வடுவையும், அத்தேரால் அழிந்த மலர்களையும் கண்டேன் எனக் கூறினள் எனப் பாடியுள்ளார் புலவர் ஓதஞானியார்;

"பூண்வனைந் தன்ன பொலஞ்சூட்டு நேமி
வாண்முகம் துமிப்ப வள்ளிதழ் குறைந்த
கூழை நெய்தலும் உடைத்து, இவண்
தேரோன் போகிய கான லானே." (குறுந்: உஉஎ)

## ௯௯. ஓதலாந்தையார்

ஆதன், தந்தை என்பனவே, ஆந்தை என ஆம் ஆதலின், இவர் ஆதன் என்பார்க்குத் தந்தையாம் முறையுடையாராவர்; ஆதன் என்ற பெயர் பெரும்பாலும் சேரரைக் குறித்து வழங்குவது என்ப ஆதலின், இவர் அச்சேர இனத்தாரோடு ஓரளவு தொடர்புடையராதலும் கூடும். இவர் பெயர்க்கு முன்வரும் ஓதல் என்ற சிறப்பு, இவர்பால் அமைந்து காணப்பட்ட ஓதற்பெருமையால் வந்ததாம். இவர் பாடியனவாக நூற்றுமூன்று பாடல்கள் கிடைத்துள்ளன; குறுந்தொகையில் மூன்று; ஐங்குறுநூற்றில் நூறு. இப்பாடல்கள் அனைத்தும் பாலைப் பொருள்குறித்தே பாடப்பெற்றுள்ளன.

பாலை, பிரிவுப்பொருள் குறித்து வருவது; பிரிவு, ஓதல், பகை, தூது இவைகுறித்தே வரும் எனினும், களவு ஒழுக்கம் நிகழும் காலத்தே, தலைவியைத் தமர், தலைமகனுக்கு மணம்செய்து தாரார் என வுணர்ந்தவழி, அத்தலைமகன், தலைமகளை அவள் தமர் அறியாதவாறு அழைத்துக் கொண்டு தன்னூர் செல்வதாய கொண்டுதலைக்கழிதலும் ஒருவகையான் பிரிவுப்பொருள் குறித்து வந்ததேயாம். புலவர் ஓதலாந்தையார், கொண்டுதலைக்கழிதல், பொருள்வயிற்பிரிதல் ஆய பாலைப்பொருள்கள் தழுவப் பாடியுள்ளார்.

தமரோடு தன்மனையகத்தே வாழ்ந்திருப்பின், தன் கற்பிற்குக் கேடுண்டாம் வண்ணம், தன் தமர் வேறு ஒருவனுக்குத் தன்னை மணம்செய்து தந்துவிடுவரோ என்ற அச்சத்தால், ஒரு தலைவி, தான் விரும்பிய தலைவன் நாட்டிற்கு அவனோடு செல்லலாயினள்; தன் மகள், தக்க பருவம் வந்துற்றாள் என அறிந்து அவளுக்கு மணம் முடித்தலும், அவ்வாறு முடிக்கும் வழி, அவள் மணக்க விரும்புவோன் யாவன் என அறிந்து அவனுக்கே மணம் முடித்துத் தருதலும் தாய்க்கு உரிய கடமையாம்; தன் தாய் அக்கட

மையில் தவறிவிட்டாள் ஆகவே, அறநெறியறியா அவள் மாட்டு மாருச்சினம் உண்டாயினும், அவள் தன்னைப் பேணி வளர்த்தவள் ஆதலின் அத்தாய்மாட்டு மாருப் பேரன்பும் அத்தலைமகட்கு உண்டு; அவள் அறியாவாறு வந்துவிட்ட அஃது ஒன்றற்கே அவள் வருந்துவள்; மேலும் தான் செல்லும் வழி, எதிர்ப்பட்டார் உயிரை எல்லாம் கொள்வதே குணமெனக் கொள்ளும் கொடிய வேங்கைகள் வாழும் மலைகளை இடையிடையே கொண்ட நீண்ட பெரு வழியாம் என்பதை அவள் அறிவாளாதலின், அந்நெறி சென்ற தன் மகட்கு என்ன துயர் நேர்ந்ததோ என்ற எண்ணம் எழஎழ, அவள் துயர் மேலும் மேலும் பெருகும் என்பதை அத்தலைமகள் அறிவாள்; ஆகவே அவள் துயர் நீங்குமாறு, தான் எத்தகைய இடையூறுமின்றி இனிது செல்வதை அவட்கு எடுத்துரைப்பாரை எதிர்நோக்கி நடந்தாள்; அவ்வழியே, தனக்கும் தன் தாய்க்கும் அறிந்தார் சிலர் செல்வதைக் கண்டாள்; அவர்களை அடுத்து வணங்கி வாழ்த்தினுள்; "ஐயன்மீர்! எம்மூர் செல்லும் நீவிர், ஆண்டு என் அன்னையைக் கண்டு, நும்மகள், எத்தகைய இன்னலுமின்றி, கொடுவழிகளை எல்லாம் கடந்து சென்று விட்டாள்; இவ்வாறு அவள் இனிது செல்வதற்குத் துணையாவார், கடுஞ்சினம் மிக்க காளைபோலும் ஆற்றலும், அழகும் உடைய அவள் காதலனும், அவன் தேருமேயாம் என அறிவிக்க வேண்டுகின்றேன்" என வேண்டிநின்றுள். என்னே அவள் அன்பு; இவ் அன்புள்ளத்தை அழகொழுக எழுதிக் காட்டியுள்ளார் புலவர் ஓதலாந்தையார்.

"கடுங்கண் காளையொடு நெடுந்தேர் ஏறிக்
கோள்வல் வேங்கைய மலைபிறக்கு ஒழிய
வேறுபல் அருஞ்சுரம் இறந்தனள் அவள்எனக்
கூறுமின்; வாழியோ! ஆறுசெல் மாக்கள்!
நற்றேள் நயந்து பாராட்டி
எற்கெடுத் திருந்த அறன்இல் யாய்க்கே." (ஐங்: நூஅ௫)

தன் மகள், தான் விரும்பிய ஓர் ஆண்மகன் தன்னேடு அவனூர் சென்றுவிட்டாள் என அறிந்த அக்காலத் தாய்,

அவ்வாறு, அவள் போயது, தனக்கும் தன் குடிக்கும் பழிதரும் செயலாம் எனக் கொள்வாளல்லள்; அவள் விரும்பிய அவனுக்கு அவளை மணம்செய்து தாராத் தன் செயலே பழியுடைத்து; அவ்வாறு சென்று தன் கற்பு நெறியினைக் காத்துக்கொண்ட அவள் செயலால் தன் குடிக்குவர இருந்த பழி நீங்கிற்று என்றே கருதுவாள்; தாய் அத்தகைய தூய உள்ளம் உடைமையால், சென்ற அவர்கள் மீண்டு இனிதே வருதலைப் பெரிதும் விரும்புவள். அவ்வாறு விரும்பும் ஒரு தாயின் உள்ளத்தை உணர்ந்து பாடியுள்ளார் புலவர்; காலையில், தம் வீட்டுக் கூரையில் அமர்ந்து காக்கை கரையின் விருந்தினர் யாரேனும் வருவர் என்பது ஒரு நம்பிக்கை. தன் வீட்டில் வந்து அமர்ந்த காக்கை ஒன்றைக் கண்டாள் அத்தாய்; அது கரைந்து, தன் மகளும், அவள் காதலனும் வரத் துணைபுரியாதா எனப் பெரிதும் விரும்பிற்று அவள் உள்ளம்; அவ்வாறு அது கரைய, அது உவப்பன உரைக்கத் துணிந்தாள். அக்காக்கை முன்சென்று நின்று, அதன் அழகிய தூவி, சிறிய வடிவம், கரியநிறம் ஆகியவற்றைப் பாராட்டினாள்; தன் மகளும், அவள் காதலனும் தன்னோடு இருந்து உண்டலை விரும்பிய தனக்கு, உணவு கிடைத்த வழி, தன் இனத்தைக் கூவி அழைத்து உடன் உண்ணும் உள்ளமுடைய அது உறுதுணைபுரியும் என்ற எண்ணத்தால், காக்கையின் அவ்வியல்பினை எடுத்துக் காட்டி, நீயும், நின் இனமும் உடன் உண்ணுமாறு உணவு தருவேன்; அவ்வுணவும், நீங்கள் விரும்பி உண்ணும் ஊன் உணவேயாகும்; அவ்வுணவையும் பொற்கிண்ணத்தில் வைத்துத் தருவேன் என்றெல்லாம் கூறினாள்; தாயின் இவ்வுரைகளால் உளம் மகிழ்ந்து, அவள் உவப்பன அளிக்கும் உளம் கொண்ட வழி, அதனை நோக்கி, இவ்வளவும் பெற்ற நீ, செயற்கரும் செயல் எதையும் செய்யவேண்டுவதின்று; சென்ற என் மகளும், அவள் மனம் விரும்பும் அம் மாண்புடையானும் வருமாறு காலையில் கரைதல் ஒன்றையே வேண்டுகின்றேன் என வேண்டி நின்றாள். அவ்வாறு வேண்டியவள் என் மகளும், அவனும் வரக்கரைக எனத் தன் மகளை

முற்கூறுது, அவனும், அவளும் வரக்கரைக என அவனை முற்கூறியதோடு, இருவரை ஒருங்கே கூறுங்கால், அவ்விருவரின் உயர்ந்தார் பெயரோடு இணைத்து வழங்கவேண்டிய ஒடு உருபை, 'காளையொடு அஞ்சில் ஓதிவரக் கரைக'' என அவன் பெயரோடு இணைத்து வழங்கியது, தாய், தன் மகளின் காதலன்பால் எத்துணைப் பெருமதிப்புக் கொண்டுளாள் என்பதை உணர்த்தி நிற்றல் காண்க. அழகிய இப் பொருளெலாம் ஒருங்கே தோன்றப் பாடிய புலவன் பெருமையினைப் பாராட்டிப் பெருமை கொள்வோமாக.

'மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை!
அன்புடை மரபின்நின் கிளையோடு ஆரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ;
வெஞ்சின விறல்வேல் காளையொடு
அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே!'' (ஐங் : நகக)

பொருள் கருதித் தன் மனைவியையும், மகனையும் பிரிந்துசெல்ல விரும்பும் ஒரு தலைவனை நோக்கி,

"அரும்பொருள் செய்வினை தப்பற்கும் உரித்தே;
பெருந்தோள் அரிவை தகைத்தற்கும் உரியள்;''

"நன்றில் கொண்க! நின்பொருளே;
பாவை அன்னநின் துணைப் பிரிந்து வருமே''

"நின்னயந் துறைவி கடுஞ்சூல் சிறுவன்
முறுவல் காண்டலின் இனிதோ?
இறுவரை நாட! நீ இறந்துசெய் பொருளே.''
(ஐங்: நOஉ, நOஎ, நOக)

என்றெல்லாம் கூறி அவனைப் பிரிந்து செல்லாவாறு தடை செய்ய விரும்பினாள் தோழி எனப் பாடிப், பொருளின் சிறுமையும், தலைவியின் பெருமையும் தோன்றப் பாடியுள்ளார் புலவர்.

ஒரு தலைமகன், பொருள்தேடிக் கொணரப் பிரிந்து சென்றக்கால், கார்காலம் தொடங்கும் காலத்தே மீண்டு

விடுவேன்; அதுகாறும் ஆற்றியிருக்க எனக் கூறிச் சென்றான்; தலைவன் தான் கூறியன பொய்யான் என்ற உறுதியான உள்ளம் உடையவள் அவன் மனைவி; அதனால் அவன் சொல்லை நம்பி அக்காலம்வரை ஆற்றியிருந்தாள் அவள். அவன் கூறிச்சென்ற கார்காலம் வந்துவிட்டது; ஆனால், அவன் வந்திலன்; சென்ற இடத்தே எடுத்த வினை முடியாத காரணத்தால், குறித்த காலத்தே அவனால் வர முடியவில்லை. அவன் கூறிச்சென்ற காலம் வந்துவிட்டதே; அவன் இன்னமும் வந்திலனே; இனி இவள் ஆற்றாள்; இவளை எவ்வாறு ஆற்றிக் காப்பேன் எனக் கவலைகொண்டாள் தோழி. காடுகளில் கொன்றை மரம் மலர்ந்துவிட்டமையால் கார்காலம் வந்துவிட்டது என்பதை அறிந்தாள் தோழி; அதனால் அவள் வருந்தினாள்; தோழியின் வருத்தத்தை உணர்ந்தாள் தலைவி; கொன்றை மலர்ந்துவிட்டது என்பதை அவளும் அறிந்தாள்; கொன்றை கார்காலத்தே மலரும் இயல்புடையது என்பதையும் அவள் அறிவாள். ஆனால், சென்ற அவர் கார்காலத் தொடக்கத்தே வந்துவிடுவதாக வாக்களித்துச் சென்றுள்ளார்; அவர் வாக்கு என்றும் பொய்த்தல் இல்லை; பொய் கூறி அறியார் அவர்; ஆகவே, அவர் கார்காலத் தொடக்கத்தே தவறாது வருவர். அவர் வரும் காலந்தான் கார் காலமாகும்; அவர் வருவதற்கு முன்னரே, காட்டுக் கொன்றைகள் மலர்ந்துவிட்டன ஆயினும், இது கார்கால மாகாது; கொன்றைகள் உண்மையில் காலமல்லாக் காலத்தி லேயே மலர்ந்துள்ளன. ஆகவே, கொன்றைகளின் செயலால், இதைக் கார்காலம் எனக் கொண்டு, அவர் வாராமை குறித்து வருந்தல் அறிவுடைமையன்று என்று கூறித் தன்பொருட்டு வருந்தும் தோழியைத் தானே தேற்றினாள்; தன் தலைவன் கூறிய சொல்லில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள அக்காலத் தலைமகளின் உள்ளத்தின் உயர்வு தான் என்னே! தம் இயல்பில் என்றும் தவறுதல் இல்லா இயற்கைப் பொருள்களின் இயல்பினை நம்ப மறுக்கும் அவள் உள்ளம், தன் தலைவன் கூறிய சொல்லை நம்பத்

துணிகிறது! அவன் சொல் தவறுபடுதலும் உண்டு என்பதை நம்ப மறுக்கிறது! எத்துணை உயரிய உள்ளம் அவ்வுள்ளம்; இவ்வுள்ளமன்றோ இக்கால மகளிர்க்கு மிக மிகத் தேவை! இத்தகைய உள்ளத்தை உணர்ந்து உணர்த்திய புலவர் ஓதலாந்தையார்தம் உயிர் ஓவியம் கண்டு உணர்வு பெறுவோமாக!

"கானம், கார்எனக் கூறினும்,
யானோ தேறேன்; அவர்பொய்வழங் கலரே"
(குறுந் : உக)

வினைமேற் சென்ற தலைவன், வந்துவிட்டான்; தலைவியும், தோழியும் எதிர்பார்த்த காலத்திற்கு முன்னரே வந்துவிட்டான்; அது அவர்கட்குப் பெருவியப்பாயிற்று; அத்துணைச் சேண் நெடுந் தூரத்தை, அத்துணை விரைவில் கடந்து வருதல் அவனுக்கு எவ்வாறு முடிந்தது என்பதை அறியத் துடித்தது அவர்கள் உள்ளம்; அதை அறிந்தான் அவன்; பிரிந்து செல்லுங்கால், உங்களைப் பிரிந்து செல்ல வேண்டியுளதே என்ற கவலை, கால்களைத் தளைத்ததாலும், உங்களையே உள்ளிச் சென்றமையாலும் விரைந்து செல்ல முடியவில்லை; அதனால், வழி நீண்டு கொண்டே போவது போல் தோன்றிற்று; ஆனால் மீண்டு வருங்கால், உங்களைக் காண வேண்டும் என்ற வேட்கை உள்ளிருந்து துரத்த விரைந்து வந்தேனாதலின், போங்கால் நீண்டு தோன்றிய அவ்வழி, நனிமிகக் குறுகிவிட்டது என்று கூறினான் தலைவன்; என்னே அவன் உள்ளம்!

"பிரிந்த காலைத்
தவநனி நெடிய வாயின; இனியே
அணி இழை உள்ளியாம் வருதலின்
அணிய வாயின சுரத்திடை ஆறே." (ஐங் : நடுக)

## ௪௦. ஓரம்போகியார்

ஓரம்போகியார் வரலாறு குறித்து ஒன்றும் தெரிந்திலது; இவர் இயற்பெயர், ஓரம்போதியார் என்றும் ஓரேர் போகியார் என்றும் ஏடுகளில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஓரம்போகியார் மருதத்திணையைப் பாடுவதில் சதுரப்பாடுடையவர்; இவர் இயற்றிய பாக்கள் நூற்றுப் பத்து. நற்றிணையில் இரண்டு; குறுந்தொகையில் ஐந்து; ஐங்குறு நூற்றில், மருதத்திணை குறித்து வந்த முதல் நூறு; அகத்தில் இரண்டு; புறத்தில் ஒன்று.

தலைமகள் ஒருத்தி, தங்கள் நாட்டு அரசன் வாழ வாழ்த்தினள் எனப்பாடிய பாக்கள் அனைத்திலும், "வாழி ஆதன், வாழி அவினி" எனச் சேரவேந்தன் ஒருவனையே எடுத்துக்காட்டி யிருப்பதால், புலவர் ஓரம்போகியார் சேர நாட்டினர்; அச் சேரவேந்தன்பால் பேரன்புடையவர் எனக் கோடல் பொருந்தும். ஆதன் என்பது சேரமன்னர்களின் குடிப்பெயர்களுள் ஒன்று; இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், செல்வக்கடுங்கோ வாழியாதன், பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்ற பெயர்களை நோக்குக. அவினி என்பான், அச் சேரர்குடி வந்த ஓர் அரசனாவன். ஆதன் அவினியையே யல்லாமல், சோழரையும், அச்சோழர் குடிவந்த கிள்ளியையும், அச் சோழர்க்குரிய ஆமூரையும், பாண்டியரையும், அவர்க்குரிய தேனூரையும், விரான், மத்தி என்ற தலைவர்களையும், அவர்களுக்கு உரிய 'இருப்பை, கழார் என்ற ஊர்களையும், காவிரி, வையை போன்ற பேராறுகளையும், இந்திரவிழாப் போலும் பெருவிழாக்களையும் உணர்ந்து பாராட்டியுள்ளார் புலவர்.

சோழர், வெல்லும் போர்வல்லவர்; அச்சோழர் குடிவந்த கிள்ளி, ஒளிவீசும் இலையினையுடைய வேற்படையும், விரைந்து செல்லும் குதிரைப்படையும், பகைவர் மதிலை அழிக்கவல்ல யானைப்படையும் உடையவன்; அச்சோழர்க்

குரிய ஆமூர், பகற்காலத்து ஒளிபோலும் பேரொளி நிறைந்த விளக்குகளைப் பெற்றுள்ளமையால், இரவுக் காலத்தின் இயல்பினை அறியமாட்டாப் பெருஞ்சிறப்புடை யது. "பகல்கொள் விளக்கோடு இராநாள் அறியா, வெல் போர்ச் சோழர் ஆமூர்," "கதிரிலை நெடுவேல் கடுமான் கிள்ளி, மதில்கொள் யானை" (ஐங் : ருசு, எஅ.)

பாண்டியர், திண்ணிய தேர்ப்படையுடையவர்; தம்மைப் பாடிவருவார்க்குத் தேர் பல அளிக்கும் வண்மைக் குணமுடையவர்; அவர்க்குரிய தேனூர், ஆற்றுப் பெருக்கு அற்று, அடிசுடும் அந்நாளும், ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும் சிறப்புடையது; கரும்பாலை ஒலியாலும், களிறு களின் பிளிற்றொலியாலும் நிறைந்தது; பல கதிர்களை யுடைய ஞாயிறேபோலும், பல கதிர்களையுடைய வேள்வித் தீயாலும், ஆம்பல்நிறை வயல்களாலும் விளக்கம் பெற்றது. "தின்தேர்த் தென்னவன் நன்னாட் டுள்ளதை, வேனிலாயி னும் தண்புனல் ஒழுகும் தேனூர்," "கரும்பின் எந்திரம் களிற்று எதிர் பிளிற்றும், தேர்வண் கோமான் தேனூர்," "பகலில் தோன்றும் பல்கதிர்த் தீயின், ஆம்பலம் செறுவின் தேனூர்" (ஐங் : சு௪, ருரு, சு௭)

விரான், வரையாது வழங்கும் வள்ளன்மையுடை யவன்; அவன் இருப்பை, அவன் வண்மைக்குத் துணைபுரியு மாறு மலைபோல் உயர்ந்த நெற்போர் பல நிறைந்த சிறப் புடையது. "விண்டு வன்ன வெண்ணெல் போர்விற், கைவண் விராஅன் இருப்பை." (ஐங் : ருஅ)

மத்தி, வண்மையாற் சிறந்தவன்; அவன் கழார்த் துறை, கரைக்கண் நிற்கும் மாமரத்தின், விளைந்து முற்றிய கனிகள் காம்பற்று விழு ' தாறும் எழும் 'துடும்' எனும் ஒலியால் நிறைவுற்றது. "ா றுவடி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம், நெடுநீர்ப் பொய்கைத் துடும் என விழூஉம், கைவண் மத்தி கழார்" (ஐங : சுக.)

புலவர் ஓரம்போகியார், நீரினும், நிலத்தினும் வாழும் உயிர் வகைகள் மரஞ்செடி கொடிகள் ஆகியவற்றின் இயல்புகளை உள்ளவாறுணர்ந்த ஓர் உயிர்நூற் புலவராவர்.

நண்டு, புள்ளிகள் பொருந்திய ஓடுடையது; அது தான் வாழும் இடத்தே வளர்ந்திருக்கும் ஆம்பல் முதலாயவற்றின் தண்டுகளை அறுக்கும் இயல்புடையது; "புள்ளிக் கள்வன் ஆம்பல் அறுக்கும்;" அது, நீர்நிலைகளை அடுத்து வளர்ந்துள முள்ளிச் செடிகளின் வேர்க்கண் வளை அமைத்து வாழும்; "புள்ளிக் கள்வன், முள்ளிவேர் அளைச் செல்லும் ஊரன்." நண்டு, சினையீனும் காலத்து, அதன் வாலின்கீழ் உள்ள சிறு மயிர்களில் அதன் சினைகள் ஒட்டிக் கொண்டு கிடக்கும்; சினை பயந்த நண்டு, உடல் சுருங்கிப் பின் முன்னையினும் உடல் பருத்தல் வேண்டி, ஓடு மாற்றத் தொடங்கும்; அது புத்தோடு பெறுங்காலத்தே, அதன் வாலில் ஒட்டிக் கிடந்த சினைகள் பொரித்துத் தாய் நண்டைவிட்டு நீங்கும்; சினைபயவாமுன் இருந்த நிலைமையின் வேறாய், புத்தோடும், பருவுடலும் பெறுவான் வேண்டி, மெலிந்து, ஓய்ந்து ஒடுங்கிக்கிடக்கும் நண்டு, இறந்ததுபோல் தோன்றும் ஆதலின், நண்டு பிறப்பின், தாய் இறக்கும் என்ற கொள்கையும் உண்டு; "தாய் சாப்பிறக்கும் புள்ளிக்கள்வன்." நண்டு, நெற்கதிர்களை அறுத்துக் கொண்டு சென்று தன் வளையுள் புகும்; "செந்நெலம் செறுவிற் கதிர்கொண்டு கள்வன் தண்ணக மண்ணளைச் செல்லும்." கழனியில் விதைத்த வெண்முளைகளைக் கழனியைக் காவல்புரிவாரையும் அஞ்சாது, கடித்துப் பாழ்செய்யும்; "மாரி கடிகொளக் காவலர் கடுக, வித்திய வெண்முளை கள்வன் அறுக்கும்," நண்டின் கண்கள், வேம்பின் அரும்பு போல் காட்சி தரும்; "வேப்புநனை அன்ன நெடுங்கட் கள்வன்." நண்டைப்பற்றி அவர் நமக்கு அறிவிப்பன இவை.

முதலை, தான் ஈன்ற குட்டிகளைத் தானே தின்னும் கொடுமையுடையது; "பிள்ளை தின்னும் முதலை," "தன் பார்ப்புத் தின்னும் அன்பின் முதலை," ஆமை, இடையூறில்லா இடந்தேடிச் சென்று, ஆங்கொரு குழிசெய்து, அதன்கண் தன் சினைகளை ஈன்று, அவ்விடத்தை மணலால் மூடி மறைத்துவிட்டு நீர்நிலை புகுந்துவிடும்; முட்டைகள் பொரித்தவுடன், யாமைப் பார்ப்புக்கள், மணலைக் கிளைத்

துக்கொண்டு வெளிப்போதரும். வெளிவந்த அவை, தம் தாய் உறையும் நீர்நிலை தேடிச் செல்லத்தொடங்கும்; அக்காலை, இடைவழியில் அவற்றிற்கு எத்தனை தடைகள் நேரினும், அவை அனைத்தினையும் கடந்து நீர்நிலை புகுந்துவிடும். தாயுறையும் நீர்நிலை அடைதல், தாயை அடைதல் போலும் ஆகவே, தடை பல நேரினும் தட்டாது நீர்நிலை அடையும் ஆமைப் பார்ப்புக்களைத் தாய்முகம் நோக்கி வளரும் தன்மையுடையன எனக் கருதினர் பழந்தமிழ் மக்கள்; 'யாமை இளம் பார்ப்புத் தாய்முகம் நோக்கி வளர்ந்திசினாஅங்கு.'' ஆமை, முதலைபற்றி அவர் அறிந்து அறிவிப்பன இவை.

ஓரம்போகியார், நாட்டுப்பற்று நனிமிகக் கொண்ட நல்லவராவர்; நாட்டுப்பற்று மட்டும் பெற்று, அந்நாட்டை நன்னிலையில் நிறுத்தற்காம் நல்வழியினை அறியாராயின், அவர்தம் அப்பற்று, பயனற்றுப்போம். ஆனால், நம் புலவரோ, நாட்டுப் பற்றோடு, அந்நாடு, நல்வாழ்வு வாழக்காணும் நல்லறிவும் உடையராவர். அவர்தம் நாட்டுப்பற்றும், அந்நாட்டை நன்னிலைக்கண் நிறுத்த அவர் பெற்றிருந்த அரசியலறிவும், அவர் பாடிய ஐங்குறு நூற்றுப் பகுதிக்கண் உள்ள முதற்பத்தாகிய வேட்கைப் பத்தில் செய்யுட்கள்தோறும் விளங்கி நிற்றலைக் காணலாம்.

தலைவன், தலைவி ஆய இருவருள், ஆண்மகன் ஒரோ வழி அறனல்லன மேற்கொள்வனாயினும், அவன் மனைவி தன் இல்லறக் கடமையில் சிறிதும் தவறுள் என்பதைக் கூறுமுகத்தான் தன் கணவன் பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டிருந்த காலத்தும், தன் வீடும், நாடும் வாழ்தலையே வேண்டி நின்ற ஒரு பெண், ''நாடெலாம் வாழக் கேடொன்றும் இல்லை.'' நாடுவாழின், தன் வீடும் வாழும் என்ற நல்லறிவுடையளாகித் தன் நாடு வாழ வாழ்த்துவாள், அந்நாட்டில் இன்னின்ன நிலைபெறுக! இன்னின்ன நில்லாது ஒழிக! எனக் கூறி வாழ்த்தினள் எனப் பாடிப் புலவர், தம் உள்ளத்தை உலகத்தினர்க்கு உணர்த்தியுள்ளார்.

ஒரு நாடு, நாடாக விளங்கவேண்டுமாயின், அந்நாட்டில் உயிர்ப் பண்மைகள் வாழ்தல்வேண்டும்; உயிர்ப்பன்மைகள் இன்றேல் நாடு இல்லையாம்; தலைவனைப் பிரிந்து தனித்துறையும் தலைவியொருத்தி, தன் தனிமை நிலைக்கு வருந்துவாள், "வாழ்வோர் போகிய பேரூர்ப் பாழ்காத்திருந்த தனிமகன் போன்றேன்" எனக் கூறுமுகத்தான், குடிமக்கள் அற்ற ஊரைப் பாழூர் எனப் பழித்துள்ளமை காண்க. நாட்டில் உயிர்ப் பன்மைகள் வாழவேண்டுமேல், அவ்வுயிர்களை வாழச்செய்வதாய உணவுப்பொருளும் வேண்டுமாம்; என்னை, "உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே; உண்டி முதற்றே உணவின் பிண்டம்" என்பவாகலின்; அவ்வுணவுப் பொருள் குறைவின்றி நிறைந்திருத்தல் வேண்டுமாயின், அந்நாடு நீர்வளம், நிலவளம் மிக்க நாடாதல்வேண்டும்; நீர்வளம், நிலவளம் இரண்டனுள், நீர்வளமே மிகவும் வேண்டப்படுவதாம்; உலகிற்கு இன்றியமையாதது நீரே; அந்நீரைத் தருவது மழை; மழையில்லா நாட்டில் பசும்புல்லின் தலை காண்பதும் அரிதாம்; அந்நாட்டில் உழவர், தம் ஏர்த்தொழிலையும் இயற்றல் ஆற்றார்; ஆகவே, உலக வாழ்விற்கே அடிப்படையாயது மழை; அம்மழை குறைவறப் பெய்யும் நாட்டிலேயே நலங்கள் எல்லாம் நனிசிறந்து விளங்கும்; இவ்வுண்மையினை உணர்ந்தவராதலின், புலவர், "மாரி வாய்க்க வளம் நனிசிறக்க!" என வாழ்த்தியுள்ளார்.

மழைபெய்து விட்டமையினாலேயே, வளம் சிறந்துவிடும் எனக் கொள்வதற்கில்லை; விளையும் பயிர்களுக்கு உண்டாம் இடையூறு எண்ணில் அடங்கா; வீட்டில், விலங்குகளாலும், புழு, பூச்சிகளாலும் அவை பாழுறும்; இவ்விடையூறுகளையெல்லாம் கடந்து வளங்கொழித்தல் வேண்டும் என்பதை உணர்ந்தவர் புலவர் ஆதலின் "மாரி வாய்க்க" என்பதோடு நில்லாது, "வளம்நனி சிறக்க" என்றும், "விளைக வயலே" என்றும், "நெற்பல பொலிக" என்றும் கூறியுள்ளார்.

உழவுத் தொழில் ஒன்றில் மட்டும் சிறந்த நாடோ, கைத்தொழில் ஒன்றில் மட்டும் சிறந்த நாடோ, உலகில் உயர்நிலை பெறுதல் இயலாது; எந்த நாட்டில் உழவுத் தொழிலும், பிற கைத்தொழில்களும் ஒருசேரச் சிறந்து விளங்குகின்றனவோ அந்நாடே உலக நாடுகள் அனைத்தினும் உயர்நிலைபெற்று விளங்கும் என்ற உண்மையினை யுணர்ந்த நம் புலவர், "நெற்பல பொலிக" என வாழ்த்தியதோடு நில்லாமல், அந்நாடு பிற தொழில்களிலும் தலைசிறந்து, அதனாற் பெற்ற பொருள் வளத்தினையும் பெறுக என்ற எண்ணமுடையராய்ப், "பொன் பெரிது சிறக்க" என்றும் வாழ்த்தியுள்ளார்.

"ஈதல், இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை," என்றும், "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" என்றும் கூறுவர் பெரியோர். ஈட்டிய பெரும்பொருளைத் தாமே தனித்துண்ண எண்ணுதல், இழிவு மட்டுமன்று; இடர்ப்பாடும் உடைத்து; அவ்வாறு உண்பதால் பொருள்நிலையில் ஏற்றத்தாழ்வான இருவேறு நிலைகள் உண்டாகி, உலகின் அமைதிகெட ஏதுவாகிறது. ஆகவே, "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற விரிந்த உள்ளமுடையராய்த் தம்பால் உள்ள பொருள்களைத் தம்மை நோக்கி வருவார்க்கு வழங்கி வாழ்தல் வேண்டும்; இதை யுணர்ந்த புலவர், வருவார்க்கு வழங்குக என்று கூறுவதோடு அமைதியுறாது, வாராத இரவலரையும் வரவழைத்து வழங்குக என்ற கருத்துப்பட "வருக இரவலர்" என்றும் கூறியுள்ளார்.

மக்கள் உண்ணும் உணவு அளவால் மிகுவதினும், ஆற்றலால் மிகுந்ததாதல் வேண்டும். மக்கள் உடற்கு உரம் ஊட்டும் உணவினையே தேடி உண்ணுதல் வேண்டும்; உரம் ஊட்டும் உணவுகளுள் பாலே சிறந்தது; பால் உணவு உடையார், நாள் பல பெற்று வாழும் நல்லுடல் உற்றவராவர்; ஆகவே, நாட்டில் பால்வளம் பெருகுதல்வேண்டும்; பால் தரும் ஆனிரை முதலாயின செழித்து வளர்ந்து

செல்வம் கொழித்தல் வேண்டும்; உணவாகிப் பயன் தருத லோடு உழைப்பாலும் நாட்டிற்கு நலந்தருவன கால்நடை களாம்; ஆகவே, கால்நடைச் செல்வங்களைக் கருத்தூன்றிப் போற்றியுள்ளார் புலவர். "பால் பல ஊறுக! பகடு பல சிறக்க!" என வாழ்த்தியுள்ளமை நோக்குக.

ஒரு நாட்டு மக்கள் பசியும், பிணியும், பகையும் ஒழிந்து வாழ்வதே அந்நாட்டின் நற்பண்பாம்; பிணியும், பகையும் வளர்தற்குத் துணைபுரிவது பசி; பசித்த உடலில் பலகோடி நோய்கள் இடம்பெறும்; பகுத்துணர் அறிவு, பசித்தாரிடையே நிலைபெறுதல் இன்றும்; மாறாக அழுக் காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் போன்றன இடம் பெற்றுவிடும். "குடிப் பிறப்பழிக்கும்; விழுப்பம் கொல் லும்; பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்; நாணணி களையும்; மாணெழில் சிதைக்கும்;...பசிப்பிணி யென்னும் பாவி" எனப் பிறரும் பசியினைப் பழித்தல் காண்க. ஆகவே, பசி, பிணி, பகையாகிய பாவங்கள் மூன்றனுள், முதற்கண் ஒழிக்கப்படவேண்டுவது பசியே. அது ஒழிந்த நாட்டு எல்லைக்கண் நிற்கவும் பிணி அஞ்சும். பசியும், பிணியும் அற்ற நாட்டின்மீது பகைகொண்டார் பாழுறுதல் திண்ணம். ஆகவே, "பசியில் லாகுக! பிணிசேண் நீங்குக" என்ற புலவர், அந்நாட்டின்மீது பகைகொண்டு வருவாரும் தோற்று, தோல்விக்கறிகுறியாகப் புல்லரிசியுண்டு புன்மை யுறுவாராக என்றும் கூறியுள்ளார்.

ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் தங்கள் தங்களுக்குரிய ஒழுக்கத்தில் நிற்றல் வேண்டும்; ஓதிய ஒழுக்கத்தைக் கைவிட்டு மக்கள் ஒழுக்கநெறி குன்றிய நாட்டில் ஒற்றுமை கெடும்; ஒற்றுமை கெட்ட நாட்டில் அமைதி குன்றும்; குழப்பம் உண்டாம்; அகத்தே அமைதி யற்ற நாடு, உள்நாட்டுக் குழப்பத்தால் உருக்குலைந்த நாடு, அரிய அரணும், ஆற்றலும், அளவற்ற பொருளும், பொன் னும் உடைத்தாயினும் பயனின்றாம்; அந்நாடு மாற்றார் கைப்பட்டு மாண்பிழத்தல் உறுதி; ஆகவே நாட்டு மக்கள், ஒழுக்கநெறி நிற்றல் இன்றியமையாதது என்பதை

உணர்ந்த புலவர், பார்ப்பார் முதலாம் பல்வேறு இனத்தினரும், ஓதல் முதலாம் ஒழுக்கங்களை வழுவாது கடைப்பிடிப்பாராக எனக்கூறும் கருத்தான் தலைமை கருதிப் "பார்ப்பார் ஓதுக" எனக்கூறி வாழ்த்தியுள்ளார்.

ஒழுக்கநெறி நிற்க என உடன்பாட்டு வாய்பாட்டான் வாழ்த்தியதோடு அமைதியுற்றிலது புலவர் உள்ளம்; உயிரினும் சிறந்ததாக ஓம்பப்படவேண்டுவது ஒழுக்கமே ஆதலின், அவ்வொழுக்க நிலைபேற்றினை எதிர்மறை வாய்பாட்டானும் வற்புறுத்துவான் வேண்டி, ஒழுக்கக்கேடுகளுள் ஒன்றாய களவு ஒழிக என்றுகூறி, ஒழுக்கக்கேடுகள் எல்லாம் ஒருங்கே ஒழிக என்றும் உணர்வூட்டியுள்ளார்.

"பார்ப்பார் ஓதுக"; "களவில் லாகுக" எனச் சிறப்பு வகையான் அறம் ஒன்றையும், அறமல்லது ஒன்றையும் விதந்தோதி வற்புறுத்திய புலவர், மக்கள், பார்ப்பார் ஓதுதல் ஒன்றே அறம்; களவு ஒன்றே அறமல்லது என்று எண்ணிவிடுவரோ என அஞ்சினார்போலும்! "மக்காள்! அவ்வாறு எண்ணிவிடன்மின்! பார்ப்பார் ஓதுதல்போலும் அறங்கள் பல உள; அவையெல்லாம் நின்று நிலைபெறுக! களவுபோலும் அறமல்லனவும் பல உள; அவையெல்லாம் ஒழிக! என்று கூறி வற்புறுத்துவான் விரும்பி, "அறம் நனி சிறக்க! அல்லது கெடுக!" "நன்று பெரிது சிறக்க! தீதில் லாகுக!" என்றெல்லாம் கூறியுள்ளார்.

நாடு, மழை பெற்று வளம் மிகுதற்கும், பகையற்றுப் பெருமையுறுதற்கும், ஒழுக்கம் நிறைந்து உள்நாட்டுக் குழப்பம் குன்றுதற்கும் உறுதுணைபுரிவது அந்நாட்டு நல்லாட்சியே; நல்லாட்சியற்ற நாட்டில் மேற்கூறிய மாண்புகள் நின்று நிலைபெறாது, குன்றி நிலைகுலையும். "அந்தணர் நூற்கும், அறத்திற்கும் ஆதியாய், நின்றது மன்னவன் கோல்", "ஆபயன் குன்றும்; அறுதொழிலோர் நூல் மறப்பர், காவலன் காவான் எனின்," "இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட, பெயலும் விளையுளும் தொக்கு," "முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி, ஒல்லாது வானம் பெயல்" என்று வள்ளுவர்

காட்டும் வழிவகைகளையும் நோக்குக. நாடு நலம்பெற வேண்டுமாயினும், பெற்றுள்ள நலம் பலவும் நின்று நிலை பெறுதல் வேண்டுமாயினும், அந்நாட்டில் நல்லாட்சி நிலை பெறுதல் வேண்டும். ஆகவே, அரசன் முறைசெய்து காப்பாற்றும் மன்னவனாதல் வேண்டும் என விரும்பிய புலவர் "அரசு முறை செய்க" என்றும் வாழ்த்தியுள்ளார்.

நாடு வளம் பெற்று, வறுமையற்று விளங்குவதால், எம்மை எதிர்ப்பாரும் இலர்; யாம் எதிர்ப்பின் முன்னின்று தடுப்பாரும் இலர்; ஆகவே உலகில் எம் அரசு ஒன்றே வாழ்தல் வேண்டும்; ஏனை அரசுகள் ஒன்று அழிதல் வேண்டும்; இன்றேல் எமக்கு அடங்கி ஒடுங்குதல் வேண்டும் என்ற நாடாசை அரசற்கு உண்டாகிவிடுதலும் கூடும். அத்தகைய பேராசை கொண்டு எப்பொழுதும் போர், போர் எனப் போர் வெறிகொண்டு திரியும் அரசு, எத்தனை ஆற்றல் படைத்ததாயினும் இறுதியில் அழிந்தே போம்; ஆதலின், நாட்டு அரசர்பால் பகையுணர்ச்சி இல்லாமை வேண்டும் என்ற அறிவுடையராய், "வேந்து பகை தணிக" என்பதையும் விடாது அறிவுறுத்தியுள்ளார்.

ஒரு நாடு எத்துணை வளமும், வலிவும் உடையதாயினும், அந்நாட்டில் நிலையான அரசியல் அற்று, இன்று ஓர் அரசு, நாளை ஓர் அரசு என நாளுக்கோர் அரசு தோன்றும் நிலையற்ற அரசியல் உண்டாயின், அந்நாடு பெற்றுள்ள வளத்தாலும் வலியாலும் பயன் இன்றாம்; அந்நாடு நாளடைவில், அவற்றை இழந்து அழிந்துபோதல் உறுதி; ஆகவே, நாட்டில் நிலையான அரசு நின்று நிலை பெறுதல் வேண்டும் எனவுணர்ந்த புலவர், ஆளும் அரசன் ஆண்டு பல பெற்று வாழ்வானாக எனவும் வாழ்த்தியுள்ளார்.

சுருங்கக்கூறின், மாரிவாய்த்தல் வேண்டும்; வளம் நனிசிறக்கவேண்டும்; வயல் விளைதல்வேண்டும்; நெற் பல பெருகவேண்டும்; பொன் பெரிது சிறக்கவேண்டும்; இரவலர் வாழவேண்டும்! பால் பல ஊறுதல்வேண்டும்; பகடு பல சிறத்தல்வேண்டும்; பசியில்லாமையும், பிணி

சேண் நீங்கலும், பகை ஒழிதலும் வேண்டும்; ஓதல் முதலாம் ஒழுக்கநெறி நிற்றல்வேண்டும்; களவு முதலாம் கொடுமைகள் குன்றல்வேண்டும்; நன்மை பெருகவேண்டும்; தீமை இலவாதல்வேண்டும்; அரசுமுறை செய்தல் வேண்டும்; அவன்பால் போர்வெறி குன்றுதல்வேண்டும்; ஆண்டுபல அவன் வாழவேண்டும். புலவர் கண்ட அரசியல் நெறி இது; என்னே அவர்தம் அரசியல் அறிவு!

> "நெற்பல பொலிக! பொன்பெரிது சிறக்க!"
> "விளைக வயலே! வருக இரவலர்!"
> "பால்பல ஊறுக; பகடுபல சிறக்க!"
> "பகைவர்புல் ஆர்க! பார்ப்பார் ஓதுக!"
> "பசிஇல் லாகுக! பிணிசேண் நீங்குக!"
> "வேந்துபகை தணிக! யாண்டுபல நந்துக!"
> "அறம்நனி சிறக்க! அல்லது கெடுக!"
> "அரசுமுறை செய்க! களவுஇல் லாகுக!"
> "நன்றுபெரிது சிறக்க! தீதுஇல் லாகுக!"
> "மாரி வாய்க்க! வளம்நனி சிறக்க!"
>
> (ஐங் : க-க௦)

ஓரம்போகியார், மக்களை மக்கட்டன்மையுடைய ராக்கும் மாண்புடையராவர்; மக்களாய்ப் பிறந்தாரெல்லாரும் மக்களாகிவிடார்; மக்கட்குரிய மாண்புடைக்குணங்களை அவர் உடையராதல்வேண்டும்; அக்குணங்களைப் பெற்ற வழியே அவர் மக்களாக மதிக்கப்பெறுவர்; "உறுப்பு ஒத்தல் மக்களொப்பு அன்றால்; வெறுத்தக்க பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு" மக்கள் பெறவேண்டிய மாண்புகள் பலப்பல; இன்னாசெய்யாமை அவற்றுள் ஒன்று; பிறர்க்கு இன்னாதன செய்வதில் இன்பங்காண்பதே உலகியல். அத்தகைய உலகில், ஒருவர் இன்னாதன செய்யாதிருத்தலே அரிது: என்றால், அவர், தமக்கு இன்னாதன செய்தார்க்கும், தாம் இன்னாதன செய்யாதிருத்தல் அரிதினும் அரிதாம்; அத்தகையார் மக்களிற் சிறந்த மாண்புடையராவர்.

தாம் செய்த கொடுமையால் இன்னலுற்றார் ஒருவரைப் பின்னொருகால் காண நேர்ந்தவழி, பண்டு தாம் அவர்க்குச் செய்த இன்னாமையினை உளத்தே உடையராய்த் தமக்கு ஊறு விளைப்பரோ என அஞ்சி அஞ்சிச் சென்றக்கால், இன்னலுற்றார், அவ்வின்னா தவற்றை அறியார்போன்று, அன்புகாட்டி வரவேற்பாராயின், அந்நிலையில் அவ் வின்னா தன செய்தார் உள்ளம் படும் துன்பத்திற்கு ஓர் அளவே இராது; அந்நிலையில் அவர் தம்மை ஒறுத் திருப்பினும் அத்துணைத் துயர் உறார்; அவர் உள்ளம் அத்துணைப் பெருந்துயர் உறும். கொடுமை செய்தாரை ஒறுப்பதால் உண்டாம் துயரினும், அவர்பால் அன்பு காட்டுவதால் தரும் துயரம் அம்மம்ம கொடிது கொடிது! இவ்வுண்மையினை உணர்ந்தார் உலகத்தில் சிலரே; துன்பம் தந்தார்க்கு இன்பம் தருவார் அரியர் இவ்வுலகத்தில். விரிந்த உள்ளமும் சிறந்த ஒழுக்கமும் உடையார்க்கன்றி இப்பண்பு உண்டாதல் இல்லை. "இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண, நன்னயம் செய்து விடல்." வள்ளு வர் வழிவந்தார்க்கன்றி அவ்வுள்ளம் வாய்த்தல் அரிது. தமிழ் மகள் ஒருத்தி இப்பண்புடையளாதல் கண்டு பாராட்டி யுள்ளார் புலவர் ஓரம்போகியார்.

பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டிருந்த ஒரு தலைவன், தன் தவற்றினை ஒருவாறு உணர்ந்து உளம் வெட்கினான்; உணர்ந்து தன் மனைபுகும் அவன், மனைவி தன் தவறுகண்டு வெறுத்து ஒறுப்பளோ என, அஞ்சி, அஞ்சி உட்புகலாயினன். அந்நிலையில் அவன் எதிரே வந்தாள் அவன் மனைவி; சினத்தால் கண்கள் சிவப்பேறக் கடுஞ்சொல் வழங்கிக் கழறுவள் என எதிர்பார்த்து நிற்க, அவள் இன்முகம் காட்டி அன்புரை வழங்கி வரவேற்பதைக் கண்டான்; அடித்து அறிவூட்டவேண்டிய அவள், அன்பு காட்டி வரவேற்றல், ஆயிரம் வேல்கொண்டு தாக்கியது போல் தோன்றித் துயர்விளைத்தது. நாணித் தலைகுனிந்து நடந்தான். அவன் சிறுமையும், அவள் பெருமையும் புலவர் உளத்தே ஆழப் பதிய அழகிய பாட்டால் அவளைப் பாராட்டுவாராயினர்.

"காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலின் நாணிய வருமே."

(குறுந் : க0)

ஒருகுடியிற் பிறந்த பல்லோருள்ளும், ஒருவன் பெறும் உயர்வு தாழ்வுகள் அக்குடியிற் பிறந்தார் பலரையும் சாரும். ஆகவே, ஒரு குடியிற்பிறந்த ஒவ்வொருவரும் நல்லவராதல் வேண்டும் என்பதில், அக்குடியிற் பிறந்தார் அனைவரும் நாட்டமுடையராதல்வேண்டும். அழுக்காறுடையான் ஒருவன்மட்டுமே, உடுப்பனவும், உண்பனவும் இருந்து கெடுவன் என எண்ணற்க; அவன் சுற்றத்தார் அனைவருமே அவற்றை இழந்து கெடுவர்; "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம், உண்பதூஉம் இன்றிக் கெடும்" என வள்ளுவரும் கூறுதல் காண்க. இக் கருத்தினையும் புலவர் ஓரம்போகியார் உணர்ந்து வற்புறுத்தியுள்ளார். தன் கணவன் பரத்தையரொழுக்கம் மேற்கொண்டமை கண்டு சினந்தாளொரு தலைவி, தலைவனுக்கு நண்பனாய், அவன் தவறுகளுக்குத் துணைபுரிந்தான் பாணன் ஒருவனே ஆகவும், அப் பாண்குடியிற் பிறந்தார் அனைவருமே பொய்யொழுக்கமுடையராவர் எனப் பழித்தாள் எனப் பாடியுள்ளமை காண்க.

"ஒருவின் பாணன் பொய்ய னாக
உள்ள பாண ரெல்லாம்
கள்வர் போல்வர்நீ அகன்றிசி னோர்க்கே."

(குறுந் : கஉஎ)

"ஆசைக்கோர் அளவில்லை" என்ப; ஆசையை அடக்கி ஆளுதல் அத்துணை எளிதன்று; சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது. ஆசை, ஐந்து பெரும் பிரிவினை உடையது: மெய், வாய், கண், மூக்கு, காது இவ்வைந்தின் வழியானும் அவ்வாசை வெளிப்படும்: இத்தகைய ஆசைகளை அடக்கி ஆள்பவரே பெரியாராவர். அவ்வாசைக்கு அடிமைப்பட்டவரே சிறியர்; ஆசைக்கு அடிமைப்பட்டவர் ஆளத் தகுதியற்றவராவர்; அவ்

வாசையை அடிமை கொண்டவரே ஆளுந்தகுதியுடையவ ராவர். ஆசையை அடிமை கொண்டவர் உலகோர் போற்றும் உயர்நிலை பெறுவர்; ஆசை சென்றவழியே அறிவினைப் போகவிடுவார் ஆண்மையுடையாரன்று; ஆசை, நல்லதன் கண் சென்றவழி, அறிவு அதற்கு நற்றுணையாதலும், அவ்வாசை தீயதன் கண்ணதாய வழி, அறிவு, அவ்வாசையினை அதன்பால் செல்லவிடாது அடக்கி, நல்லதன்கண் செல்லவிடுதலும் வேண்டும். அறிவு எனப்படுவது அதுவே; "சென்ற விடத்தால் செலவிடா தீதுஒரீஇ, நன்றின்பால் உய்ப்பது அறிவு." ஆசை ஆற்றல் வாய்ந்தது; ஐந்து பெரும் பிரிவுடையது; ஒன்றை அடக்கி ஆண்டவழி, ஏனைய அடங்காது ஓடத்தொடங்கும்; அவை அனைத்தையும் ஒருசேர அடக்கி ஆளுதல் அருமையினும் அருமையே; ஆயினும் அவற்றை அடக்கி ஆள்வதே அறிவிற்கு அழகு தரும்; அவ்வாறு அடக்கி ஆள்பவரே பெரியார்; "செயற்கு அரிய செய்வார் பெரியர்; சிறியர், செயற்கரிய செய்கலாதார்." அறிவிற்கு அத்தகைய ஆற்றல் உண்டு; யானைகள் பல ஆயினும், அவை அனைத்தையும் அடக்கி ஆள ஓர் அங்குசத்தால் ஆகும்; அதைப்போல், அறிவன அறிந்த அறிவால், ஆசைகள் ஐந்தையும் அடக்கி ஆளுதல் இயலும். அத்தகைய அறிவுடையாரே பெரியார். "உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான், வரன்என்னும் வைப்பிற்கு ஓர்வித்து." கல்வி, கேள்விகளான் ஆய செயற்கை அறிவோடு கூடிய இயற்கை அறிவே அறிவெனப்படும். இயற்கை அறிவினை வளப்படுத்துவது, கல்வி, கேள்வியான் வரும் செயற்கை அறிவே. அத்தகைய அறிவுடையார்க்கே ஐம்புலன்களை அடக்கி ஆளவல்ல ஆற்றல் உண்டாம்.

ஆகவே, பெரியார் எனப்படுவார் நல்லதன் நலனும், தீயதன் தீமையும் உள்ளவாறுணர்ந்து, தீயன ஒழிந்து நல்லன மேற்கொள்ளும் நல்லறிவுடையராவர். எக்காரியத்தினையும், இவ்வாறு ஆராய்ந்தன்றி, அவர் மேற்கொள்ளார்; ஆகவே, அவர் செயலில் தவறு நிகழ்தல் இல்லை.

அத்தகைய பெரியார்பால் பொய் முதலாம் அறமல்லன காணல் என்றும் இயலாது; அத்தகையாரிடத்திலேயே, பொய்யும், வழுவும் புகுந்துவிடுமாயின், உலகில், மெய் முதலாம் அறம் நிற்றல் அரிதாம்; அவற்றை யாண்டும் காணல் இயலாது. “பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அது இன்றேல், மண்புக்கு மாய்வது மன்.” அவரிடையே அறமல்லன தோன்றிவிடுமாயின் உலகமே அழியும் என்று கூறுகிறார் வள்ளுவர்.

இவ்வரும் பெரும் உண்மையினைப் புலவர் ஓரம்போகியார், தோழி யொருத்தியின் வாய்வைத்து விளக்கியுள்ளார். “இவளை விரைவில் வந்து வரைந்துகொள்வேன்; அந்நாள்வரை, இவளைப் போற்றிக்காத்தல் நின் கடன்; இவளும், யானும் நின் அடைக்கலம்” எனக் கூறிக் கொண்டே, தோழியின் கைகளைப் பற்றினன் ஒரு தலைவன். உலகத்துச் சூளுறுவார், பசுவையும், பார்ப் பாரையும், பெண்டிரையும் தொட்டுச் சூளுறுவராதலின், தலைவன் தன் கைப்பற்றியதனைத் தோழி, சூளுறுவாகக் கருதினள்; கருதியவள் தலைவனை நோக்கி, “ஐய! அறனல்ல வற்றை என்றும் விரும்பா உள்ளம், ஒரோவழி மயங்கி விரும்புமாயினும், கல்வி, கேள்வியானய அறிவே அங்குச மாக, அவ்வுள்ளமாகிய யானையை மீட்டு, அறமும், பொருளும் வழுவாவகை ஆராய்ந்து, தம் தகுதியினையும் உணர்ந்து, அதன் பின்னரே, தாம் எண்ணியதை முடிக்க முயல்வர் பெரியோர். அத்தகைய பெரியோர்களுள் ஒருவன் நீ; நின்னையொத்த பெரியோரிடத்தும் பொய்யும் வழுவும் தோன்றுமாயின், உலகத்தில் எங்குத்தான் மெய் யைக் காணல் இயலும். நின்பால் அவை தோன்ற; பொய்யும், வழுவும் உடையாரன்றோ சூளுறுதல் வேண்டும்? வரைவேன் என்று கூறியதொன்றே அமையாதோ? மெய் யல்லது அறியாத நீயும் சூளுறல் வேண்டுமோ”? என்று கூறினள் எனப் பாடியுள்ளார். எவ்வளவு பெரிய உண்மையினை இவ்வளவு எளிமையாக விளக்கியுள்ளார். நோக்குக!

"விழையா உள்ளம் விழையு மாயினும்,
என்றும், கேட்டவை தோட்டியாக, மீட்டு, ஆங்கு
அறனும் பொருளும் வழாமை நாடித்
தற்றக வுடைமை நோக்கி, மற்றதன்
பின்னா குமமே முன்னியது முடித்தல்;
அனைய, பெரியோர் ஒழுக்கம்; அதனால்
அரிய பெரியோர்த் தெரியுங் காலை
நும்மோர் அன்னோர் மாட்டும், இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோஇவ் வுலகத் தானே."

(அகம் : உ௮௬)

வீரன் ஒருவன், தன்னை எதிர்த்துவந்த களிற்றை எறிந்தமையால் கோணிய தன் வாளை, வீழ்ந்த களிற்றின் மருப்பிடை வைத்துக் கோணலைப் போக்கிச் செம்மை செய்து நிமிர்ந்து நோக்கினனாக, அவன் நிலைகண்ட பகைவர் பெரும்படை பயந்து பின்னிட்டது; வாளேந்தி நிற்கும் அவன், புறங்காட்டும் பகைவர் நிலைகண்டு பெருநகை கொண்டான் எனக் கூறும் ஓரம்போகியார் பாண் பாட்டு, பழந்தமிழ் மறவர்தம் பண்பாட்டினைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

"தமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமம் தாங்கி, முன்னின்று எறிந்த
ஒருகை இரும்பிணத்து எயிறு மிறையாகத்
திரிந்த வாய்வாள் திருத்தாத்
தனக்கு இரிந்தானைப் பெயர்புறம் நகுமே."

(புறம் : உ௮௪)

## சக. கடுகு பெருந்தேவனுர்

பாரதம் பாடிய பெருந்தேவனரின் பிரித்து அறிதற்கு இவர் பெயர்க்குமுன் கடுகு என்ற சிறப்பளித்து வழங்கினர் மக்கள். அன்று மக்கள் வழங்கிய அச்சிறப்பிற் கான காரணம் யாது என்பது இப்போது விளங்கவில்லை. பாண்டி நாட்டில், கடுகுசந்தை என்றோர் ஊர் உளது; அவ்வூரோடு கொண்டிருந்த தொடர்பால், அச்சிறப்பு அளிக்கப்பெற்றதோ என ஐயுறுவாரும் உளர்.

"கேள்கே டூன்றவும், கிளைஞர் ஆரவும், கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்" வாழும் வாழ்வே வாழ் வெனப்படும்; அத்தகைய வாழ்க்கைக்குப் பொருள் இன்றி யமையாது வேண்டப்படும். அப்பொருள் அரிதின் முயன்று தேடுவார்க்கே உண்டாம்; "திறம்புரி கொள்கை யொடு இறந்துசெயி னல்லது அரும்பொருள் கூட்டம் இருந்தோர்க்கு இல்," "இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும் அசையுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இல்." இந்த உண்மையுணர்ந்த உயர்ந்த காதலர் இருவருள், ஆண் மகன் அப்பொருள்தேடிப் பிரிந்து சென்றிருந்தான். சென்ற தலைவன் தன்மாட்டுப் பேரன்புடையவனுதலின், அவன் பிரிவுத்துயர் பொறுக்கலாற்ருது, பொருள் சேர்த் தற்கு முன்னரே வந்துவிடுவனே என அஞ்சினுள் அவன் மனைவி. அவள் அச்சத்தை உணர்ந்தாள் அவள் தோழி. அவளுக்கு, அவன் அவ்வாறு வாரான் என உறுதி கூறித் தேற்ற எண்ணினுள். உடனே தலைவிபாற் சென்று, "தோழி! சென்ற நம் தலைவர், தளர்ந்த நம் சுற்றத்தைத் தாங்குதல் தம் கடன்; 'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்' என்ற கொள்கையினை உடையவராவர். இவ் வெண்ணம் நின்பால் கொண்ட அன்பால், ஒரோவழி சிறிது நெகிழின், உடனே அவர் செல்லும் காட்டு வழிக் காட்சிகள், அக்கொள்கையின் உயர்வினை அவர் உள்ளத்தே உறுவிக்கும் இயல்புடையவாம். தாம் சென்ற காட்டுவழியில் யானை ஒன்று, பசியால் வருந்தி,

நடைமெலிந்து தன்னைப் பின்தொடர்ந்துவரும் தன் இனத்து யானைகளின் துயர்நிலைகண்டு பெரிதும் துயருற்று, அக்காட்டிடத்தே வளர்ந்து, நீர் இன்மையால் வாடி உலர்ந்துபோன யாமரத்தைத், தன் கோட்டால் குத்திப் பிளந்து அவற்றிற்கு அளித்து, அவற்றின் பசி போக்கி மகிழ்ந்த அரிய காட்சியொன்றைக் கண்டார் என அவ்வழி வந்தார் கூறக்கேட்டேன்; தன்னைச் சூழ்ந்து வாழும் தன் இனத்தைப் பேணிக் காத்தல் தன் பெருங் கடனும் என்ற அறிவு, அஃறிணை உயிராகிய யானைபால் இருக்கக்கண்ட நம் தலைவர், தம்முடைய சுற்றத்தாரைக் காக்கத் துணைபுரியும் பொருள் பெறுமல், இடையே மீள்வாரல்லர். ஆகவே, அவர் தம் கடமை தவற வந்துவிடுவரோ என அஞ்சற்க'' என ஆறுதல் கூறினள். தோழியின் இவ்வறிவுரையினை அழகாகப் பாடிக் காட்டியுள்ளார் நம் புலவர்.

ஆறறிவுடைய மக்கட்கு, ஐயறிவுடைய அஃறிணைப் பொருள்கள் அளிக்கும் அறிவும் உண்டு. அவற்றின் செயலால் அறிவுபெறும் மக்களும் உளர் என்ற உண்மையினை உணர்த்தாது உணர்த்தியுள்ளமை யுணர்க.

"பொத்தில் காழ அத்த யாஅத்துப்
பொரியரை முழுமுதல் உருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி, உயங்குநடைச்
சிறுகண் பெருநிரை உறுபசி தீர்க்கும்
தடமருப்பு யானை கண்டனர்; தோழி!
தங்கடன் இறீஇயர் எண்ணி, இடந்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற ஆறே." (குறுந் : உ௫௫)

## சஉ. கடுந்தொடைக் காவினர்

கடுந்தொடைக் காவினர் எனும் இப்பெயர், புலவர்க்கு யாதோ ஒரு காரணம்பற்றி இடப்பெற்ற பெயரேயன்றி, இயற்பெயரன்று என்பது உறுதி. அவர்க்கு இப்பெயர் இடற்காம் காரணம் இஃது என இப்போது துணிந்து கூறுதற்கியலவில்லை.

காய்தல் உவத்தல் அகற்றி ஆயும் அறிவுடையராய புலவர்கள், எதையும் உள்ளதை உள்ளவாறே உணர்த்தும் உரனுடையராவர். ஆவின் கன்றை அழித்தவன் தன் மகன் என்றும் பாராமல், அவனைத் தன் தேர்க்கீழிட்டு முறை செய்த முடிமன்னன்போலும் நல்லரசர்களைப் பெற்றிருந்த தமிழகம், அறனறியா ஆணவ அரசர் சிலரையும் கொண்டிருந்தது. உலகெலாம் அறிவொளி வீசும் காலம் இது எனப் போற்றப்பெறும் இக்காலத்தும், பொல்லா அரசர் பலர் வாழ்கின்றனர் எனின், அத்தகையார் சிலர், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தே வாழ்ந்திருந்ததில் வியப்பொன்றும் இல்லை. நல்லரசர்களை நாவார வாழ்த்திய புலவர்கள், அப்பொல்லா அரசர்களைப் பழித்துரைக்கவும் அஞ்சினரல்லர். புலவர் கடுந்தொடைக் காவினர், அத்தகைய அரசன் ஒருவனின் அடாச்செயலை எடுத்துக் காட்டிப் பழித்துள்ள பாட்டொன்று அகநானூற்றின்கண் இடம்பெற்றுளது.

பொருள் கொண்டு போவார்தம் கைப்பொருளைக் கவர்ந்துகொண்டு, அவர் உயிரைப் போக்கும் ஆறலை கள்வர் வாழும் கொடுமை நிறைந்தது பாலைநிலம். அவ் வாறலை கள்வர்தம் அரசன், அறமறியா மறம் நிறைந்த மனத்தினனவன். அவன், தன்கீழ் ஏவல்புரியும் ஆறலை கள்வர், தாம் இருக்கும் இடத்தருகே வந்த வழிப்போவார்பால், தாம் கவர்ந்துகொள்ளலாம் பொருள் ஏதும் இல்லை என்பதறிந்து அவரைப் போகவிட்டனர்; இதை அறிந்தான் அவர்கள் அரசன். அவர்பால் பொருள் இல்லையாயினும்,

அவர் உயிரைப் போக்கி, அவர் உடலையாவது பற்றிக் கொணர்தல் வேண்டும்; அவ்வாறு செய்யாமை அவர்கள் செய்த பெரும்பிழை. இப்பெரும்பிழை போகவேண்டின் யானையின் பெரிய கொம்புகளையும், புலியின் தோலையும் தண்டமாகத் தனக்கு அவர்கள் தருதல் வேண்டும் என ஆணையிட்டு அவ்வாறே பெறவும் செய்தான். இத்தகைய அறனிலான் ஒருவனைப் புலவர் நமக்கு அறிமுகமாக்கி, அவன் தன் அறனில் செயலைப் பழித்துள்ளமை உணர்க.

"வழங்குநர் மடிந்த அத்தம் இறந்தோர்,
கைப்பொருள் இல்லை யாயினும், மெய்க்கொண்டு
இன்னுயிர் செகாஅர் விட்டகல் தப்பற்குப்
பெருங்களிற்று மருப்பொடு, வரியதள் இறுக்கும்
அறனில் வேந்தன் ஆளும்
வறனுறு குன்றம்." (அகம்: க0க)

ஆறலை கள்வரை ஆணைகொள்ளும் அவ்வரசனை "அறனில் வேந்தன்" எனப் பெயரிட்டுப் பழித்த புலவர், அவன், அத்துணைக் கொடியனானமைக்கு, அவன் ஆளும் நாட்டின் வளம் இன்மையே காரணமாம்; அவன் நாட்டு வறுமையின் கொடுமை, அவனை அத்துணைக் கொடியனாக்கி விட்டது; அவன் மட்டும் அல்லன்; வறுமை மிக்க நாட்டில் வாழ்வார் அனைவருமே, அவனைப்போல் கொடியராய் மாறுவர்; ஆகவே, குறைகூற வேண்டுவது அவனை யன்று; அவன் நாட்டில் நிலவும் வறுமையினையே எனக் கூறிப் பொருள் இலக்கணம் குறித்த புதுப்பொருள் கண்டுளார் புலவர்.

"அறனில் வேந்தன் ஆளும்
வறன் உறு குன்றம்."

## ௪௯. கடுந்தோட்கர வீரன்

தஞ்சைமாவட்டம் திருவாரூருக்கு அருகே கரவீரம் என்ற பெயருடையதோரூர் உளது; ஆண்டுப் பிறந்து வாழ்ந்தமையால் இவர்க்கு இப்பெயர் உண்டாயிற்று என்பர் சிலர்; கரவீரம் என்பது அலரிமலரைக் குறிக்க வழங்கும் ஒரு பெயராம்; ஆகவே, யாதோ ஒருகாரணம் பற்றி அலரிமாலை அணிந்திருந்தமையால் இப்பெயர் உண்டாயிற்று என்பர் மற்றும் சிலர். இவர் பெயர்க்கு முன் வரும் கடுந்தோள் என்ற சிறப்பு, புலவர்தம் பெருந்தோட் பெருமையால் வந்ததுபோலும். கடுந்தோள்கரவீரன் என்ற இப்பெயர், ஆற்றல்மிக்க தோளும், கரமும் துணைசெய்யப் பெரும்போர் புரியவல்ல வீரம் உடைமையால், வந்த காரணப் பெயராம் என்பதை உணர்த்தி நிற்றல் அறிக.

ஒரு தலைவன், தான் காதலித்த ஒரு தலைவிபால் கொண்ட பேரன்பால், கடத்தற்கரிய காட்டுவழியினைப் பேயும் உறங்கும் நள்ளிரவில் கடந்துவரலாயினன்; ஆனால் அத்தலைவியோ, அவன் அவ்வாறு வருதலை வெறுத்தாள். ஆண்டு அவனுக்கு ஏதம் உண்டாயின், தன் உயிர் நிற்றலும் அரிதாம் என அஞ்சினாள்; ஆகவே, ஒருநாள், வந்த அவன்பால் "ஐய! நீவிர் வரும் வழி ஏதம்பல நிறைந்தது; அவ்வழிவரும் உமக்கு ஏதம் உண்டாதலும் கூடும்; அவ்வாறு உண்டாயின், யான் உயிர்வாழ்தல் ஒண்ணாது; கணவர் இறந்தபின்னர்க் கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழும் வாழ்க்கையினை விரும்புபவளல்லள் யான்; நீவிர் இறப்பின், யானும் உயிர் விடுவல்; ஆகவே, அன்ப! அவ் வழி வருதலை அஞ்சுகின்றேன்," என்று கூறினாள்.

ஒருபெண், தன் அன்பால் அவன் இறத்தலும் உண்டு' அவன் இறந்தால் தான் உயிர்வாழ்தல் இல்லை என்பன போன்ற சொற்களைக் கூறல் மங்கலமன்று; மரபுமன்று; ஆகவே, அதை அவள் விளங்க உரைத்தாள் எனக் கூறலும் புலமைக்கு இழுக்காம். அதனால் அதை அவ்வாறு கூறினாள் எனப் பாடாது, அப்பொருள் அவன் உள்ளத்தே

தோன்றுமாறு, வேறு ஒருபொருள்மேல் ஏற்றிக் கூறிப் பாடியுள்ளார் புலவர்.

தலைவி, நாடனைக்கூறுங்கால் "ஐய! நின் நாடு, தன்பால் அன்புடைய கணவனாகிய ஆண்குரங்கு இறந்துவிட்டதாக, அதன்பால் பேரன்புகொண்ட பெண்குரங்கு, அது இறந்தபிறகு, இருந்து உயிர்வாழவிரும்பாது, மரமேறுதல், வரைபாய்தல்போலும் தம் இனத்தொழிலையும் பயின்றறியாப் பருவமுடைய தன் இளைய குட்டியைத் தன்னைச் சுற்றி வாழும் ஏனைக் குரங்குகளிடத்தே ஒப்படைத்து விட்டு, உயர்ந்த மலையுச்சியினின்றும் உருண்டு வீழ்ந்து உயிர்விடும் சிறப்புடையது" என்று கூறிப் பாராட்டுவாள்போல் கூறி, நின்நாட்டு விலங்கினிடத்தே காணப்பெறும் இவ் விழுமிய பண்பு, எம்போலும் பெண்டிர்பாலும் உண்டாம் என்பதை உணர்வாயாக! என உணர்த்தினாள்.

உயர்திணையாய மக்களிடத்தேயல்லாமல், அஃறிணையாய மாக்களிடத்தும் காணப்பெறும் மாண்பினை மங்கல முறையால் எடுத்துக்காட்டிய மாட்சி அம்மம்ம! அரிது அரிது!

"கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர் செகுக்கும்
சாரல் நாட! நடுநாள்
வாரல்; வாழியோ! வருந்துதும் யாமே."

(குறுந் : சுசு)

## சச. கடுவன் இளவெயினனார்

எயினன், என்ற பெயருடைமையால், இவர் வேடர் குலத்தவர் என்பதும், இளமை எனும் சிறப்புடைமையால், சிறிளமைக்காலத்திலேயே, பேரறிவு பெற்ற பெரியாராவர் என்பதும் புலனாம். இவர் பெயர்க்கு முன்வந்துள கடுவன் என்ற சிறப்பு, ஆண்குரங்கு எனும் பொருளில் வழங்கி வருவதொரு பெயர்ச்சொல். அது, இவர் பெயர்க்குச் சிறப்பளிக்க வந்தவாறு யாதோ விளங்கவில்லை. கடுவன் இளவெயினனார் பாடிய பாக்கள் மூன்று, பரிபாடற்கண் இடம்பெற்றுள்ளன. பரிபாடற் செய்யுட்கள், திருமால், செவ்வேள், வையை இவற்றைச் சிறப்பிக்கவந்த பாடல்களாம். இவர் பாக்கள் மூன்றனுள் இரண்டு திருமாலையும், ஒன்று செவ்வேளையும் பாடிப் பரவுகின்றன.

கடுவன் இளவெயினனார் பாக்கள், சங்ககாலத் தமிழகத்து மக்களிடையே நிலவிய சமயங்களின் நிலை இது எனத் தெளிய உணரத் துணைபுரிகின்றன. திருமால், நீலமணி, அலை ஓய்ந்தகடல், நீருண்டமேகம் இவற்றின் நிறம் உடையவன்; அவனுக்குக் கருடன், பனை, நாஞ்சில், யானை இவை கொடிகளாகும்; ஆல், கடம்பு, ஆற்றிடைக் குறை, குன்று இவை அவன் உறையும் இடம் என்று கூறியுள்ளார். திருமால், கனலி, கூற்றம், ஞமன், ஞாயிறு இவை ஒன்றுகூடும் ஊழிக்காலத்தே அழியும் உலகினைக் காக்க வராக உருவம் கொண்டான்; இரணியன் உயிரைப் போக்க நரசிங்க அவதாரம்கொண்டான்; உலகை அளந்து காட்ட வாமனவதாரம் கொண்டான் என்றும் கூறியுள்ளார்.

பெண் குதிரை உருவங்கொண்ட உருப்பசியைக் கண்டு காதல்கொண்ட ஆதித்தன், தானும் குதிரை வடிவினனாய் அவள்பாற்செல்ல, அப்போது, அவனுடைய நாசிகைத் துளைவழியே வீழ்ந்த இரண்டு வீரிய விந்துக்களினின்றும் இரட்டையராகப் பிறந்தவர் அசுவினித்தேவர்.

இந்திரன் குதிரைவால் வெண்ணிறம்; அன்றாயின் நினக்கு அடிமையாவேன், எனக் கருடன் தாய், கத்துரு என்பாளோடு உறுதிகூறினாள்; அக்கத்துரு, தன் வஞ்சனை யால், அவ்வாலைக் கரிதாக்கினாளாக, அஃதறியாது அவட்கு அடிமையாகி வருந்தும் தன் தாயை, அக் கத்துருவின் விருப்பப்படி, அமராபதிக்கண் இருந்த அமிர்தத்தை அவட்குக் கொடுத்து மீட்டான் கருடன்.

திருமால், அசுரரை எல்லாம் வெற்றிபெற்று நின்றக் கால், "இவ்வெற்றியெல்லாம் இவனால் உற்றவல்ல; இவனைத் தாங்கித்திரியும் என்னால் ஆய" என்று கருடன் கூறிப் பெருமைகொள்ள, திருமால், "நீ என் முழு உடலையும் தாங்கல்வேண்டா; என் சிறுவிரல் ஒன்றைத் தாங்கிவிடுவை யாயின், நின்கூற்று உண்மையாகும்" என்றுகூறி, அவ் விரலை அவன்மேல் வைக்க, அது ஒன்றைத் தாங்க மாட்டாதே, கருடன் பாதலத்து வீழ்ந்து நெடுங்காலம் கிடந்து வருந்தித் துதித்து வீடுபெற்றான்.

திருமால் மோகினி உருவங்கொண்டுவந்து, அமிர்தம் கடைந்த, அசுரர் அமரர் ஆய இருவருள், அசுரரை வஞ்சித்து, அமரர்க்கே வழங்கினான்.

உலகம் அழிக்கும் பெருமழை உற்றக்கால், திருமால் அன்னப்புள் உருவங்கொண்டு உயரப் பறந்துசென்று, தன் இறகால் பெய்த பெருமழை நீரை எல்லாம் உலர்த்தி உலகைக் காத்தான். திருமாலைக்குறித்து வழங்கப்பெறும் இவைபோலும் கதைகளையெல்லாம் கூறியுள்ளார்.

நான்முகனாகிய பாகன் செலுத்த வேதக்குதிரைகளைப் பூட்டிய பூமியாகிய தேரை ஊர்ந்துசென்று, நாகம் நாணாகவும், மலை வில்லாகவும் கொண்டு, திரிபுரங்களும், ஒருங்கே முழுதும் அழியுமாறு ஓர் அழலம்பு எய்தான் சிவன் என்றும், சிவன் உமையோ டின்புற்றிருக்கையில் உண்டான கருவை, இந்திரன் வேண்டுகோட்கு இணங்கிப் பலவாகச் சேதித்தான்; அக்கருவை முனிவர்கள் எழுவரும் பெற்றுத் தீயைமூட்டி, அதன்கண் அவியோடு பெய்தனர்;

இவ்வாறு வெம்மை நீக்கப்பெற்ற அக்கருவை, அருந்ததியொழிந்த ஏனையோராகிய கார்த்திகைப் பெண்கள் அறுவரும் உண்டு, கருப்பம்கொண்டு, சரவணப்பொய்கையில், தாமரைப்பாயற்கண்ணே பயந்தனர்; அவ் ஆறு குழந்தைகளே ஒருருவாய் வந்த முருகனுனவன் என்றும் கூறியுள்ளார்.

வெம்மையிற் சிறந்தது ஞாயிறு; தண்மையிற் சிறந்தது திங்கள்; வண்மையிற் சிறந்தது மாரி; பொறுமையாய்த் தாங்கிப் புரத்தலிற் சிறந்தது பூமி; மணத்திற் சிறந்தது மலர் என்ற கருத்தினைப் புலவர் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். திருமாலுக்குரிய அப்பண்புகள், அப்பொருள்கள் வழியே வெளிப்பட்டுத்தோன்றும் எனக்கூறிய திறம் வியந்து பாராட்டத்தக்கதாம்.

"நின், வெம்மையும், விளக்கமும் ஞாயிற்றுள;
நின், தண்மையும், சாயலும் திங்களுள;
நின், சுரத்தலும், வண்மையும் மாரியுள
நின், புரத்தலும், நோன்மையும் ஞாலத்துள;
நின், நாற்றமும், ஒண்மையும் பூவைஉள."

(பரிபாடல் : ச : உ௫-உ௯)

திருமால், அறமாகிய கோலால் தாங்கப்பெறும் அருளாகிய குடை, நிழல் செய்ய நிலவுலகைக் காத்தான் எனக் கூறுமுகத்தான், நாடுகாவல் கொண்டொழுகும் அரசராவார், அறமும் அருளும் துணைகொண்டு ஆளுதல் வேண்டும் என்ற அரசியல் அறிவினை அளித்துள்ளார்:

"அருள் குடையாக, அறம் கோலாக
இருநிழல் படாமை மூவேழ் உலகமும்
ஒருநிழல் ஆக்கிய" (பரிபாடல் : ௩ : எச-எ௬)

"இறைவா! நின்னைப் பணிகின்றேன்: பரவுகின்றேன்; வணங்குகின்றேன்; வாழ்த்துகின்றேன்; எனக்குப் பொன்தா; பொருள்தா; போகம்தா" என வேண்டும்

உலகமக்கள் உளம் கொள்ளுமாறு ஓர் அரிய உபதேசம் அருள்கின்றார் புலவர்; இறைவனைப் பணியும் மக்கள் ஏனைய உயிர்கள்பால், அருளுடையாராகவும், அன்புடையாராகவும், அறவுள்ளமுடையாராகவும் விளங்குதல்வேண்டும்; யார் ஒருவர், உயிர்கள்பால், அருள், அன்பு, அறம் காட்டுகின்றனரோ, அவர்களிடத்தேதான் இறைவன் அன்பு காட்டுவன்; ஆகவே, இறைவன் தம்பால் அன்புகாட்ட வேண்டுவார், ஏனை உயிர்கள்மாட்டு, அன்புகாட்டப் பழகுதல்வேண்டும்; ஆகவே இறைவனைப் பெறவேண்டுவார், அவனைப் பெறுதற்குரிய பெருநெறியாகிய, அன்பு, அருள், அறம் ஆய இவை தம்பால் என்றும் நீங்காமையினை அருளுமாறு அவனை வேண்டுதல்வேண்டும்; அதற்கு மாறாக அவன்பால், பொன்னும், போகமும் வேண்டல் அறியாமையாம் என்று கூறியுள்ளார்.

"யாஅம் இரப்பவை
பொருளும், பொன்னும், போகமும் அல்ல; நின்பால்
அருளும், அன்பும், அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே."

(பரிபாடல் : ரு: எஅ-அக

## சரு. கடையத்தார் மகன் வெண்ணுகனர்

கடையம் என்பது தென்பாண்டி நாட்டில் உள்ள தோர் ஊர்; மேற்கடையம், கீழ்க்கடையம் என இக் காலத்தே வழங்கும் ஊர்கள் இடைக்காலத்தே, "கோனாட்டு விக்கிரம பாண்டிய நல்லூரான கடையம்" என்றும், "கோனாட்டுக் கடையம்" என்றும் வழங்கப்பெற்றுள்ளன; (A. R. NO. 522, 525 of 1916.) இக்கடையம், புலவர் பலர் தோன்றிய பெருமையுடையதாகும்; அவர்களுள் பலர், மதுரை சென்று குடியேறி வாழலாயினர். அவர்களுள் வெண்ணுகனரும் ஒருவர்; இவர் இயற்றிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம்பெற்றுளது.

தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்தேடிப் போயிருக்க, அப் பிரிவாலாம் துயர் பொறுக்கலாற்றாது வருந்திய தலைவியை, "ஆற்றியிருத்தல் அறன்" எனக் கூறித் தேற்றினாள் தோழி; அதுகேட்ட தலைமகள், "தோழி! முன்னொரு காலத்தே, ஊரில் திருவிழா நடைபெற, அதைக்காண நீ வற்புறுத்தினாய்; நாளும் நன்று; மருது வருக! என வேண்டி நின்றாய்; நின்சொல் கேட்டு வந்தேன்; வந்ததன் பயன், ஆங்கு வந்திருந்த தலைவனைக் காண, அவன் தழலும், தட்டையும், தழையும் தந்தும், நயமொழி நல்கியும் நம்மை ஏமாற்றித், தாய், புறத்தே போகவிடாமல் காத்துப் பேணிய என் நலத்தினை நுகர்ந்து பிரிந்தானாக யான் வருந்தவேண்டியதாயிற்று; நின் சொல்லை ஒருகால் கேட்டதின் பயன் இது; மீண்டும் அறிவுரை கூற முன் வந்துள்ளனை; இன்னும் கேட்கின் யாது விளையுமோ?" என்று கூறி வெறுத்த உள்ளத்தளாயினள். இந்தக் காட்சியைக் கண்கவர, மனம் மகிழத் தீட்டித் தருகிறார் புலவர்.

"பேரூர் கொண்ட ஆர்கலி விழவின்
செல்வாம்; செல்வாம்; என்றி; அன்று, இவண்
நல்லோர் நல்ல பலவால்; தில்ல;
தழலும், தட்டையும், முறியும் தந்து, இவை
ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி
அன்னை ஓம்பிய ஆய்நலம்
என்னை கொண்டான், யாம் இன்னமால் இனியே."

(குறுந் : உ௨௩)

## சசு. கண்டரதத்தன்

கண்டரதத்தன் என்ற இப்பெயர் இவர்க்கு ஏன் உண்டாயிற்று என்பது விளங்கவில்லை; இது காரணப் பெயரா? அல்லது இயற்பெயரா என்பதையும் அறிந்து கொள்வதற்கு வழியில்லை; மதுரையில் வாழ்ந்த புலவர்களுள் இவரும் ஒருவர். இவர் பெயரால் நமக்குக் கிடைத்தது, குறுந்தொகைக்கண் வந்துள்ள ஒரு செய்யுளே.

கருமையும் வெண்மையும் கலந்து காண்டற்கினிய மரையாவின் ஏறு, மடம் மிகவுடையது; நெல்லிக்கனி புளிச்சுவையுடையது. ஆயினும், அதைத் தின்று நீர்குடித்தார்க்கு இன்சுவை தருதலின், இனிய புளிச்சுவையுடையது; நெல்லியின் இயல்புணர்ந்த மரையா, அதைத் தின்று பின்னர்ப் பைஞ்சுனைப் பனிநீர் பருகும் பண்புடையது; சுனையில் நீர் உண்புழி, ஆங்கு நீர் தெரியாவண்ணம் மலர்ந்து மறைத்து நிற்கும் மலர்களைத், தன் பெருமூச்சால் விலக்கி உண்ணும் எனக் கூறும் இயற்கைக் காட்சிகள் இனிமை உடையனவாதல் காண்க. தன் பெய்தற்றொழிலால் உலகத்தையே அழிக்கவல்ல மழையும், வடக்கிருந்து வந்து வீசும் வாடையின் கொடுமைக்கு ஆற்றாது தென்திசை நோக்கி ஓடும் என்றால், மென்மைநிறை மகளிராய நாம், தலைவரையும் பிரிந்து தனித்து இருக்குங்கால், அதன் கொடுமையினைத் தாங்கவல்லமோ? தாங்கவல்லர் அல்லேம் என்பதைத் தலைவன் அறிவான்; ஆகவே அவன் நம்மைவிட்டுப் பிரியான் எனக் கூறும் தோழி கூற்று, மேலும் சுவை உடையதாம்.

"புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி, அயலது
தேம்பாய் மாமலர் நடுங்க, வெய்துயிர்த்து
ஓங்குமலைப் பைஞ்சுனை பருகும் நாடன்
நம்மைவிட்டு அமையுமோ மற்றே; கைம்மிக
வடபுல வாடைக்கு அழிமழை
தென்புலம் படரும் தண்பனி நாளே." (குறுந் : கூஎ)

# சஎ. கண்ணகனார்

"புணர்ச்சி பழகுதல் வேண்டா : உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்" என்ற குறள் கூறும் பொருளுரைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய உயரிய நண்பர்களாகிய கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார் காலத்தே வாழ்ந்து அவர்கள்தம் நட்பின் சிறப்பினைக் கண்ணாரக் கண்டு நாவாரப் பாராட்டியவர் நம் புலவர் கண்ணகனார்.

கோப்பெருஞ்சோழன் சோணாடு ஆண்டிருந்த அரசன் : பிசிராந்தையார், பாண்டிய நாட்டில் உள்ள பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்தவர் : இருவரும் ஒருவரையொருவர் கண்டு அறிந்தவரல்லர் : பெயரையும், பெருமையையும் கேட்டே நட்புடையராயினர் : கோப்பெருஞ்சோழன், தன் மக்கள்தம் மாண்பிலாச் செயலால் மனமுடைந்து வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தகாலை, தன் அருகே தன் நண்பர் பிசிராந்தையார்க்கு இடம் ஒதுக்க வேண்டினான்; அவன் அருகிருந்த நண்பர்கள், "ஐய! நீவிர் இருவரும் கேட்டன் மாத்திரையல்லது, யாவதும் காண்டல் இல்லை : மேலும், அவரோ மிக மிகச் சேய்மையில் உள்ளார் : அவர் வருதல் அரிதினும் அரிது. ஆகவே அவர்க்கு இடம் ஒதுக்கல் வேண்டுவ தின்று" என்றனர். ஆனால் அவனோ, "என் நண்பன், என்பால் பேரன்புடையவன்; செல்வக்காலை நிற்பினும் அல்லற்காலை நில்லலன்; வருவன்; ஒதுக்குக அவற்கிடம்" எனக் கூறி உயிர்விட்டான்; அவன் கூறியவாறே பிசிராந்தையாரும் வந்து சேர்ந்தார். வந்து வடக்கிருந்து தாமும் உயிர்விட்டார்; "வருவன்" என்ற அரசனது பெருமையையும், அவன் உரை பழுதாகாவண்ணம் வந்த அவர் அறிவையும் கண்டு வியந்து வியந்து பாராட்டிய புலவர்களுள் கண்ணகனாரும் ஒருவர்.

பொன், ஆற்று வெள்ளம் அரித்துக் கொணர்ந்து கொடுப்பதால் கிடைக்கிறது; முத்தும், பவழமும் கடலில் மூழ்கிப் பெறுவதால் கிடைக்கின்றன; மணி, மலைப்பிளவுகளில் கிடைக்கின்றது; ஆறும், மலையும், அவற்றிற்கு அப்

பாற்பட்ட கடலும் இடத்தால் மிகமிகச் சேயவாம்; அவ்விடங்களில் தோன்றும், பொன்னும், முத்தும், பவழமும், மணியும் அவை தோன்றும் இடங்களை நோக்க மிக மிகச் சேயவாம் ஆயினும், அழகிய ஓர் அணியினை ஆக்க, அவையனைத்தும் ஒன்றுசேரக் காண்கிறோம்; கண்டு பழகாத இருவர், மிகமிகச் சேயநாடுகளில் வாழ்ந்த இருவர் ஏற்ற காலத்தில் ஓரிடத்தே வந்து ஒன்றுகூடிய செயல், புலவர்க்குப் பொன் முதலாம் பொருள்களின் இயல்பினை நினைப்பூட்டிற்று; ஓர் அழகிய பா உருவெடுத்தது.

"பொன்னும், துகிரும், முத்தும், மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும், தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றியாங்கு,என்றும், சான்றோர்
சான்றோர் பால ராப;
சாலார்,சாலார் பாலரா குபவே." (புறம் : உகஅ)

தலைவன் ஒருவன், வினைவயிற் பிரிந்து மீண்டு வந்து தலைவியோடு கூடி இன்புற்றிருக்கையில் மறுவலும் பிரிய வேண்டிய நிலை உண்டாயிற்று. அவனைப் பிரிந்திருத்தல் தன்னால் இயலாது என்பதைத் தலைவி உணர்ந்தாள். தன் காதற் காமத்தை எடுத்துக்கூறல் ஆண்மகனுக்கு அமையுமேயன்றிப் பெண்டிர்க்குப் பெரிதும் இழுக்காம்; எனினும், தன் காமத்தின் கொடுமையினை எடுத்துக்கூறித் தடுக்காதுவிடின் தலைவன் பிரிவன்; அவன் பிரிந்தால் அவள் உயிர் அவள் உடம்பினின்றும் பிரிந்துவிடுதலும் கூடும். ஆகவே, இழுக்கு என எண்ணாது, வரம்பையும் கடந்து தன் காமத்தை அவனுக்கு அறிவிக்க எண்ணுகின்றாள்; ஆனால், அவள் பெண்மைக்குணம் மீண்டும் தடுக்கிறது, செய்வதறியாது திகைத்து, தோழியை அடுத்து இந்நிலையில் செய்வன யாது என உசாவி நின்றாள். பெண்ணுள்ளம் படும் பெரும்பாட்டினைப் புலவர் நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார், நற்றிணைச் செய்யுள் ஒன்றில்:

"பிரிந்தோர் வந்து நப்புணரப், புணர்ந்தோர்
பிரிதல் சூழ்தலின் அரியதும் உண்டோ?
என்றுநாம் கூறிக் காமம் செப்புதும்;
செப்பாது விடினே உயிரொடும் வந்தன்று;
அம்ம வாழி தோழி!
யாதனின் தவிர்க்குவம் காதலர் செலவே." (நற் : எக)

சான்றோர் சான்றோர்பால்சென்று சேர்வதற்குப், பொன்னும், பவழமும், முத்தும், மணியும் அழகிய அணி யாதற்பொருட்டு ஒன்று சேர்வதை உவமையாக்கிய புலவர் தாம் பாடிய நற்றிணைப் பாட்டில், ஈங்கையின் பெரிய மலர்கள், பாறைக்கண் உதிர்ந்து கிடப்பது, மகளிர், தம் மனை முன்றிலின் மணலிடத்து ஆடற்கு இட்ட கழங்கு போலும் என உவமை கூறியிருப்பது, புலவர்தம், இயற்கையோ டியைந்த அறிவுச் சிறப்பினைப் புலப்படுத்துவதாம் :

"சிறைநாள் ஈங்கை உறைநனி திரள்வீ,
கூரை நன்மனைக் குறுந்தொடி மகளிர்
மணலாடு கழங்கின் அறைமிசைத் தாஅம்." (நற் : எக)

பரிபாடற் பாக்களுக்கு இசைவகுத்தோர் பெயர்களுள் கண்ணனார் என்ற ஒரு பெயரும் உளது: அப்பெயருடை யாரும் இவரும் ஒருவரே எனக் கொள்வாரும் உளர்.

## சுடு. கண்ணகாரன் கொற்றனுர்

கொற்றனுர் என்பது இவரது இயற்பெயர்: இவர் பெயர்க்குமுன் வந்துள கண்ணகாரன் என்பதன் பொருள் விளங்கவில்லை: தாயன்பு புலப்பட இவர் பாடிய பாட்டொன்று நற்றிணைப் பாக்களுள் சேர்க்கப்பட்டுளது.

அன்பில் தாயன்பே தனிச்சிறப்புடையது : இறைவன் உயிர்கள்மாட்டுக் கொள்ளும் அன்பும், தாயன்பிற் குறை யுடையதே: "பால் நினைந்து ஊட்டும் தாயினும் பரிந்து" என்ற மணிவாசகப் பெருந்தகையாரின் மணிமொழியினைக் காண்க. தன் மகள், தான் விரும்பிய ஓர் ஆண்மகனேடு அவனூர் சென்றுவிட்டாள் என்பதை அறிந்தாள் ஒரு தாய் : "உற்ருர்க்கு உரியர் பொற்றெடி மகளிர்" என்பதை உணர்ந்தவளாதலின், தன் மகள், தக்கான் ஒருவனுடன் சென்ற செயல் தக்கதே எனும் கருத்துடையளாயி னும், அன்புகாட்டி வளர்த்த அவள் பிரிவு, அவள் உள்ளத்தே உறுதுயர் விளைத்தது; மணல் பரந்து அழகு மிக்குத் தோன்றும் தன் மாளிகை முற்றத்தே, தன் மகளோடு ஆடி மகிழும் மகளிரையும், அவர்கூடி ஆடிய நொச்சி வேலிசூழ் இடத்தையும், அவள் வளர்த்த கிளி, அவளைப் பலகால் அழைத்து அழைத்தும் அவளைக் காண மாட்டாமையால் கலங்கி நிற்கும் காட்சியையும் காணுந் தொறும் காணுந்தொறும், கழிபெரும் துயர்கொண்டாள்: எனினும், அந்நிலையிலும், பிரிந்த அவள்மாட்டு அவட்குச் சினம்பிறக்கவில்லை; அவள் செயல் அவட்குப் பிழையுடைய தாகத் தோன்றவில்லை: அவள் பிரிவிற்கும், அவள் பிரி வால் உண்டாம் துயர்க்கும் தானே காரணமாம் என்றே எண்ணிஞள்: தன் துயர் பொருது, தன்னருகிருந்து ஆறுதல் கூறுவார்பால், "இவ்வாறு யான் வருந்தப் பிரிந்து சென்ற என் மகள் குற்றமுடையாளல்லள்; அவள் கொண்ட காமமோ மிகமிக அருமையும், பெருமையும் உடையது: நின்மகள் அயலான் ஒருவன்பால் அன்புடை யள் என்று ஊர்ப்பெண்டிர் ஓயாது வந்து கூறுவன கேட்

டேன்; தகுதியுடையான்பால் அன்புகொண்டு வாழ்வதே அறநெறியாம்; அந்நிலையினை என்மகளும் அடைந்துவிட்டாள் என்பதை அவர் உரை அறிவித்தலான், ஒருபால் இன்பம் நிறைந்ததாகத் தோன்றினும், அவர் ஓயாது கூறுவதும், கூறும் முறையும் துயர் தருவவாயின. அவர் கூறுவன கேட்ட பின்னரும் சிலநாள் அளவும், அவள் களவொழுக்கத்தினை அறியாதேன்போல் இருந்தேன்; மீண்டும் அலர் மிக எழுதல் அஞ்சி, ஒரோவொருகால், அவள் களவொழுக்கத்தை யான் அறிந்துளேன் என்பதை அவட்குக் காட்டும் முகத்தான், "மகளே! நின்கூந்தல் பண்டு போலாது புதுமணம் கமழக் காரணம் என்னையோ?" என்று வினவினேன்; தன் ஒழுக்கத்தினை யானும் அறிந்து கொண்டேன் என்பதைக் கண்டு நாணியே அவள் பிரிந்து விட்டாள்; ஆகவே, யானே தவறுடையேன்," என்று கூறினாள்; அத் தாயின் அறிவும், அன்பும் என்னே!

கடனறி தாயின் அறிவும், அன்பும் புலப்படப் பாடிப் பொன்றுத் துணை புரிந்த புலவர் தம் பெருமையே பெருமை!

"ஜதே காமம்! யானே; ஓய்யெனத்
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து
ஓரை ஆயமும் நொச்சியும் காண்தொறும்
நீர்வார் கண்ணேன் கலுழும் என்னினும்
கிள்ளையும் கிளைஎனக் கூஉம்; இளையோள்
வழுவிலள் அம்ம! தானே குழீஇ
அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்
இன்னா இன்னுரை கேட்ட சின்னாள்
அறியேன் போல உயிரேன்;
நறிய நாறும்நின் கதுப்புஎன் றேனே." (நற் : கசங)

## சக. கண்ணங்கொற்றனார்

கொற்றனார் எனும் இயற்பெயருடைய இப்புலவர், கண்ணன் என்பாரின் மகனாராவர்; நற்றிணை நானூற்றில், இவர் இயற்றிய பாட்டொன்றும் இடம் பெற்றுளது.

தலைவன், தான் காதலித்த பெண்ணின்பால் பேரன்புடையவன்; அவள்பால் அவன் கொண்ட பேரன்பு, அவள் உறையும் ஊர், கடத்தற்கரிய காவலையுடையது என்பதையும் கருதாது, நடந்துவரும் வழிதவறின், தவறிய நெறியினைக் காலால் தடவி அறிதற்கும் இயலா ஆரிருட் காலத்தே, அவளைக் காண அவனைத் துரத்தும் அத்துணை வலியுடைத்து; தலைவன் பேரன்பினைத் தாம் அறிந்தது மட்டுமன்று; அதை, அவன் காதலிக்கும் அப்பெண்ணும் அறிவாள் என்று கூறியுள்ளார் புலவர். தலைவன் மட்டும் அத்துணை அன்புடையனாக, அவ்வன்பு அவன் காதலிக்கும் அவள்பால் இன்றாயின், ஒருதலைக் காமமாம்; அவ்வன்பாற் பயன் இன்றாம்; ஆனால், அவனைப் போன்றே அவளும் அவன்பால் பேரன்புடையள் என்பதையும் அறிவித்துள்ளார் புலவர். அவன், தன்னைக்காண இடர்ப்பாடு பலவற்றையும் எண்ணாது வருதலைக்காண வருந்திற்று அவள் உள்ளம்; அவ்வாறு வருவதால் அவனுக்கு யாதேனும் இடையூறு உண்டாயின் என்னாம் என அஞ்சினாள்; மேலும், தன் தந்தையும், தன்னையரும், மதுவுண்டு மயங்குவாராயினும், வெகுளியிற் சிறந்தார்; அவரால் அவனுக்கு இடையூறு உண்டாதலும் உண்டாம்; மேலும், ஊரில் மழை மிகப் பெய்தமையால், அவன் வரும் வழியில் ஏதம் பல நிகழினும் நிகழும். ஆகவே, அவன் இரவில் தன்னூர் வருதல் தகுதியுடையதன்று எனத் துணிந்தாள்; ஆயினும், அவனோ அவளைக் காணாது ஒருநாளும் இரான் என்பதையும் உணர்ந்தாள்; இதற்கு என்செய்வது என ஏங்கிநின்றகாலை தினைப்புனத்தைக் காக்கவேண்டிய கடமையினை, அவள் பெற்றோர் அவள்மாட்டு மீட்டும் அளித்தனர்: அகமகிழ்ந்தாள். அவனையும் அவன் மலையையும் மன

தாரப் பாடி, அவனோடு கூடிமகிழ்தற்கு ஏற்ற வாய்ப்பு வந்துற்றது என எண்ணி, இன்ப வெள்ளத்துள் திளைத்தாள்; அங்கிலையில் ஆண்டுவந்த அவனிடம் எல்லாவற்றையும் எடுத்துக்கூறி, இனி எம் தினைப்புனத்திற்கே வருக! இரவுக் காலத்தில் வருதல் வேண்டுவ தின்று; பகற் காலத்திலேயே வருக! என வேண்டிநின்றாள் என்று கூறி, அவள் அன்பை நாம் அறியச் செய்துள்ளார் புலவர்.

"நீயே, அடிஅறிந்து ஒதுங்கா ஆரிருள் வந்துஎம்
கடியுடை வியனகர்க் காவல் நீவியும்
பேரன் பினையே; பெருங்கல் நாட!
யாமே, நின்னும் நின்மலையும் பாடிப் பன்னாள்
சிறுதினை காக்குவம் சேறும்; அதனால்,
பகல்வந் தீமோ பல்படர் அகல;
எருவை நீடிய பெருவரைச் சிறுகுடி
அரியல் ஆர்ந்தவ ராயினும், பெரியர்;
பாடிமிழ் விடர்முகை முழங்க
ஆடுமழை இறுத்தன்றுஎம் கோடுயர் குன்றே."

(நற் : கஙசு)

## ௫௦. கண்ணத்தனர்

மதுரைப் புலவர்களுள் இவரும் ஒருவர். அகத்தில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றுமாக, இரு பாடல்கள் இவர் இயற்றியனவாக நமக்குக் கிடைத்துள. அந்திவானத்துச் செந்நிறமும், கடல் நீரின் கருநிறமும் கலந்து காணும் மனதிற்கினிய மாலைக் காட்சிக்கு, இருபெரும் கடவுளராய சிவனும், திருமாலும், தம் செந்நிறமும், கருநிறமும் கலந்து தோன்றக் காட்சிதரும் சங்கரநாராயணக் காட்சியினை உவமை கூறிய திறம் வியந்து பாராட்டும் பண்பிற்றும்.

"வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடல்அணி கொளாஅ
வந்த மாலை." (அகம் : ௩௬௦)

தலைவன் ஒருவனைத் தான் காட்டும் இரவுக்குறிக்கண் வந்து தலைமகளைக் காண்பாயாக எனக் கூறுவாள், அவன் வருகை பிறர் உணராவண்ணமாதல் வேண்டி, ஊரெல்லாம் உறங்கும் காலத்தே சிறு ஒலி உண்டாதலும் நன்றன்றும். ஆகவே, நின் குதிரைகள், கனைப்பதாலோ அன்றி, காற்குளம்புகள் விரையப் பதிதலாலோ ஒலியுண்டாகாவாறு கவனித்துக்கொள்; நின் தேரையும் நெடுந்தூரத்திலேயே நிறுத்திவிடு; நீயும் விரைந்து வாராது, குன்றின் இழிந்து செல்லும் யானை மெல்லச் செல்வதேபோல், நின் அடியோசையுண்டாக்காவாறு மெல்லென இட்டு மணல் மேட்டினைத் தாண்டிவருக என்று கூறினள் எனப் பாடிப் பெண்டிர்தம் விழிப்புணர்ச்சியினையும், தம் புலமைச் சிறப்பினையும் ஒருங்கே புலப்படுத்தியுள்ளார்:

"பாணி பிழையா மாண்வினைக் கலிமா
துஞ்சூர் யாமத்துத் தெவிட்டல் ஓம்பி
நெடுந்தேர் அகல நீக்கிப் பையெனக்
குன்றிழி களிற்றின் குவவுமணல் நீந்தி
இரவின் வம்மோ." (அகம் : ௩௬௦)

மகளிர்க்குக் காவலாய் அமைய வேண்டுவது தம் அறிவினைத் தாம் விரும்பியாங்கு நிறுத்தவல்ல நிறைக் குணமே; அஃது இல்லாத வழி, அவர்க்கு எத்துணைப் பெருங் காவல் செய்யினும் அவர் நெறிகெடல் உறுதியாம். இந்த உண்மையினை ஒரு பெண் தன் தாய்க்கு உணர்த்தும் நிலையில் உணர்த்துகிருர் நம் புலவர்; ஒரு தாய் தன் மகள் புறத்தே போந்து விளையாடும் பேதைப் பருவம் கழிந்தாளாதல் கண்டு, இல்லிடை வைத்துக் காப்பாற்றத் தொடங்கினுள். அவள் அன்னளாகவும், அவள் மகள் ஒரு தலைவனைக் கண்டு காதலித்து, அவனை இடைவிடாது கண்டு மகிழும் வாய்ப்பு இன்மையால் வாடினுள். தன் மகள் புறத்தே போகாதவள் ஆதலின், அவளுக்குக் காமநோய் உண்டாதற்கு வழி இல்லை என்ற துணிவினளாய், இது கடவுள் தந்த நோய் எனக்கொண்டு கவலையுற்று அது தீரத் தெய்வம் பேணத் தொடங்குகிருள். 'பாம்பறியும் பாம்பின் கால்' என்ப: அவள் மகள்நோய்க்கு மனநோய் காரணமாம் என்பதை உணர்ந்த அவள் தோழி, அத்தாயை அணுகி, 'நின் முயற்சியாற் பயன் உண்டாகாது; அவளை மீண்டும் புனங்காக்கப் போக்கின் அவள் துயர் போம்' எனக்கூறி, உண்மையை உணர்த்தினுள்; இதை அவள் உணர்த்தும் அரிய திறத்தினை அழகாகப் பாடிக் காட்டுகிருர் புலவர் :

"இளமை தீர்ந்தனள் இவள், என வளமனை
அருங்கடிப் படுத்தனை; ஆயினும், சிறந்திவள்
பசந்தனள் என்பது உணராய்; பன்னுள்
எவ்வ நெஞ்சமொடு தெய்வம் பேணி
வருந்தல்;...............................
சிறுதினை வியன்புனம் காப்பின்
பெறுகுவள் மன்னே என்தோழி தன்நலனே."

(நற் : நஉக)

## ருக. கண்ணனார்

கண்ணன் என்பது இவர் இயற்பெயர்; இவர் இயற்றிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது என்பதல்லது இவர் வரலாறு குறித்து வேறு எதையும் உணர்தற்கு இல்லை.

இரவுக்குறி இடையீடுபட்டு வருந்திய தலைவனைப் பிறிதொருநாள் கண்ட தோழி, 'ஐய! ஊரெல்லாம் உறங்கும் நள்ளிரவு என்பதையும் எண்ணாது வருகின்றனை நீ; அவ்வாறு வரும் நின் செயலை எதிர்நோக்கி உறங்காது கிடக்கின்றாள் இவளும்; ஆண்டுவந்து நீ, நின்வருகை அறிவிக்கச் செய்யும் சிற்றொலிகளும் அவள் காதில் விழுகின்றன. ஆயினும், அவளால் நின்னை வந்து காணல் இயலவில்லை. தாயோ, தன் மகள் நல்வாழ்வில் நாட்டமுடையளாய், இரவினும் அவள் அருகிலேயே உறங்குதலை மேற்கொள்கின்றனள். தலைவி, நின்குறி அறிந்து நின்னைக் காணத் துடிப்பதால் உடல் நடுங்குகின்றாள். தாய் தன் மகள் அச்சத்தால் நடுங்குகிறாள் எனப் பிறழ உணர்ந்து மேலும் அவளை இறுக அணைத்துக்கொள்கின்றனள். இதனால் தலைவி, வலையில் அகப்பட்ட மயில்போல் வாடுகின்றனள்; ஆகவே களவொழுக்கத்தில் இனி அவளைக் காணல் அரிதினும் அரிதாம். ஆகவே வரைந்துகோடலை விரைந்து மேற்கொள்வாயாக!" என வேண்டினாள் என்னும் துறையமைய வந்துள அச்செய்யுள் புலவர் தம் புலமைச் சிறப்பினைப் புலப்படுத்தி நிற்கிறது.

"பல்லோர் துஞ்சும் நள்ளென் யாமத்து
உரவுக்களிறு போல்வந்து இரவுக் கதவம் முயறல்
கேளே மல்லேம்; கேட்டனம்; பெரும!
ஓரி முருங்கப், பீலி சாய,
நன்மயில் வலைப்பட் டாங்குயாம்
உயங்குதொறும் முயங்கும் அறனில் யாயே."

(குறுந் : உசச)

## ௯௨. கதக்கண்ணனுர்

கதக்கண், சினம்மிக்க கண்; சிவனுடைய நெற்றிக்கண் சினக்கண் எனப்படும் ஆதலின், கதக்கண்ணன் என்பது சிவனுக்குரிய பெயர்களுள் ஒன்று எனக் கொள்வர் சிலர்; 'செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி' எனவரும் தொடரில், கதக்கண்ணன் என்ற சொல், திருமாலைக் குறிப்பதாலும், அவனுக்குக் கண்ணன் என்பதும் ஒரு பெயராம் ஆதலாலும், கதக்கண்ணன் என்பது திருமாலையே குறிக்கும் என்பர் மற்றும் சிலர்; அக்கடவுளர் ஒருவர் பெயரைத் தம்முடைய இயற்பெயராகக் கொண்டவர் நம் புலவர்.

தலைவன், இரவில், புலியும் களிறும் போர் செய்யும் காட்டுவழியே வரின் ஏதம் உண்டாதலும் கூடும்; அவனுக்கு ஆங்கு ஏதம் உண்டாயின், தாம் துயர் உறுவதோடு பழியும் கொள்ளவேண்டியவராவோம் என்ற எண்ணத்தால், அவன் இரவில் வருதலை விரும்புவாளல்லள் தலைமகள்: ஆனால், தலைவனே, அவள்மாட்டுக்கொண்ட அன்பின் மிகுதியால், அக்காட்டுவழியின் கொடுமைக்கு அஞ்சாது வரத் துணிந்துவிட்டான்; துணிந்துவந்தானைப் பழி எண்ணி ஏற்றுக்கொள்ளாது வறிதே மீளச்செய்தல் தம் தகுதிக்குத் தக்கதன்று என உணர்ந்த தோழி, தலைமகளிடம் 'அவன் வரத் துணிந்துவிட்டான்; இனிப் பழிகண்டு நாணுவதால் பயனில்லை; ஏற்றுக்கொள்வதே செயற்பாலது' என உரைத்தாள். அவள் கூறுவதைக் கூறும் புலவர் செய்யுள்:

''ஒலிவெள் ளருவி, ஓங்குமலை நாடன்  
சிறுகண், பெருங்களிறு, வயப்புலி தாக்கித்  
தொன்முரண் சோரும் துன்னரும் சாரல்  
நடுநாள் வருதலும் வரூஉம்;  
வடுநா ணலமே; தோழி! நாமே.'' (குறுந் : அஅ)

## ௫௩. கந்தக்கண்ணன்

இவர் கந்தன் என்பாரின் மகன்; கண்ணன் என்ற இயற்பெயர் உடையவர்; இவ்விரு பெயர்களும் இரு வேறு சமயக் கடவுளர்க்குரிய பெயர்களாதலை நோக்கின், புலவர் காலத்தே, சமயங்களுக்கிடையே நிலவிய ஒற்றுமை நன்கு புலனும். இவர் பாடிய ஒரு பாட்டு, குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது. பால் புளிப்பினும், பகல் இருளினும், பருவம் மாறினும், தம் கணவர் சொல்மாருர் என்ற மாண்புடை உளத்தராவர் தமிழகமகளிர் என்ற கருத்தினை நன்கு எடுத்துக்காட்டியுள்ளார் புலவர்.

ஒரு தலைவன் மாரிக்காலத் தொடக்கத்தே மீள்வன் எனக்கூறிப் பொருள்தேடப் பிரிந்திருந்தான்; ஒருநாள், தலைவியின் தோழி மலர்ச்சோலையுட் புக்கவள் ஆண்டுப் பித்திகம் என்ற மலர் நன்கு மலர்ந்திருப்பதைக் கண்டாள்; பித்திகம், மாரிக்காலத்தில் மலரும் இயல்புடையது; ஆகவே, கார் காலம் வந்துவிட்டது என்பதை உணர்ந்தாள்; கூறிச் சென்ற காலம் வந்துவிட்டது; ஆனல் அவரோ வந்திலர்; அந்தோ! தலைமகள், பித்திகம் மலர்ந்துவிட்டதைக் காணின் பெரிதும் வருந்துவளே என வாடினாள்; தோழியின் வாட்டத்தை உணர்ந்தாள் தலைவி; "தோழி! இப் பித்திகம் அறியாமை நிறைந்தது; பருவத்தே மலர்வதை விட்டுப் பருவமல்லாப் பருவத்தே மலர்ந்துளது; பருவம் வருதற்கு முன்னே மலர்ந்துள இதன்செயல் அறியாமையுடைத்து என உணராமல் நீ வருந்துகின்றனை; பித்திகத்தின் அறியாமைகண்டு மருள்வேன் யானல்லன்; ஆனல், பிரிந்து பொருள்தேடிச் சென்றுள நம் தலைவர், ஆண்டு, இப்பித்திகத்தைப் போன்றே, பருவம் வருதற்குமுன்னரே இடித்துப்பெய்யும் மழைக்குரல் கேட்டு, பருவம் வந்துவிட்டது; பருவம் வரவும் யாம் செல்லாதுபோயின் தலைவி உயிர் நில்லாதுபோம்; ஆகவே எடுத்தவினை குறைவினையாயினும் ஆகுக; இன்றே ஆண்டுச்செல்வன் என்று துணிந்த உள்ளமுடையராய் வந்துவிடுவரோ என்றே

அஞ்சுகின்றேன்; அவர் அவ்வாறு மயங்காது, வினை முடித்து மீளும் மாண்பினராகுக!'' என்று கூறினள்; தலைவன் கூறும் சொல்லிடத்தே அவள் வைத்துள நம்பிக்கையினையும், தலைவன், வினைமுடியாது மீளின் அவள் கொள்ளும் உள்ளத்துயரினையும், புலவர் நன்கு உணர்ந்து அந்நற்பண்பு நாட்டுமக்கள்பால் நன்கு அமைதல்வேண்டும் என்ற நல்லெண்ணம்கொண்டு, அத்தலைவியின் கூற்றை ஓர் அழகிய பாட்டாக ஆக்கி அளித்துள்ளார்.

''பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து
அரும்பே முன்னும் மிகச்சிவந் தனவே;
யானே மருள்வேன்? தோழி! பானாள்
இன்னும் தமியர் கேட்பின், பெயர்த்தும்
என்னா குவர்கொல் பிரிந்திசி னோரே?
அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதருங் குரலே.''

(குறுந் : கசு)

காலந்துவருது கடனாற்றும் இயல்பினவாய மரம், செடி, கொடிகள் தம் கடனாற்றி, அக்காலம் வந்துற்றது என அறிவிப்பினும், அதை ஏற்றுக் கொள்ளாள் தலைவி எனக் கூறும் இப்பாட்டோடு ஒத்த கருத்தமைந்த பாட்டு ஒன்றை இளந்திரையனாரும் பாடியுள்ளார்.

''மதியின்று
மறந்துகடல் முகந்த கமஞ்சூல் மாமழை
பொறுத்தல் செல்லாது இறுத்த வண்பெயல்
கார்என்று அயர்ந்த உள்ளமொடு தேர்வில
பிடவும் கொன்றையும் கோடலும்
மடவ வாகலின் மலர்ந்தன பலவே.''

(நற் : கக)

## ௫௪. கந்தரத்தனார்

கந்தரத்தனார் என்ற பெயருடையார் பலராவர்; உரோடகத்துக் கந்தரத்தனார், காவிரிப்பூம் பட்டினத்துக் கந்தரத்தனார் என்பாரை நோக்குக. கந்தரத்தனார் உலகியல் அறிந்த உயர் பெரும்புலவராவர்; கார்காலத் தொடக்கத்தே நில்லாது வருவன் எனக் கூறிச்சென்ற தலைவன் வாரானாகக், கார்காலம் வந்துற்றமை கண்டு வருந்திய தலைவி, அக்காலம் வந்துற்றது என அறிவித்து வந்து முழங்கும் மழையை விளித்து, "சான்றோர், பிறர் நோயும் தந்நோய்போல் போற்றிப் போக்கிப் பெரும்பணிபுரிவர்; வருவேன் என அவர் கூறிச் சென்ற காலத்தே வந்த நீ, நின்னோடு அவரையும் உடனழைத்து வந்து என் துயர் போக்கித் துணைபுரிந்தாயல்லை; மாறாக, அவரை விடுத்து வந்துள்ளனை; அம்மட்டோ! 'ஆங்கு அவர் உள்ள நிலையினைக் கூறுகிறேன், கேள்' என வேதனை தருவன வேண்டுவ கூறுகின்றனை; நின் செயல், சான்றோர் செயலொடு பட்டதன்று; நீ சான்றோன் அல்லை" என வெறுத்துக் கூறும் வெஞ்சொல்லும்,

"பருவம் செய்த கருவி மாமழை!
அவர்நிலை அறிமோ ஈங்கென வருதல்
சான்றோர்ப் புரைவதோ வன்றே" ((நற் : ௨௩௮)

"இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு" என்ற பொருள் நெறியுணர்ந்து, தமக்குக் கேடுசெய்தாரையும், அவர் தாம் செய்தது தவறு என உளமார உணர்ந்து திருந்துவாராக என விடுத்துப் பொறுப்பர் பெரியோர்; பெரியோர் தம் பண்பு இதுவாகவும் இவ்வூர் வாழ்பெண்டிர், தங்கட்கு ஒரு தீங்கும் செய்யாத நம்மை, ஒரு பிழையும் அறியாத நம்மை அலர் தூற்றித் திரிகின்றனரே! இவரை என்னென்பது" எனக் கூறுவதும் புலவர் கந்தரத்தனார் சான்றோர் சென்ற நெறியுணர்ந்து நல்லோராவர் என்பதை நிலைநாட்டுவதறிக.

"தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாம்அறிந்து உணர்க என்ப மாதோ!"
"குறிஞ்சி நல்லூர்ப் பெண்டிர்
இன்னும் ஓவார் என் திறத்து அலரே." (நற் : ககசு)

காவியப் புலமையுற்ற நம் புலவர், ஓவியப் புலமையும் உற்றவராவர்; ஓவியத்தின் உயர்வுகண்டு போற்றும் உள்ளம் உடையவராவர்; ஒருவர் ஒருவினை செய்ய, செய்த அவ் வினையைப் பலரும் கண்டு பாராட்டிப் புகழின் அவ் வினையினைச் செய்தாரின் சிந்தையெலாம் மகிழும்; செய் கின்ற வினை ஒவ்வொன்றும் அத்தகைய சிறப்புடைய தாதல் வேண்டும்; ஒருவன் ஒரு ஓவியம் புனைந்தான்; ஓவியத்தில் சென்ற உள்ளமுடையார் பலர் ஒன்று கூடினர்; "அம்மம்ம! என்ன அழகு! எத்துணைச் சிறப்பு!" எனப் பாராட்டினர் அவ் வோவியத்தை! அதுவே, உண்மையில் உயிர் ஓவியம்; பழந்தமிழர் கண்டு பாராட்டிய அவ்வோவி யத்தினையும், அவ் வோவியத்தினை வரைந்த ஓவியம் வல்லானையும், தம் பாட்டிடை வரைந்து காட்டி, நம் பாராட்டி னைப் பெற்றுவிட்டார் நம்புலவர் :

"அருளிக் கூடும் ஆர்வ மாக்கள்
நல்லேம் என்னும் கிளவி வல்லோன்
எழுதி யன்ன காண் டகு வனப்பு." (நற் : கசகசு)

வேந்தர்கள் வெண்கொற்றக் குடையுடையவரர்வர்; அவர்கள் குடைகொண்டிருப்பது, மழை, வெய்யில், பனி, ஆகியவற்றினின்றும் தம்மைக் காத்துக் கொள்வதற் கன்று; தம் அரசின்கீழ் வாழும் மக்கள், பெருமரநிழலில் பெரிதும் மகிழ்ந்து உறைவதேபோல், நிறைவளம்பெற்று, பேரின்பம் உற்று நெடிதுவாழ நின்று துணைபுரியவேயாம்; ஆகவே, குடைகொள்ளும் வேந்தர், செங்கோலினராதல் வேண்டும்; கொடுங்கோலினர், குடை கொள்வதிற் பயன் இல்லை; குடை கொண்டமையினாலேயே, அவர்கள் ஆட்சி நல்லாட்சி ஆகிவிடாது குடையும், குடியோம்பும் கொள்கை யுடைய முடி மன்னரிடத்து நின்றவழியே சீர்புகழ் பெறும். இந்த அரசியல் உண்மையை உணர்ந்து கூறியுள்ளார் புலவர்

"கடனறி மன்னர் குடை நிழல் போலப்
பெருந்தண் என்ற மரநிழல்" (நற் : கசுசு)

புலவர் மேற்கொண்ட மற்றோர் உவமையும், மகிழ்ந்து பாராட்டும் மாண்புற்றுத் திகழ்கிறது; தலைவன் விரைந்து வந்து வரைந்து கொள்ளாமையால், அவன் நட்பினை இழந்து விட்டதாகக் கருதினாள் ஒரு தலைவி; அவன் அவளைக் கண்டே நாட்கள் பல ஆகிவிட்டன; ஆகவே அவன் தொடர்பு என்றோ அறுந்து விட்டது; அதைத் தன்னால் மீண்டும் பெறுவதும் இயலாது என உணர்ந்தாள்; உணர்ந்த அவள் தன்தோழிபால், மலையின் உச்சியில் ஒரு பலாமரம்; அதில் ஒரு பெரும் பழம்; நன்கு பழுத்து விட்டது; அதைப் பேணிப்பறித்துச் செல்வார் இலராயினர்; அது மேலும் மேலும் பழுத்துக்கொண்டே வந்தது; கடைசியில் ஒருநாள், காம்பற்று வீழ்ந்துவிட்டது. வீழ்ந்த இடமோ, ஆழ்ந்து அடர்ந்த மலைப்பிளவு; ஆங்கு வீழ்ந்த அப்பழத்தினை எவ்வாறு பெறுதல் இயலாதோ, அவ்வாறே, விட்டுப்போன தலைவன் நட்பினையும் மீட்டும் பெறுதல் இயலாது எனக் கூறினாள் என்ற அவர் கூற்றில் அவர் உவமைகிடந்து அழகு தருவது காண்க.

'மலைகெழு நாடன் கேண்மை, பலவின்
மாச்சினை துறந்த கோள்முதிர் பெரும்பழம்
விடரளை வீழ்ந்துக் காங்குத் தொடர்பறச்
சேணும் சென்றுக் கன்றே" (நற்: ககசு)

# ருரு. கயத்தூர்க்கிழான்

கயத்தூர், சோழநாட்டின்கண் உள்ளதோர் ஊர்; அவ்வூரினராய இவர், அரசரான் நன்குமதிக்கப்பெற்று, அவர் அளித்த கிழார்ப்பட்டம் பெற்ற பெரியாராவர்; எட்டுத்தொகை நூல்களுள், குறுந்தொகைக்கண் இவர் பாடிய பாட்டொன்று காணப்படுகிறது.

தலைவன் ஒருவன்பால், பரத்தையர்த் தொடர்பாய தகாவொழுக்கம் எவ்வாறோ இடம்பெற்றுவிட்டது; அது கண்டு பொறாது அழும் அவன் மனைவியின் நிலைகண்டு மனங்கலங்கி வாழ்ந்தாள் அவள் தோழி; ஒருநாள், பரத்தை வீடுசென்ற தலைவன் தன் மனை வந்துசேர்ந்தான்; தலைவன்பால் நிகழ்ந்த தகாவொழுக்கத்தினை எடுத்துக் காட்டித் திருத்த எண்ணினாள் தோழி; அவனை அணுகி னாள்; "ஐய! தண்ணிதாய் ஆடுதற்கினிமைதரும் எனக்கருதி நீராட எண்ணுகின்றோம்; ஆனால், அந்நீராடலை நெடிது நேரம் மேற்கொள்ளின், கண்ணும் சிவக்கும்; கருத்தும் சோரும்: இனிமையிற் சிறந்தது தேன்; ஆனால், அத்தேனை அளவின்றி உண்ணின், அந்நிலையில், அது இனிமை தருதற்கு மாறாகப் புளிச்சுவையுடையதுபோல் தோன்றி வெறுக்கச்செய்யும். பழகப்பழகப் பாலும் புளிக்கும்; அளவிற்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சாம்; இது உலகியல்; நீ, எம்மோடு நெடுங்காலம் பழகிவிட்டனை; இதனால், நினக்கு எம்பால் வெறுப்புத்தோன்றல் இயல்பே; இது நின் தவறன்று; காலம் செய்யும் கருமம். ஆகவே, நின் பரத்தையரொழுக்கம் கண்டு யாம் வருந்துகின்றேமல்லேம்; ஆனால், நின்னை ஒன்று வேண்டுகின்றேம்; எம்மை விட்டுப் பிரியுங்கால், எம்மை எம் தந்தையின் இல்லிடத்தே கொண்டுசென்றுவிட்டுச்செல்லவேண்டுகின்றேம்; ஆண்டு எம் துயரினை மறக்கச்செய்யவல்ல, மனங்கவர் பொய்கை போலும் இயற்கைக்காட்சிகள் எண்ணில உள; அன்று யாம்பால் வந்த பெருந்துயர் போக்கிப் பேணிய போன்

புடைய நினக்கு, இன்று இவ்வேண்டுகோளை ஏற்றுக் கோடல் இயலாததொன்றன்று'' என்று கூறினாள்.

கணவனும், மனைவியுமாகிக் காதல் வாழ்வு வாழ்தல், "அறவோர்க் களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க் கெதிர்தல், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர்கோடல்" ஆய இவற்றை இனிது ஆற்றுதற்கே ஆம்; இவற்றை இருவரும் கூடியிருந்தே ஆற்றுதல் இயலும்; ஒருவரை இன்றி, ஒருவர் ஆற்றுதல் இயலாது; அந்நிலையில், இல்லறத்தே ஒருவர் தனித்து வாழ்வதால் பயன் இன்றாம்; பயன் இன்றி ஆண்டு வாழ்வதினும், அவ்விடத்தின் நீங்கி, வேறிடம் சென்று வாழ்தலே நன்றாம்; இதை உணர்ந்தவள் தோழி; தலைவனும் இதை உணர்வான்; தலைவனின் தகாவொழுக்கினைப் போக்குதல் வேண்டின், அவன் ஒழுக்கத் தால், அவன் இல்லறக்கடன் அழிகிறது என்பதை அவனை உணருமாறு செய்தல் வேண்டும் என்பதை உட்கொண்டே "ஐய! நீ பிரிந்த பின்னர் ஈண்டு வாழ்வதால் பயனில்லை; ஆகவே, எம்மை, எம் தந்தைபால் அனுப்பிவிடுக!'' என்று கூறினாள்.

கடனறி உள்ளமுடைய தோழியின் அறிவெல்லாம் புலப்படுமாறு அழகிய பாட்டொன்று பாடி, அதன்வழியே தம் அறிவின் பெருமையினை உலகுணரச் செய்துள்ளார் புலவர்.

"நீர்நீ டாடின் கண்ணும் சிவக்கும்;
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்;
தணந்தனை யாயின்எம் இல்லுய்த்துக் கொடுமோ!
அந்தண் பொய்கை எந்தை எம்மூர்க்
கடும் பாம்பு வழங்கும் தெருவில்
நடுங்கனுர் எவ்வம் களைந்த எம்மே.'' (குறுந் : நடுச)

தந்தைவீடு செல்ல விரும்புவது, "ஆண்டுச்சென்று, அவனை மறந்து இன்புற்றுவாழ்தற்கன்று; அவனையின்றி

இவ்வுலகில் வாழ்வதினும் இறந்துபோதலே நன்றும் என்ற எண்ணத்தினாலேயேயாம்; ஆகையால் அன்றோ, தந்தை வீட்டினைக் குறிப்பிடுங்கால், கடும்பாம்பு வழங்கும் இடம் எனக் குறித்தாள்; அது கடும்பாம்பு வாழும் இடம்; அப்பாம் பினின்றும் எம்மைக் காப்போன் நீ; நீ இன்று எம்மோடு இல்லை; ஆகவே, இன்று எம்மைக் காப்பார், அவண் எவரும் இலர்; காக்கப்பெறாமல், அப்பாம்பால் கடியுண்டு இறத்தலை வேண்டுகிறோம் என்றன்றோ அவள் கருதுகிறாள்! என்னே அவள் துயர்!

## ருசு. கரும்பிள்ளைப்பூதனார்

கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர்கள் அருளிச்செய்த எட்டுத்தொகை நூல்களுள் ஐந்தாவதாக விளங்குவது, உயர்ந்தோரால், "ஓங்கு பரிபாடல்" எனப் போற்றப்பெறும் பரிபாடலாம்; பரிபாடல் எனப்படும் இசைப்பாவான் இயன்ற எழுபது பாடல்களைக் கொண்டதொரு சிறு நூல் பரிபாடல்; மதுரை, வையை, திருமருதமுன்றுறை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலைபோன்ற இடங்களின் பண்டைக்காலப் பெருமைகளையும், அக்காலத்துத் தமிழகத்தின் நாகரிக நன்மைகளையும், தெளிய உணரத் துணைபுரியும் பெருநூல் பரிபாடல்; பரிபாடற் செய்யுட்கள் எழுபதனுள், காலவெள்ளத்தால் காணுதுபோயின கழிய, இப்போது கிடைத்திருப்பன இருபத்து நான்கு; இவற்றைப் பாடிய புலவர்கள் பதின்மூவர்; அவருள் கரும்பிள்ளைப்பூதனும் ஒருவர்; வையையாற்று வெள்ளப்பெருக்கினை விரித்துரைக்கும் இவர் பாட்டு, பத்தாவது பாடலாக வரிசை செய்யப்பெற்றுளது; வையை, வயல்தொறும் பொன்கொழித்துப் புரண்டோடும் செயல், வறுமையால் வாடி வாயில் வந்து ஏற்பார் தம் கைந்நிறையப் பொன்சொரியும் பாண்டியன் செயல்போலும் எனக் கூறிய உவமையால், புலவர் பாண்டியன்பால் பேரன்பு கொண்டவர்; அவனால் அன்பு செயப்பெற்றவர் என்பன புலனும்.

"இலம்படு புலவர் ஏற்றகை ஞெமரப்
பொலஞ்சொரி வழுதியிற் புனலிறை பரப்பிச்
செய்யிற் பொலம்பரப்பும் செய்வினை." (க0 : கஉசு - அ)

தலைவன், தான்வரும் பருவம் இது எனக் குறித்துச் சென்ற பருவம் வரவும், அவன் வாராமை கண்டு வருந்திய தலைமகளது ஆற்றாமை கண்ட தோழி, தலைமகன்பால் பாணனைத் தூதுவிட, சென்ற பாணன், பாசறைக்கண் படையொடு வதியும் தலைமகன்பால், பருவவரவும், வையை நீர் விழவணியின் வனப்பும் கூறிய துறையமையப் பாடிய

தம் பாட்டின்கண், புலவர் தாம்வாழ் காலத்திய தமிழகத்தின் தனிச் சிறப்பினைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

தமிழர்கள் குதிரை, யானை, கோவேறு கழுதை, எருதும் குதிரையும் பூண்ட வண்டி, சிவிகை ஆய பல் வேறு ஊர்திகள் கொண்ட பெருவாழ்வினராவர் என்று கூறியுள்ளார். "புகவரும் பொங்குளைப் புள்ளியன் மாவும், மிகவரினும் மீதினிய வேழப் பிணவும், அகவரும் பாண்டியும், அத்திரியும், ஆய்மாச், சகடமும், தண்டார் சிவிகையும் பண்ணி."

உலகின் எப்பகுதிக்கும் சென்று, ஏற்றிச்சென்ற பண்டங்களைக் கொடுத்து, ஆண்டுள்ள பொருள் கொண்டு இடையூறின்றி இனிது வந்து கரைசேர வல்ல கணக்கற்ற நாவாய்களை உடையவர் தமிழர் என்றும் கூறியுள்ளார். "தாம் வேண்டும் பட்டினம் எய்திக் கரைசேரும் ஏமுறு நாவாய் வரவெதிர் கொள்வார்." கடல் வாணிபம் மேற்கொண்ட தமிழர், கடலிடையே தாம் ஏறிச்செல்லும் நாவாய், பாயும் கயிறும், மரக்கூட்டமும் பாழ்பட அழிவுறும் நிலைவந்த அக்காலை, அழிவுறுவண்ணம் காக்கவல்ல அறிவுடைப் பெருமகனையே கப்பலோட்டியாகக் கொள்ளுதல் வேண்டும் என்ற உணர்வுடையராவர் என்பதையும் உணர்த்தியுள்ளார்; "இதையும், கயிறும், பிணையும் இரியச், சிதையும் கலத்தைப் பயினால் திருத்தும், திசையறி நீகான்."

"ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு, இரவின் இளிவந்தது இல்" என்ப ஆதலின், ஈயென இரத்தல் இழிவுடைத்து; அவ்வாறு உறும் இழிவையும் எண்ணாது வந்து இரப்பார்க்குக் கரவாது உவந்தீதல் வேண்டும்; ஈதலையும், அவர் ஈ என இரத்தற்கு முன்னரே, "கொள்" எனக் குறிப்பறிந்து கொடுத்தல் வேண்டும். இரத்தல், ஈதல் ஆய இவ் விருவேறு பண்புகளையும் உணர்ந்து பாடியுள்ளார் புலவர். "இல்லது நோக்கி இளிவரவு கூறுமுன், நல்லது வெஃகி வினைசெய்வார்."

"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந் நிலையே, கெட்டான் எனப்படுதல் நன்று" என்ற நல் லுரையால் நலம்பல உண்டாதலோடு, ஒருசிறிது கேடும் உண்டாம்; இம் மான உணர்வு உண்மையால், மக்கள் பணிந்து போகவேண்டிய காலங்களிலும் பணியாமை யினையே விரும்புவாராயினர்; அஞ்சவேண்டுவன கண்டும் அஞ்சாமை மேற்கொண்டு அறிவிழக்கலாயினர்; இதைக் குறிப்பால் உணர்த்தியுள்ளார் புலவர். அரசர் இருவர் பகை கொண்டு போரிட்டனர்; போரில் இருவர் படையும் பெரும்பாழுற்றன; மேலும் போர்மேற்கொள்ளின் உள்ள படையும் உருக்குலையும்; ஆகவே போர்விட்டுப், பணிந்து போதலே நன்று என்பதை இருவரும் உணர்ந்தனர்; ஆயினும் ஒருவரும் பணிந்தாரலர்; பணியாமைக்குக் காரணம் அறிவின்மை யன்று; முன்னே பணிந்தது இப் படை, என்ற பழிச்சொல் தமக்கு உண்டாகி விடுமோ என்ற மானவுணர்வு இருவர் உள்ளத்தும் இடம் பெற்றதே காரணமாம் என்ற கருத்துரையால், அரசர்கள் கொள்ளும் மானவுணர்வால் மாண்ட பெரும்படைகளைக் காட்டி, மான வுணர்வு கொள்ளலாகா இடமும் உண்டு என்பதைக் குறிப் பால் உணர்த்தியுள்ளார். "மன்னவர், தண்டம் இரண்டும் தலைஇத் தாக்கி நின்றவை, ஒன்றியும் உடம்பாடு ஒலி எழுதற்கு அஞ்சி, நின்ற நிகழ்ச்சி."

பேராறுகளில் படிந்து ஆடும் பெருமக்கள், பொன் னால் செய்யப்பெற்ற நந்து, நண்டு, இறவு, வாளை இவற்றை அவ்வாற்று வெள்ளத்தில்விட்டு, "வயல்கள் விளைக! பொன் மிகப் பெருகுக!" என வாழ்த்தி நிற்கும் வழக்குடைய ராவர் என்பதையும் கூறியுள்ளார். "நந்தொடு நள்ளி நடை இறவு, வயவாளை வித்தி அலையில் விளைக; பொலிக என்பார்."

வையை யாற்று வெள்ளங் காண விரும்பிய மதுரை வாழ் மக்கள், களிறுகள் மீதும், பிடிகள் மீதும் ஊர்ந்து சென்றனர்; இடைவழியில் ஒரு களிறு, தன் பக்கத்தே வந்த பிடியொன்றைக் கண்டு காமம் கொண்டு, காம மயக்

கத்தால் மேலிருக்கும் மைந்தர் செலுத்தவும் செல்லாமல், ஒரு புலிமுக மாடத்தருகே நின்றுவிட்டது; களிற்றின் காதலால் கட்டுண்ட அப்பிடியும், மேலுள்ள மகளிரோடே நடை தளர்ந்து சென்றது; களிறு நின்ற புலிமுகமாடத்தே பண்ணி வைத்திருந்த புலியுருவத்தைக் கண்டது; அதை உயிருடைப் புலி எனப் பிறழ உணர்ந்த பிடி, அப்புலியால் களிற்றிற்கு ஊறு உண்டாம் என உளங்கொண்டு, அஞ்சிப் பாகர் அடக்கவும் அடங்காது அங்கும் இங்கும் ஓடி அலைக் கழிக்கலாயிற்று; பிடியின் செயல் கண்ட களிறும், பாகர் தம் அங்குசத்திற்கு அடங்க மறுத்தது. களிறு, பிடி இவற்றின் போக்கில் உண்டான இம்மாற்றத்திற்குக் காரணம், களிறு புலிமுக மாடத்தருகு நிற்பதே என்பதை உணர்ந்த மைந்தர், அதை ஆண்டு நின்றும் போக்கினர்; பிடியும் பணிந்தது; களிறும் கதனடங்கிச் சென்றது. மகளிரும், மைந்தரும் நடுக்கம் தீர்ந்து நன்கு சென்றனர். மதுரைப் பெருந்தெருவில் நடந்ததொரு நிகழ்ச்சியை நமக்குக் காட்டுவார்போல், காட்டு வாழ் உயிர்கள் காட்டும் கனிவு இத்தகைத்து என்பதை எடுத்துக்காட்டியுள்ளார் புலவர் :

"அணிநிலை மாடத்து அணிநின்ற பாங்காம்
மடப்பிடி கண்டு வயக்கரி மாலுற்று
நடத்த நடவாது நிற்ப, மடப்பிடி
அன்னம் அனையாரோடு ஆயா நடைக்கரிமேல்
சென்மனம் மாலுறப்பச் சென்று எழில்மாடத்துக்
கைபுனை கிளர்வேங்கை காணிய வெருவுற்று
மைபுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புறச்
செய்தொழில் கொள்ளாது மதிசெத்துச் சிதைதரக்
கூங்கை மதமாக் கொடுந்தோட்டி கைநீவி
நீங்கும் பதத்தால் உருமுப் பெயர்த்தந்து
வாங்கி முயங்கி வயப்பிடி கால்கோத்துச்
சிறந்தார் நடுக்கம் சிறந்தார் களையல்."

(பரிபாடல், ௧0 : ௪௧-௫௨)

## ருஎ. கவுணியன் பூதத்தனார்

தமிழகத்தில், மிகப் பழைய காலத்திலேயே, ஆரியரும், அவர் பழக்கவழக்கங்களும் புகுந்துவிட்டமையினைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக உணரலாம்; அவ்வாறு வந்தாரும், தாம் வந்த இடத்தில் வழங்கிய மொழியறிந்து அதில் மூதறிவுடையராயினர்; தமிழ்ப்புலவர் பலர் அந்தணராவர் என்பதே இதற்குச் சான்றாம். அத்தகைய அந்தணப் புலவர்களுள் பூதத்தனாரும் ஒருவர்; இவர் பிறந்தது அந்தணருள், கௌணிய கோத்திரமாதலின், இவர் கவுணியன் பூதத்தனார் என அழைக்கப்பெற்றார்; தேவாரம் பாடிய நால்வருள் ஒருவராய ஞானசம்பந்தர் பிறந்ததும், இக்கவுணிய கோத்திரமே யாகும். முல்லைத்திணை தழுவி, அகநானூற்றில் இடம் பெற்றிருக்கும் செய்யுள் ஒன்றே இவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்துளது.

"தலைவி! கார்காலமும் தோன்றிவிட்டது; ஆகவே அவர் தம் வினைமுடித்துக்கொண்டு, உடன்வரும் இளையர் போற்ற வருவர்; வழியில், கலையோடு கூடிய பிணையினைப் பார்ப்பர்; அக்காட்சி நின்னை அவர்க்கு நினைப்பூட்ட அவர் மேலும் விரைந்து வருவர்; ஆகவே வருந்தற்க" என்று தோழி கூறக்கேட்ட தலைவி, "தோழி! நின் சொற்படி யானும் ஆற்றியிருக்கவே எண்ணுகின்றேன்; ஆனால், இம்மாலைக் காலமும், இக்காலத்தே ஆயர் ஊதும் குழல் ஓசையும் என்னை ஆற்றியிருக்கவிடாது அலைக்கழிக்கின்றவே! யான் என்செய்வேன்?" என்று கூறினாள் எனப் பாடியுள்ளார் புலவர்.

"வினைவலம் படுத்த வென்றியொடு மகிழ்ந்து
போர்வல் இளையர் தாள்வலம் வாழ்த்த...
கருங்கோட்டு இரலை காமர் மடப்பிணை
மருண்ட மான் நோக்கம் காண்தொறும் நின்நினைந்து
திண்தேர்வலவ! கடவு எனக் கடைஇ
இன்றே வருகுவர்."

(அகம் : எச)

## ருஅ. கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார்

கடையம் என்பது பாண்டிநாட்டகத்ததோர் ஊர். அவ்வூரினரான வெண்ணாகனார், தொண்டைநாட்டில், ஆத்திரையன் போன்ற புலவர் பெருமக்கள் பிறந்த பெருமை சால் ஊராகிய கள்ளில் புகுந்து வாழ்ந்தமையால், கள்ளில் கடையத்தன் வெண்ணாகனார் என வழங்கப்பெற்றார்; அவர் சென்று வாழ்ந்த கள்ளிலைச் சில நாட்களில் விட்டு மதுரை வந்து வாழலாயினமையால் மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் என அழைக்கப்பெற்றார்.

சிற்றூர்த் தலைவராய்ச் சிறப்பெய்தி வாழ்ந்த வீரர்கள், தம்மைப் பாடிவரும் பாணர் முதலாம் இரவலர்க்கு இல்லை என்னாது தம்மால் இயன்றன அளித்து மகிழ்வர்; அவ்வாறு அவர்க்கு அளிக்கத்தக்கன அற்றவழிப், பிறநாடுகள் மீது படையெடுத்துச் சென்று வென்று பெரும் பொருள் கொணர்ந்து கொடுப்பர். பழந்தமிழ் வீரர்களின் இப்பண்பை விளக்க விரும்பிய நம் புலவர், ஒரு வீரன் தன்பால் பொருள் அற்றகாலத்தே வந்த பாணனுக்குத் தன் வாளை ஈடுவைத்துப் பெற்ற பொருளை அளித்தான்; அந்நிலையில் தன் வறுமையுணர்ந்த அவன், அன்றே புறநாடு புகுந்து வென்று, கொடுத்தற்காம் பெரும் பொருள் கொணர்ந்து விட்டமையால் கவலையின்றிக் கள்ளுண்டு உறங்கினான் என அவன் ஆற்றலும் அன்பும் ஒருங்கே தோன்றப் பாடியுள்ளார்.

"நாட்செருக்கு அனந்தர்த் துஞ்சு வோனே
அவன், எம்இறைவன்; யாம், அவன் பாணர்;
நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன்." (புறம்: ௩௰௬)

தலைவன் பிரிந்தமையால் வருந்திய தலைமகளொருத்தி, அத்தலைவனோடு கலந்து இன்புற்ற காட்சியினைக் கண்டு நின்ற கானல், கழி, புன்னை, வண்டு, நண்டு ஆகியவற்றின்பால் சென்று, அவைதான், அவன் உற்ற காமநோயை

நீக்கித் துணைபுரிந்த நற்செயலையும், தன் துயர் தீர்த்த தலைமகளின் துயர்போக்கித் துணைபுரியா அத்தலைமகனின் நன்றி கெட்ட செயலையும், அத்தலைவன்பால் சென்று சொல்லாவோ என ஏங்குகிருள்; அவற்றுள், கானலும், கழியும், நறுமலர்ப் புன்னையும் அவளும், அவனும் கலந்துறைந்த காட்சியினைக் கண்டனவேயெனினும், பிரிந்தவழி உண்டாம் துயரின் கொடுமையினை உணரவல்லன அல்ல ஆதலாலும், உணரினும் சென்று உரைக்கலாம் ஆற்றல் அற்றன ஆதலாலும், வண்டு, தனித்துறு துயரை உணரவல்லதேனும் அது மதுவுண்டு மதியிழந்து மயங்கிக் கிடப்பதால், அதனுல் தூது செல்லுதல் இப்போது இயலாது ஆதலாலும், அவற்றை நம்பாது, பிரிந்தவழி உண்டாம் துயரை உணரவல்லதும், உணர்வோடு இருப்பதும் ஆய நண்டை நோக்கிச் சென்று தூதுரைத்து மீள்வாயா என வேண்டி நின்றுள். அவள் வேண்டுகோளைப் புலவர்வாய்க் கேட்டறிக !

"கானலும் கழறுது; கழியும் கூறுது;
தேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது;
ஒருநின் னல்லது பிறிது யாதும் இலனே;
..............................................
தண்தாது ஊதிய வண்டினம்; களிசிறந்து
பறைஇய தளரும்; துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால்; அலவ! .........
நின்னுறு விழுமம் களைந்தோள்
தன்னுறு விழுமம் நீந்துமோ எனவே." (அகம் : கஎ0)

## ௫௧. காசிபன்கீரனார்

கீரனார் என்ற பெயர் பழங்காலப் புலவர் பெருமக்கள் பலராலும் விரும்பி மேற்கொள்ளப்பட்ட பெயராம். அப்பெயருடைய இவர், காசிபன் என்பார்க்கு மகனாகவோ, அல்லது காசிபகுடி என்ற குடியிற் பிறந்தமையாலோ காசிபன் கீரனார் என அழைக்கப்பெற்றுள்ளார்; அந்தணர்க்கு உரிய குடிகளுள் காசிபகுடியும் ஒன்று ஆதலின், இவர் அந்தணராவர். இவர் பாடிய பாக்களுள் ஒன்றே நமக்குக் கிடைத்துளது. அது நற்றிணைக்கண் இடம் பெற்றுளது.

பொருள்கருதிப் பிரிந்து சென்ற தலைமகன், பெருமழைபெய்ய, முல்லை மலர்ந்து மணங்கமழும் கார்ப்பருவத் தொடக்கத்தே நில்லாது மீள்வன் என வற்புறுத்திச் சென்றிருந்தான்; அக்காலம் வந்தவுடன், அவனும் வந்து விடுவன் என்ற எண்ணத்தால், அவன் பிரிவாலாய துயரைப் பொறுத்திருந்தாள்; கார்ப்பருவம் தொடங்கிவிட்டது; இடியொலிக்க எழும் மேகங்களைக் கண்டு, மயில்களும் மகிழ்ந்து ஆடலாயின; அதைக் கண்ணுற்ற தலைமகள், அவர் குறித்துச்சென்ற பருவம் வந்ததாகவும், அவர் வந்திலரே என வருந்தினாள்; அவள் துயர் பெருகிற்று; அவளை அந்நிலைக்கண் கண்ட தோழி, அவளைத் தேற்றுவான் வேண்டினாள்; அவன் வாராமையால் வருந்தும் அவட்கு எதைக்கூறினும் அவள் துயர் குறையாது என்பதை அறிவாள் அவள்; அவன் குறித்தகாலத்தே வருவன்; ஆனால், அவன் குறித்தகாலம் இன்னமும் வந்திலது என்பதை அறிந்தாலல்லது அவள் துயர் குறையாது; ஆனால், அக்காலமோ வந்துவிட்டது; இந்நிலையில் பொய்கூறுவது தவிர வேறுவழி அவட்குத் தோன்றிற்றில்லை; "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்ற பொருளுரை உணர்ந்தவளாதலின் துணிந்து ஒரு பொய் கூறினாள்; இது கார்ப்பருவமன்று எனக் கூறினாள்; கூறிய அவள், அதை அவட்கு நேரே கூறினாளல்லள்; மேகத்தை விளித்தாள்; "இவள்,

பிரிவுத்துயர் கண்டு மகிழ எண்ணிய நீ இடியொலி செய்கின்றனை; பிறர் துயர்கண்டு மகிழ எண்ணும் நின்பால் அன்பு அறவே இல்லைபோலும்; நின் இடியொலி, கால, மல்லாக் காலத்தே எழுந்துளது; அவ்வாறு எழுந்த ஒலி, இவள் துயர்கண்டு மகிழ எண்ணும் நின் வேட்கையால் உண்டாயது என்பதை அறியாத மயிலினங்கள், கார் காலத்து ஒலியே என மயங்கி மகிழ்கின்றன; அம்மயில் போல், மயங்கும் மதியில்லேனல்லன் யானும்; நின் இடியொலி காலமல்லாக்காலத்து எழும் ஒலி என்பதை அறிவேன்; ஆகவே, அவர் வாராமை குறித்து வருந்தேன்'' எனக் கூறினாள்; மேகத்தை நோக்கிக் கூறினாளேனும், அது, தலைவி செவியுறுமாறு செப்பிய சொற்களேயாம். அதைக்கேட்ட தலைவியும், துயர் ஒழிந்து மகிழ்வள் என்ற வேட்கையே, அவள் அவ்வாறு கூறுதற்குக் காரணம்; மயில்கள் அறியாது மகிழ்கின்றன எனக் கூறியது, மயில்கள் தாம் அறிவு அற்றவையாதலின், உண்மை உணர மாட்டாமல் மகிழ்கின்றன; தலைவன் அன்புடைமையும், கூறியன பிழையா ஒழுக்க முடைமையும் உணர்ந்த நீ, அவன் வாராமுன் இடிக்கும் இம்மேகத்தின்செயல், இயற்கையொடு பொருந்தாது எனக் கொள்ளாது இது கார்காலமே எனக்கொண்டு கலங்குவது அறிவுடைமையாகுமா? எனத் தலைவியைக் குறிப்பால் இடித்துரைத்தற்காம். இத்தனை அறிவுடையவள் தோழி என்பதைத் தம் புலமைச் சிறப்பால் புலப்படுத்திப் பாடியுள்ளார் புலவர்.

"சிறுவீ முல்லைத் தேங்கமழ் பசுவீ
பொறிவரி நன்மான் புகர்முகம் கடுப்பத்
தண்புதல் அணிபெற மலர வண்பெயல்
கார்வரு பருவம் என்றனர் மன்; இனிப்
பேர் அஞர் உள்ளம் நடுங்கல் காணியர்
அன்பு இன்மையின் பண்பில பயிற்றும்
பொய் இடி அதிர்குரல் வாய்செத்து ஆலும்
இனமயில் மடக்கணம் போல
நினைமருள் வேனோ வாழியர் மழையே!" (நற்: உ௬அ)

## ௬௦. காப்பியஞ் சேந்தனர்

சேந்தன் என்பது இவர் இயற்பெயர்; இவர், காப்பியம் என்ற ஊரிற் பிறந்தமையாலோ, காப்பியம் என்ற குடியிற் பிறந்தமையாலோ, காப்பியன் என்பார்க்கு மகனாய்ப் பிறந்தமையாலோ, காப்பியஞ் சேந்தனர் என அழைக்கப் பெற்றுள்ளார். இவர் பாடிய பாட்டொன்று நற்றிணைக்கண் இடம்பெற்றுள்ளது.

தம்காலத்தே தமிழகத்தே வாழ்ந்த மகளிர், தம் கணவர் மாட்டுப் பெரிதும் நம்பிக்கையுடையவராவர் என்பதை மிகவும் நயமாக எடுத்துக் கூறியுள்ளார்; பொருள் தேடிச்செல்லும் தலைவன், கடத்தற்கரிய வழிகள் பல வற்றைக் கடந்து சேணுடு சென்றிருப்பினும், தான் இன்ன காலத்தே வருவேன் எனக் கூறிச்சென்ற காலத்தே தவறாது வந்துசேருவன்; காரணம் தலைவன் பொய்கூறி அறியான் என்று கூறினள் ஒரு பெண் எனப் பாடி அக் கால மகளிர் தம் மாண்பினைப் புலப்படுத்தியுள்ளமையுணர்க.

"உரம்புரி உள்ளமொடு சுரம்பல நீந்திச்
செய்பொருட்கு அகன்றனராயினும், பொய்யலர்
வருவர்." (நற் : ௨௬௬)

நிமித்தம் காணல் பண்டுதொட்டே இருந்துவரும் ஒரு பெருவழக்காம்; தம்மைச் சூழ நிகழும் நிகழ்ச்சிகளை யும், எழும் சொற்களையும், தம் உள்ளத்தெழும் எண்ணங் களுக்கேற்பத் தொடர்புபடுத்திக் காணல் மக்கள் தம் மன இயல்பு; பல்லி ஒலிப்பது எப்போதும் நிகழ்கிறது ஆயினும், அதன் ஒலி குறித்து எழும் எண்ணம் மக்கள் உள்ளத்தே எப்போதும் எழுதல் இல்லை; மக்கள் ஒரு நிகழ்ச்சியை எதிர்நோக்கியிருந்து, அதுபற்றிய சிந்தனையில் மூழ்கி யிருப்புழியே, பல்லிசொல்லில் பயன்காண எண்ணுவர்; தலைவர் வருவர் என நாமும் எண்ணினேம்; பல்லியும் ஒலித்தது எனக் கூறினள் தோழி என அவர் கூறுவது காண்க.

"இடூஉ ஊங்கண் இனிய படூஉம்
நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கில் தேற்றும்." (நற் : ௨௬௬)

## ௬௧. காமக்கணி நப்பாலத்தனார்

பாலத்தனார் என்பது இவர் இயற்பெயர்; ந, சிறப்புக் குறித்துவந்த ஓர் இடைச்சொல்; இவர் காமக்கணியாரின் மகனார். காமக்கணி என்பது, காமாட்சி என்ற வட சொல்லின் தமிழ் வடிவம்; காமக்கண்ணி என்பதன் சுருக்கம் காமாட்சி என்ற பெயர், ஆண்பால், பெண்பால் ஆய இருபாலார்க்கும், இக்காலத்தே ஒப்ப வழங்கப் பெறுதலேபோல், காமக்கணி என்பதும் இருபாற்கும் வரும் என்ப. இனி, காமக்கணி எனவும், காமக்கண்ணி எனவும்வரும் இவை, காமக்காணி என்று வருதல் வேண்டும்; இம்மை, மறுமை ஆய இருமையிலும் இன்ப வாழ்வினராதல்வேண்டி மேற்கொள்ளும் காமியம் எனப் பெயர்பெறும் வேள்வி காமம் எனவும் வழங்கப்பெறும்; அத்தகைய வேள்விகளை முன்னின்று முடித்துத் தரும் வேள்வியாசிரியர்கட்கு அளிக்கும் சிறப்பு, காமக்காணி எனப்படும். இத்தகைய காமக்காணிகள் சங்ககாலத்திலும் பலர் இருந்தனர்; ஆகவே, இவர், காமியவேள்வி செய்யும் வேள்வியாசிரியர் வழிவந்தவராவர் என்று கூறுவர் மற்றும் சிலர். இவர் பாடிய பாட்டொன்று அகநானூற்றில் மணிமிடைபவளத்தில் இடம் பெற்றுளது.

மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார் என்ற புலவர் ஒருவரும் உளராதலின், அவரின் இவரைப் பிரித்து அறிதற்கு, இவரை, மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார் என அழைத்தனர் அக்கால மக்கள்.

இவர் பெயர் அறியாப் பாண்டியன் ஒருவனையும், வளம்மிக்க சிற்றூர்த் தலைவனாய வாணன் என்பானையும் பாராட்டுகிறார். பாண்டியன், இவ்வுலகெலாம் தன் ஒரு குடைக்கீழ்வைத்து ஆண்டவன்; போரில் பகைவரால் தொலைத்தற்கு அரியவன்; கடல்போல் பரந்த பெரிய படையுடையவன்; களத்தே செருக்கித்திரியும் குதிரை உடையவன், அவன் வென்று தங்கும் பாசறை பலவாம்; இவ்வாறு பாராட்டுவர் பாண்டியனை:

"உலகுடன் நிழற்றிய தொலையா வெண்குடைக்
கடல்போல் தானைக், கலிமா, வழுதி
வென்றுஅமர் உழந்த வியன்பெரும் பாசறை."
(அகம் : உ0ச)

வாணன் என்பான் ஒருவனைப் புலவர் பலரும் பாராட்டுகின்றனர்; அவனைப் பாராட்டும் புலவர் எல்லாம் வளம் நிறைந்த அவன் சிறுகுடிச் சிறப்பினையே பாடுகின்றனர். கரைக்கண் நின்ற மரத்தினின்றும் வீழ்ந்த மாங் கனியை யாமைகள் கவரும் பொய்கைகள் பல சூழக் கொண்ட சிறுகுடி என்று சிறப்பிக்கின்றார் ஒரு புலவர். மருதன் இளநாகனார், கடற்கரைச் சோலைகளைச் சார்ந்தது, நெல்விளையும் நன்செய்களை உடையது அவன் சிறுகுடி என்று கூறுகிறார்; இவ்வாறு புலவர்கள் எல்லாம் அவன் கொற்றமோ, கொடையோ தோன்றப் பாடாமல், அவன் வளமே தோன்றப் பாடுவதைக் கண்ட நம் புலவரும், வயலில் வெண்ணெல் அரிவோர் முழக்கும் தண்ணுமை ஒலிகேட்டுப், பொய்கைக்கண் இருக்கும் புள்ளினங்கள் பறந்து ஓடும் அவன் சிறுகுடி; விளைந்த நெற்பயிர்களை உடையது அவன் சிறுகுடி என அவன் வளத்தையே பாராட்டியுள்ளார் :

"வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை
பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்
காய்நெல் படப்பை வாணன் சிறுகுடி." (அகம் : உ0ச)

## ௬௨. காமஞ்சேர் குளத்தார்

இவர்க்கு இப்பெயர் உண்டாதற்காம் காரணம் இஃது எனத் துணிந்து கொள்வதற்கில்லை. மகளிர், இம்மையில், தம் வாழ்நாள் உள்ளளவும், தம் கணவரோடு பிரிவின்றி வாழ்ந்து இடையறு இன்பம் பெறவும், மறுமையில் போக பூமியிற் சென்று பிறந்து ஆண்டும் அவரோடு பிரிவின்றிப் பெருவாழ்வு வாழவும் வேண்டி, சோமகுண்டம், சூரிய குண்டம் என்ற பெயருடைக் குளங்களில் மூழ்கிக் காமவேளை வழிபடுவர் என்ப :

"கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்
மடலவிழ் நெய்தலங் கானல் தடமுள
சோமகுண்டம், சூரியகுண்டம் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு
தாம்இன் புறுவர் உலகத்துத் தையலார்
போகம்செய் பூமியினும் போய்ப் பிறப்பர்."

(சிலம்பு : ௯ : ௫௭ - ௬௨)

என அவ்விரு குளங்களின் இயல்பினை இனிதெடுத்துக் கூறியுள்ளார் இளங்கோவடிகளார். அக்குளங்கள், காமக் குளம் எனும் பெயராலும் வழங்கப்பட்டுளது. கடியலூர் உருத்திரங்கண்ணனார் அவற்றை "இருகாமத்து இணையேரி" (பட்டினப் : ௩௯) எனப் பெயரிட்டு வழங்குவது காண்க. இதனால் காமவேள் கோட்டங்கள் உளவாதலைப் போன்றே, காமம்சேர் குளங்கள் உளவாதலும், அக் குளங்களுக் குண்டான சிறப்பால், அவையிருந்த ஊர், தன் பழம் பெயர் இழந்து, அக் குளங்களின் பெயரையே தாமும் பெற்றுவிடு தலும் உண்டு எனத் துணியலாம். ஆகவே, காமம்சேர் குளம் என்பது ஓர் ஊர்ப்பெயர்; புலவர் அவ்வூரிற்பிறந்து வாழ்ந்தமையான், இவர்க்கும் அப்பெயர் உண்டாகிவிட்டது எனக் கொள்ளுதல் கூடும். ஆசிரியர் இளங்கோவடிகள், அக் குளங்கள் 'சோணாட்டில் புகாரை அடுத்து, காவிரி கடலோடு கலக்குமிடத்தே உள என்ப. சிலம்பு கூறும்

அக்குளங்கள் இரண்டும் திருவெண்காட்டில் உள்ள சோம தீர்த்தமும், சூரிய தீர்த்தமுமாம் எனச் சிலர் கொள்வர். இதனால் காமஞ்சேர் குளம் எனும் பெயருடையதொரு ஊர் யாண்டிருந்தது என்பதைத் துணிந்துகொள்வதற் கில்லை. புலவர் பெயர், சில ஏடுகளில் காமம் சொகினத்தார் எனவும் காணப்படுகிறது. இவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்துளது எட்டுத்தொகை நூல்களுள், இரண்டா வதாக வைத்து எண்ணப்படும் நல்ல குறுந்தொகைக்கண் இடம்பெற்றுளதொரு செய்யுள் மட்டுமே.

உள்ளமும், உடலும் உறவுடையன; அகமே புறம்; உள்ளக்கவலையால் உண்டாம் வெப்பம், உடலையே அழிக்க வல்லதாம். உள்ளக் வலையால் உடற்கு ஊறு நேர்ந்தக் கால், அவ்வுள்ளக்கவகலை ஒழிதற்காம் வகையறிந்து அது செய்து போக்க எண்ணாது, உடற்கு மருந்தளித்துப் போக்க எண்ணுதல் அறிவுடைமையன்று; உள்ளமே உடல்; "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின. வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்ப. உள்ளத்தே துள்ளும் உவகை உண்டாயின், உடலும் வனப்புற்று, வளம் பெற்று விளங்கும். ஆண்டு அமைதி குன்றின் உடலும், ஆற்றலும் அழகும் இழந்து அழியும். உடற்கும் உள்ளத் திற்கும் இடையே உண்டாம் இவ்வுறவினை உணர்ந்தவர் நம் புலவர்.

தலைவன் அருகிருந்து அன்புரை வழங்குவதொழிந்து பிரிந்து சென்றமையால் பெரிதும் வருந்தினாள் ஒரு தலைவி. அவன் அளிக்கும் அன்பு வாழ்க்கையினைப் பெறமாட்டாத அவள் உள்ளம், பெரிதும் வருந்திற்று. வருத்தம் மிக்க இடத்தே வெப்பம் இடம் பெறுதல் இயல்பு. அவள் உள்ளம் வெந்து நொந்தது. அகத்தே அவ்வுள்ளம் உற்ற வெப்பம், அவள் கண்வழியே புறம் போந்து புலப்பட லாயிற்று. பிரிவெண்ணி வருந்தும் அவள் கண்ணினின்றும் பெருகிய நீர், அக்கண்களின் இமைகளையே எரித்து அழிக்க வல்ல அத்துணை வெம்மையுடையதாயிற்று. அதனால் அவள் அழகும் குன்றிற்று; குன்றிய அவள் அழகு கண்டு

வருந்தினாள் தோழி; வருந்தும் அத்தோழிபால், "தோழி! என் துயரினைத் தாங்கித் துணைபுரியவேண்டிய நம் தலைவர், பிரிந்துவிட்டமையான், என் உள்ளம் உறுதுயர் கொள்கிறது; அதற்கு யான் என்செய்வேன்?" எனக் கூறி வருந்தினாள் என்ற கருத்து அடங்கிய செய்யுட்கண், தலைவன் தலைவியர்க்கிடையே உண்டாம் அன்புத்தளையின் ஆற்றலை அறியச் செய்தமையோடு உடற்கும், உள்ளத்திற்கும் இடையே உண்டாம் உறவினையும் புலப்படுத்தியுள்ளார் புலவர்.

> "நோம்என் நெஞ்சே; நோம்என் நெஞ்சே;
> இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி,
> அமைதற்கு அமைந்த நம் காதலர்
> அமைவில ராகுதல் நோம்என் நெஞ்சே." (குறுந் : ௪)

நான்காம் வேற்றுமை உருபு உணர்த்தும் பொருள்களுள் அதற்கு வினையுடைமை என்பதும் ஒன்று; அது, கரும்பிற்கு வேலி என்றாற்போல், ஒன்றிற்குப் பயன்பட வருதல் என்ற பொருள் உடையதாம்; ஈண்டு "அமைதற்கு அமைந்த நம் காதலர்" என்பதில் அமைதற்கு என்பதன்கண் வரும் அவ்வுருபும் அப்பொருட்டாம்; ஆகவே வேலியே ப்யிரை மேய்ந்தால் என்பதற் கிணங்க, கரும்பிற்கு வேலியாய்ப் பயன்படவேண்டிய கரும்பு, அக் கரும்பையே அழிக்க முனையின், அக் கரும்பு அறவே அழிதல் திண்ணமாம், அதைப்போன்றே, தலைவியைக் காக்க வேண்டிய தலைவனே, அவளை அழிக்க முனைவனாயின், அவள் அழிதல் உறுதியாம் எனப் பொருள் படும்; இவ்வாறு நுணுகிப் பொருள்படுமாறு பாடவல்ல அவர் பெரும் புலமையினைப் பாராட்டுவோமாக.

## ௬௩. காவட்டனார்

இவர்க்கு, இப்பெயர் வருதற்காம் காரணம் விளங்க வில்லை; இப்பெயர் கானட்டனார் எனவும் வழங்கும். பன்னிரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள், கோவில் பட்டர்களிடையே, காவிட்டன் என்ற பெயர் பயில வழங்கி யிருந்தது என அறிவிப்பது கொண்டு, முதல் நூற்றாண்டுப் புலவராகிய இவர் பெயரும் காவிட்டனார் என்பதே எனக் கோடல், ஆராய்ச்சி நெறியோடு அமைதியுடையதாகத் தோன்றவில்லை. இவரால் பாராட்டப்பெற்றோன், அந்து வன் கீரன் எனும் பெயருடையானொரு படைமறவனாவன்.

அந்துவன் கீரன், அந்துவன் என்பாற்கு மகனாய்க் கீரன் எனும் இயற்பெயருடையனாவன். அந்துவன் கீரன், அக்காலப் பேரரசர்களைப் போன்றே, அரும்பொருளும் பெரும்படையும் உடையனாயினும், இம்மையிற் புகழும், மறுமையில் இன்பமும் எய்துவிக்கும் அறவுணர்வு அற்றவ னாயினன். அந்துவன் கீரன்பால் பேரன்புடையராய புலவர்க்கு அவனை நன்னிலைக்கண் நிறுத்தல் வேண்டும் எனும் வேட்கை உண்டாயிற்று.

மக்கள் அனைவரும் அழியாப் பெருவாழ்வு பெற்று வாழவே எண்ணுவர்; அத்தகையார் வாழும் இடம் நிலை யற்றது; தம் வளத்தை அழிக்கவல்லது என அறிந்த அக்கணமே, அவ்விடத்தைவிட்டு அகல்வர்; தம் வாழ்வும், வளமும் வற்றாது நிற்றற்காம் இடம் தேடிப்போதற்கு அவர் சிறிதும் பின்னிடார்; அதற்கு மாறாக, வாழும் இடம், அழிக்கலாகா அரண் உடையது என எண்ணுவ ராயின், அவ்விடத்தினைவிட்டு அகலவும் எண்ணார்; அகல எண்ணாமையோடு ஆங்கேயே ஆண்டுபல வாழ்தற்காம் வழிவகைகளையும் தேடி அலைவர். இது, மக்கள் இயல்பு.

இவ்வுலகமோ நிலையற்றது; ஆயினும் அது நிலையற்றது என்ற எண்ணம் வரப்பெற்றார் உலகத்தில் மிகமிகச் சிலராவர். நில்லாதவற்றை நிலையின என உணரும்

புல்லறிவாளரே மிகப் பலராவர். இவ்வுலகமும, இவ்வுலக இன்பங்களும் நிலைபேறுடையன என்ற அறியாமையுடையார்க்கு அறம் உரைத்தல் அறிவுடைமையாகாது; அவர் உளத்தே படிந்துகிடக்கும் அவ் வறியாமை இருள் அறவே அழிதல் வேண்டும்; அவ்வறியாமை நீங்கியவிடத்திலேயே அறவுணர்வு இடம் பெறும்.

அந்துவன் கீரனுக்கு அறமுரைக்க விரும்பிய புலவர், இவ்வுண்மைகளை உணர்ந்தவராதலின், முதற்கண் அவன் உளத்தே படிந்து கிடக்கும் அறியாமையாகிய இவ்வுலகமும், இவ்வுலகில் தான் பெற்றுள பொன்னும் பொருளும் நிலையுடையன என்ற எண்ணத்தைப் போக்க விரும்பினர்; அவன்பால் சென்றார். "அந்துவன்கீர! பேரரசர் குடியிற் பிறந்தோன் அல்லை நீ; படைமறவர் பலருள் ஒருவன் நீ; பெரியதொரு நாட்டினை ஆள்வோனும் அல்லை; நீ பெற்றுள பொருளும் பெரும் பொருளன்று. பேரரசர் குடியிற் பிறந்து, நின்னாட்டினும் பெரிய நாட்டை ஆண்டு, எண்ணித்தொலையா இரும்பொருள் பெற்று வாழ்ந்த அரசர் பலர் நினக்குமுன் ஆண்டிருந்தனர் என்பதை அறிவை; அவரெல்லாம் இப்போது யாண்டுளர்; பாணரும், புலவரும் பாடிப் புகழ்வன கேட்டும், தம்மைப் பாடிவந்த அப்பாணர் முதலாம் இரவலர், தாம் அளித்த அறுசுவை உணவுண்டு அகமிக மகிழ்ந்ததனை அவர் முகம் காட்டக் கண்டும் அரம்பையர் போலும் அழகிய மகளிர்தம் ஆடல் கண்டும் மகிழ்ந்த அவர்கள், கூகைகள் குரல் எழுப்ப, பேயும் நரியும் பிணந்தின்ன, பிணம்தின் மகளிர் கண்டார்க்கு அச்சந் தரும் ஆடல்புரியும் சுடுகாடடைந்து அழிந்தனர். நின்னை நோக்கப் பல்லாற்றானும் பெரியராய அவர்க்கே, அந்நிலை உண்டாம் எனின், நினக்கு அந்நிலை வருதற்கண் ஐயம் வேண்டுவ தின்று; அஃது உண்டாதல் உறுதி; உறுதி" எனக் கூறி நிலையாமை எண்ணம், அவன் உள்ளத்தே ஆழப் பதியுமாறு செய்தார். நிலையாமை யுணர்ந்து நடுங்கிய வுள்ளமுடையனாய அந்நிலையில் நிலைபேறுடையன கூறுவான் தொடங்கி, "அந்துவன் கீர! நின் உடல் அழிந்து

போம் எனினும், அஃது அழிந்த பின்னரும், அழியாது நிற்பனவும் சில உள. ஆகவே, உடல் அழிவு கண்டு அஞ்சற்க! அழியாது நிற்பனவற்றுள், நல்லனபால் நாட்டம் கொள்க! அவ்வாறு அழியாது நிற்பன பழியும் புகழுமாம். பழி, புகழ் இரண்டனுள் ஒன்றே நிற்கும்; ஒரே இடத்து இரண்டும் நிற்றல் இல்லை; 'வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசை ஒழிய, வாழ்வாரே வாழா தவர்' என்ப; இனிய புகழை விடுத்து, இன்னாத பழிவிரும்புவார் அறிவுடையராகார்; கனியிருப்பக் காய்கவரும் கருத்திலான் அல்லன் நீ; ஆகவே, வசை ஒழித்து இசை வேண்டுக! அது வேண்டுவையாயின், முதற்கண், நின்பால் ஆசை அறுதல் வேண்டும்; 'அற்றது பற்று எனின் உற்றது வீடு' என்ப. பற்றற்ற நிலையோடு அமைதியுறாது அறவழி நிற்றலும் வேண்டும்; அறவழி நிற்றலோடு, நின்பால் உள்ளனவாய நிலைபேறில்லாச் செல்வத்தால், நிலைபேறுடையன ஆக்கிக் கோடலும் வேண்டும். "அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அதுபெற்றால் அற்குப ஆங்கே செயல்.' அதுவே, அறிவுடைமையும் ஆகும்; நின்பாற் கிடந்தும், நினக்குப் பயன் தாரா அப்பெரும் பொருளையெல்லாம் நின்பால் வந்து வறுமைகூறி இரப்பார்க்கே வழங்கிவிடுவையாயின், புகழ் நின்பால் நீங்காது நின்றுவிடும்; நின் உடல் அழிந்து ஆண்டு பல கழிந்த பின்னரும் நின்புகழ் நின்று, நின்பெயர் உலகுள்ளளவும் நிலைபெறச் செய்யும். ஆகவே, அருளறம் மேற்கோடலை அறிவுடைமையாக் கொள்க!" என்று கூறினார். இவ்வாறு நிலையாமை அறிவுறுத்தி, அறமுரைக்கும் பெருங்காஞ்சித்துறை தழுவப் புலவர் பாடிய பாட்டு, புறநானூற்றின்கண் இடம் பெற்றுளது.

"பாறுபடப் பறைந்த பல்மாறு மருங்கின்
வேறுபடு குரல வெவ்வாய்க் கூகையொடு
பிணந்தின் குறுநரி நிணம்திகழ் பல்ல
பேஎய் மகளிர் பிணம்தழூஉப் பற்றி
விளரூன் தின்ற வெம்புலால் மெய்யர்
களரி மருங்கிற் கால்பெயர்த்து ஆடி,

ஈம விளக்கின் வெருவரப் பேரும்
காடு முன்னினரே, நாடுகொண் டோரும்!
நினக்கும் வருதல் வைகல் அற்றே;
வசையும் நிற்கும்; இசையும் நிற்கும்;
அதனால், வசைநீக்கி இசை வேண்டியும்,
நசை வேண்டாது நன்று மொழிந்தும்,
நிலவுக் கோட்டுப் பலகளிற் றொடு
பொலம்படைய மாமயங்கிட
இழைகிளர் நெடுந்தேர் இரவலர்க்கு அருகாது
கொள்ளென விடுவை யாயின், வெள்ளென
ஆண்டுநீ பெயர்ந்த பின்னும்
ஈண்டுநீடு விளங்கும் நீஎய்திய புகழே.'' (புறம் : ௩௫௬)

விரைந்து வந்து வரைந்து கொள்வேன் எனக் கூறிப் பிரிந்து சென்றுளான் தலைவன்; பிரிந்தறியா அவனைப் பிரிந்ததனாலாய துயர் ஒருபால் வாட்டவும், தன் களவொழுக்கத்தினை அறிந்துகொண்ட தாய் கூறும் சுடு சொற்கள் ஒருபால் வருத்தவும், வாடையும், பிரிந்தார்க்குப் பெருந்துயர் தரும் மாலையும் ஒருபால் நின்று மருட்டவும், தலைவி வருந்தாது நிற்பதைக் கண்டு வியந்தாள் தோழி; உடனே அவள், தலைவிபாற் சென்று "அன்புடையாய், நின்னைச் சூழ்ந்து நின்று இத்தனையும் வாட்டவும், வருந்தாது நிற்கும் இவ்வாற்றல், நினக்கு எற்றால் ஆவது?'' என வினவினாள். அதற்கு அவள் "தோழி! சென்ற நம் தலைவர், விரைந்து வந்து வரைந்து கொள்வேன் என வஞ்சினம் கூறிச் சென்றுளார்; அவர் கூறிய உரை பிறழாக் குணமுடையர் என்பதை அறிவேன் ஆதலாலும், நான் ஈண்டுளேன் ஆயினும், ஈங்கிருந்தே அவர் நாட்டு மலையினைக் காணுகின்றேன்; அவர் நாட்டு மலையினைக் காணல், அவரைக் காணலேபோலும் மகிழ்ச்சியினை அளிக்கிறது ஆதலாலும், பலாவின் கனிபெற்ற மந்தி, தன் கடுவனோடு களித்து வாழும் அவர் நாட்டு மலைவாழ்க்கை, மனைவியோடு கூடிவாழும் வாழ்க்கையின் மாண்பினை அவர் மனங்கொளச் செய்து, மணத்திற்கு விரையச்செய்யும் என்ற உறுதி

யுடையேனாதலாலும், அவை வருத்தவும் வருந்தாது ஆற்றி யுளேன்" எனக் கூறினாள் எனப் பாடிப் பழந்தமிழ் மக ளிரின் பண்பட்ட உளத்தினைப் பாராட்டியுள்ளார் புலவர்.

"பெருங்கல் நாடன் பிரிந்த புலம்பும்,
உடன்ற அன்னை அமரா நோக்கமும்,
வடந்தை தூக்கும் வருபனி அற்சிரம்,
சுடர்கெழு மண்டிலம் மழுங்க, ஞாயிறு
குடகடல் சேரும் படர்கூர் மாலையும்
அனைத்தும் அடூஉநின்று நலிய நீமற்று
யாங்ஙனம் வாழ்தி என்றி, தோழி!
நீங்கா வஞ்சினம் செய்துநத் துறந்தோர்,
உள்ளார் ஆயினும் உளனே, அவர்நாட்டு
அள்ளிலைப் பலவின் கனிகவர் கைய
கல்லா மந்தி, கடுவனொடு உகளும்
கடுந்திறல் அணங்கின் நெடும்பெருங் குன்றத்துப்
பாடின் அருவி சூடி
வான்தோய் சிமையம் தோன்ற லானே." (அகம் : ௩௭௮)

காற்று அசைக்க உதிர்ந்த வேங்கையின் பொன் போலும் மகரந்தங்கள் வடிந்த தோகையுடைய மயில்கள், செல்வம் கொழிக்கும் பெருமனையில் வாழும், அணிகொண்ட கூந்தலையுடைய மணமகளிர்போலும் எனக் கூறிய உவமை யின் அழகினை அள்ளிப் பருகுவோமாக:

"விதியம் துஞ்சும் விவந்தோங்கு வரைப்பின்
வதுவை மகளிர் கூந்தல் கமழ்கொள
வங்கூழ் ஆட்டிய அங்குழை வேங்கை
நன்பொன் அன்ன நறுந்தாது உதிரக்
காமர் பீலி ஆய் மயில் தோகை."

(அகம் : ௩௭௮.)

## ௬௪. காவல்முல்லைப் பூதனார்

பூதனார் எனும் இயற்பெயருடைய இவர், காவல் முல்லை என்ற புறத்திணைத்துறை தழுவிய பாடல்களைத் திறம்படப் பாடும் வல்லமையால், காவல்முல்லைப் பூதனார் என அழைக்கப்பெற்றுள்ளார். ஆனால், இவர் பாடிய அத் துறைப் பாடல்கள் இப்போது கிடைத்தில. இனி, அள்ளூர் நன்முல்லையார் என்ற பெயரை நோக்குவார்க்கு முல்லை என்பது, அக்கால மக்கள் மேற்கொண்ட பெயர்களுள் ஒன்று என்பது புலனும்; அம்முல்லை என்ற பெயர் பூண்டார் ஒருவர் இருந்தார்; அவர்க்குக் காவல் என்ற சிறப்பு, எக்காரணத்தாலோ அளிக்கப்பட்டிருந்தது; அன்னார்க்கு மகனாய்ப் பிறந்தமையால், பூதனார் காவல்முல்லைப் பூதனார் என அழைக்கப்பெற்றார் எனக் கூறுவாரும் உளர். இவர் பாடிய பாக்கள் எட்டு; நற்றிணைக்கண் ஒன்று; குறுந்தொகை, நெடுந்தொகைகளில் முறையே இரண்டும், ஐந்தும் உள்ளன. இவர் வரலாறாக அறியத்தக்கன இத்துணையவே.

"செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்ப; தம்மை எதிர்நோக்கி வாழும் பெரிய சுற்றம் வறுமை நீங்கி வாழத் துணைபுரிவதும், மனைவியும், மக்களும் சூழ வாழும் தம் வாழ்வு, இடையறாப் பேரின்பம் உடையதாக்கலும், நற்குடிப் பிறந்தார்க்குப் பெருங்கடனாகும்; அவர், அக்கடமையிற் றவறாமை வேண்டின், அவர் பெரும் பொருள் உடையராதல் வேண்டும்; பொருள் பெறா வறியர் அத்தகு வாழ்வினராதல் இயலாது; ஆகவே, உயர்குடிப் பிறந்தார் ஒவ்வொருவரும், அப்பெரு வாழ்வு வாழ்வான் வேண்டி, பொருள் தேடிச்செல்லும் பெருமுயற்சியினைப் பேணிக்கொளல் வேண்டும்; பொருள் சேர்க்கும் கடமையுணர்ச்சியுற்றக்கால், காதல் உணர்ச்சிகொள்ளாராதல் வேண்டும்; காதலினும், கடமையே பெரிது எனும் கருத்து, அவர் உளத்தே ஆழப் பதிதல் வேண்டும்; அவ்வாறின்றிக் காதலே பெரிது எனப் பேணுவாராயின், அவரால், கடமையிற் பிறழாது நிற்றல் இயலாது; கடமையில் கருத்திலார்க்கு

பொருள் ஈட்டலும், பெருவாழ்வு வாழ்தலும் இயலாது அவர் வழுக்கிய வாழ்க்கையினரேயாவர்; இவ்வுண்மையினைத் தம் பாட்டொன்றில் வைத்து உணர்த்தியுள்ளார் புலவர் :

"தம் நயந்து உறைவோர்த் தாங்கித், தாம் நயந்த
இன்னமர் கேளிரொடு ஏமுறக் கெழீஇ,
நகுதல் ஆற்றார் நல்கூர்ந் தோர், என
மிகுபொருள் நினையும் நெஞ்சமொடு அருள்பிறிது
ஆபமன்; வாழி! தோழி!" (அகம் : கருக)

பொருள் ஈட்டும் முயற்சிமேற்கொண்டு பிரிந்து சென்றுளான் தலைவன்; தலைவன் பிரிவால் வருந்திய தலைவியின், கைவளை கழன்றுகுமளவு, உடலும் மெலிந்துவிட்டது; உடல் மெலிய வருந்தும் அந்நிலையிலும், அவள், தன் தனிமை கருதி வருந்தினளல்லள்; பிரிந்து சென்ற தலைவர், செல்லும் வழி, தும்பிபோலும் பறவைகளும் மான்போலும் விலங்குகளும், ஆணும் பெண்ணுமாய்க் கூடிவாழும் அன்புநிறை காட்சிகளைக் கொண்டது என்ப; அக்காட்சிகளைக் காணும் அவர் உளத்தே தனிமையால் உண்டாம் என் துயர் தோன்ற, மேற்கொண்ட வினையினை முடியாதே மீண்டு விடுவரோ? அவ்வாறு மீளல் அறனன்றே என்று எண்ணிஎண்ணி வருந்தினள். தலைவியின் வருத்தத்தினை உணர்ந்தாள் தோழி; அவள்பால் சென்று அவட்கு, ஆறுதல் கூறுவாள், "அன்புடையாய்! தலைவர் நின் துயர் கண்டு மீண்டுவிடுவரோ என அஞ்சுகின்றனை; அவ்வாறு அஞ்சற்க! தலைவர், நீ எண்ணுமாறு பேரன்புடையரன்று; பேரன்புடையராயின், நின் வளை நெகிழ வருத்தத்தினைக் கண்டும் பிரிவரோ? கண்ணுற்று கண்டும் பிரிந்த அத்துணைக் கொடியராய அவர், அத்துயரை மனதால் எண்ணி மீள்வர் என்ற அச்சம் எமக்குச் சிறிதும் இல்லை. மேலும், காட்டுவழிக் காட்சிகள், நின்பிரிவுத் துயரை அவர்க்கு நினைப்பூட்டுவதினும், பொருளில் வாழ்க்கையால் உண்டாம் பெருந்துயரினையே பெரிதும் நினைப்பூட்டும் இயல்பின; ஆங்கு வண்டுகள், ஆணும் பெண்ணுமாய்ப் பிரிவின்றி வாழ்கின்றன ஆயினும், அக்காடு,

அவைகள் மகிழ்ந்து வாழ்தற்காம் உணவினை அளிக்கவல்ல தன்று; மழை இன்மையால் வறண்டுள அக்காட்டு மலர்களில், தேனின்மையால் தேம்பித் திரியும் அவற்றைக் காணும் அவர் உளத்தே, கருத்தொருமித்த காதலியொடு வாழ்தற்கும் கைந்நிறையப் பொருள் வேண்டும் என்ற எண்ணமே முன்னிற்கும். ஆகவே, அவற்றைக் கண்டு, நின்னை நினைந்து மீண்டுவிடார்; முன்னோக்கிச் சென்று முன்னியது முடித்தே மீள்வர். ஆகவே, மீண்டு, அறனல்லன ஆக்கிவிடுவரோ என அஞ்சற்க'' என்றெல்லாம் கூறினாள் எனப் பாடிய பாட்டில், அக்கால ஆண் பெண் உளங்களின் அறிவறிந்த அழகினைப் புலப்படுத்தியுள்ளார் புலவர் :

''அஞ்சில் ஓதி! ஆய்வளை நெகிழ,
நேர்ந்துநம் அருளார் நீத்தோர்க்கு அஞ்சல்
எஞ்சினம்; வாழி தோழி! எஞ்சாத்
தீய்ந்த மராஅத்து ஓங்கல் வெஞ்சினை
வேனில் ஓரிணர் தேனொடு ஊதி
ஆராது பெயரும் தும்பி
நீரில் வைப்பின் சுரன்இறந் தோரே.'' (குறுந் : உகக)

''என் நிலைகண்டு வெறுக்காது, அருள்காட்டும் அன்புடையார் பலரும், 'அம்ம! நின் கணவன், நின்பால் வெறுப்பற்றவன்; உளம் ஒன்றிய அன்புடையவன், பிரிந்து வாழாப் பெருநட்புடையவன், பழகற்கினிய பண்புடையவன்' என்றெல்லாம் கூறிப்பாராட்டுகின்றனர்; ஆயினும், பிரியாப் பெருங்காதல் கட்டுண்டு, என்றும் என்னைப் பிரிதலின்றி என் அருகிலேயே வாழ்ந்த அவர், இன்று பிரிந்து மலையிடை வழிகளைக் கடந்து சென்று விட்டனரே என்செய்வேன்'' எனக் கூறி வருந்தினாள் ஒரு பெண் எனப் பாடிய பாட்டில், காதலன், காதலியர்க்கிடையே உண்டாம் அன்பு வாழ்க்கையின் இயல்பினையும், பிரியாப் பெருங்காதல் கொண்டாரும், பொருள் ஈட்டல் முதலாம் கடமை நேர்ந்தக்கால், காதலை ஒருவாறு மறந்து கடமை மேற்கொள்ளவே எண்ணுவர் என அக்கால மக்களின்

கடமை உணர்ச்சியின் சிறப்பினையும் காட்டிப் பாராட்டியுள்ளமை படித்துப் பயன்பெறத் தக்கதாமன்றோ ?

"துனியின் றியைந்த துவரா நட்பின்,
இனியர் அம்ம! அவர் என, முனியாது,
நல்குவர் நல்ல கூறினும், அல்கலும்
பிரியாக் காதலொடு உழைய ராகிய
நமர்மன் வாழி தோழி............
..............................................
நன்மர மருங்கின் மலையிறந் தோரே."　　(அக : உசக)

வழிச்செல்வார், இடைவழியில் இளைப்புத் தீர இருந்தக்கால், ஆண்டு எழும் பல்லியின் குரல் ஓர்ந்து பயனறிந்து செல்லும் பண்பினராதலைக் கூறும் புலவர், அவர்க்கு வருவன கூறும் வாயுடைப் பல்லியைக் கணி கூறுவதில் வன்மையுள்ள பல்லி எனக் கூறும் பண்பு பாராட்டற்குரியது

"செல்லுநர்க்கு
உறுவது கூறும் சிறுசெந் நாவின்
மணியோர்த் தன்ன தெண்குரல்
கணிவாய்ப் பல்லி."　　(அகம் : கருக).

புலவர், தம் பாக்களின் இடையிடையே அழகிய உவமைகள் பலவற்றையும் அமைத்துப் பாடியுள்ளமை படிப்பார்க்குப் பெருஞ்சுவை பயந்து நிற்கிறது; புல்லினின்றும் துளிக்கும் பனித்திவலை, நாலினின்றும் கழன்றுகும் முத்து நிகர்க்கும்; "நாலறு முத்தின் தண்சிதர் உறைப்ப" (குறுந்:கoச); மரத்து மலர் உதிர, அம்மரக்கிளைகளைத் தாக்கும் தென்றல், பூப்பறிப்போன், மலர்கொய்ய அம்மரக் கிளைகளை அடிக்கும் கோல்போலும்; "புரியிணர், மெல்லவிழ் அஞ்சினை புலம்ப, வல்லோன் கோடறை கொம்பின் வீயுகத் தீண்டி, மராஅம் அலைத்த மணவாய்த் தென்றல்" (அகம் : உக); வாகை மரத்தின், முற்றி உலர்ந்த காய் ஒலிக்கும் ஒலி, ஆடுமகள் அடிக்கும் பறை ஒலி போலும்; "உழிஞ்சில், தாறுசினை விளைந்த நெற்றம், ஆடுமகள் அரிக்கோற் பறையின் ஐயென ஒலிக்கும்." (அகம் : கருக) என்ற உவமைகளைக் காண்க.

## ௬௫. கீரங்கீரன்

இவர், கீரன் என்பாரின் மகன்; கீரன் எனும் இயற் பெயருடையவர். இத்துணையவே, இவர் குறித்து நாம் அறியத்தக்கன; கீரன் என்ற பெயர் குறித்துக் கூற வேண்டுவன, "நக்கீரர்" என்பார் வரலாறு கூறுமிடத்தே விளங்கக் கூறப்பட்டுள்ளன; ஆண்டுக் கண்டுகொள்க. இவர் பாடிய பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுளது; "தோழி! தலைவன் தேரிற்கட்டிய மணியின் ஒலி, அதோ தெளிவாகக் கேட்கத் தொடங்கிவிட்டது; மணி ஒலி தோன்றவருதல் களவுக்காலத்தில் நிகழ்வதன்று; ஆகவே அவர் வரைவொடு வருகின்றார் என்பது உறுதி; ஆகவே, இனி நம் துயரெல்லாம் ஒழியும்" எனக் கூறினள் தோழி என்ற பாட்டில், தலைவன், தான் ஊர்ந்துவரும் தேராழி, கழியின்கண் ஆழப் புதைந்தவிடத்தும், அத் தேரை உரங்கொண்டு ஈர்க்குமாறு, தூரத்துவான்வேண்டி, அத்தேரிற் பூட்டிய குதிரைகளைக் கோல்கொண்டு தாக்கான்; அத்துணை அன்புடையன் அவன்; மேலும், கோல்கொண்டு தாக்கவேண்டுவ தில்லாமலே, அத்தேரை எத்துணை ஆழமான இடங்களிலும் ஈர்த்துச்செல்லும் ஆற்றல் உடையன அக்குதிரைகள் எனத் தலைவன் அன் பினையும், அவன் குதிரைகளின் ஆற்றலையும் தோன்றச் செய்துள்ளார் புலவர்.

"நோய்மலி பருவரல் நாம் இவண் உய்கம்;
கேட்டிசின் வாழி தோழி! தெண்கழி
வள்வாய் ஆழி உள்வாய் தோயினும்
புள்ளு நிமிர்ந்தன்ன பொலம்படைக் கலிமா
வலவன் கோலுறல் அறியா
உரவுநீர்ச் சேர்ப்பன் தேர்மணிக் குரலே." (நற் : எ௮)

---

## ௬௬. கீரந்தையார்

"ஓங்கு பரிபாடல்" என உயர்ந்தோரான் பாராட்டப் பெறும் பரிபாடலின் இரண்டாம் பாடலாகிய திருமால் வாழ்த்தினைப் பாடிய புலவர் நம் கீரந்தையாராவர். கீரந்தையார், கீரன் என்பாரின் தந்தையாராவர். திருவள்ளுவமாலை பாடிய புலவர்களுள் இவரும் ஒருவராவர் எனப் பாராட்டப்பெறும் பெருமைவாய்ந்தாருள் கீரந்தையாரும் ஒருவர். பொற்கைப்பாண்டியன் கர்வற்சிறப்பும், தன் கற்புச்சிறப்பும் ஒருங்கே தோன்ற விளங்கியாளொரு விழுமிய மகளாரை மனைவியாக்கொண்ட மாண்புடைக் கீரந்தையாரொருவர் வரலாறு சிலப்பதிகாரத்தே கூறப்பட்டுளது. அவரும், நம்புலவரும் ஒருவரோ, வேறோ தெரியவில்லை.

புலவர் பாடிய பரிபாடல், மண், நீர், தீ, வளி, வான் என்ற ஐம்பூத ஊழிகளின் தோற்ற ஒடுக்கங்களையும், நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் எனத் தமிழர் அறிந்த பேரெண்களின் பெயர்களையும், திருமால் மேற்கொண்ட பலதேவ, கண்ண, வராக, மோகினி அவதாரப் பெருமைகளையும், அவன் வேள்வியொடு கொள்ளும் உறவினையும் நன்கு எடுத்துக் கூறியுள்ளது.

திருமால் உடல் ஒளி, நீலத்திருமணியின் பேரொளியாம்; அவன் கண்கள் இரண்டாக இணைந்து மலர்ந்த தாமரை மலர்களாம்; அவன் வாய்மை, தப்பாது வரும் நாளாம்; அவன் பொறுமை, நிலமாம்; அவன் அருள், நீர்நிறை மேகமாம் எனக் கூறும் உவமைகளும், அவ்வுவமைகளை எடுத்தாண்ட திறமும் புலவர்தம் புலமைக்கு வாழ்த்துக்கூறும் வன்மையவாம்:

"நின்னது திகழொளி, சிறப்பிருள் திருமணி
கண்ணே, புகழ்சால் தாமரை அலர் இணைப் பிணையல்;
வாய்மை வயங்கிய வைகல்; சிறந்த
நோன்மை நாடின், இருநிலம்; யாவர்க்கும்
சாயல் நினது வான் நிறை." (பரிபாடல், ௨ : ௫௨ - ௬)

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார் என்னுடையரேனும் இலர்" என்ப. ஆக்க அழிவுகளுக்குக் காரணமாவன, அறிவு உண்மை இன்மைகளே ஆம்; நல்லறிவு வாய்க்கப்பெற்றார், பல்வளமும் உற்று நல்வாழ்வு வாழ்வர்; அவ்வறிவு திரிந்தார், பெற்றுள பல வளமும் இழந்து பாழுறுவர்; ஆகவே, எல்லாவற்றிற்கும் அடிப்படையாயது பிறழாப் பேரறிவே. புலவர் கீரந்தையார், இவ்வுண்மையினை உள்ளவாறு உணர்ந்தவர்; ஆண்டவனை நெஞ்சார நினைந்தும், வாயார வாழ்த்தியும், தாளிற்றலையுற வணங்கியும் வழிபடும் அவர், தம் வழிபாட்டிற்குப் பயனாகச் சென்றவிடத்தால் செலவிடா, தீதொரீஇ, நன்றின்பால் உய்க்கும் நல்லறிவு ஒன்றனைமட்டுமே வேண்டி நின்றார்.

"நின்னடி,
தலையுற வணங்கினேம்; பன்மாண் யாமும்
கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம்; வாழ்த்தினேம்;
கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்
கொடும்பா டறியற்க எம் அறிவு எனவே."
(பரிபாடல், உ: எரு - எசு)

முற்றும்.

கழக வெளியீடு : எ௬௦

பதிப்பாளர் :

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.

தலைமை நிலையம் :

24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

விலை ரூ. 2-4.

அப்பர் அச்சகம், சென்னை - 1.—C. 800.